# என் உயிரினும் இனிய...

## 1

மார்கழி மாதக் குளிர் அந்த கிராமத்தை போர்வையாய் போர்த்தியிருந்தது. ஒவ்வொரு வீட்டிலும் வளர்க்கப்படும் சேவல்கள் விடியலை சொல்லி தங்கள் எஜமானர்களை எழுப்பிக் கொண்டிருந்தன. வயலுக்கு செல்லும் மாடுகளின் கிண்கிணி சத்தம் தெருவெங்கும் கேட்டது. செவளை மாட்டில் பாலை கறந்து முடித்த பொன்னாத்தா கன்றை அவிழ்த்து விட்டாள். அது முட்டி பால் குடிப்பதை சிரிப்புடன் பார்த்தவள் வீட்டைச் சுற்றி பின்பக்க வாயில் வழியே வீட்டுக்குள் நுழைந்தாள்.

''அம்மா, பொன்னாத்தா வந்திருக்கேன்.'' குரல் கொடுத்தபடியே சென்றவளின் எதிரே வந்த ராஜம், ''வா பொன்னாத்தா'' என்றபடி கையிலிருந்த பால் அடுக்கை வாங்கிக் கொண்டார்.

"இப்பதான் அடுப்பில காபிக்கு தண்ணி வெச்சிட்டு வந்தேன். ராஜவுக்கு எழுந்ததும் காபி குடிச்சாகணுமே! சரியா நீ வந்துட்டே. சித்த உட்கார். நீயும் ஒரு வாய் குடிச்சிட்டுப் போவியாம்" என்றபடி சமையலறைக்குள் சென்றார் ராஜம்.

அந்த சமையலறை நல்ல விசாலமாக இருந்தது. மார்பிள் மேடை போடப்பட்டு அதன் மேல் கேஸ் ஸ்டவ்வும், விசேஷ நாட்களில் பண்ணையாட்களும் சேர்ந்து சமைப்பதற்கென கோட்டை அடுப்பும் பதிக்கப் பட்டிருந்தது. ஒரு மூலையில் ஆட்டுக்கல் அம்மியும் மறு ஓரத்தில் மிக்ஸி, கிரைண்டரும் இருந்தது. வெண்கலம், கனமான பித்தளை பாத்திரங்கள், எவர்சில்வர் என மூன்று பக்க சுவரிலும், அட்டாலியிலும் பாத்திரங்கள் குவிந் திருந்தன.

பில்டரில் காபி இறங்கியதும் பொங்கிய பாலை விட்டு ராஜம் காபியை கலந்தார். காபியின் மணம் பொன்னம் மாவை உசுப்ப சமையலறை குறட்டில் வந்து அமர்ந்தாள். வெண்கல டம்ளரில் ராஜம் கொடுத்த காபியை வாங்கிக் கொண்டவள், "இன்னும் ரேவதி எழுந்திருக்கலை யாம்மா?" என்றபடி குடிக்கத் தொடங்கினாள்.

"ராவெல்லாம் பரிட்சைக்குப் படிச்சிட்டு அசந்து தூங்கறா."

"நல்ல கூத்துமா உங்களோட. கண்ணுக்கு எட்டிய வரை சொத்து கிடக்குது. அத்தனைக்கும் ஒரே வாரிசு ரேவதி. இருக்கறதை ஆளவே ஆள் பத்தாது. அது இப்ப கஷ்டப்பட்டு படிச்சி வேலைக்கு போய்தான் நம்ம வீடு நிறையணுமா என்ன?"

"உனக்கும் எனக்கும் தெரியுது பொன்னாத்தா. ஆனா அவங்க ஐய்யாவுக்கும் மகளுக்கும் தெரியணுமே! மக



பெரிய படிப்பு படிக்கிறேன், அதைச் செய்யப் போகிறேன், இதைச் செய்யப் போகிறேன் அப்படிங்கறா... அவங்கய் யாவும் பொண்ணு ஆசைப்படறா. படிக்கட்டுமே அப் படிங்கறாரு. இவ்வளவு பெரிய வீட்டைப் பராமரிக்க முடியாம நான் திண்டாடறேன். கூடமாட எழுந்து உதவி செய்வோங்கிறது இல்லை. எல்லாம் அவங்கப்பா கொடுக்கிற இடம்." பேசியபடியே கணவருக்கு காபி கலக்க தொடங்கினார் ராஜம்.

"என்ன காலங்காத்தால என்னைப் போட்டு உருட்ட றீங்க?" பளிச்சென்ற சிரிப்புடன் சமையலறை வாயிலில் வந்து நின்றாள் ரேவதி. தண்ணீரில் கழுவிய முகம். விடிகாலை பனியில் நனைந்த ரோஜாவை நினைவு படுத்த தன் கழுத்தை கட்டிக் கொண்ட மகளின் கைகளை விலக்கியபடி, "காபி கொட்டிடப் போகுது. நீ குடிக்கிறியா ரேவதி?" என்றார் ராஜம்.

"எனக்கு டீ குடும்மா" என்றபடி பொன்னாத்தாவின் அருகில் அமர்ந்தாள் ரேவதி. "பொன்னாத்தா, உன் பேரன் இப்ப எப்படி படிக்கிறான்?"

"இந்த பரிட்சையில நல்ல மார்க்கு வாங்கியிருக் கான்னு அவங்க வாத்தியாரம்மா கூப்பிட்டுச் சொன்னாங்க. நீங்கதான் தினம் பாடம் சொல்லித் தர்றிங்கன்னு சொன் னேன். ரொம்ப பாராட்டினாங்க போங்க. தாய் தகப்ப னில்லாத பையன். ஏதோ அவனுக்கு உழைக்க தெம்பு வர்ற வரை பாத்துக்கற கடமை எனக்கு." இறந்து போன மகன் மருமகளின் நினைவில் கலங்கிய கண்களை முந்தானையில் துடைத்தாள் பொன்னாத்தா.

"அவனை சும்மா பாத்துகிட்டா பத்தாது பொன்னாத்தா. நல்லா படிக்கவும் வைக்கணும். நல்லா படிச்சா கவர்ன்

மெண்ட்டிலேயே உதவித் தொகை எல்லாம் தருவாங்க. வேற எந்த உதவின்னாலும் நாங்க பாத்துக்கறோம். அவன் படிச்சி ஒரு நல்ல வேலைக்குப் போகணும். நல்லா சம்பாதிச்சி கார்ல வந்து இறங்கி உன்னை இங்கிருந்து கூட்டிட்டுப் போயிடுவார் பாரேன்! அப்புறம் எங்களுக்குத் தான் பொன்னாத்தா இல்லாம கஷ்டமாயிடும்." ரேவதி விவரித்த காட்சியில் பொன்னாத்தாவின் வெற்றிலை காவியேறிய பற்கள் அனைத்தும் வெளியே தெரிந்தன.

"நானெல்லாம் உங்களை விட்டு எங்கேயும் போக மாட்டேம்மா. என் பேரன் சம்பாதிச்சா அது அவனோட... இந்த கட்டை சாகிற வரை இங்கதான் கிடக்கும். ஆனா நீங்கதான் கல்யாணம் பண்ணிகிட்டு எங்களை எல்லாம் விட்டுட்டுப் போயிடுவீங்க."

"ம்... அதுக்கு வேற ஆளைப் பாரு. நா எதுக்கு இந்த ஊரை விட்டுப் போகணும்? எங்க அப்பா, அம்மா இந்த வீட்டை விட்டு நான் போகவே மாட்டேன். நான் படிச்சி முடிச்சதும் இந்த ஊருக்கு பள்ளிக்கூடம், மேம்பாலம், கல்லூரி என்று பெரிய பெரிய கட்டிடங்கள் கட்டப் போகிறேன். நம்ம ஊர் பசங்க படிக்க வெளியூருக்கு அலையாம இங்கேயே படிக்க ஏற்பாடு செய்யப் போகிறேன். நம்ம ஊரிலிருந்து டவுனுக்கு வியாபாரத்துக்கு போகணும்னா பரிசல்ல ஆத்தை தாண்டிப் போகணும். மழையோ வெள்ளமோ வந்தால் அதுவும் முடியாது. இல்லாட்டி புழுதி ரோட்ல அடுத்த ஊரை சுத்திட்டுப் போகணும். நான் படிச்சதும் பாரேன் கவர்ன்மெண்ட்கிட்ட பேசி, நம்ம எம்.எல்.ஏ. மூலமாக முயற்சி பண்ணி நம்ம ஊர் ஆத்துக்கு மேலே புதிய மேம்பாலம் கட்டப் போகிறேன். அதுக்காகத் தான் நான் இஞ்சினியருக்கே படிக்கிறேன். அப்புறம்...



ரேவதி தன் எதிர்காலத் திட்டங்களை விவரித்துக் கொண்டே போக,

"அது சரி" என்று அபிநயத்துடன் முகத்தை வெட்டினாள் பொன்னாத்தா. "இந்த மாதிரி எத்தனை பேரை என் அனுபவத்தில் பார்த்திருப்பேன்.

"எங்க ஊரு, எங்கம்மா, எங்கப்பான்னு பேசற புள்ளைங்க, கல்யாணமானதும் திரும்பிக் கூட பார்க்காம புருஷன் பின்னாடியே போய்டும். அப்புறம் ஒரு திருவிழா, பண்டிகைன்னு வர்றதுன்னா கூட புருஷனுக்கு சாப்பாடு செய்யணும், புள்ளையை ஸ்கூலுக்கு அனுப்பணும், வர நேரமில்லையாக்கும்."

ரேவதிக்கு ரொம்ப கோபம் வந்தது. "என்னையும் அந்த மாதிரி நினைச்சிடாதே. நான் எங்கம்மா அப்பாவை ஒரு ஆண் பிள்ளைப் போல் கூடவே இருந்து பாத்துக்கப் போறேன். இந்த ஊர்லயேதான் இருக்கப் போறேன் பார்."

"பார்க்கத்தானே போறேன்."

"பார்க்கலாம்."

டீயுடன் வந்த ராஜம் "என்ன பொன்னாத்தா காலங் காத்தால உனக்கு வேற வேலை இல்லே? அவகிட்ட வம்பு பண்ணிகிட்டு." என்றவள் மகளிடம் "டீயை குடித்துவிட்டு அப்பாவுக்கு காபி கொண்டு போய் கொடு. அப்படியே வாசலில் ஒரு கோலம் போட்டு பூசணிப் பூவை வை. தெருவில் பார் உன் வயது பெண்கள் எல்லாம் போட்டி போட்டுக் கொண்டு தினமும் பெரிய பெரிய கோலமாக போடுகிறார்கள்."

"போம்மா. நீயே போய் போடு. எனக்குப் படிக்கணும்" என்று சிணுங்கியபடி அப்பாவுக்கு காபியுடன் முன்னறைக்குச் செல்லும் மகளை குறையுடன் பார்த்தார் ராஜம்.

"ஒரு கோலம் கூட போடத் தெரியாத பெண். எப்படி கல்யாணம் கட்டி குடித்தனம் நடத்துவாள்?"

"எல்லாம் அருமையா நடத்தும்மா. நம்ம ரேவதி குணம் யாருக்கு வரும் சொல்லுங்க?" என்றபடி காபி பாத்திரத்தை கழுவி கவிழ்த்து விட்டுக் கிளம்பினாள் பொன்னாத்தா.

வேப்பங்குச்சியில் பல்லை விளக்கி வாய் கொப்பளித்து விட்டு வந்து வாசல் திண்ணையில் உட்கார்ந்தார் ராமசாமி. 'இன்னும் சிறிது நேரத்தில் பண்ணையாள் குப்பன் நடவுக்கு ஆட்களுடன் வந்து விடுவான். இப்போதெல்லாம் தோட்ட வேலைக்கு ஆள் கிடைப்பதே பெரும்பாடாக இருக்கிறது. வெளியூர் ஆட்களை உள்ளே விடாமல் உள்ளூர் ஆட்கள் போட்டி போட்டு வேலை செய்த காலம் போய் இன்று ஆள் தேடி அலைய வேண்டியதிருக்கிறது. எல்லாருமே டவுனில் கம்பெனி வேலை பார்த்துக் கொண்டு நிழலில் சம்பாதிக்க ஆசைப்படுவதால் வரவர விவசாயம் செயவது ரொம்பவும் கடினமாகி வருகிறது.'

"அப்பா காபி" என்றபடி டம்ளரை கொடுத்துவிட்டு அவர் அருகில் அமர்ந்தாள் ரேவதி.

திண்ணையில் கால்களை தொங்கவிட்டு கொலுசுகள் சிணுங்க கால்களால் தாளம் போட்ட மகளை பூரிப்புடன் பார்த்தார் ராமசாமி. நல்ல நிறம். களையான முகம். வரிசையான விளம்பரப் பற்கள். கிராமத்திற்கே உரிய தளதளப்பான உடல். கவலை என்பதே அறியாமல் பட்டாம் பூச்சியாய் வீடு பூராவும் சிறகடிக்கும் மகளை பார்க்கையில் எப்போதுமே மனசெல்லாம் நிறைந்து போகும் ராமசாமிக்கு.

"என்னப்பா பார்க்கறீங்க?"



தூங்கி எழுந்ததால் கலைந்திருந்த மகளின் தலையைக் கோதி விரல்களால் சீர் செய்தார் ராமசாமி.

"நீ காபி குடிச்சிட்டியாடா?"

"ஆச்சுப்பா."

ராமசாமி காபியை முடிக்கும்போது குப்பன் வந்து விட்டான். "ஐயா நடவு ஆளுங்க தோட்டத்துக்குப் போய்ட்டாங்க. நானும் போறேன்" என்று தகவல் சொன்னவன், "சின்னம்மா உங்களுக்கு இளநி கொடுத்தனுப்பவா?" என்றான் ரேவதியிடம்.

"இப்ப காலேஜுக்கு நேரமாச்சு குப்பா. அப்பத்தாவை பார்க்க சாயங்காலம் வரும்போது குடிக்கறேன்" என்றாள் ரேவதி. உள்ளே வந்து மனைவியிடம் தோட்டத்துக்கு சாப்பாடு அனுப்பச் சொல்லிவிட்டு மகளிடம் விடை பெற்று நடவுக்குக் கிளம்பினார் ராமசாமி.

இனி அப்பா வீடுவர இரவாகிவிடும் என்று நினைத்தபடி ரேவதி குளிக்கப் போனாள்.



## 2

மலேசிய தலைநகர் கோலாலம்பூர். சுருக்கமாக கே.எல்.எனப்படும் அதன் அகலமான அமைதியான சாலைகளில் சூர்யாவின் கார் வேகமாக சென்று கொண்டிருந்தது. ஹாரனின் சப்தம். புகை, கூட்ட நெரிசல், குறுக்கே புகுந்து சாலையைக் கடக்கும் மனிதர்கள், பின்னாலிருந்து கத்தும் ஆட்டோக்காரர்கள். முன்னால் வழிவிட மறுக்கும் டூ வீலர்கள் இவை ஏதுமின்றி ரிலாக்சாக கார் ஓட்டுவது ஒவ்வொரு முறையும்

சகமான விஷயமாக இருந்தது. பி.பி.காம்ப்ளெக்சின் கார் பார்க்கிங்கில் வண்டியை நிறுத்திவிட்டு, கண்களில் அணிந்திருந்த கூலிங் க்ளாசை கழற்றியபடியே படிகளில் ஏறத் தொடங்கிய சூர்யாவுக்கு மாநிறம். அசாத்திய உயரம், அவனை கம்பீரமாய் காட்ட, மின்னலாய் ஒளிர்ந்த பற்களும், அழுத்தமான நடையும், செதுக்கினாற் போன்ற முக அமைப்பும் திரும்பிப் பார்க்கிற பெண்களை முதுமை யான ஆண் இவன் என விளம்பர பாணியில் சொல்ல வைத்தன. எக்ஸலேட்டரில் இரண்டாவது ப்ளோருக்கு சென்றான் சூர்யா. மினிஸ்கர்ட் அணிந்த சீனப் பெண்கள் கண்ணுக்கெட்டியவரை எறும்புகளாய் ஊர்ந்து கொண் டிருந்தனர். அந்த கையில்லாத டாப்சும், முட்டி தெரியும் ஸ்கர்ட்டும் சிறிதும் விரசமில்லாமல் இருப்பதற்குக் காரணம் அவர்களின் உடல் அமைப்பும், இயல்பாய் அந்த உடையை அவர்கள் அணியும் விதமும்தான். இந்திய சினிமாக்களில் உடலை மூடிய புடவை அணிந்தாலும் கூட கதாநாயகிகளின் அங்க அசைவுகளாலேயே அதை யும் விரசமாக்கி விடுகிறார்கள். கவர்ச்சியை தூண்டுவது உடையை விட அதை அணிந்திருப்பவர்களின் பாடி லாங்வேஜ் தான் என்று நினைத்தபடி கான்வாஸ் ஷூவும் பர்ப்யூமும் வாங்கிக் கொண்டு நகர்ந்தான்.

"ஹாய்" என்றபடி லாரன்ஸ் எதிரே வந்தான். சூர்யா பணிபுரியும் அதே சாப்ட்வேர் கம்பெனியில் பணிபுரிபவன். ரொம்ப ஜாலியானவன். அவன் இருக்குமிடம் எப்பவும் கலகலப்பாக இருக்கும். திங்களிலிருந்து வெள்ளி வரை நிற்க நேரமின்றி சுறுசுறுப்பாய் வேலை செய்வான். சனி, ஞாயிறுகளில் எப்பவும் லிக்கருடனும் கேர்ள் ப்ரெண்ட்சுடனும்தான் இருப்பான். அவனைப் பார்த்ததும் 'லாரன்ஸ் என்ன இது? உலக அதிசயங்களில் ஒன்றை



என் கண்ணால் பார்க்கிறேன். நீ தனியாக இருக்கிறாய் என்பதை என்னால் நம்பவே முடியவில்லை" சூர்யா கண்களைத் தேய்த்தபடி கூறினான்.

பதிலுக்கு ஆர்ப்பாட்டமாய் சிரித்த லாரன்ஸ் "இல்லை. என் ப்ரண்ட் வந்திருக்கா பார். அங்கே ஷாப்பிங் பண்ணுகிறாள். நான் உன்னைப் பார்த்துவிட்டு வந்தேன்" என்றான்.

"சே! என்னை ஏமாற்றி விட்டாய்" என்று அவன் தோள்களைத் தட்டிய அவன் கேர்ள் ப்ரண்டை பார்த்த சூர்யா, "ஷாப்பிங் பை நிறையும் வேகத்தைப் பார்த்தால் இன்னிக்கு உன் பர்ஸ் பூரா காலி போலிருக்கே!" என்றான் கிண்டலாய்.

"ஆமாம். காலிதான். வாரத்தில் இரண்டு நாள்கள் என்னை சந்தோஷமாக வைத்திருக்கிறாள். அதற்காக இப்படி பொருட்கள் மூலமாய் அவளுக்கு ஒரு சந்தோஷம் தருவதில் என்ன தப்பு?"

"ஐந்து நாள் கஷ்டப்பட்டு சம்பாதித்ததை இரண்டு நாளில் அதிலும் அடுத்தவர்களுக்காக செலவு செய்வது முட்டாள்தனம் லாரன்ஸ். வாழ்க்கை முழுவதும் சந் தோஷம் வேண்டுமானால் யாராவது நல்ல பெண்ணைப் பார்த்து திருமணம் செய்து கொள்."

"பசிக்கும்போது நல்ல சாப்பாடு கிடைக்கிறது என்ப தற்காக ஒரு ஹோட்டலை விலைக்கு வாங்கி தினமும் அதில் சாப்பிட முடியுமா? சில நிமிட சந்தோஷம், ஒரு நாளில் சில மணி நேர துணை. இதற்காக ஆயுளுக்கும் ஒருவரை கூட வைத்திருப்பதுதான் முட்டாள் தனம்."

லாரன்சுக்கு பதில் சொல்லாமல் அவனிடம் சிரித்தபடி விடை பெற்றான் சூர்யா.

''இரு சூர்யா. என்னை வழியில் டிராப் பண்ணிடு'' என்றபடி லாரன்ஸ் கூடவே வந்தான்.

''ஏன் உன் ஆள் என்னாச்சு?''

''என் வீக் எண்ட் முடிஞ்சது. அவளுடைய ஷாப்பிங்கும் முடிஞ்சது. நாளை மண்டே வேலைக்குக் கிளம்பணுமே! சோ, அவளுடைய ப்ளாட்டுக்கு அவள் போய் விட்டாள்.''

பேசியபடியே பயணிக்கும்போது லாரன்ஸ் கேட்டான். ''சூர்யா நீ இங்கே எப்படி தனியாய் இருக்கிறாய்? உன் வீக் எண்ட்ஸ் போரடிக்கலை?''

''இல்லை!'' சூர்யா புன்னகையுடன் தலையசைத்தான். ''என்னுடைய கனவுகளை, விடுமுறைகளை நான் சேமித்து வைத்திருக்கிறேன். தற்காலிக சந்தோஷத்திற்காக, என் நிரந்தர நிம்மதியை இழக்க நான் தயாராக இல்லை!

''ஹே! நீ ரொம்ப ஆழமானவன். உடையிலும், உணவு முறையிலும், ஆங்கிலத்திலும் ஐரோப்பியர்களை பின் பற்றினாலும் உனக்குள் உன் நாட்டு கலாச்சாரம்தான் வேரோடியிருக்கிறது'' என்றான் லாரன்ஸ் வியப்புடன்.

''இருக்கலாம்'' சூர்யா தோள்களைக் குலுக்கினான்.

''அப்படியானால் நீ ஏன் இன்னும் திருமணம் செய்து கொள்ளவில்லை.''

''என் பெற்றோர்கள் மூன்று வருடமாய் எனக்கேற்ற பெண்ணை தேடிக் கொண்டே இருக்கிறார்கள். கண்டு பிடித்ததும் கல்யாணம்தான்.''

''எனக்கு இந்திய திருமணங்களில் இது ஒரு பெரிய அதிசயம் சூர்யா. முகம் தெரியாத பெண்ணுடன் பெற்றோர் பேச்சைக் கேட்டு எப்படி ஆயுள் முழுவதும் சேர்ந்து



வாழ முடியும்? உன்னுடைய குணம் ரசனை, படிப்புக்கேற்ற வளை பழகிப் பார்த்து நீ தேர்ந்தெடுக்க வேண்டாமா?''

''என் பெற்றோரைப் பற்றி உனக்குத் தெரியாது லாரன்ஸ். எல்லா விதத்திலும் எனக்குப் பொருத்தமானவளைத் தான் தேர்ந்தெடுப்பார்கள். குழந்தைகள் வளர்ந்ததும் அவர்களை பெரியவர்களாக கருதி தனியே வசிக்கப் பழக்கும் சூழ்நிலையில் வளர்ந்தவன் நீ. பெற்ற மகன் எவ்வளவு பெரியவனானாலும் தான் சாகும்வரை அவனை குழந்தையாகவே பார்க்கும் மனோபாவத்தில் வளர்ந்தவன் நான். உனக்கு எப்படி புரிய வைப்பதென்று எனக்குத் தெரியவில்லை. என் அக்கா லண்டனில் இருக்கிறாள். அவள் கணவரைப் போல் நல்ல மனிதரைப் பார்ப்பது அரிது. திருமணமானதிலிருந்து என் அக்கா எங்கள் வீட்டையே மறந்து விட்டாள் என்றால் பாரேன். இத்தனைக்கும் நிச்சயத்தின் போது கூட இருவரும் பார்த்துக் கொள்ளவில்லை. மாப்பிள்ளை கல்யாணத்தின் போதுதான் விடுமுறை கிடைத்து வந்தார். அதனால்தான் பெண் பார்க்கும் விஷயத்தை பெற்றோர். பொறுப்பிலேயே விட்டு விட்டேன்.

''எனி வே. சீக்கிரமாய் திருமணம் செய்து கொள் சூர்யா. மலேசியாவின் இதமான சூழ்நிலைக்கு கூட ஒரு பெண் இருப்பது உல்லாசமாய் இருக்கும்.'' சிரித்தபடியே லாரன்ஸ் விடைபெற்று போனான்.

தன் அபார்ட்மெண்ட்க்கு காரை திருப்பிய சூர்யா அம்மாவின் பேச்சை யோசித்தபடியே அறைக்கு போய் சேர்ந்தான். மூன்று வருடமாகவே அம்மா திருமண விஷயமாக நச்சரித்து வருகிறார்கள். எப்போதும் இ.மெயிலில் எதாவது ஒரு பெண்ணின் படம் அவளைப் பற்றிய குறிப்பு

களுடன் இருக்கும். போதாததற்கு போனிலும் ''பெண்ணின் படத்தைப் பார்த்தாயா? பிடித்திருக்கிறதா?'' என்று அதே பேச்சுதான்.

''திருமணம் வேண்டும் என்று தோன்றும்போது நானே சொல்வேன். அதுவரை பொறுமையாக இருங்கள்'' என அவன் எத்தனை முறை சொன்னாலும் கேட்க மாட்டார். ''நீ இந்தியா வந்து கல்யாணம் பண்ணிட்டு இங்கேயே செட்டில் ஆயிடுப்பா. உங்கப்பா பார்க்கும் மத்திய அரசு வேலைக் காக நாங்களும் நாலு வருஷத்துக்கு ஒரு ஊர்ன்னு இந்தியா பூரா சுத்தி அலைஞ்சாச்சு. உன் தங்கையையும் படிப்பு கெட வேண்டாம்னு ஹாஸ்டல்ல விட்டாச்சு. உனக்காகவும் வெளிநாட்டில் செட்டில் ஆயிட்டா, நம்ம குடும்பமே திசைக்கொன்றாய் கிடக்கிற மாதிரி இருக் குப்பா. நீ கல்யாணம் பண்ணி நம்ம வீட்ல இருந்தீன்னா சொந்த இடத்துல நம்ம குடும்பம் தழைக்கும். நாங்களும், உன் அக்கா தங்கைகளும் வந்து போக நம்ம வீடுங்கற உணர்வு இருக்குமில்லையா?'' என்று மகனை கரையாய் கரைத்தார்.

சூர்யா சிறு வயதில் பள்ளியில் படிக்கும்போதே அப்பா வின் வேலை விஷயமாய் அடிக்கடி ஸ்கூல் மாற வேண்டி யிருந்தது. ஒரு வழியாக பள்ளி படிப்பை முடித்ததும் கல் லூரி படிப்பை அமெரிக்காவில் முடித்து ஆஸ்திரேலியாவில் வேலை பார்த்தான். ஆஸ்திரேலிய கம்பெனியின் ப்ரா ஜெக்ட் விஷயமாய் இந்த ஒரு வருடமாய் மலேசியாவில் இருக்கிறான். யோசித்துப் பார்க்கும்போது நாடோடி வாழ்க்கை தான் நம்முடையது. அம்மாவின் ஆசையில் தவறில்லை என்று தோன்றியது.

மறுநாள் சூர்யாவுக்கு அலுவலகத்தில் எதிர்பாராமல் பத்து நாட்கள் விடுமுறை கிடைத்தது. அடுத்த வாரத்தி



லிருந்து விடுமுறை எடுத்துக் கொள்ளலாம் என்றார்கள். இரண்டு நாளைக்கு மேல் சூர்யாவால் சும்மா இருக்க முடியாது. பத்து நாட்கள் அபார்ட்மெண்டில் அடைந்து கிடக்கவோ, வெட்டியாய் ஊர் சுற்றவோ விருப்பமில்லை அவனுக்கு. யோசித்தபடி நடந்தபோது அவனுடன் பணி புரியும் நவோமி எதிர்பட்டாள்.

''என்ன சூர்யா, ஏதாவது ப்ராப்ளமா?'' என்றாள் உரிமை யுடன் தோளை அணைத்து.

''அதெல்லாம் இல்லை. பத்து நாள் விடுமுறை எனக்கு, அதைப்பற்றி யோசித்துக் கொண்டிருந்தேன்.''

''சம்பளத்துடன் விடுமுறை கிடைத்தால் யோசிக் கிறாயா நீ? என்ஜாய் பண்ணு மேன். என் அபார்ட் மெண்டுக்கு வா. என்னுடைய கம்பெனி நிச்சயம் பிடிக்கும் உனக்கு.'' கண்ணடித்துச் சிரித்தாள்.

''வி ஆர் லேட்டர் பை'' என்றபடி அவளிடமிருந்து கழன்று கொண்டபோது இந்தியாவிற்கு போய் அம்மாவை, தங்கையைப் பார்த்து விட்டு வந்தால் என்ன என்று தோன்றவே, உடனடியாய் அதற்கான ஏற்பாடுகளில் இறங் கினான்.

## 3

ரேவதி கல்லூரிக்கு தயாராக புத்தகங் களுடன வெளியே வரும்போது சின்னு காரைத் துடைத்துக் கொண்டிருந்தான். அவள் திரும்பி அம்மாவிடம் விடைபெறும் போது ஓடி வந்து கதவைத் திறந்து விட் டான். ரேவதி இஞ்சினியரிங் மூன்றாவது வருடம் படிக்கிறாள். அந்த ஊரிலேயே டவுனுக்குப் போய்

பொறியியல் படிக்கிற முதல் பெண் என்ற பெருமை அவளுக்கு உண்டு. அவள் கல்லூரியில் சேர்ந்த பிறகு தான் ராமசாமி மகளது வசதிக்கென்று ஒரு மாருதி காரை வாங்கினார். அதுவரை அவருக்கு செலவு கணக்கு எழுதிக் கொண்டிருந்த சின்னு அன்று முதல் டிரைவர் வேலையும் பார்த்தான். தன்னை நம்பி முதலாளி மகளை அனுப்பு வதில் மிகுந்த பெருமை அவனுக்கு. இந்த மூன்று வருடத்தில் ஒரு நாள் கூட அவன் தாமதமாக வந்ததில்லை.

கல்லூரி வாசலில் கார் போய் நின்றதும் மரத்தடியே நின்றிருந்த அவளது தோழிகள் உற்சாகமாக கையசைத்தனர். "சின்னு அண்ணா வருகிறேன்'' என்று சின்னுவிடம் விடைபெற்றுக் கொண்டு ரேவதி மரத்தடிக்குச் சென்றதும் கச்சேரி களை கட்டியது.

''எக்ஸாமுக்கு தயார் பண்ணியாச்சா ரேவதி?'' வாணி கேட்டாள்.

''அவளுக்கென்னம்மா, எப்பவும் அவதான் க்ளாஸ் பர்ஸ்ட். நம்மை சொல்லு?'' என்றாள் வித்யா.

"நீயும் படிச்சா பர்ஸ்ட் வரலாம். உனக்குத்தான் உங்க மாமாவோட டூயட் பாடவே நேரம் பத்தலையே!'' வித்யாவை சீண்டினாள் கலா.

''ஏன் நீயும் உன் மாமா கூட பாடேன். யார் வேண்டாண்ணாங்க?'' வித்யா திருப்பினாள்.

"ம்..." பெருமூச்சு விட்டாள் கலா.

''எங்கடி செல்வியை இன்னும் காணோம்?'' என்றாள் ரேவதி.



''அங்க வர்றா பாரு'' வித்யா கை காட்ட மொபட்டை பார்க்கிங்கில் நிறுத்தி விட்டு அவசரமாய் அவர்களை நோக்கி வந்தாள் செல்வி.

''ஸாரிப்பா. லேட்டாயிடிச்சி'' என்றபடி அருகில் வந்து அமர்ந்தவளின் முகத்தில் புதுப்பொலிவு.

''என்னடீ. முகத்தில் தவுஸண்ட் வாட்ஸ் பல்ப் எரியுது. என்ன விசேஷம்?'' என்றாள் ரேவதி.

''வீட்ல கல்யாண பேச்சு முடிவாயிடிச்சி.'' என்றாள் செல்வி.

''அப்படியா விஷயம்? இங்கிருந்து எஸ்கேப் ஆகப் போற சந்தோஷமா?''

''கங்கிராஜுலேஷன்ஸ்.''

''எப்ப கல்யாணம்? எங்கு நடக்கப் போகிறது?''

''நம்ம செல்வி இனி திருமதி ஆயிடுவா. அப்ப அவளை என்ன பெயர் சொல்லி கூப்பிடறது?''

''மாப்பிள்ளை எந்த ஊர்? என்ன வேலை? பார்க்க எப்படியிருப்பார்?''

மூச்சு விடாமல் எல்லோரும் கேள்வி மேல் கேள்வியாய் அடுக்கவும். செல்வி திணறிப் போனாள்.

''அவர் பெயர் கணபதி. இவருடன் பிறந்த தம்பி ஒருவன், தங்கை ஒருத்தி. ஆக மொத்தம் மூன்று பேர். திருநெல்வேலியில் ஸ்பேர் பார்ட்ஸ் கடை வைத்திருக்கிறார்.''

அவள் முடிக்கும் முன் ரேவதி குறுக்கிட்டாள். "ஏண்டி திருநெல்வேலி நம்ம ஊரிலிருந்து எவ்வளவு தூரம்? உங்க வீட்டில் நீங்க இரண்டு பெண்கள் தானே! உன் அம்மா அப்பாவை அருகே இருந்து கவனித்துக் கொள் ளாமல் அவ்வளவு தூரத்திலிருந்து அவசரத்துக்கு ஓடி வர முடியுமா?"

"நாங்க என்ன உன்னை மாதிரி பணக்காரங்கன்னு நினைச்சியா ரேவதி? எங்கப்பா கவர்ன்மென்ட் ஆபீஸ் குமாஸ்தா. அவ ரிட்டையர்டு ஆகறதுக்குள்ள எனக்கும் என் தங்கைக்கும் வழி செஞ்சாகணும். மெரிட்ல சீட் கிடைச்சதாலதான் என்னை இங்கே படிக்க அனுப்பினார். இப்ப நல்ல இடமா வரும்போது முடிச்சிட்டா தன்னோட கடமை முடியும்னு நினைக்கிறார். உனக்குத் தெரியுமா? பெண் தன்னைப் பார்த்துக்கலைன்னா கூட பரவா யில்லை. பாரமாப் போயிடக் கூடாதுங்கறதுதான் மிடில் க்ளாஸ் சித்தாந்தம்."

கல்லூரி மணி ஒலிக்கவே மேற்கொண்டு பேச வழி யின்றி எல்லோரும் வகுப்புக்கு விரைந்தனர். மாலையில் கல்லூரி முடிந்து ரேவதி வரும்போது வழியில் இறங்கி கொள்வதாக வாணியும் வித்யாவும் கூட வந்தனர். அன்றைய க்ளாசை பற்றி பேசத் தொடங்கியதில் பேச்சு கடைசியில் செல்வியின் திருமணத்தில் வந்து நின்றது. "இனி செல்வி வராம நமக்கே க்ளாஸ் வெறிச்சோடிப் போயி டும். அவங்க வீட்டில் பாவம் எவ்வளவு கஷ்டப்படு வாங்களோ?" என்றாள் ரேவதி.



"நீயேன் இதுக்கு இவ்வளவு கவலைப்படற? பெண் ணுக்கு திருமணமாகி கணவன் வீடு செல்வது சாதாரண மாய் எல்லார் வீட்டிலும் நடப்பதுதானே?" என்றாள் வித்யா.

"என்னவோ பிறந்து வளர்ந்த ஊரை விட்டு முன்பின் தெரியாதவர்களை எப்படி நம்பி போவது என்பது எனக்கு ஆச்சரியமாகவே இருக்கிறது. திருமணம் என்ற பந்தத்தில் கணவனுக்கும் மனைவிக்கும் சரிபாதி உரிமை இருக் கிறது. மனைவிக்காக எந்த கணவனும் அவள் வீட்டில் வசிக்க முற்படாத போது மனைவி மட்டும் எல்லாவற்றை யும் விட்டுவிட்டு அவன் பின்னால் ஓட வேண்டுமா? நான் படித்து முடிச்சதும் நம்ம ஊரில் சில விஷயங்கள் செய்ய வேண்டுமென்று இருக்கிறேன். அதன் பிறகு அப்பாவிடம் சொல்லிவிடப் போகிறேன். வெளியூருக் கெல்லாம் போக மாட்டேன். உள்ளூரிலேயே மாப்பிள்ளை பாருங்கள் என்று."

"என்ன இருந்தாலும் நீ பணக்காரி. நினைச்சது நடக்கும்" என்றாள் வாணி மனதில் பொருமலுடன். தோழிகளை அவரவர் வீட்டில் இறக்கி விட்டு வீட்டிற்கு வந்த ரேவதி தன் வீட்டு வாசலில் நின்றிருந்த கூட்டத்தை பார்த்து அதிர்ந்தாள்.

"சின்னு அண்ணா என்ன கூட்டம்?" என்றாள் பதட் டத்துடன். "இருங்கம்மா. பாத்துட்டு வரேன்" என்று சின்னு காரை விடு இறங்கி ஓடியதும், ரேவதியும் அவசரமாய் இறங்கி உள்ளே செல்ல முயன்றாள். ரிவர்ஸ் எடுத்த ஒரு கார் அவள் வழியை மறைத்தது. பின் பக்கம் தோட்டத்து வழியாய் வீட்டிற்குள் செல்லலாம் என்றெண்ணி அவள் வலதுபுறம் திரும்பியபோது அந்த காரும் வலதுபுறம் திரும்

பவே ரேவதி எரிச்சலடைந்தாள். காரை சுற்றிக் கொண்டு போக எண்ணி முன்புறம் நகர்ந்த போது வழி விடாமல் காரும் முன்னே நகரவே ரேவதிக்கு கோபம் வந்தது. ஒரு புறம் எதிர்வீட்டினர் வீடு கட்டுவதற்காக மணலை தெருவில் கொட்டி வைத்திருந்தனர். அடுத்த வீட்டு வாயிலில் நின்றிருந்த லாரியில் மூட்டைகளை ஏற்றிக் கொண்டிருந்தனர். முதன் முதலாய் அந்த ஊரில் வெளிநாட்டுக் காரைப் பார்த்த வியப்பில் குழந்தைகள் கூட்டமாய் வண்டியை தொட்டு பார்த்தபடி கூடவே நகர, கிடைத்த சிறு இடைவெளியில் அந்த பெரிய காரைத் திருப்ப அவன் திணறிப் போனான். வண்டி திரும்பும் இடத்திலெல்லாம் குறுக்கே வந்து வழியை மறித்த அந்த பெண்ணைப் பார்த்தால் அவனுக்கு எரிச்சலாக வந்தது. 'தெருவில் பரத நாட்டியம் ஆடுகிறாள் இடியட்' என வாய்க்குள் முணுமுணுத்தான்.

உள்ளே செல்ல சிறுவழி கூட கிடைக்காததில் பொறுமை இழந்த ரேவதி, ''நடக்கிற வழியை அடைத்து காரை கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறாயே, அறிவில்லை உனக்கு?'' என்றாள் ஆத்திரத்துடன்.

திரும்பிப் பார்த்த அவன் முறைத்தான். ''கார் ரிவர்ஸ் வருதுன்னு தெரியுதில்ல. ஓரமா ஒதுங்கிப் போக வேண்டியதுதானே!''

''குறுக்கே நிறுத்தினால் எங்கே ஒதுங்கறதாம்? நான் போனப்புறம் வண்டியை திருப்பு.''

''நான் திருப்பி நிறுத்திய பிறகு நீ போ'' என்றபடி காரை இடதுபுறமாய் ஒடித்துத் திருப்பியவன், ''சே! பட்டிக் காடுங்கறது சரியா இருக்கு. மேனர்ஸ் தெரியாத ஜென் மங்கள்'' என்று சத்தமாகவே பேசிக் கொண்டான்.



''எங்க ஊருக்கு வந்துட்டு என்னையே பேசறியா? உனக்கு எவ்வளவு திமிர் இருக்கணும்?'' ரேவதி கொதித்துப் போனாள்.

''உங்க ஊர்ன்னா பயந்துடுவாங்களா? போ'' - என்றான் அவன் அலட்சியமாய்.

எப்பவும் எல்லோராலும் பாராட்டப்பட்டும் புகழப் பட்டும் பழக்கப்பட்ட ரேவதி அவன் 'போ' என வெகு அலட்சியமாய் தன்னை தூசியாய் ஒதுக்கிய விதத்தில் கோபத்தின் உச்சிக்கே சென்றாள். என்ன பேசுகிறோம் என்பதையும் மறந்து ''நீ போடா முதல்ல'' என்றாள்.

ரேவதி 'டா' போட்டுப் பேசியதும் கோபமாய் காக் கதவைச் சாத்தி விட்டு இறங்கினான் அவன். அருகே வந்திருந்தால் என்ன செய்திருப்பானோ, அதற்குள் ராம சாமி அவசரமாய் அவர்கள் அருகே வந்தார்.

''காலேஜிலிருந்து வந்தாச்சா ரேவதி? தம்பி யார் தெரியுமா? எங்கம்மா அதான் உங்கப்பத்தாவோட அக்கா பேரன். பெயர் சூர்யா. தம்பி இதுதான் என் பெண். பெயர் ரேவதி,'' என்று பரஸ்பரம் இருவரையும் அறிமுகம் செய்து வைத்தார். மரியாதைக்காக கைகள் கூப்பிக் கொண்டாலும் விழிகள் இரண்டும் ஒன்றை ஒன்று வெறுப்புடன் முறைத்தன.

''தம்பி காபி குடிச்சீங்களா? உள்ளே வந்து சேரில் உட் காருங்க. கொஞ்ச நேரத்தில் சாப்பிட்டு விடலாம்'' என்று அவனிடம் சம்பிரதாயமாக சொன்ன ராமசாமி ''வாம்மா போகலாம்'' என்று மகளை கைப்பிடியாக அழைத்துச் சென்றார்.

"ஏம்மா ரேவதி, இது என்ன புதுப்பழக்கம்? வாசலில் நின்று ஆம்பிள்ளைகளோடு வாயடிச்சிட்டு! கார் வந்ததும் புள்ளை இன்னும் உள்ளே வரலியேன்னு வந்து பாக்க றேன். அந்த பையன் கூட பேசிட்டு நின்னுட்டு இருக்க. உனக்கு முன்னே பின்னே பழக்கம் கூட இல்லாமல் என்ன பேச்சு இது?" என்றார் லேசான கண்டிப்புடன்.

ரேவதி தினமும் கல்லூரியிலிருந்து வரும்போது அப்பா வாயில் திண்ணையில் யாருடனாவது ஊர் விஷயம் பேசியபடி அமர்ந்திருப்பார். அவளைப் பார்த்ததும் முகம் மலர்ந்து "வந்துட்டியாம்மா?" என்பார்.

சிரிப்புடன் தலையாட்டிவிட்டு உள்ளே சென்றால், ஐந்து நிமிடத்தில் அவரும் பின்னால் வந்து ராஜம் "ரேவதிக்கு சாப்பாடு போட்டியா?" என்பார்.

"பெத்தவ நான் சாப்பாடு போடாமத்தான் அவள் வளர்ந்தாளாக்கும்?" கணவனைக் கிண்டல் செய்தபடியே மகளுக்கு சாப்பிடக் கொடுப்பார் ராஜம்.

இன்று நடைமுறை மாறிப் போனதுடன் வழக்கத்துக்கு மாறாக அப்பா கண்டிக்கவும் அவன் மேல் மிகவும் கோபம் வந்தது. 'இவன் பெரிய மன்மதன். இவனிடம் மயங்கிப் போய் பேசிக் கொண்டு இருந்தேனாக்கும்? 'முகம் கூட நினைவில் இல்லை' என்று நினைக்கும் போதே அந்த உயரமும், செதுக்கின முகமும், அதில் தெறித்த கடுமையும் நினைவுக்கு வர தலையை உலுக்கிக் கொண்டாள்.

"என்னம்மா?" என்று ராமசாமி கேட்டதும் அப்போது தான் நினைவு வந்தவளாக 'நம்ம வீட்டில் என்னப்பா கூட்டமாக இருக்கிறது?' என்று விசாரித்தாள்.

"அப்பத்தாவுக்கு உடம்பு சரியில்லம்மா" என்றார் ராமசாமி. ராமசாமியின் அம்மா பூவாத்தா தோட்டத்து



வீட்டில் இருந்தார். கணவரும் அவருமாக பாடுபட்டு முதன் முதலில் வாங்கிய இடத்தை விட்டு வர அவருக்கு விருப்பமில்லை. தினமும் மகன், மருமகள், பேத்தி எல்லோரும் போய் பார்த்துவிட்டு வருவார்கள். மூன்று வேளையும் சாப்பாடு இங்கிருந்து தான் போகும். எனினும் அவர் எங்கும் வெளியே போக மாட்டார். அப்படிப்பட்டவர் உடம்பு சரியில்லாமல் இங்கே வந்திருக்கிறார் என்றால் உடம்பு ரொம்பவும் மோசமாகத்தானே இருக்க வேண்டும்?

"என்னப்பா உடம்புக்கு?" என்றாள் கவலையுடன்.

"மாடு மிதிச்சிடிச்சிம்மா. மூட்டு பிசகிடிச்சி. கீழே விழுந்ததில் காயம் வேறு. ப்ரஷர் சுகர்னு எதுவும் இல்லாததால வேறு தொந்தரவு இல்லை. இருந்தாலும் வயசானதால பழையபடி எழுந்து நடமாடறது கஷ்டம்னு டாக்டர் சொல்றாரு" என்றார் ராமசாமி கவலையுடன். அவரும் அம்மாவுக்கு ஒத்தையாய் பிறந்தவர். மகனை சிரமப்பட்டு ஆளாக்கிய பூவாத்தா இதுவரை மகனிடம் எதுவும் வேண்டுமென்று கேட்டதில்லை. அப்பாவின் வருத்தமான முகத்தைப் பார்க்க ரேவதிக்கு கஷ்டமாக இருந்தது.

"கவலைப்படாதீங்கப்பா. சரியாயிடும்" என்றாள் ஆறுதலாய்.

தாழ்வாரத்தில் கயிற்று கட்டிலில் பஞ்சு மெத்தையில் அப்பத்தா படுக்க வைக்கப்பட்டிருந்தார். சுற்றிலும் உறவு சனம் அமர்ந்து சலசலத்தது. ரேவதியைப் பார்த்ததும் கைகளை நீட்டினார். ஓடிப்போய் அவர் அருகே அமர்ந்து தோல் சுருங்கிய கைகளைப் பற்றிக் கொண்ட ரேவதியின் கண்களில் நீர் வழிந்தது. தோட்டத்து வீட்டில் நிலா ஒளியில் அப்பத்தாவின் கூட படுத்தபடி கதைகள் கேட்ட

நினைவு வந்தது. பேத்தியைப் பார்த்ததும் அவரும் கண் கலங்க. ''கவலைப்படாதே அப்பத்தா சரியாகிவிடும்'' என்றபடி விசும்பி அழுதாள் ரேவதி.

''பாட்டி முன்னாடி அழக்கூடாதும்மா. நீ அழுதால் அவங்களுக்கு இன்னும் வேதனை அதிகமாயிடும், கண்ணைத் துடை..'' பேசியபடியே ரேவதியின் கண்ணை துடைத்த பெண்மணியை ரேவதி நிமிர்ந்து பார்த்தாள். இதுவரை அவரை பார்த்ததாக நினைவு இல்லை. அகத் தின் அமைதி முகத்தில் தெரிய நின்றிருந்த அவரிடம் ''நீங்க?'' என்றாள் ரேவதி வியப்புடன்.

''நான் உன் அப்பத்தா வழி சொந்தம். உனக்கு அத்தை முறை ஆக வேண்டும். வரப் போக இருந்தாத்தானே தெரியும். என்ன செய்வது. என் கணவருக்கு அடிக்கடி டிரான்ஸ்பர் வருகிற வேலை. ஊர் ஊராகச் சுற்றுவதால் சொந்த பந்தங்களுடன் கலந்து கொள்ள முடிவதில்லை. என் பெண் திருமணமாகி வெளிநாட்டில் வசிக்கிறாள். கடைசி பெண் படித்துக் கொண்டிருக்கிறாள். மகனும் வெளிநாட்டில்தான் இருக்கிறான்.

இப்போது விடுமுறையில் வந்திருக்கிறான். இந்தப் பக்கம் நம் உறவினர் வீட்டில் திருமணம் ஒன்று வரவே அதற்கு வந்தவர்கள் அப்பத்தாவையும் பார்த்து விட்டுப் போக வந்தோம். வந்த பிறகுதான் அவருக்கு உடம்புக்கு முடியலேன்னு தெரியும். இந்த நேரம் உடம்பு நல்லா இருந்தா அப்பத்தா எங்களைப் பார்த்ததும் பம்பரமாய் சுத்துவார். லேசில் விடமாட்டார். என் கணவர் மேல் கொள்ளை பிரியம் அவருக்கு'' ரேவதியிடம் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு இயல்பாய் உரையாடினார் கமலம் என்ற அந்தப் பெண்மணி.



ரேவதிக்கும் அவரைப் பிடித்துப் போகவே சற்று நேரம் இனிமையாய் பேசிக் கொண்டிருந்தவள், ''அம்மா அங்கே சமையலறையில் என்ன செய்கிறார்களோ? நான் போய் பார்க்கிறேன் அத்தை. நாம் பிறகு பார்க்கலாம்'' என்றபடி விடைபெற்று உள்ளே போனாள். கமலம் புன்னகையுடன் உள்ளே சென்று மறையும் ரேவதியையே பார்த்துக் கொண்டிருந்தார்.

சமையல்காரர் இரவு சாப்பாட்டை தயாரிக்க ராஜம் வருகிற பெண்களிடம் பேசுவதும் உள்ளே சாமான் எடுத் துக் கொடுப்பதுமாய் இருந்தாள். ஆட்கள் பரிமாற ஆண்கள் முற்றத்தில் சாப்பிட்ட பின் பெண்கள் தாழ்வாரத்தில் சாப்பிட அமர்ந்தனர். ரேவதி, பொன்னாத்தாவையும் கை வேலை செய்யும் சரசாவையும் சேர்த்துக் கொண்டு குறிப் பறிந்து பரிமாறினாள். எல்லோரும் சாப்பிட்டு முடித்ததும் சரசா தரையைத் துடைக்க, ரேவதி வெள்ளித் தட்டில் துளிர் வெற்றிலையும், மற்றொரு தட்டில் தோட்டத்து ரஸ்தாளி பழங்களையும் எடுத்து வந்து ஜமக்காளத்தில் வைத்தாள்.

## 4

துளிர்வெற்றிலையை வாசனை பாக்குடன் மென்ற பெரிசுகள் பூவாயியின் கட்டிலைச் சுற்றி அமர்ந்தன. ''பூவாயிக்கு ஒத்த புள்ளையா போச்சு. அந்த புள்ளைக்கும் ஒரே பொண்ணுன்னு குடும்பம் சிறுத்துப் போச்சுன்னு நாங்க எல்லாம் பேசிக்குவோம். ஆனா உன் மவனும் மருமவளும் உன்னை என்னமா தாங்கறாங்க? அதுவும் உன் பேத்தி சாட்சாத் மகாலட்சுமிதான். ம், எவனுக்கு குடுத்து வெச்சிருக்கோ?'' என ஆள் மாற்றி ஆள் பேசவும் நோயையும் மீறி பூவாயி

யின் முகம் மலர்ந்தது. எல்லோரும் கிளம்பியதும் கடைசியாக விடை பெற வந்த கமலம் அவள் கணவர் அருணாச்சலம் இருவரின் கைகளையும் பற்றிக் கொண்ட பூவாத்தா ''நான் சொன்னது நினைவிருக்கட்டும்'' என்றபடி விடை கொடுத்தார்.

ரேவதியின் கன்னத்தை வருடிய கமலத்திடம் ''அடிக்கடி வந்து போயிட்டு இருங்கத்தை'' என்றாள்.

''நான் வருவது இருக்கட்டும். நீ முதலில் எங்க வீட்டுக்கு வரணும்'' என்றவர் ராஜத்திடம் பேசியபடியே வெளியே சென்றவர். முதல் பார்வையிலேயே பிடித்துப் போன கமலத்தை வழியனுப்பும் பொருட்டு மரியாதை நிமித்தம் வாயில்வரை சென்றாள் ரேவதி. ராமசாமியிடம் பேசிக் கொண்டிருந்த அருணாச்சலத்தை அழைத்த கமலம் ''எங்க ரேவதியை தெரியுதா? சின்ன வயசுல பாத்தது. நல்லா வளர்ந்துடிச்சி இல்ல?'' என்றார்.

திரும்பிப் பார்த்து சிரித்த அவர் ''பொண்ணுங்க வளர்த்தி அப்படித்தான்'' என்றபடி ''என்னம்மா, யார் இவங்கன்னு பாக்கிறியா? உங்கப்பத்தா எனக்கு அக்கா வருது. இந்தப் பக்கம் நான் வேலையா இருந்தப்ப நீ சின்னக் குழந்தை. அடிக்கடி வந்துட்டு இருப்போம். அப்புறம் டெல்லி புனேன்னு போனப்புறம் வரமுடியாமப் போயிடிச்சி. இருந்தாலும் சொந்தம் போயிடுமா? உறவுக்காரங்களை பார்க்கிறப்ப சொல்லியனுப்பி நலம் விசாரிக்கறதுதான். இந்தப் பக்கமா வந்தப்பதான் அக்காவை பார்க்கணும்னு வந்தோம்.''

ஒரு புன்சிரிப்புடன் அவர் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தாள் ரேவதி.

''அப்பா ரொம்ப லேட்டாயிடிச்சி'' இடையில் புகுந்த குரல் அவர்கள் பேச்சை வெட்டியது. ''இப்படியே



பேசிட்டு இருந்தீங்கன்னா கல்யாணத்துக்குப் போய் சேர முடியாது. அவங்க குழந்தை பெயர் சூட்டு விழாவுக்குதான் போய்ச் சேர முடியும்.'' குரலின் எரிச்சலை உணர்ந்து திரும்பிப் பார்த்த ரேவதி திகைத்தாள்.

இவனா? இவ்வளவு அமைதியாய் சிரித்த முகத்துடன் இருக்கும் தம்பதிகளுக்கு கடுவன்பூனையாய் இப்படி ஒரு மகனா? ரேவதியை இளக்காரமாய் பார்த்தவன் அதற்கு மேல் நிற்காமல் தாய் தந்தையுடன் கிளம்பிப் போனான்.

இரவு பூவாத்தா பாட்டியின் அருகில் படுத்துப் பேசியபடியே கண்ணயரும் நேரத்தில் அவனது ஏளனப் பார்வையும், கோப முகமுமே கண் முன் நின்றது. படிக்கும் போதும் வேலைகளுக்கு நடுவிலும் அவன் முகம் கோபமாய் முறைப்பது போல் தோன்றும்போது குழம்பிப் போனாள். கல்லூரி வாயிலில் தினமும் காத்துக் கிடக்கும் எத்தனையோ ஆண்களுக்கு மத்தியில் உறவு குடும்பங்களின் விசேஷ நிகழ்ச்சிகளில்' துளைக்கும் பார்வைகளுக்கு நடுவே அவன் பார்வை மட்டும் தனியாய் நினைவில் நின்று போயிருந்தது. டிரைவரைக் கூட மரியாதையாக அண்ணா என்றே அழைத்துப் பழக்கப்பட்டிருந்த தான் தன் இயல்பை மீறி ஒருவனை 'போடா' என்று திட்டியதில் அவளுக்கே ஆச்சரியம்தான். அதே போல் இதுவரை அவளிடம் யாரும் கோபப்பட்டதோ திட்டியதோ இல்லை. முதன் முறையாக கோபமாய் ஒருவன் தன்னைப் பேசியதும், அப்பாவிடம் திட்டு வாங்க வைத்ததும் அவன் முகத்தை நினைவில் இருக்கும்படி செய்திருக்கிறது என்று எண்ணியவள் அதை மறக்க முற்பட்டாள்.

சூர்யா கையைத் திருப்பி வாட்ச்சைப் பார்த்தான். மணி பத்தாகியிருந்தது. இந்தியாவில் இந்நேரம் பனிரெண்டரை

மணி இருக்கும். எல்லோரும் தூக்கத்தில் இருப்பார்கள். அம்மாவிற்கு நாளை போன் பேசிக் கொள்ளலாம் என்று நினைத்தபடி லேப்டாப்பை மூடி வைத்துவிட்டு தூங்கப் போனான்.

பத்து நாள் விடுமுறை என்று இந்தியா போய்விட்டு வந்து இரண்டு மாதமாகிறது. பத்து நாள் லீவை சரிகட்ட இருபது நாள் வேலை செய்ய வேண்டியிருந்தது. அங்கிருந்த பத்துநாளும் உறவினர் வீடு, திருமணம், விருந்து என தினமும் ஒரு வீட்டிற்காய் அலைவதற்கு தான் சரியாக இருந்தது. அதிலும் சுற்றிலும் பசுமையான வயல்களும் தேக்குமர தூண்களுமாய் இருந்த அந்த கிராமத்துப் பெரிய வீட்டிற்குப் போனபோது நேர்ந்த அனுபவம் வித்தியாசமாய் இருந்தது. அங்கே ஒவ்வொரு அசைவிற்கும் விழுந்து விழுந்து கவனித்தார்கள். முன்பின் பார்த்திராத ஒரு பாட்டி பாசத்துடன் கட்டிக் கொண்டு கண் கலங்கினாள். ஊரே திரண்டு நின்று அவனையும் காரையும் வேடிக்கைப் பார்த்தது. ஆனால் அந்த இடத்துக்குப் பொருத்தமே இல்லாத ஒரு வாயாடிப் பெண் காரைத் திருப்பு முன் ஏக வசனத்தில் பேசியது இன்னும் உறுத்தலாக இருந்தது. அப்பாவும் அம்மாவும் விடைபெறுகையில் பணிவு போல் நடித்து புன்சிரிப்புடன் அவள் பேசியதைப் பார்த்தால் இவள்தான் அப்படிப் பேசியவள் என்று யாருமே சொல்ல மாட்டார்கள். கிளம்பும்போது அவனைப் பார்த்த பார்வையில் கூட பேசியதற்கு வருத்தமோ, மன்னிப்பு கோரலோ இல்லையே! அறிமுகம் இல்லாதவனிடமே இப்படி எடுத்தெறிந்து பேசுபவளுக்கு வரப்போகும் கணவன் நிலை எப்படியிருக்கும்? அவளுக்கு வரப் போகும் கணவனைப் பற்றி பரிதாபப்பட்டபடியே உறங்கிப் போனான்.



மறுநாள் போனில் அம்மாவுடன் பேசியபோது "சூர்யா உனக்கு பார்த்திருக்கும் பெண்ணின் போட்டோவை ஈ-மெயிலில் அனுப்பியிருக்கிறோம். பார்" என்றார்.

அம்மா திரும்பவும் அவர்கள் வேலையை ஆரம்பித்து விட்டார்கள் என்று நினைத்த சூர்யாவுக்கு சிரிப்பு வந்தது. இந்த முறைதான் ஒரு வழியாக அம்மாவிடம் திருமணத்திற்குத் தலையாட்டிவிட்டு வந்திருக்கிறான். இனி அம்மாவுக்கு வரிசையாக போட்டோ அனுப்புவதுதான் வேலை.

தன் வேலையில் மூழ்கிப்போன சூர்யா மெயிலை பார்க்க மறந்து போனான்.

மலேசியா ப்ராஜெக்ட் முடியும் தருவாயில் இருந்தது. திரும்ப ஆஸ்திரேலியா போவதா என்று சூர்யா யோசித்துக் கொண்டிருந்த சமயத்தில், இந்தியாவில் ஒரு இரண்டு வருட ப்ராஜெக்ட் இருக்கிறது போகிறீர்களா என்றார்கள். உடனே சரியென்றவன் பெற்றோருக்கும் தகவல் சொன்னான். "அப்ப நான் சொன்ன பெண்ணையே பேசி முடிச்சிடலாமா சூர்யா?" என்ற அம்மாவிடம் தலையாட்டி விட்டு கடைசி கட்ட வேலைகளில் ஆழ்ந்தான்.

"திருமணத்திற்கு முதல் நாள் நிச்சயதார்த்தம் வைப்பதென முடிவாகி விட்டது. நீ எப்போது வருவாய் சூர்யா?" என்றார் அருணாச்சலம்.

"இன்னும் இரண்டு மாதம் ஆகும் போலிருக்கிறது" என்றான் சூர்யா.

நாலு நாளில் கமலம் போன் செய்து திருமணத் தேதி சொன்னார். இன்னும் சரியாய் நாற்பத்தெட்டு நாளில் திருமணம். அவன் முப்பதாவது நாள் இந்தியா போய் விடுவான்.

"பெண்ணின் நெம்பர் தருகிறேன். நீ ஊருக்கு வந்த போது பார்த்த பெண்தானே! பேசு" என்ற அம்மாவிடம் "இங்கு வேலை முடியவே இரவு வெகுநேரமாகிறது. உணவையில் ஒரு அரை மணி நேரம் எனக்கென்று தனியபட பேசவழிக்கவே முடியாத சூழ்நிலையில் இருக்கிறேன். திருமணத்திற்கு இரண்டு வாரம் முன்னதாக வந்து விடுவேன் இல்லையா? அப்போ நேரிலேயே பேசிக் கொள்ளலாம்" என்றான் சூர்யா.

அம்மா போனை கட் பண்ணியதும் நானும் பார்த்த பெண் என்றால் யாராயிருக்கும்? அந்த பத்து நாளில் திருமணம் விருந்து என்று போன இடத்தில் நிறைய பெண்களைப் பார்த்தேன் தான். அதுவும் திருமண வயதில் இருக்கும் பெண்களை கமலமோ, அவர் மறந்தால் பெண்ணின் பெற்றோரே அவன் கண்ணில் காட்ட தவறியதேயில்லை. அதில் எந்தப் பெண்ணை முடிவு செய்திருப்பார்கள்? எதற்கும் மெயிலைப் பார்த்து விடலாம் என்று கம்ப்யூட்டரை ஆன் பண்ணியபோது குரூப் டிஸ்கஷனுக்கு வரச் சொல்லி தகவல் வந்தது. மெயிலை மறந்து மீட்டிங்கில் ஆழ்ந்து போனான்.

லாரன்சின் கிண்டலிலும் கூட பணிபுரிவோரின் வாழ்த்துக்களிலும் நாட்கள் சென்ற நிலையில் அவனது வேலை எதிர்பார்த்ததைவிட இரண்டு வாரம் நீண்டது. அம்மா "என்னப்பா இது?" என்று கவலைப்பட்ட போது "பரவாயில்லம்மா. கல்யாண ஏற்பாடுகளை கவனியுங்கள். வந்து விடுவேன்" என்று ஆறுதல் சொன்னான்.

ஒரு வழியாய் வேலையை முடித்துக் கொண்டு மலேசியாவின் பிரம்மாண்ட ஏர்போர்ட்டில் பிரியா விடை பெற்று ஓடி ப்ளைட்டைப் பிடித்து சென்னையில் இறங்



கியபோது முகூர்த்தத்திற்கு சரியாய் இரண்டு நாள்தான் இருந்தது. உறவு கூட்டம் முழுவதும் மாப்பிள்ளையை வரவேற்க ஏர்போர்ட் வந்திருந்தது.

காலையில் கல்லூரிக்குக் கிளம்பிக் கொண்டிருந்த மகளின் அருகே வந்த ராஜம் "ரேவதி இன்னிக்கு லீவு போட்டுடும்மா" என்றாள்.

"என்னம்மா விளையாடறியா? எனக்கு எக்ஸாமுக்கு இன்னும் நாலு நாள்தான் இருக்கு தெரியுமில்ல?"

"எல்லாம் தெரியும். சொன்ன பேச்சைக் கேள். இன்னிக்குப் போக வேண்டாம்."

"அப்படி என்னம்மா விசேஷம் நம்ம வீட்ல?"

"ஊர்ல இருந்து மாமா, பெரியப்பா, நம்ம சொந்தக் காரங்க எல்லாம் வராங்க."

"அப்பத்தாவை பார்க்கத்தான் தினம் யாராவது வராங்களே! அதுக்கு என்னை எதுக்கு லீவு போடச் சொல்ற?"

"அப்பத்தாவை இல்ல. உன்னைப் பார்க்கத்தான் வர்றாங்க."

"என்னைப் பார்க்கவா? என்னம்மா சொல்ற?" மகளின் முகம் போன போக்கைப் பாத்து "உங்கப்பாகிட்ட கேட்டுக்கோ" என்றபடி உள்ளே போனாள் ராஜம்.

சாம்பார் வாசனையும் நெய்மணமும் வீட்டைத் துளைக்க ரேவதி அப்பாவுக்காகக் காத்திருந்தாள்.

"ரேவதி தண்ணி குடும்மா" என்ற அப்பத்தா குரல் கேட்டு சொம்பில் நீருடன் விரைந்தாள். நீரை வாங்கிக் குடித்த அப்பத்தா பேத்தியின் முகத்தை வழித்தார். "இன்னும் எத்தனை நாளைக்கு இந்த கிழவிக்கு வேலை செய்யப் போறியோ?"

"என் அப்பத்தா அப்படிச் சொல்ற? உனக்குச் செய்யாம நான் வேற யாருக்கு செய்யப் போறேன்?" என்றபடி தண்ணீரை வாங்கிக் கீழே வைத்தாள் ரேவதி.

"இந்த கிழவி சாகறதுக்குள்ள உன்னைய மாலையும் கழுத்துமா பார்க்கணும் கண்ணு. உங்கப்பனும் நீயும் ஒத்தை ஆளா நின்னுட்டீங்க. உனக்காவது மூணு நாலு பிள்ளை பிறந்து வீடு கலகலக்கணும்."

"எல்லாம் நான் படிச்சி முடிச்சி வேலைக்குப் போன பிறகு செய்யலாம் அப்பத்தா."

மகளின் பேச்சைக் கேட்டபடியே உள்ளே வந்த ராமசாமி அம்மாவின் கட்டிலில் ஓரத்தில் அமர்ந்தார். "நீ கல்யாணம் பண்ணிட்டு அப்புறம் படி. வேலை பார், என்ன வேணா செய்" என்றார்.

"அப்பா என்னப்பா நீங்க கூட இப்படிச் சொல்றீங்க?" எனும் போதே எதிர்பாராத செய்தியில் முகம் சிறுத்துக் கண் கலங்கியது.

மகள் முகம் வாடினாலே பொறுக்காத தந்தைக்கும் மனம் பதறியது.

"ரேவதி நீ இன்னும் உலகம் தெரியாத குழந்தைம்மா. நம்ம வீடும் ஊரும்தான் உலகம்னு இருக்க. இன்னும் வெளி உலகம். அங்கே நடக்கிற அநியாயங்கள் அக்கிரமங்கள் உனக்குத் தெரியல. உன்னை ஒரு நல்லவன் கையில் பிடிச்சிக் கொடுக்கணும்னு தினமும் நான் வேண்டாத தெய்வம் இல்லை. நான் நல்லா இருக்கிற வரை தாம்மா நீ ராஜாத்தி. நாளைக்கே எனக்கு எதாவது ஆச்சின்னா உன் நிலையை நினைச்சிப் பார்."

அப்பா விவரித்த காட்சியில் மனம் நடுங்க, "போதும்ப்பா. என் இப்படி எல்லாம் பயமுறுத்துகிறீர்கள்?" என ரேவதி



விசும்பி அழ முற்பட்டாள். பேத்தி அழுவதையும், அதைப் பார்த்து மகன் கரைந்து போவதையும் கண்ட பூவாத்தா வீட்டிற்குப் பெரியவராய் அதட்டினார். "நாளும் கிழமையுமா போதும் அழுதது. நல்ல காரியம் நடக்கறப்ப இப்படியா இருப்பாங்க? ரேவதி கூட ஸ்கூல்ல படிச்ச கனகுவோட பெண்ணைப் பார். இப்ப இரண்டாவது பிரசவத்துக்கே வீட்டுக்கு வந்திருக்கா. அவள மாதிரி இளகலயே குடும்ப பாரத்தை ஏத்தாம காலேஜு வரைக்கும் படிக்க வெச்சி விபரம் வந்தப்புறம் கட்டிக் கொடுக்கறாங்கன்னு சந்தோஷப்படாம இப்படி அழுது எல்லோரையும் கஷ்டப்படுத்துவியா? கண்ணை துடைச்சிட்டு கல்யாண பொண்ணா கலகலன்னு இருக்கணும்" என்று பேத்தியை அதட்டியவர், "நீ என்ன சின்ன பயலா ராமு? குழந்தை கூட உட்கார்ந்து நீயும் கலங்கிப் போற! ஆக வேண்டிய வேலையைப் பார்' என்று மகனை விரட்டினார்.

குப்பன் இலைக்கட்டுடன் வரவும் அதை தாழ்வாரத்தில் வைக்கச் சொல்லி சொன்னார். "அண்ணே எங்க வீட்டுல வாழைத்தார் நல்லா கனிஞ்சிருக்கு. அதை எங்க வைக்கறது?" என்று ஒன்றுவிட்ட தம்பியின் குரலுக்கு பதில் சொல்ல எழுந்து போனார் ராமசாமி.

பேத்தியின் முகத்தைப் பற்றி முத்தமிட்ட பூவாத்தா. "உங்கப்பன் பாவம். ஒண்டியாளா உழைச்சி ஓடாப் போயிட்டான். உன் தாத்தாவும் சின்ன வயசுலியே போயிட்டார். நம்ம பங்காளி பயல்கள் அடிச்ச கூத்துக்கு வேற ஆளா இருந்திருந்தா நாமளும் கூலி வேலைதான் செஞ்சிருக்கணும். ராமுவா இருக்கறதால காசு பணத்திலயும், பெயர் புகழ்லயும் சரி ஊருக்குள்ள நிமிர்ந்து நிற்கிறோம். அவனுக்கு நீதான் உசுரு. நீ வருத்தப்பட்டா

தாங்க மாட்டான். அவனை கலங்க விடாதடா செல்லம்." உருக்கமான பாட்டியின் குரல் ரேவதியின் மனதை உருக்கவே பதில் பேசாது எழுந்து போனாள்.

சிறிது நேரத்தில் விருந்தினர் கூட்டத்தில் வீடே நிறைந்து போனது. இவ்வளவு பேரையும் அழைத்திருக்கிறார்கள் என்றால் திருமண விஷயம் முன்பே முடிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். யோசித்தபடியே அம்மா தந்த பட்டுப் புடவையையும் நகைகளையும் அணிந்தாள். அவள் கல்லூரி தோழிகள் வித்யாவும் கலாவும் வந்தார்கள். இவர்களுக்கு யார் தகவல் தந்திருப்பார்கள் என கேட்க வாயைத் திறந்தபோது உள்ளே வந்த அவள் பெரியப்பா பெண் மரகதம் "ரேவதி என்னுடன் வா" என்று ஹாலுக்கு அழைத்துப் போனாள். அவள் சொல்படி எல்லோருக்கும் வணக்கம் சொல்லிவிட்டு அமர, உறவினர்கள் மத்தியில் அருணாச்சலமும் ராமசாமியும் திருமண உறுதி செய்து கொண்டனர். ரேவதி அதிர்ந்து போனாள். இவர்களா மாப்பிள்ளையின் அப்பா அம்மா? அப்போ அந்த கடுவன் பூனையா மாப்பிள்ளை? இதற்காகவா அன்று வந்தார்கள்? நமக்கே தெரியாமல் மாப்பிள்ளையுடன் வந்து பெண் பார்த்துவிட்டு போயிருக்கிறார்கள். பெண் பார்க்க வந்த அன்றே மணம் புரியும் பெண்ணுடன் அநாகரீகமாக சண்டை போடுபவன், உண்மையில் எவ்வளவு மோசமானவனாய் இருப்பானோ! கடவுளே கலங்கிய கண்ணீர் கீழே விழுவதற்கு முன் காதருகே மரகதத்தின் குரல் கேட்டது. "மாப்பிள்ளையின் பெற்றோரிடம் ஆசீர்வாதம் வாங்கிக் கொள்" ரேவதி.

அருணாச்சலத்தையும் கமலத்தையும் குனிந்து வணங்கியவள் அதற்கு மேல் நிற்காமல் உள்ளே விரைந்தாள். முன்னறையில் பேச்சும் சிரிப்புமாய் கலகலத்தது.



ரேவதியுடன் உள்ளே வந்த கலா "என்ன ரேவதி கல்யாணம்னவுடனேயே எங்களிடம் கூட பேசப் பிடிக்கலையா?" என்றாள்.

"அதில்லடி. அவளுக்கு மாப்பிள்ளை வரலைன்னு கோபம்" என்றாள் வித்யா.

"தன் கல்யாண விசேஷத்திற்கு கூட வராமல் அவர் அப்படி என்னதான் செய்கிறார்?" என்ற கலாவின் கேள்விக்கு "மலேசியாவில் இருக்கிறான்" என்று பதில் கூறியபடியே கமலம் உள்ளே வந்தார். மரியாதை நிமித்தம் மூவரும் எழுந்து நிற்கவே "உட்காரும்மா" என்றபடி தானும் அருகில் அமர்ந்தார்.

"எனக்கு ரொம்ப சந்தோஷம் ரேவதி. முதன் முறை பார்த்தபோதே நீதான் என் வீட்டுக்கு மருமகளாய் வரணும்னு நினைச்சேன். அதே மாதிரி நடந்து விட்டது" என்றவர் தன்னுடன் வந்த பெண்ணை அறிமுகப்படுத்தினார். "இவள் நிகிலா. என் கடைசிப் பெண். ப்ளஸ் டூ படிக்கிறாள்" என்றார்.

நிகிலாவுக்கு அப்பாவைப் போல் முகம். கண்களில் அம்மாவின் சாந்தமும் தெரிந்தது. இயல்பாய் ரேவதியின் கைகளைப் பற்றியவள், "அண்ணி நீங்க ரொம்ப அழகாய் இருக்கீங்க. எனக்கு உங்களை ரொம்பப் பிடிச்சிருக்கு. அக்கா திருமணமாகி போன பிறகு எனக்குக் கூட யாருமில்லாமல் கஷ்டமாக இருந்தது. நீங்க வந்து விட்டால் எனக்குக் கவலையேயில்லை. அண்ணி என்பவள் எனக்கு அக்கா மாதிரி" என்று அவள் சொல்லாமல் சொன்ன விதத்தில் ரேவதிக்கும் மனம் நெகிழ்ந்தது. "உனக்கு எங்க ரேவதியைப் பிடித்தால் போதுமா? உங்கண்ணனுக்கு பிடிக்க வேண்டாமா?" என்றாள் வாயாடி கலா.

"அண்ணனுக்கு கண்டிப்பா பிடிக்கும். அண்ணியைப் போய் பிடிக்கலைன்னு யாராவது சொல்வாங்களா?" என நிகிலா பதில் கொடுத்தாள்.

"இப்பவே ஜலசா, பாத்துமா கல்யாணத்துக்குள்ள ஜலதோஷம் அதிகமாயிடப் போகுது!" வித்யா கிண்டலடிக்க கமலமும் இணைந்து சிரித்தார். அம்மாவும் பெண்ணும் சிறிது நேரம் கலகலத்துவிட்டு விடைபெற்றுச் சென்றதும் "வாவ்" என்றாள் வித்யா. "அம்மாவே மாப்பிள்ளை வீடுன்னா என்னென்ன பந்தா காட்டுவார்கள் தெரியுமா? எங்கக்கா திருமணத்தின்போது கூட அவள் மாமியார் ஆயிரம் குறை சொல்லிக் கொண்டிருந்தார்கள். இவ்வளவு வசதியிருந்தும் மகன் வெளிநாட்டில் வேலை பார்த்தும் கூட எவ்வளவு சிம்பிளாக இருக்கிறார்கள் பாரேன். ரேவதி நீ ரொம்ப கொடுத்து வைத்தவள்" என்றாள் வித்யா மனப்பூர்வமாய்.



## 5

கல்யாண ஏற்பாடுகள் மும்முரமாய் தொடங்கின. ரேவதி கல்லூரிக்குச் சென்று தேர்வு எழுதி விட்டு ஒரு மாதம் விடுமுறை கடிதம் கொடுத்து விட்டு வந்தாள்.

ரேவதியைப் பிடித்துக் கொண்ட பொன்னாத்தா "இப்ப சொல்லு. நான் சொன்னது நடந்துடிச்சா? எங்களை எல்லாம் விட்டுட்டுப் புருஷன் பின்னாடி போயிடுவேன்னு நான் சொன்னேனா இல்லையா?" என்று கேலி செய்தாள்.

"நான் உங்கிட்ட பேசத் தயார் இல்லை போ" என்றாள் ரேவதி எரிச்சலுடன்,

"ஆமாம், எங்கிட்ட பேசப் பிடிக்குமா? இனி மாப்பிள்ளை பேச்சுதானே தேனாய் இனிக்கும். பன்னீராய் மணக்கும்.



பொன்னாத்தாவா? யார் அந்தக் கிழவின்னுதான் கேட்கத் தோணும். ஆனா ஒரு விஷயம், பிள்ளை பேறுக்கு நீ இங்க வர்றப்ப, உன் பிள்ளை நனைச்ச ஈர துணியை நான் தான் துவைக்கணும். நினைவு வெச்சுக்கோ. என்னம்மா நான் சொல்றது?" என்று பூவாயிடம் அபிப்பிராயம் கேட்டாள் பொன்னாத்தா. மகிழ்ச்சியுடன் பேத்தியைப் பார்த்துச் சிரித்தார் பூவாத்தா. வயதான இருவரும் தன் மீதுள்ள பாசத்தை பரிகாசத்தால் வெளிக் காட்டுவதைத் தடுக்க மனம் வராமல் அம்மாவிடம் சென்றாள் ரேவதி.

"ஏம்மா, அப்பா கல்யாணம் பண்ணணும்னு முடிவெடுத்தாரே. மாப்பிள்ளையாவது நம்ம ஊர்லயே பாத்திருக்கக் கூடாதா?" என்றாள் ஆதங்கத்துடன்.

"நம்ம ஊர்ல என்ன ரேவதி இருக்கு?" என்றார் ராஜம் சலிப்புடன்.

"டவுன்ல போய் பாரு மாசம் ஐம்பதாயிரம், ஒரு லட்சம்னு சம்பளம் வாங்கிட்டு, ப்ளேன்லயும் கார்லயும் பறந்துட்டு, சலவைக்கல் தரையில் நகத்தில் துளி அழுக்கு படாமல் ஜனங்க வாழறாங்க. ஏதோ எங்களுக்கு படிப்பறிவு இல்லை. இப்படி வயல்ல வெயில் மழை பார்க்காம கிடக்கிறோம். உனக்கு எதுக்கு அந்த தலையெழுத்து?"
"என்னம்மா இப்படிச் சொல்ற? விவசாயம் கேவலமான விஷயமா? நம்ம வயல்ல நாம பாடுபட்டு சாப்பிடறது எவ்வளவு நிறைவான விஷயம் தெரியுமா?"

"விவசாயம் கேவலமில்ல ரேவதி கஷ்டமான விஷயம். மழை பொய்த்துப் போனால் வறுமை. மழை அதிகமாக வந்தால் பஞ்சம். பயிரை நோய் தாக்காமல் வளர்த்து, அறுவடைக்கும், களை எடுக்கவும் ஆள் கூலி கொடுத்து விற்பனைக்கு கொண்டு வரும்போது மார்க்கெட்டில்

பொருளின் விலை குறைந்து விடும். கொள்முதல் செலவு கூட கைக்கு வராது. ரொம்ப யோசித்துதான் நம்ம சிரமம் நம்ம பொண்ணுக்கு வேண்டாம்னு முடிவு செய்தோம்.'' அம்மாவின் பேச்சிலுள்ள உண்மை மனதைத் தொட பதில் சொல்ல முடியாமல் அமைதியானாள். ஆனால் திருமண நாள் நெருங்க நெருங்க குழப்பமாக இருந்தது. ''என்ஜினியர் மேடம் வந்துட்டாங்கப்பா. ஊருக்கு என்னென்னவோ செய்யப் போறதா சொன்னவங்க, இப்ப ஊரை விட்டே போறாங்களாம்'' என வாணியும் கலாவும் செய்கிற கிண்டலில் அவளுக்கு யாரையும் பார்க்கவே பிடிக்கவில்லை.

'எங்கிருந்து வந்தான் இவன்? என் மகிழ்ச்சியையும், நிம்மதியையும் குலைத்து தனிமைப்படுத்த வந்த அரக்கன். அன்று ஒரு காரை திருப்ப முடியாமல் சிரமப்பட்டவன், என் வாழ்வையே எப்படித் திசை திருப்பி விட்டான்! அவனைப் பார்த்ததுமே எனக்குக் கெட்ட நேரம் தொடங்கி விட்டது போலும்.' மனதிற்குள் புலம்பியபடி வளைய வந்தாள் ரேவதி.

''மாப்பிள்ளை இன்னும் வெளிநாட்டிலிருந்து வரவில்லை. லீவு கிடைக்கலையாம். கல்யாணத்துக்கு தான் வருவார்'' என்றார்கள் யாரோ.

''கல்யாணத்தன்னிக்கு பறந்து வந்து இந்த தங்கக் கிளியைக் கொத்திட்டுப் போகப் போகிறாராமா?'' சிரித்தபடி பெண்கள் அரிசி புடைத்தனர். ஒரு நிமிடம் தன்னை கிளியாகவும் அவன் கழுகாக மாறி கொத்த வருவதாகவும் கற்பனை படர தன்னையே உலுக்கிக் கொண்டாள் ரேவதி.



எல்லோரும் மகிழ்வுடன் ரேவதி பயத்துடனும் எதிர் பார்த்த திருமண நாளும் வந்தது. அந்தப் பெரிய வீடு கோலாகலமாய் இருந்தது. முன்புற தெருவையும் பின் பக்கத் தோட்டத்தையும் அடைத்து பந்தல் போட்டிருந்ததில் தாராளமாக ஆயிரம் பேர் புழங்கக் கூடிய அளவில் இருந்தது. தொட்டிகட்டு வீடு ஆதலால் நடுவீட்டில் சந்திர முற்றத்தில் கல்யாண மேடை அமைத்திருந்தனர். பத்து நாட்களாகவே விருந்தினர் வந்து கொண்டிருந்தாலும் திருமணத்தன்று இரு பக்க உறவாலும் நிரம்பி வழிந்தது. கிராமத்து திருமணமாதலால் யாரும் பந்தி உபசரிப்புக்கு காத்திராமல் வேலையை இழுத்துப் போட்டு செய்தனர். நடக்க முடியாத பூவாத்தா முகம் முழுக்க பூரிப்புடன் வீல் சேரில் முன் வரிசையில் அமர்ந்திருந்தார். மாப்பிள்ளை ஊர்வலம் நடந்து கொண்டிருக்க, மாப்பிள்ளையைப் பார்த்த தோழிகளின் புகழ்ச்சியிலும் கிண்டலிலும் ரேவதியின் சங்கடம் அதிகமாகியது.

மாப்பிள்ளையை நலுங்கு சுற்றி உள்ளே அழைத்ததும் அந்த வீட்டைப் பார்த்த சூர்யா துணுக்குற்றான். 'இந்த வீட்டிலா கல்யாணம்? அப்போ பெண் யாராயிருக்கும்? ஒரு வேளை...' என்று யோசித்தபடி சாப்பிட அழைத்தவர்களிடம் ''அப்புறம் வருகிறேன்'' என்றுவிட்டு கண்களால் வீட்டைத் துழாவினான். ரொம்ப நேரம் அவன் தேட வேண்டிய அவசியமில்லாமல் நலுங்கு சுற்ற பெண்ணை அழைத்து வந்தார்கள். வீட்டைப் பார்த்ததும் அவன் உள்ளூர பயந்தபடி அதே பெண் தான். 'சே! இவளா என் மனைவி? போயும் போயும் இந்த பட்டிக்காட்டு சண்டைக்காரப் பெண்தானா அம்மாவுக்குக் கிடைத்தாள்? இவளைப் பிற்காலத்தில் திருமணம் செய்து கொள்ளப்

போகும் யாரோ ஒருவனுக்காக நான் பரிதாபப்பட கடைசியில் அந்த பரிதாபத்துக்குரியவன் நானேவா? தாரிணி சொன்னதுபோல் திருமண விஷயத்தில் பெற்றோர்களை நம்பியது தவறோ?' அதிர்ச்சியிலும் ஏமாற்றத்திலும் அடுத்து என்ன செய்வதென்று திகைப்பிலுமாய் சூர்யா அவளையே வெறித்தவாறிருந்தான். "சூர்யா பார்த்தது போதும். மீதியை அப்புறம் வெச்சுக்கலாம்" என்றான் அவனது நண்பன் ஹரி.

"கூட நிற்கிற எங்களை எல்லாம் மறந்து போய் கண்ணைக் கூட இமைக்காமல் அப்படியென்ன பார்வை?" என்றான் தருண்.

"டேய் இங்கப்பார். எங்களை அடையாளம் தெரிகிறதா? நான் யார் சொல்லு பார்க்கலாம்."

"தாலி கட்டறதுக்கு முன்னாடியே சிலையா நிற்கிறவன் கல்யாணத்துக்கு பிறகு எப்படியிருப்பான் பாரேன்!"

"அவனுக்கு சாப்பாடே தேவையில்லடா. பார்த்தாலே பசி தீர்ந்துடும். நமக்கு அப்படியா? வாங்கப்பா சாப்பிடப் போகலாம்" என ஆளுக்காள் கிண்டல் பேசியபடியே நண்பர்கள் கூட்டம் நகரவும் மணமகனுக்கென ஒதுக்கப்பட்டிருந்த அறைக்குச் சென்றான் சூர்யா.

அங்கே செல்போனில் பேசிக் கொண்டிருந்த நிகிலா அண்ணனைப் பார்த்ததும் குறைப்பட்டாள். "இந்த தாரிணி அக்காவைப் பாரேன் அண்ணா. இப்போதுதான் வந்து கொண்டே இருக்கிறாளாம். காலையில் முகூர்த்த நேரத்திற்குத்தான் வந்து நிற்பாள். இரண்டு நாள் முன்பே கிளம்பினால் என்னவாம்?"

பதில் சொல்லாமல் அறையை ஒரு பார்வை பார்த்த சூர்யா அருகில் யாருமில்லாததை கவனித்து "நிகி குட்டி



ஒரு வேலை செய்கிறாயா? நீ இப்படியே மணமேடை பின் பக்கமாய்ச் சென்று கல்யாணப் பெண்ணை நான் பார்க்க வேண்டும் என்று சொல்கிறாயா?"

"ஓகோ அப்படியா விஷயம்? விடியும் வரை அண்ணியைப் பார்க்காமல் உன்னால் இருக்க முடியாதா? அதனால்தான் சாப்பாடு கூட இறங்க மாட்டேன் என்கிறதா? நாளையிலிருந்து உன் கூடவேதான் இருக்கப் போகிறாங்கள். அதற்குள் இவ்வளவு அவசரமா?" தங்கை கேலி பேசவும் பதில் சொல்ல முடியாமல் "ப்ளீஸ் நிகி ப்ளீஸ்டா" என கெஞ்சலில் இறங்கினான் சூர்யா.

"சரி சரி சொல்கிறேன். அதுக்காக ஓவரா வழியாதே" என்றபடி நிகிலா கிளம்பிப் போனதும் பல்லைக் கடித்தான் சூர்யா.

'வரட்டும் அவள் பேசிக் கொள்கிறேன். அன்று என்னிடம் அப்படி சண்டையிட்டவள் அப்பாவிடம் குழையும் போதே அவள் சுயரூபம் தெரிந்து விட்டது. இந்த பட்டிக்காட்டுக்கு ஏற்ற முனுசாமியையோ முத்துசாமியையோ கட்ட வேண்டியதுதானே! பாரீன் ரிட்டன் மாப்பிள்ளை கேட்கிறதா இவளுக்கு!' மனதுள் கறுவியபடி அமர்ந்திருந்தான்.

அண்ணனின் அறையிலிருந்து வெளியே வந்த நிகிலாவிடம் அவர்கள் உறவுப் பெண் ஒருத்தி பீடா வேண்டுமென்று கேட்டாள். பீடா தட்டைத் தேடி எடுத்து அவளிடம் கொண்டு போய் கொடுத்தாள். அருகிலேயே நின்றிருந்த உறவு முறை பையன் "எங்களுக்கெல்லாம் எதுவும் கிடையாதா?" என்றான் வழிசலுடன்.

"என்ன வேண்டும் உங்களுக்கு?" என்றாள் நிகிலா.

"நீங்களா பாத்து என்ன குடுத்தாலும் சரி" என மேற

கொண்டு அவன் பேச்சை வளர்க்கத் தொடங்கும்போது "நிகிலா" என்ற கமலத்தின் குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தவளிடம் "இந்த பன்னீர் சொம்பை வரவேற்பில் வைத்துவிட்டு வா" என்றார்.

"சரிம்மா" என்று திரும்பி நடந்தவளின் பின்னால வந்து, நிகிலா யார் என்னன்னு பாத்துப் பேசத் தெரியாது உனக்கு? தனியாய் இப்படி எல்லாம் சுற்றக் கூடாது. உன் வயது பெண்களுடன் இரு. அல்லது அறையில் போய் உட்கார்!" என்றார் கமலம் கண்டிப்புடன்.

"என்னம்மா நான் தப்பு செய்த மாதிரி சொல்கிறீகளே!" என எரிச்சலுடன் திருமபி அறைக்கு வந்தவளிடம் "என்ன நிகி?" என்று அருகில் வந்தான் சூர்யா.

"போ அண்ணா உனக்கு வேறு வேலை இல்லை. எனக்குதான் திட்டு கிடைததது" என்றபடி பெட்டியைத் திறந்து மறுநாளைக்கான உடையை எடுத்து வைத்தாள் நிகிலா. ஆத்திரத்துடன் பல்லைக் கடித்தான் சூர்யா. 'அவ்வளவு திமிரா அவளுக்கு? என் தங்கையை திட்டி அனுப்பியிருக்கிறாளே!' மைத்துனி என்ற எண்ணமின்றி திருமண வீட்டிலேயே சண்டை போடும் கேவலமான பெண்ணையா அவன் மணக்கப் போகிறான்?

சூர்யா இரவெல்லாம் நடந்தபடி இருந்தான்.

மணமக்களின் மனநிலை தவிர வெளிப்படையாக எந்தக் குறையும் இன்றி திருமணம் சிறப்பாக நடந்தது. பெண்ணின் அழகையும் மாப்பிள்ளையின் கம்பீரத்தையும் பலர் புகழ்ச்சியாகவும் சிலர் வயிற்றெரிச்சலாகவும் சொல்லித் தீர்த்தனர். ராஜும் பயந்து போய் பெரிய திருஷ்டி பூசணிக்காயாக வாங்கி வரச் செய்து உடைக்கச் செய்தார். ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் ரேவதியின் முகத்தைப்



பார்க்க முயற்சித்தான் சூர்யா. அவள் நிமிர்ந்து பார்க்காமலிருக்கவே 'அவ்வளவு அலட்சியமா?' என வெகுண்டான்.

லண்டனிலிருந்து கிளம்பி சென்னை வந்து டாக்ஸி பிடித்து ஒரு வழியாய் அப்போதுதான் வந்து சேர்ந்திருந்த சூர்யாவின் அக்கா தாரிணி, "எப்பவும் பொண்டாட்டி முகத்தையே பாத்தா எப்படி? எங்களையும் கொஞ்சம் பார்" என்றபடி தம்பியின் முகத்தைத் திருப்பினாா. "நீயே மூணாவது மனுஷி மாதிரி இப்ப வந்து நிக்கற. உன்னைப் பார்க்க வேண்டிய அவசியம் எனக்கில்லை" என்றான் சூர்யா.

"இனி இந்த அக்கா பேச்சு எல்லாம் எடுபடாது போல. ரேவதி நீயாவது சொல்லேன்" என தம்பி மனைவியாகி விட்டவளிடம் சிபாரிசுக்கு வந்தாள் தாரிணி.

பதில் பேசுவதறியாது "நானா?" என்று ரேவதி விழிக்கவும், "அடேயப்பா எவ்வளவு பெரிய கண் உனக்கு? இதிலேயே தம்பி கவிழ்ந்து விழுந்திருப்பானே! என்னடா சரியா?" என்றாள் தாரிணி தம்பியிடம்.

"ஆமாம். முட்டைக்கண். பாத்து பயந்துதான் விழணும்" சூர்யா முணுமுணுத்தது. அக்காவுக்கு கேட்காவிட்டாலும் அருகில் அமர்ந்திருந்த ரேவதிக்கு தெளிவாகக் கேட்டது.

'நெட்டை கொக்கு. ஒட்டகச்சிவிங்கி' மனதிற்குள் பொருமினாள் ரேவதி.

திருமணம், அது தொடர்பான சடங்குகள் எல்லாம் ஒரு வழியாய் முடிந்ததும் குலசாமிக்கு பொங்கல் இட்ட பிறகுதான் முதலிரவு ஏற்பாடு செய்வது அந்த ஊர் வழக்கம் என்று சொன்னார்கள். "அப்பாடா" என்று ரேவதி நிம்மதி பெருமூச்சு விட்டாள்.

ரேவதியின் அருகே வந்து அமர்ந்த தாரிணி "என்ன ரேவதி வருத்தமாக இருக்கிறதா? கல்யாணம் முடிந்த புதுப் பெண்ணுக்கு முதலிரவு பற்றிய எதிர்பார்ப்பு இருப்பது இயல்பு. ஏதோ சம்பிரதாயம் என்று சொல்லி அநியாயமாய் உங்களைப் பிரித்து விட்டார்களே" என்றாள் அங்கலாய்ப்புடன்.

ரேவதிக்கு சிரிப்புதான் வந்தது அவளைப் பார்த்ததும். "அதை விடுங்க அண்ணி, நீங்க ஏன் கல்யாணத்துக்கு முன்னாடியே வரவில்லை?" என்று பேச்சை மாற்றினாள் ரேவதி.

"எனக்கு இரண்டு பசங்கள் ரேவதி. பெரியவனுக்கு திடீரென்று நாலுநாள் முன்பு உடல்நிலை சரியில்லாமல் போனது. சின்னவனுக்கு பரிட்சை வேறு. அவனுக்கும் விடுமுறை கிடைக்கவில்லை. வேறு வழியில்லாமல் கடைசி நிமிடத்தில் நான் மட்டும் கிளம்பி வந்தேன். இந்நேரம் மூன்று பேரும் என்ன செய்து கொண்டிருக்கிறார்களோ?" என்றவள் நான் இரண்டு நாளில் கிளம்பி விடுவேன். அப்பாவும் அம்மாவுடன் அசாம் போய் விடுவார்கள். பிறகு உங்களுக்கு தினமும் தேன் நிலவு தான்" என்று ரேவதியை மறுபடி கிண்டல் செய்யத் தொடங்கினாள்.

அவள் மனம் நோகாமல் எப்படி எழுந்து போவது என்று ரேவதி யோசிக்கும்போது "அண்ணி என் டிரஸ் நல்லா இருக்கா?" என்றபடி நிகிலா வந்தாள்.

அன்று குலதெய்வ கோவிலில் பொங்கலுக்கு ஏற்பாடாகியிருந்தது. அருணாச்சலத்தின் அண்ணன், தம்பி உறவு முறைகள் எல்லோருடனும் இரண்டு வேனில் கிளம்ப முடிவு செய்திருந்தார்கள். அதற்கு அணிந்து



செல்வதற்காக புதிய குந்தன் ஒர்க் செய்யப்பட்ட பிரில் வைத்த சுடிதாரும் தோள் வரை அசைந்தாடிய நீளதோடுகளுமாய் தயாரான நிகிலா அண்ணியிடம் தன் அலங்காரத்தைக் காட்டி அபிப்ராயம் கேட்டாள். ரேவதியுடன் அமர்ந்திருந்த தாரிணி "சகிக்கலை. என்ன டிரஸ் இது காடியாய்?" என்றாள்.

"அக்கா நான் உன்னை கேட்கலை. அண்ணியைத் தான் கேட்டேன். அவர்கள் சொல்லட்டும்" என்றாள் நிகிலா கோபமாய்.

"யார் சொன்னாலும் நன்றாக இல்லைதான்" என்றாள் தாரிணி விடாமல்.

"உனக்கு உன்னைத் தவிர வேறு யாராவது அழகாய் டிரஸ் பண்ணினால் பிடிக்காதே!"

"அப்படி அழகா இங்க யார் டிரஸ் பண்ணியிருக்காங்களாம்?"

"அண்ணி கல்யாண வீடுன்னு அக்கா இந்தப் புடவையைச் சுத்திட்டு உட்கார்ந்திருக்கா. இல்லாட்டி இவ போடற முக்கால் பேண்டுக்கும், பனியனுக்கும் என் டிரஸ் எவ்வளவோ பரவாயில்லை."

"கரகாட்டம் ஆடப் போறவ மாதிரியான உன் டிரஸ்சுக்கு என் முக்கால் பேண்ட் எவ்வளவோ தேவலை."

கூட சண்டை போடவோ விளையாடவோ ஆளின்றி வளர்ந்த ரேவதி சுவாரஸ்யமாய் வேடிக்கை பார்த்தாள்.

அந்த வழியாக போன சூர்யாவை கூப்பிட்ட நிகிலா, "அண்ணா இந்த டிரஸ் நல்லா இருக்கா?" என்றாள்.

"ரொம்ப நல்லா இருக்கு" என்ற சூர்யா நிகிலா குதிக்கத் தொடங்கும் முன் "ஆனா உனக்குதான் சூட் ஆகல" என்று முடித்தான்.

"எய்" என தாரிணி தம்பியுடன் சேர்ந்து சிரிக்க "சே!" என சிணுங்கலாய் நிகிலா தரையில் காலை உதைத்தாள்.

"நிகி நீ கொஞ்சம் உள்ளே போயேன்" என்றான் சூர்யா.

"எதுக்கு?"

"இல்ல நான் கொஞ்சம் வெளியே போகணும். உன் டிரஸ் கண்ணை அடிக்குது. கண் கூசுவதால் எனக்கு வழியே தெரியவில்லை. எனக்கு வழிவிடேன் ப்ளீஸ்" கெஞ்சுவது போல் சூர்யா தங்கையைச் சீண்டினான். பளிரென்ற நிறமுடன் நன்றாகவே இருந்த போதிலும் அதை அணிய பிடிக்காமல் போனது நிகிலாவுக்கு. அவளது பரிதாபமான முகத்தைப் பார்த்த ரேவதி, "நிகிலா நீயே கண்ணாடியில் பார்த்தாய் இல்லையா? உனக்கு இந்த டிரஸ் ரொம்ப அழகாக இருக்கிறது. கோவிலுக்கு அதுவும் கிராமத்தில் எனும்போது பட்டுப் பாவாடை தாவணி அல்லது காட்டன் சுடிதார் இன்னும் பாந்தமாக இருக்காது?" என்று அவளையே யோசனை கேட்டாள்.

சிறிது யோசித்த நிகிலாவும் "ஆமாம் அண்ணி. இந்த கல் வேலைப்பாடு பளபளப்பாக இந்த சூழ்நிலைக்கு ஒட்டாமல் தெரியும். நான் பட்டுப்பாவாடை கட்டுகிறேன்" என்றவாறு உடைமாற்ற விரைந்தாள். ரேவதியை ஒரு புன்னகையுடன் பார்த்த தாரிணி "எங்களிடம் எவ்வளவு சண்டை போட்டாள். நீ சொன்னதும் சரியென்று ஓடுகிறாளே! ரேவதி, உனக்கு பேச்சு சாதுர்யம் உண்டு போலும்" என்றாள்.

"பேச்சு சாதுர்யமா? அதில் யாரும் இவளை மிஞ்ச முடியாது. ரொம்ப நன்றாகப் பேசுவாள். அதுவும் பிறருக்கு மரியாதை கொடுத்து பேசுவதில் நிகர் யாருமே இல்லை" என்றான் சூர்யா ஏளனச் சிரிப்புடன்.



"ரேவதி மரியாதை தெரிந்தவள்தான். பார்த்தாலே தெரிகிறதே!" தாரிணி விபரம் அறியாமல் ஒத்துப் பேசவும் ரேவதிக்கு அவமானத்தில் முகம் சிவந்தது.

"குலதெய்வ கோவிலில் பூஜை, நேர்த்திக்கடன் எல்லாம் சிறப்பாக நடந்தது. கோவில் மண்டபத்தில் அமர்ந்து பிரசாதம் சாப்பிட்டு சிறிது நேரம் அரட்டை அடித்த பின்னர் எல்லோரும் ரேவதியின் வீட்டிற்குக் கிளம்பினர். அங்கு மதிய விருந்து ஏற்பாடாகியிருந்தது. வாயிலிலேயே நின்றிருந்த ராமசாமியும் ராஜமும் வந்தவர்களை பார்த்துப் பார்த்து உபசரித்தனர். சரசாவும், குப்பனும் இன்னும் சிலரும் குறுக்கும் நெடுக்குமாய் வேலை பார்த்தபடியே மாப்பிள்ளையைப் பார்க்க, பொன்னாத்தா வயதின் சலுகையால் சூர்யாவின் எதிரே போய் நின்று "மாப்பிள்ளை ராஜா கணக்கா இருக்காரு" என்றாள் மகிழ்ச்சியுடன். 'இல்லாட்டி எங்க வீட்டு இளவரசியை கட்ட முடியுமா?' என தனக்குள் பேசியபடி அவள் உள்ளே போனதும் 'பெரிய ப்ரிட்டிஷ் இளவரசி இவள்' என்று சூர்யா பல்லைக் கடித்தான்.

மாப்பிள்ளையைப் பார்க்க என பண்ணையாட்களும், நடவுக்கு வருபவர்களும் அக்கம் பக்கத்து வீட்டினரும் கூட்டம் கூட்டமாக வந்தார்கள். யாரும் அவனிடம் நேரிடையாகப் பேச முற்படாமல் தள்ளி நின்று வெறித்துப் பார்ப்பதும், தங்களுக்குள் பேசிச் சிரித்தபடி சாப்பிட்டு விட்டு செல்வதுமாய் இருந்தார்கள். எல்லோருக்கும் தான் காட்சிப் பொருளாய் ஆனதற்கு சங்கடப்பட்டு மெதுவாய் வீட்டின் உள் அறைக்கு வந்தான் சூர்யா. அங்கு ஒரே பெண்கள் கூட்டமாய் இருந்தது. பட்டுப் புடவை, பின் கொசுவம் வைத்த நூல் புடவைகள். கழுத்து நிறைய நகை, கீரைக்கட்டாய் பூ என பெண்கள் இரைச்சலாய் பேசுவதும் சாப்பிடுவதுமாய் இருந்தனர்.

சிக்கென்ற உடம்பும், சிக்கனமான உடையும், புன்னகை மாறாத முகமும், சத்தமில்லாத பேச்சும், நாசுக்கான உணவுமாய் வெளிநாட்டு சூழலுக்குப் பழகியிருந்த சூர்யாவுக்கு அந்த சூழ்நிலையே வித்தியாசமாய் ஏதோ சினிமாவில் பார்க்கிற மாதிரி இருந்தது. அவன் அப்பாவின் வேலையின் பொருட்டும் பெரும் நகரங்களிலேயே வசித்து வந்ததால் கிராமத்துச் சூழ்நிலை அவனுக்குப் பழக்கமேயில்லை. பள்ளியிறுதி விடுமுறைகளில் கூட அக்காவும் தங்கையும் கிராமத்து பாட்டி வீட்டிற்குச் செல்லும்போது இவன் நண்பர்களுடன் டென்னிஸ் டோர்னமெண்ட் அல்லது எஜுகேஷன் டூர் என்று பிஸியாக இருப்பான்.

விடுமுறை முடிந்து அம்மா வரும்போது பேரனைப் பார்க்க வேண்டுமென்ற ஆசையில் பாட்டியும் கூட வருவார். ஊரிலிருந்து அவர் செய்து கொண்டு வரும் அதிரசம், பணியாரம், முறுக்கை நொறுக்கியபடி இரவு நேரங்களில் பாட்டியின் அருகே படுத்துக் கொண்டு கதை பேச அவனுக்கு மிகவும் பிடிக்கும். அவன் பள்ளி இறுதி ஆண்டு வந்தபோது பெரிய பையனாய் மதித்து பெற்றோர்கள் நடத்தியபோது பாட்டி மட்டும் சூடு இறங்க தலைக்கு எண்ணெய் தேய்த்து விடுவதும், பேரனுக்கு சாதம் ஊட்டி விடுவதுமாய் குழந்தையாகவே பாவித்தாள். அவன் பாட்டியின் பேச்சின் மூலமாகத்தான் கிராமத்தை அறிந்திருந்தான். கல்லூரியில் படிக்கும்போது பாட்டி போய்விட அதன் பிறகு ஊரைப் பற்றி அவனிடம் பேச ஆளில்லாமல் போனது.

இத்தனை வருடம் கழித்து அம்மா எப்படித்தான் இங்கே உறவை தேடிப் பிடித்தார்களோ? என்று எண்ண



மிட்டபடியே வசதியாக உட்கார இடம் தேடினான் சூர்யா. இங்கே நின்றால், எழுந்தால் போதும் யாராவது வந்து விடுகிறார்கள். "மாப்பிள்ளை என்ன வேண்டும்?" என்று விசாரித்துக் கொண்டு.

தாழ்வாரத்தின் வலது ஓரமாக இருந்த ஒரு அறையை தூண் மறைக்கவே அங்கே எட்டிப் பார்த்தான் சூர்யா. மெத்தைகளும், தலையணை, படுக்கை விரிப்புகளும் அடுக்கப்பட்டிருந்த அந்த அறையினுள் சென்று ரிலாக்சாக கால் நீட்டி அமர்ந்து பின்னால் அடுக்கப் பட்டிருந்த தலையணையில் சாய்ந்தான். ஜன்னல் வழியாக வீசிய வேப்ப மரத்து காற்று இதமாய் இருக்கவே கண் தானாய் சொருகியது. எவ்வளவு நேரம் தூங்கியிருப்பானோ தெரியாது. அருகே கேட்ட கலகலத்த சிரிப்பு சத்தம் இனிமையாய் இருக்கவே லேசாய் கண்களைத் திறந்தான். அறையில் யாருமில்லாததால், திருமண அலைச்சலில் இதுவரை கிடைக்காத தனிமையிலிருந்து விடுபட மனம் வராமல் கண்களை மூடி பின்னே சாய்ந்தான். மீண்டும் இனிய நாதஸ்வரமாய் சிரிப்பொலி காதைத் தழுவியது. தூக்கத்திலிருந்து விடுபட்டவன் ஜன்னல் வழியாய் வெளியே தேடினான். அந்த அறைக்குப் பின்புறம் தோட்டத்துப் படியில் ரேவதி தன் கல்லூரி தோழிகளுடன் பேசிக் கொண்டிருந்தாள். மாலை வெய்யிலில் அவள் முகத்தைத் தங்கமாய் மாற்றியிருந்தது. கலீரென்ற சிரிப்பில் பற்கள் வைரமாய் மின்ன விளையாட்டாய் வித்யாவின் முதுகில் அடித்தவளை பார்க்கிறோம் என்ற உணர்வே இன்றி பார்த்துக் கொண்டிருந்தான் சூர்யா. எப்போதும் பார்த்துப் பழக்கப்பட்ட கோபக்கார அல்லது அழுத்தமான ரேவதியாக இல்லாமல் வித்தியாசமாய்த் தெரிந்தாள்.

"மாப்பிள்ளை நீங்க இங்கயா இருக்கீங்க?" என்ற குரல் கேட்டதும் சட்டென்று திரும்பினான். ரேவதியின் ஒன்று விட்ட சித்தப்பா நின்று கொண்டிருந்தார். "உங்களை காணோமேன்னு வீடெல்லாம் தேடிட்டு வர்றேன். என்ன இது தரையில் உட்கார்ந்திருக்கீங்க? படுக்கணும்னா என்னைக் கூப்பிட்டிருக்கக் கூடாதா?" என்றபடியே கட்டிலில் மெத்தையை போட்டு ஒரு சலவை விரிப்பை விரித்தார்.

"இப்படி உட்காருங்க மாப்பிள்ளை" என்றார் பணிவாய்.

தன்னைவிட எத்தனையோ வயது பெரியவர், தனக்கு வலிந்து செய்யும் உபசரணைகள் அவனை சங்கடப்படுத்தியது. நம் நாட்டைப் பொறுத்தவரை திருமண தம்பதிகளுக்குள் கருத்து வேற்றுமை ஏற்பட்டாலும் இத்தகைய உறவுகள்தான் அத்திருமண பந்தத்தை முறிந்து விடாமல் கட்டிக் காக்கின்றன என்று எண்ணமிட்டபடி "சும்மா ரிலாக்ஸ்டா உட்கார்ந்தேன். வாங்க போகலாம்" என்று அவருடன் எழுந்து வெளியே வந்தான். மாலை காபி டிபனுக்குப் பிறகு எல்லோரும் கிளம்பி டவுனிலுள்ள அருணாச்சலத்தின் பூர்வீக வீட்டிற்கு வந்தனர். மகனின் திருமணத்தின் பொருட்டு அவர் தற்போது குடும்பத்துடன் அங்குதான் தங்கியிருந்தார்.

## 6

ரேவதி கணவனுடன் குடித்தனம் செய்ய சென்னைக்கு கிளம்பினாள். ராமசாமியும் ராஜமும் அவர்களுடன் வந்து சென்னையில் குடித்தனம் அமைத்து கொடுத்து விட்டுத் திரும்புவதாக ஏற்பாடாகியிருந்தது. கிளம்புகிற நேரம் அப்பத்தாவின் காலில் விழுந்து வணங்கிய ரேவதி அவரைக் கட்டிக் கொண்டு அழுது விட்டாள். தன் கண்களை பேத்தி அறியா வண்ணம் துடைத்துக் கொண்ட பூவாயி, "பொண்ணா பொறந்தா ஒருத்தன் வீட்டுக்குப் போய்த்தானே ஆகணும்? நாங்க எங்க போயிட்டோம்? நினைச்சா நீ கிளம்பி இங்க வரலாம். இல்ல நாங்க வரலாம். அதனால எதையும் நினைசசிக் கவலைப்படாம புருஷன் மனசறிஞ்சு நடந்துக்கோ" என்றும் அறிவுரை சொன்னார்.



"வரேன் பொன்னாத்தா" என்றதும் "மகராசியா இரும்மா" என அழுகையில் குலுங்கினாள் பொன்னாத்தா.

"போயிட்டு வரேன் சரசா."

"குப்பா வருகிறேன்."

"பெரியம்மா போயிட்டு வரேன்" என ஒவ்வொருவரிடமும் சொல்லிக் கொண்டு அவர்களின் ஆசிகளையும், கண்ணீரையும் பதிலாகப் பெற்றுக் கிளம்பினாள் ரேவதி.

சூர்யாவுக்கு தாரிணி திருமணமாகிப் போன நினைவு வந்தது. மாப்பிள்ளையுடன் கலகலத்துச் சிரித்தபடி எல்லோருக்கும் 'பை' சொல்லி விட்டுக் காரில் ஏறி ஏர்போர்ட் போனாள். ப்ளைட் ஏறப் போகும்போது மட்டும் அம்மா அப்பாவை அணைத்தபடி கண் கலங்க, அவள் கணவர் "போகலாமா?" என்றதும் கண்ணீரை சுண்டி விட்டு அவர் கை கோர்த்தபடி நடந்து போனாள்.

எல்லோரையும் பிரிய மனமின்றி அழுது கரைபவள் எதற்கு திருமணம் செய்து கொள்ள வேண்டும்? நானாவது நிம்மதியாய் இருந்திருப்பேன். பயணத்தின்போது அவள் அமைதியாகவே வரவும், "ஊரை விட்டு வர ரொம்பக் கஷ்டமாக இருக்கிறதா?" என்றான் சூர்யா. திருமணத்

திருப்பின் முதன் முதலாய் அவன் கரிசனமாய் பேசியதில் வியந்து போன ரேவதி "ஆமாம்" என்று தலையசைத்தாள்.

"நீ ஏன் அவ்வளவு கஷ்டப்பட வேண்டும். திரும்ப உங்க ஊருக்கே போய் விடேன்" என்றான் சூர்யா.

"அதை ஏன் என்னிடம் சொல்லுகிறீர்கள்? இந்த திருமணத்தை நிச்சயித்து நடத்திய உங்கம்மாவிடம் சொல்லுங்கள்" என்றபடி எழுந்து போய் நிகிலாவின் அருகே அமர்ந்து அவளிடம் பேசத் தொடங்கினாள் ரேவதி. தாரிணி முதல் நாளே லண்டன் போவதற்காக கிளம்பிப் போய் விட்டிருக்க, நிகிலா மற்றும் இருவரின் பெற்றோருடனும் மணமக்கள் சென்னை வந்து சேர்ந்தனர்.

நுங்கம்பாக்கத்தில் பங்களாக்கள் நிறைந்த இடத்தில் கம்பீரமாய் இருந்தது அந்த வீடு. வீட்டைச் சுற்றிலும் பச்சை புல்வெளியில் டேலியாக்களும் ரோஜாவும் தலையசைத்தன. ஆலம் சுற்றப்பட்டு மணமக்கள் உள்ளே நுழைந்தார்கள். ஹோட்டலிலிருந்து கொண்டு வரப்பட்ட உணவு வகைகளை கமலமும் ராஜமும் பரிமாறினர். எல்லோரும் சாப்பிட்டதும் "அண்ணி வீட்டைச் சுற்றிப் பார்க்கலாமா?" என்றபடி வந்தாள் நிகிலா.

ரேவதி அவளுடன் சென்றாள்.

"அண்ணி இந்த வீடு அண்ணாவே டிசைன் பண்ணி கட்டியது. என் சின்ன வயதில் நாங்க எல்லோரும் அபார்ட்மெண்டில்தான் இருந்தோம். அப்புறம் அப்பாவுக்கு டிரான்ஸ்பராகி போகும்போதும் அந்தந்த ஊர்களில் குவார்ட்டர்சில்தான் இருப்போம். எங்க அப்பா கிராமத்தில் பெரிய வீட்டில் வளர்ந்தவர் இல்லையா? அவங்களுக்கு கச்சிதமான ப்ளாட் வீடுகளில் வசிக்கப் பிடிக்கவேயில்லை. அதனால்



அண்ணன் சம்பாதிக்க ஆரம்பித்ததும் அப்பா அம்மாவிற்காய் இந்த வீட்டைக் கட்டி எல்லா வசதிகளும் செய்து வைத்தான். அப்பா ரிட்டையர்ட் ஆகிற வரை வெளியூர் வாசம்தான் அவருக்கு. மகன் கட்டிய புது வீட்டில் மருமகள் வந்து குடித்தனம் நடத்த வேண்டுமென்று அம்மாவுக்கு மிகவும் ஆசை. அது இன்று தான் நிறைவேறியிருக்கிறது." பேசியபடியே ஒவ்வொரு அறையாக காட்டினாள் நிகிலா.

மூன்று படுக்கை அறைகளும் விருந்தினர் அறை ஒன்றும், அலுவலக அறையுமாய் வீடு எல்லா வசதிகளுடனும் இருந்தது. அறைகள் பெரிதாக காற்றோட்டமாய் இருந்தன. கண்களுக்கு இதமான கலர்களில் சுவர்களும், சுவர்களின் கலரிலேயே படுக்கை விரிப்பு, கார்பெட், கர்டன்கள் என நேர்த்தியாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. கிராமத்து வீட்டின் வழவழப்பான சிமெண்டு தரை வீடு, சுற்றிலும் வயல்வெளிகள் என இயற்கையான சூழலில் பழகிப்போன ரேவதிக்கு அந்த வீட்டை விட தோட்டம் மிகவும் அருமையாக இருந்தது.

மாடி பால்கனியிலிருந்து தோட்டத்தை ரசித்தவள், "இந்த வீட்டிலேயே எனக்குப் பிடித்த இடம் தோட்டம் தான் நிகிலா" என்றாள்.

"மண்ணையும் மரத்தையும் தவிர எதுவும் தெரியாத ஜென்மங்களுக்கு எங்கே போனாலும் அதைத்தான் பிடிக்கும்" சூர்யாவின் நக்கலான குரலில் திடுக்கிட்டு திரும்பினாள் ரேவதி.

அறைக்கு வெளியே நிகிலா செல்போனில் பேசிக்கொண்டிருந்தாள். 'இவன் உள்ளே இருப்பதையே கவனிக்காமல் எப்படி வந்தோம்!' என்று நினைத்தபடி அவசரமாய் நிகிலாவிடம் சென்றாள் ரேவதி.

"ஸாரி அண்ணி" அதற்குள் என் ப்ரண்ட்கிட்டயிருந்து ஒரு போன் வந்தது. இதுதான் அண்ணாவின் ரூம். வாங்க உள்ளே போகலாம்" என்றபடி நிகிலா அறைக்குள் சென்றாள்.

"கீழே யாரோ நம்மைக் கூப்பிட்டார்கள் நிகிலா. வா போகலாம்" என அவளை இழுத்துக் கொண்டு வேகமாய் கீழே போனாள் ரேவதி. மற்றவர்களிடம் வாய் பேசினாலும் மனம் அவன் வார்த்தைகளிலேயே நின்றது.

'எனக்கு செடியையும் மரத்தையும் தவிர எதுவும் தெரியாதாம். இவனுக்கு மட்டும் என்ன தெரியுமாம்? கான்கிரீட் கட்டிடங்களையும் வெள்ளை தோல்களையும் தவிர' பொருமியபடியே இருந்தாள்.

மதிய விருந்து முடிந்ததும் நிகிலா ஹாஸ்டலுக்குக் கிளம்பினாள். "சே! என் ப்ளஸ் டூ சமயத்திலா உங்க கல்யாணம் வரணும்? உங்க கூட ஒரு வாரம் இருக்கக் கூட முடியவில்லை." ஏக்கத்துடன் நிகிலா விடைபெற்ற போது ரேவதிக்கும் வருத்தமாக இருந்தது.

"உள்ளூரில்தானே இருக்கிறாய். வார விடுமுறைகளில் வந்தால் போச்சு" என்றாள் ரேவதி அவளுக்கு சமாதானமாய்.

நிகிலா கிளம்பிப் போனதுமே வீடு வெறிச்சோடினாற் போலாயிற்று. அதை கமலத்திடம் சொன்னபோது, "அவள் பயங்கர வாயாடி ரேவதி. எப்பவும் எதாவது பேசிக் கொண்டே இருப்பாள். அதனால் அவ இல்லாட்டி வீடே அமைதியான மாதிரி ஆகிவிடும்" என்றார் புன்னகையுடன்.

அன்று இரவு வீட்டுப் பெரியவர்களாய் கமலமும், ராஜமும் முதலிரவுக்கான ஏற்பாடுகளை செய்தனர். தன்



வெறுப்பை வெளியே காட்ட முடியாமல் "அம்மா என்ன இது சினிமாத்தனமாய்?" என்று பல்லைக் கடித்தாள் ரேவதி.

அதே போல் குறைப்பட்ட மகளிடம் "எல்லாத்துக்கும் நேரம் காலம் சம்பிரதாயம் என்றிருக்கிறது இல்லையா?" என்று சமாதானம் சொன்னார் கமலம்.

தன் வழக்கப்படி இரவு குளித்துவிட்டு வந்த மகளிடம் பட்டுப் புடவையை கொடுத்து உடுத்திக் கொள்ளச் சொன்னார் ராஜம். "தினமும் நலுங்கு விருந்து என்று பட்டுப் புடவையே கட்டி அலுத்துப் போச்சு" என்று முரண்டினாள் ரேவதி. "சொன்ன பேச்சு கேட்காமல் என்ன பெண்ணோ போ" என்று அலுத்தவாறு தீபாவளிக்கு எடுத்த டிசைனர் புடவையை எடுத்துக் கொடுத்தார் ராஜம். நல்ல சிவப்பு நிறத்தில் நீலக் கற்கள் பதிக்கப்பட்ட அந்த ஷிபான் புடவை ரேவதியின் உடலோடு ஒட்டி நளினமான உடலை எடுப்பாய் காட்டியது. "பரவாயில்லை. பட்டுப் புடவையை விட இதுவே அழகாயிருக்கு" என்று திருப்தியடைந்து ராஜம் மகளின் சுருண்ட முடியை வாரி இரண்டு பின்னல் போட்டு நெருக்கமாய் தொடுத்த மல்லிகையை தோள் வரை வழிய விட்டார். லிப்ஸ்டிக்கையும், ஐ லைனரையும் எடுத்துக் கொடுத்து "நீயே போட்டுக்கோ" என்றதும், "போதும்மா என்னை சும்மா விடுங்களேன்" என்று கடுகடுத்தாள் ரேவதி.

"நீ இன்னும் சின்னக் குழந்தையில்லை ரேவதி. திருமணமான பெண். பார்த்து நடந்து கொள்" என்றார் ராஜம் கண்டிப்புடன். பால் சொம்பை கொண்டு வந்து மருமகளிடம் கொடுத்த கமலம் ரேவதியின் நெற்றியை தொட்டு திருஷ்டி கழித்தார். "என்னதான் சொல்லு ராஜம்,

என் மருமக தங்கச் சிலைதான்'' என்றார் பெருமையுடன். கேலி கிண்டல் செய்ய சம வயது பெண்கள் அருகில் இல்லாதது சற்று ஆறுதலை தர, 'சீக்கிரமே ஒரு பேரனோ, பேத்தியோ பெத்து குடுக்கணும்' என்ற பெரியவர்களின் கோரிக்கையோடு ரேவதி சூர்யாவின் அறைக்குள் காலடி எடுத்து வைத்தாள்.

அந்த அறை பிரமாதமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. சுவர்களில் மல்லிகையும், சாமந்தியும் சரமாய் தொங்கின. கட்டிலில் மலர்ந்த ஜாதிப் பூக்களை கொட்டி அதில் ரோஜாவால் மணமக்களின் பெயரை எழுதியிருந்தார்கள். சென்டோ, ரூம் ஸ்பிரேயரோ பயன்படுத்தாமல் அந்த அறை இயற்கையான பூக்களின் நறுமணத்தால் நிரம்பி யிருந்தது.

கட்டிலில் அமர்ந்திருந்த சூர்யா மிகுந்த கோபத்துடன் இருந்தான். 'வாழ்வில் ஒருமுறை வருவது முதலிரவு. அது மனதுக்கு பிடித்தவளோடு அமைந்தால்தானே வாழ்க்கை இனிமையாய் இருக்கும்! எத்தனையோ மேல் தட்டு பெண்களும், வெளிநாட்டு அழகிகளும் அவனுக் காக போட்டி போட, இந்த பட்டிகாட்டிடம் முதலிரவு கொண் டாடவா அவன் இத்தனை நாள் காத்திருந்தான்? இங்கே நண்பர்களுடன் பிக்னிக், பார்ட்டி என்று எங்கேயாவது அவளை கூட கூட்டிப் போக முடியுமா? வாழையிலை யில் சம்மணமிட்டு அமர்ந்து வழித்து சாப்பிட்டுப் பழகி யிருப்பாள். பீங்கான் கிண்ணங்களில் ஸ்பூனும் போர்க்கு மாய் நறுவிசாய் சாப்பிடும் அவன் நண்பர்களின் அல்ட்ரா மாடர்ன் மனைவிகள் அவனை கிண்டல் செய்தே கொன்றுவிட மாட்டார்களா? முதன் முதலாய் பார்த்த போதே இவள் அப்பா அம்மாவிடம் குழைந்து குழைந்து



பேசிக் கொண்டிருந்தாள். இந்த சில மாதங்களில் சிரித்துப் பேசி இவள்தான் அம்மாவை மயக்கி இருக்க வேண்டும். அம்மா பாவம். உலகம் அறியாதவர்கள் ஏமாந்து விட் டார்கள். ஆனால் அந்த வேலை என்னிடம் நடக்காது. என்னை ஏன் திருமணம் செய்து கொண்டோம் என்று அவள் நிச்சயம் வருத்தப்படப் போகிறாள். வருத்தப்பட வைப்பேன்.' விரல்களை மடக்கி தலையணையை குத்தி னான் சூர்யா. கதவு ஒரு மெல்லிய தட்டலுடன் திறந்தது. ரேவதி உள்ளே வந்து மெதுவாய் கதவைத் தாளிட்டாள். கோபத்துடன் அவளை நிமிர்ந்து பார்த்தவனுக்கு அந்த நிமிடம் தான் நினைத்ததெல்லாம் சுத்தமாய் மறந்து போனது. அறை விளக்கின் ஒளியில் அவள் புடவையின் கற்கள் தகதகக்க அதன் சிவந்த நிறம் அவள் சருமத்தின் வெண்மையை பளீரென்று மின்ன வைத்தது. அவளை சந்தித்ததிலிருந்து முதன் முறையாக அன்றுதான் அவள் அழகை அவன் உணர்ந்து கொண்டான். இதைப் பார்த்து தான் அம்மாவும் மயங்கியிருப்பார்கள். இந்த கரிய பெரிய விழிகள்தான் கவர்ந்திருக்கும். இந்த ஆரஞ்சு சுளை உதடுகளும், அவற்றின் முத்துச் சிரிப்பும்தான் மயக்கி யிருக்கும். அவற்றிற்கு இப்போதே தண்டனை தந்தால் என்ன? இந்த மென்மையான உடலை எலும்புகள் நொறுங்க அணைத்து, மூச்சு திணறத் திணற இதழ்களில் முத்தமிட்டால்? இன்று நான் செய்வதையெல்லாம் அவள் சகித்துக் கொள்ள வேண்டும் என்று தண்டனை கொடுத் தால்?

சிந்தனையில் இருந்தவன் 'தொப்'பென்று ஏதோ விழும் ஓசையில் திரும்பிப் பார்த்தான். அந்த பெரிய சோபாவில் தலையணையைத் தூக்கிப் போட்ட ரேவதி ஒரு போர்வையை போர்த்துக் கொண்டு தூங்கத் தயா

ரானாள். இடுப்பு வரை போர்வையை வழிய விட்டு அவனுக்கு முதுகை காட்டியபடி ரேவதி திரும்பிப் படுத்தாள். ஜன்னல் வழியே தெரிந்த தூரத்து தெருவிளக்கின் ஒளியில் பாலாய் தெரிந்த முதுகும் அதில் புரண்ட கரிய முடியும் கூட அலாதி கவர்ச்சியாய் தெரிந்தது.

மறுபுறம் புரண்டு படுத்த சூர்யா தன் மனதையே திட்டிக் கொண்டான். அவள் அழகைப் பற்றி இப்போது என்ன தேவையற்ற ஆராய்ச்சி? நமக்கு வேண்டாதவள். அவள் எப்படியிருந்தால் என்ன? திருமணமான பிறகு முதன் முதலாய் தனிமையில் சந்திக்கிறோம். ஒரு மரியாதைக்குக் கூட இரண்டு வார்த்தை பேசவில்லை அவள். நான் பேசுவதையும் கேட்கத் தயாரில்லை என்று சொல்லாமல் சொல்வது போல் முகத்தை திருப்பிக் கொண்டு போய் படுத்து விட்டாள். ஒட்டவும் முடியாமல் விலகவும் முடியாமல் இவளுடனான எதிர்கால வாழ்வு எப்படியிருக்கும்? யோசித்துப் பார்த்தும் எதுவும் புரியாமல் தலையை உலுக்கினான் சூர்யா. நோ. எது எப்படியிருந்தாலும் இவளுக்காக என் வாழ்வை வீணடித்துக் கொள்ள நான் தயாராக இல்லை. விரைவில் இதற்கு ஒரு முடிவு காண வேண்டும்.

கண்ணை மூடிப் படுத்திருந்த ரேவதிக்கும் படபடப்பாகத்தான் இருந்தது. அறைக்குள் நுழைந்ததும் எதுவும் பேசாமல் தன்னை வெறித்தவனைப் பார்த்ததும் மனதில் மெதுவாய் ஒரு நடுக்கம் வந்தது. இப்போது அவள் தயங்கினாலும் பேச முற்பட்டாலும் சமரசம் செய்து தன்னை கவிழ்க்க முயல்வதாக அவன் தப்பாக புரிந்து கொள்ளக் கூடும். எனவே எதுவும் பேசாமல் சென்று படுத்துக் கொண்டாள். ஏதும் பேச வேண்டுமானால் முதலில் அவனே



கூப்பிட்டு பேசட்டும். பிறகு பதில் சொல்லலாம் என்ற முடிவுடன் திரும்பிப் படுத்தவள் அலுப்பில் அப்படியே தூங்கிப் போனாள்.

காலையில் ஆவலுடன் அவள் முகத்தை பார்த்த பெரியவர்களிடம் எதுவும் பேசாது சமையலறைக்குச் சென்று காபி கலக்கத் தொடங்கினாள். அவள் ஒதுக்கத்தை வெட்கம் என்று நினைத்த கமலமும் ராஜமும் புன்னகையை பரிமாறிக் கொண்டனர்.

ரொம்ப நாட்களாக அவர்களுடன் இருக்கும் சமையல்காரர் சோமு அன்றிலிருந்து வழக்கம் போல் சமைக்கத் தொடங்கினார். அவரை அறிமுகப்படுத்திய கமலம் "சோமு தாரிணி பிறந்ததிலிருந்தே நம்முடன் இருக்கிறார். எனக்கு அடுத்தடுத்து பிறந்த குழந்தைகளை கவனிக்கவே நேரம் சரியாக இருக்க சோமுதான் சமையலையும் வீட்டையும் கவனித்துக் கொண்டார். எங்களுடன் ஊர் சுற்றியதன் பலனாய் பல மாநில உணவு வகைகளையும் கற்றுக் கொண்டு நன்றாகச் செய்வார். பிள்ளைகள் வளர்ந்து தனித்தனியாகப் போனதும் சென்னை வீட்டை பராமரிக்க என்று இங்கேயே தங்கியிருக்கிறார். கட்டை பிரம்மச்சாரி. நம் வீட்டில் ஒருவராகத்தான் அவரை எல்லோரும் நினைக்கிறோம்.

அதுபோக வீடு பெருக்கி பாத்திரம் துலக்க சரோஜா என்று ஒரு பெண் வருவாள். தோட்டக்காரன் வாரத்தில் மூன்று நாட்கள் வந்து நீர் பாய்ச்சி களை எடுப்பான். எடுபிடி பையன் முருகன் கடைக்குப் போய் வர, கரண்ட் போன்பில் கட்ட என்று வெளிவேலைகளைப் பார்ப்பான். வாசலில் கூர்க்கா ராம்சிங் இருப்பான்" என்று வீட்டைப் பற்றிய விபரங்களை ரேவதியிடம் கூறினார் கமலம்.

"இதுபோக உனக்கு எதாவது வேண்டும் என்றால் சூர்யா விடம் கேட்டுக் கொள்" என்றதும்

"எதுவும் வேண்டாம் அத்தை" என்றாள் ரேவதி.

அன்று மாலையே கமலமும் அருணாச்சலமும் அசாம் கிளம்பவும் "ஒரு பத்து நாளாவது இருக்கக் கூடாதா அத்தை?" என்று குறைப்பட்டாள் ரேவதி.

"என் மகனைப் பார்த்துக் கொள்ள நீ இருக்கிறாய். உன் மாமாவை பார்த்துக் கொள்ள நான் போக வேண்டாமா? நீயும் அறியாத பெண்ணில்லையே! பொறுப்பானவள். வீடு நிறைய உறவுகளும், பண்ணை ஆட்களுமாய் வளர்ந்தவள். இந்த வீட்டையும் சூர்யாவையும் நிர்வகிக்க உனக்கு கற்றுக் கொடுக்க வேண்டுமா என்ன?" என மருமகளுக்கு ஆறுதலாய் பேசிவிட்டு இருவரும் கிளம்பிச் சென்றனர்.

அடுத்த இரண்டு நாளில் மகளுக்கு குடித்தனம் நடத்த ஒத்தாசையாய் வீட்டைப் பொருட்களால் நிரப்பி அலங் கரித்து, துணிமணிகளை ஒதுங்க வைத்து பழமும் காய் கறிகளுமாய் ப்ரிஜ்ஜையும் நிறைத்து விட்டு ஊருக்குக் கிளம்பினார்கள் ராமசாமியும் ராஜமும். மகளுக்கு ஆயிரம் அறிவுரைகளை கூறிவிட்டு மருமகனிடம் விடை பெற் றார்கள். அது தனியா வளர்ந்த பொண்ணு மாப்பிள்ளை. சூதுவாது தெரியாது. எதாவது தெரியாத்தனமாய் தப்பு செய்து விட்டாலும் கூட அதை பொருட்படுத்தாது நல்லா பாத்துக்கணும் நீங்க" என்ற ராமசாமியின் குரல் குழைந்தது. பிறந்ததிலிருந்து இதுவரை மகளை விட்டு எங்கேயும் போயிராத ராஜம் பேச வராமல் கண்ணீர் வழிய ரேவதியை அணைத்துக் கொண்டாள்.



தாயின் அரவணைப்பில் ரேவதிக்கு துக்கமும் கோபமும் ஒரே சமயத்தில் ஏற்பட்டது. பெற்றோரை பிரிய முடியாத தால் துக்கமும் இவர்கள் தானே இந்த திருமணத்தை செய்து வைத்தது என்று கோபமும் ஏற்பட்டது.

"இரயிலுக்கு நேரமாகிறது" எச்சரிக்கை உள்ளடக்கிய சூர்யாவின் குரலில் கலைந்து ரேவதியை திரும்பிப் பார்த்தபடியே சென்று காரில் அமர்ந்தனர் இருவரும்.

சூர்யா அவர்களை இரயிலில் ஏற்றிவிட்டு தன்னுடைய வேலைகளை முடித்துக் கொண்டு வீட்டிற்கு வரும்போது இரவு மணி பதினொன்றாகியிருந்தது. ரேவதி கீழேயுள்ள விருந்தினர் அறையில் தூங்கிப் போயிருந்தாள். சோமு பரிமாற வந்ததை மறுத்துவிட்டு டேபிள் மேல் ஹாட் பேக்கில இருந்த இட்லியை சாப்பிட்டு விட்டு தன் அறைக்குச் சென்றான் சூர்யா.

மறுநாள் காலையில் *சீக்கிரமாகவே* எழுந்து விட்ட ரேவதிக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. ஹாலுக்கு வந்தவள் அன்றைய நியூஸ் பேப்பரை புரட்டி ஒவ்வொரு செய்தியாய் வாசித்தாள். சோமுவின் உப சரிப்பை மறுத்து சமையலறைக்கு சென்று தானே டீ போட்டுக் குடித்தாள். குடித்து முடித்ததும் தோட்டத்தில் வெய்யில் ஏறும் வரை நடக்க ஆரம்பித்தாள். பிறகு கீழேயுள்ள அறையிலேயே குளித்துவிட்டு ஒரு சல்வாரை அணிந்து கொண்டு வெளியே வந்தாள். அவள் தலையைப் பார்த்ததும் "அம்மா இன்று என்ன சமைக்கட்டும்?" என்றபடி வந்தார் சோமு.

"நீங்களே உங்க வழக்கம் போல் செய்யுங்கள்" என்றாள் ரேவதி.

"தம்பிக்கு என்ன செய்யறதுன்னு சொல்லுங்கம்மா?" என்றார் விடாப்பிடியாக.

"இத்தனை வருடமாய் சமைக்கிறீங்க. இது கூடத் தெரியாதா?"

"தம்பி இதுவரை எதுவுமே சமைக்கச் சொல்லி கேட்டதில்லம்மா. முன்பெல்லாம் பெரியம்மா தான் மெனுவை சொல்லுவாங்க. தம்பி சில சமயம் சாப்பிட வராது. சில சமயம் இரவு டின்னருக்கு வெளியே போய்விடும். அதற்கேற்ற மாதிரி கூட, குறைய சமைக்கணும். கொஞ்சம் கேட்டு சொல்லுங்கம்மா" என்றார்.

அதற்குமேல் மறுக்க வழியின்றி மேலே சென்றாள் ரேவதி.

அவனது அறையின் கதவைத் திறந்ததும் ஜில்லென ஏசியின் குளிர் முகத்தைத் தாக்கியது. அவள் எதிர்பார்த்தது போல் அவன் இன்னும் படுக்கையில் புரளாமல் குளித்து விட்டுவிட்டு தலை வாரிக் கொண்டிருந்தான். டிரஸ்சிங் டேபிள் கண்ணாடியில் ரேவதியைப் பார்த்ததும் கை ஒரு நிமிடம் நின்று மறுபடி வாரத் தொடங்கியது. கண்ணாடி வழியே தன்னைப் பார்த்தவன், 'என்ன விஷயம்?' என்று விசாரிப்பான் என ரேவதி எதிர்பார்த்தாள். அவனோ அவள் இருப்பதையே கண்டு கொள்ளாமல் சட்டையை போட்டு பட்டன்களை போடத் தொடங்கினான். ரேவதி கால் மாற்றி நிற்க, அவன் மெதுவாக ஸ்பிரேயரை எடுத்து பீய்ச்சிக் கொண்டான். பொறுமையிழந்த ரேவதி மெதுவாய் செருமினாள். அவன் திரும்புவதாகவே இல்லை என்றானதும் வேறு வழியின்றி "உங்களிடம் பேச வேண்டும்" என்றாள் அவன் எதிரில் போய் நின்று.

"என்னிடமா பேச வேண்டும்?" அவன் அதிகமான வியப்புடன் விசாரித்தான்.



"இங்கே இருப்பது நாம் இரண்டே பேர். அதில் நீங்கள் இல்லை என்றால் வேறு யாரிடம் பேச முடியும்?"

"அப்படியா? ஸாரி நீ கூப்பிட்டதை நான் கவனிக்கவேயில்லை" என்றான் கிண்டலாக.

குறும்பாய் சிரித்த அவன் கண்களைப் பார்த்ததும் பதிலுக்குத் தானும் அவனைப் போலவே எதாவது சொல்லத் துறுதுறுத்த நாக்கை அடக்கினாள். சும்மாவே நமக்கு வாயாடி பட்டம் கட்டியவன். ஒரு சாதாரண பேச்சைக் கூட பெரிதாக்குபவன். எனவே பேச நினைத்ததை தவிர்த்து ஜன்னலுக்கு வெளியே பார்த்தவாறு பேசினாள்.

"உங்களுககு இன்று மதியம் வீட்டில் சாப்பாடு உண்டா? என்னென்ன பிடிக்கும்? பிடிக்காது என்று..." அவள் முடிக்கும் குறுக்கிட்ட அவன்.

"அடேயப்பா, அதற்குள் கணவன் மீது எவ்வளவு அக்கறை உனக்கு? எனக்குப் பிடித்த மாதிரி சமைத்து, நான் வருகிறவரை காத்திருந்து, வந்த பின் பரிமாறி நான் சாப்பிட்ட எச்சில் இலையில் நீ சாப்பிடப் போகிறாயா? ஒரு உண்மையான இந்தியப் பெண்ணின் இலக்கணம் நீதான்."

"ஹலோ" என்று அவன் முன் கைகளை அசைத்தாள் ரேவதி! "நீங்கள் இருப்பது இருபத்தொன்றாம் நூற்றாண்டு. இங்கு வெளியே போய் சம்பாதிப்பதில் பெண்களுக்கு சம பங்கு உண்டென்றால், வீட்டைப் பார்த்துக் கொள்வதில் குடும்ப வேலைகளில் ஆண்களுக்கு மீதி பங்கு. நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். சமையல்காரர் இன்று என்ன சமைக்கட்டும் என்று கேட்டார். உங்களுடைய சாப்பாட்டு விஷயம் கேட்டு சொல்லச் சொன்னார். இந்த

வீட்டில் மனைவி என்ற நிலையில் இருக்கும்போது தெரியாது என்று சொல்ல முடியாதில்லையா? அதனால கேட்டேன்.''

''அதானே பார்த்தேன். நீயாவது வீட்டு விஷயம் கேட்பதாவது. எடுத்தெறிந்து பேசவும், சண்டை போடவும் வேண்டுமானால் உன்னை கேட்கலாம்.''

''ஆமாம். நான் சண்டைக்காரிதான். அதையெல்லாம் தெரிந்தும் எப்படி என்னைத் திருமணம் செய்து கொண்டீர்கள்?''

''இல்லாவிட்டால் உன்னை மாதிரி பெண்களுக்கு எப்படித் திருமணம் நடக்கும்?'' என்றான் சூர்யா அலட்சியமாய்.

''பெரிய மன்மதன் இவர். இவர் வந்து பண்ணிக்கலைன்னா நாங்க கல்யாணம் ஆகாமலேயே கிழவியாகி விடுவோம். மூஞ்சியைப் பார்.''

''இந்த மூஞ்சியைப் பார்க்கத்தானே ப்ளான் பண்ணி எங்களை அந்தப் பட்டிக்காட்டுக்கு வரவழைச்சீங்க. உங்க பாட்டி உடல் நிலையை காரணமாய் வைத்து. அவங்க மூலமாய் எங்கம்மாவுக்கும் அப்பாவுக்கும் வலை போட்டீங்க. என் கண் முன்னாடியே என் பெற்றோரிடம் நீ குழைந்ததை நான் பார்த்தேனே! வெளிநாட்டில் வேலை பார்த்தவன், வசதியானவன், பட்டணத்தில் சொகுசாக வாழலாம் என்றுதானே திட்டம் போட்டு என்னை பிடிச்சீங்க?''

சற்றும் தன் விருப்பமின்றி பெற்றோருக்காக கழுத்தை நீட்டிய ரேவதி இந்த அர்த்தமற்ற குற்றச்சாட்டில் திகைத்துப் போனாள்.



''திட்டம் போட்டுப் பிடிக்கிறதுக்கு நீங்க திருடனா? இல்ல வலை விரிச்சி பிடிக்கறதுக்கு மீனா அல்லது மானா?'' கோபத்துடன் முறைத்தாள்.

அவள் அகலமான கண்கள் மேலும் அகன்று தெரிய, அதற்குள் மூழ்கிப் போவதைப் போலிருந்தது சூர்யாவுக்கு. 'சே! என்ன கண்ணுடா இது' என்று தலையை உலுக்கினான்.

'கர்வம் பிடித்தவன். இவனும் இவன் வீடும் எப்படிப் போனால் என்ன? யார் சாப்பிட்டால் என்ன? இல்லாவிட்டால் என்ன?' பொருமியபடி கீழே இறங்கிப் போனாள்.

அவளைப் பார்த்ததும் பல் அத்தனையும் காட்டிய சோமு ''அம்மா நீங்க சாப்பிட்டீங்களா? தம்பி மதியம் சாப்பிட வராதாம். உங்களுக்கு என்ன பிரியமோ அதை சமைக்கச் சொன்னார்கள். சாப்பாட்டு விஷயத்துக்கெல்லாம் அம்மாவை ஏன் தொல்லை பண்ணி மேலே அனுப்பறீங்க? என்று தம்பி இண்டர்காமில் கூப்பிட்டுக் கோபித்துக் கொண்டது. தம்பி வீட்ல இருக்கறப்ப அவங்கம்மாதான் காலை காபியோட போய் எழுப்புவாங்க. எழுந்துட்டியா? என்ன சாப்பாடு வேணும். குடிக்க ஏதாவது வேணுமான்னு மகனோட அறைக்கும் சமையலறைக்கும் ஒரு நாளைக்கு பத்து முறை நடப்பாங்க. இப்ப பொண்டாட்டி நடந்தா கால் வலிக்குமேன்னு தம்பிக்கு மனசு கஷ்டப்படுது'' நெடுநாள் வீட்டுடன் ஒன்றி விட்ட உரிமையில் சமையல்காரர் கிண்டலாய்ப் பேச பதில் பேசாமல் டம்ளர்களில் நீரை நிரப்பினாள் ரேவதி.

பெண்டாட்டி என் அறைக்கு வருவது பிடிக்கவில்லை என்று சமையல்காரரிடம் நேரடியாய் எப்படி சொல்வான்

பாவம். டேபிள் மீது தட்டை வைத்தபோது ''ஹாய்'' என்றபடி சூர்யா வந்து அமர்ந்தான். ''குட்மார்னிங்'' என்றான் உற்சாகமாய் புன்னகைத்து.

''இவன் சற்றுமுன் கடுகடுத்தது என்றிருந்தது ரேவதிக்கு. ''என்ன குட்மார்னிங் சொன்னா பதில் சொல்லணும்னு உங்க ஊர் ஸ்கூல்ல சொல்லித் தரலையா?''

''ம... காலையில் எழுந்ததும் முதல் முறை பார்த்துக்கிறப்பதான் குட்மார்னிங் சொல்லணும்னு சொல்லிக் கொடுத்தாங்க. கொஞ்ச நேரம் முன்னாடி கூட நாம பேசியதாக நினைவு. அப்ப இல்லாம இப்ப என்னன்னு யோசிச்சேன்.''

''இதுக்குப் போய் எதுக்கு யோசிக்கற? நாம பாத்துக்கற நேரமெல்லாம் நல்ல நேரம்தானே'' லேசாய் கண்களைச் சிமிட்டிவிட்டு சாப்பிடத் தொடங்கினான் சூர்யா.

# 7

அவன் கிளம்பிப் போனதும் ரேவதிக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. பொழுது போகாமல் வீட்டையே சுற்றிச் சுற்றி வந்தாள். பேச்சுத் துணைக்குக் கூட ஆளில்லாமல் போரடித்தது. சூர்யாவை சுற்றி சிந்தனை ஓடியது. பெற்றோரை மயக்கி மணந்து கொண்டதாக அபாண்டமாய் குற்றம் சாட்டினாலும் அவனுக்கும் இந்த திருமணத்தில் விருப்பமில்லை என்றுதான் தோன்றுகிறது. தன்னிச்சையாய் வளர்ந்து சுதந்திரமாய் செயல்படும் அவன் பிறகு ஏன் தன் விருப்பமில்லாத விஷயத்தை செய்தான்? பெற்றோர் மீதுள்ள பாசத்தினால் என்றால் அது மிகவும் பாராட்டப்பட வேண்டிய விஷயம்தான். தன்னைப் பொறுத்தவரை



அவன் நிலை என்னவாக இருக்கும்? சில சமயம் குத்தலாகப் பேசுகிறான். திடீரெனச் சிரிக்கிறாள். அவ்வப்போது சீண்டுகிறான். இவனது உண்மையான குணம் தான என்ன? என்ன இருந்தாலும் கள்ளங் கபடமின்றி மனதிலுள்ளதை கொட்டும் நம்ம ஊர் ஜனங்களின் போக்கே வேறுதான்.

மணியைப் பார்த்தாள் பத்தாகியிருந்தது. பொழுது நகராமல் அடம் பிடித்தது. வீட்டிலிருந்த வார இதழ்களை எலலாம் தேடிப்பிடித்து படித்தாள். அலமாரியிலிருந்த துணிகளை மாற்றி அடுக்கினாள். தோட்டத்து மல்லிகையை இலைகளுடன் பறித்து டேலியா, பொன் இலைகளும், குவளையில் சொருகி வைத்தாள். வழக்கமான அழகுடன் வாசமும் வீட்டை நிறைத்தது. போகன்வில்லாவின் கொடிகளை கட் பண்ண சொல்லி முகம் பார்க்கும் கண்ணாடியை சுற்றிலும் வளையமாக வளைத்தாள். டிரஸ்சிங் டேபிளின் மீது இறைந்து கிடந்த பர்ப்யூம், எண்ணெய் பாட்டில்களை ஒரு சின்ன டிரேயில் அடுக்கி வைத்தாள்.

கபோர்டில் கலைந்து கிடநத பேப்பர்களில் எது தேவை எது வேண்டாதவை என்று குழம்பி விட்டு கடைசியில் எதையும் கழிக்காமல் தேதி வாரியாக அடுக்கி ஒரு ப்ளாஸ்டிக் கவரில் வைத்தாள். வார்ட் ரோபை திறந்து துணிகளை அடுக்கியபோது, அவன் உடைகளை ஹேங்கர்களில் மாட்டும்போது விரல்களில் மெல்லிய கூச்சம் ஏறபட்டது. அவன் உடையிலிருந்து வெளிப்பட்ட ஸ்பிரேயரின் மணம் ஒரு வினோதமான உணர்வை ஏற்படுத்தியது. அப்பா வேஷ்டிதான் கட்டுவார். பேண்ட் சார்ட் என்று ஒரு ஆணின் உடையை தொடுவது இதுதான்

முதன் முறை. அதனால் நமக்கு வித்தியாசமாய் தெரிகிறது. போலும் என்று நினைத்தபடி கபோர்டின் கதவை சாத்தினாள். மாலையில் டீயுடன் லானில் அமர்ந்தவளுக்கு 'அப்பாடா இன்றைய பொழுது போய்விட்டது' என்றிருந்தது.

இரவு சூர்யா மிகவும் தாமதமாக வந்தான். தூங்கி வழிந்த சோமுவைப் போய் படுக்கச் சொல்லிவிட்டு ரேவதி தான் அவனுக்கு உணவு பரிமாறினாள். பதில் பேசாது சாப்பிட்டு விட்டு களைப்புடன் தன் அறைக்குப் போனான் சூர்யா.

கபோர்ட்டை திறந்து கையிலிருந்த பையை உள்ளே வைத்து விட்டு லுங்கி எடுத்தவன் ஏதோ வித்தியாசத்தை உணர்ந்தான். அலமாரி துப்புரவாய் இருக்கவும் 'மை காட் முக்கியமான பில், ரெசிப் எல்லாம் இருந்ததே' என்று வேகமாய் தேடியவன் கண்ணாடித்தாள் கவருக்குள் தேதி வாரியாய் அடுக்கப்பட்டு கட்டி வைக்கப்பட்டிருந்த பேப்பர்களைப் பார்த்ததும் நிம்மதிப் பெருமூச்சு விட்டான். இரவு நேர பல் துலக்குதலை முடித்து விட்டு முகத்தைத் துடைத்தபடியே கண்ணாடியைப் பார்த்தவன், பச்சை நிற இலைகளுக்கும் ரோஸ் நிற போகன்வில்லா மலர்களுக்கும் நடுவே தன் முகமே புதுசாய் தெரியவும் வீட்டைச் சுற்றிலும் பார்த்தான் சூர்யா. தனக்குப் பிடிக்கிறதோ இல்லையோ, கிராமமோ அல்லது நகரமோ எதுவாயிருந்தாலும் ஒரு பெண் இருந்தால் வீடே களை கட்டி விடுகிறது என்று நினைத்தபடி தூங்கப் போனான்.

சூர்யாவுக்கு புதிதாகத் தொடங்கியிருந்த வேலை அவனது நேரத்தில் பெரும்பகுதியை எடுத்துக் கொண்டது. எந்த நேரம் வருகிறான் எப்போது போகிறான் என்றே



சொல்ல முடியாமல் இருந்தது. கமலம் போன் பண்ணும் போதெல்லாம் அவன் வீட்டில் இல்லாமல் இருக்கவும், "புதிதாக திருமணமானவன் மனைவியுடன் வெளியே போக வர இருக்காமல் அப்படியென்ன வேலை? நீயாவது கேட்கக் கூடாதா ரேவதி?" என்றார் மருமகளிடம்.

"கேட்கிறேன் அத்தை" என்றாள் ரேவதி.

தனியாய் உட்கார்ந்திருக்கையில் 'நல்லவேளை அவனுக்காவது வேலை என்று ஒன்றிருக்கிறது. இல்லை என்றால் இரண்டு பேரும் ஆளுக்கொரு பக்கம் பார்த்துக் கொண்டு இப்படித்தான் உட்கார்ந்திருக்க வேண்டும்" என்றிருந்தது.

சமையல் செய்யலாம் என்றாலும் அவள் ஒருத்திக்கு என்ன சமைப்பது என்று தோன்றியது. இன்னும் எத்தனை நாள் இப்படிக் கிடப்பது என்று அலுப்புடன் நினைக்கும் போதே டெலிபோன் மணியடித்தது.

அப்பாதான் பேசினார். "நல்லா இருக்கீங்களாப்பா?" என்றபோது குரல் தழுதழுத்தது.

"ரேவதி என்னாச்சுமா? நீ எப்படியிருக்க?" என்றார் ராமசாமி பதட்டத்துடன்.

"இல்லப்பா. எனக்கு எதுவும் இல்ல. உங்களையெல்லாம் பார்க்காம இருக்கறது கஷ்டமா இருக்கு. எனக்கு நம்ம ஊருக்கு வரணும் போலிருக்கு."

"என்னம்மா குழந்தையாட்டம்? உன்னை அங்கே விட்டு விட்டு வந்து ஒரு வாரம் கூட ஆகல. அதுக்குள் இங்க வரவேணும்னா மாப்பிள்ளை என்ன நினைப்பார்? யோசித்துப் பார்."

"மணமாகி வரும்போதே வேண்டுமானால் திரும்பி போய் விடு" என்றவன் புதிதாக என்ன சொல்லப் போகி

றான்? அதை அப்பாவிடம் சொல்ல முடியாமல் "அவ என்னவோ நினைக்கட்டும். இங்கு எனக்கு ரொம்ப போ அடிக்கிறது. பேச ஆளில்லாமல் என்ன செய்வதென்று புரியாமல் எத்தனை நேரம் வீட்டையே சுற்றி சுற்றி வர முடியும்?"

"திருமணமான புதிதில் புதிய இடத்தில் பொருந்து வதற்கு எல்லோருக்குமே சிரமமாகத்தான் இருக்கும் ரேவதி. கொஞ்ச நாட்களில் நீ பழகியதும் சிரமமாகத் தெரியாது."

"உங்களுக்குத் தெரியாதுப்பா. எனக்கு பைத்தியமே பிடித்து விடும் போலிருக்கு. நான் பேசாமல் படித்துக் கொண்டு இருந்திருப்பேன். என்னை ஜெயில்ல அடைச்ச மாதிரி இங்க கொண்டு வந்து தள்ளிட்டீங்க." படபட வெனப் பொரிந்தாள் ரேவதி.

மறுபக்கம் பதில் எதுவும் வராமல் போகவே "அப்பா விடம் ஏன் இப்படி வழக்கத்துக்கு மாறாய் பேசினோம்" என்றிருந்தது.

"அப்பா ஸாரிப்பா. இங்க நாள்பூரா தனியாக இருப்பதில் எனக்கு ரொம்ப கஷ்டமாக இருந்தது. அந்த எரிச்சலில் ஏதோ பேசி விட்டேன்" என்று கெஞ்சினாள்.

"நமக்குள்ள என்ன மன்னிப்பெல்லாம் என்று அதை ஒதுக்கிய ராமசாமி, "உன் வீடு அது. உனக்கு எப்படி ஜெயிலாகும் ரேவதி? இந்த மாதிரி யோசிக்காமல் இனி யாரிடமும் வாயை விட்டு விடாதே" என்றார் அறிவுறுத் தலாய். "உன்னால் சும்மா இருக்க முடியவில்லை என்பது தானே பிரச்சனை? சம்பந்தியிடம் பேசி அதற்கு ஒரு ஏற்பாடு செய்கிறேன்."



"என்னப்பா செய்யப் போறீங்க?"

"உன் படிப்பை அங்கேயே தொடர முடியுமா என்று பார்க்கிறேன்."

"அது மட்டும் நடந்தால் எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கும்ப்பா" என்றாள் ரேவதி மகிழ்ச்சியுடன்.

"ஆனால் எனக்கு எது தெரியுமாம்மா சந்தோஷம்?"

"எதுப்பா?"

"நீ எனக்கு ஒரு பேரனோ பேத்தியோ பெத்து கொடுக் கறதுதான்.

"அதுவரை உன் படிப்பெல்லாம் நினைவு வெச்சுக் கோம்மா" என்றபடி போனை வைத்தார் ராமசாமி. அப் படியே அமர்ந்து இலக்கின்றி வாயிலை வெறித்தவளிடம் "அம்மா நான் கிளம்பறேம்மா" என்றபடி வந்தாள் சரோஜா.

பதில் பேசாது தலையாட்டினாள் ரேவதி.

"என்னம்மா முகமெல்லாம் சோர்ந்து கிடக்கு. வாயி லையே பாத்துட்டு உட்கார்ந்திருக்கீங்க. ஐயா வேலை வேலைன்னு ஓடிட்டு இருக்காங்க. புதுசா கல்யாணம் கட்டினவங்க இல்ல, வருத்தம் இருக்கத்தான் செய்யும். இன்னிக்கு சீக்கிரம் வந்துடுவாங்க. வருத்தப்படாதீங்க" என்றபடியே போய் சேர்ந்தாள் சரோஜா.

சூர்யா இரவு எட்டு மணிக்கு வந்தான். வரும்போதே முகம் கடினமாக இருந்தது. ஹாலில் அமர்ந்திருந்தவளை திரும்பியும் பாராமல் நேராய் மேலே போனான். போனதும் இன்டர்காமில் ரேவதியை அழைத்து "மேலே என் அறைக்கு வா" என்று விட்டு போனை வைத்தான்.

இவன் கூப்பிட்டவுடன் ஓட வேண்டுமா என்று பொறுமினாலும், இது வரை இப்படிக் கூப்பிடவில்லையே.

என்ன விஷயம் என்று கேட்போமே என்று எழுந்து அவன் அறைக்குச் சென்றாள்.

அவளைப் பார்த்ததும் ''உட்கார்'' என்று சோபாவைக் காட்டினான். ''பரவாயில்லை. நான் நிற்கிறேன்'' என்றாள் ரேவதி.

லேப்டாப்பை கட்டிலில் வைத்து விட்டு உட்கார்ந்த சூர்யா, ''உன்னிடம் பேசுவதற்காக உன்னை சோபாவில் தான் உட்காரச் சொன்னேன். இந்த கட்டிலில் அல்ல'' என்றான் எரிச்சலுடன்.

''நீங்க உட்காரச் சொன்னாலும் நான் அங்கே உட்காருவதாக இல்லை. இந்த விஷயம் சொல்லத்தான் கூப்பிட்டீர்கள் என்றால் தெரிந்து கொண்டேன். ரொம்ப சந்தோஷம். வருகிறேன்'' என்றபடி வெளியே போக திரும்பினாள் ரேவதி.

வேகமாக எழுந்த சூர்யா அவள் போகுமுன் கதவைத் தாளிட்டான்.

''அசல் சினிமாவில் வரும் வில்லனைப் போல் நடந்து கொள்கிறீர்கள். வில்லத்தனம் இவ்வளவுதானா? இன்னும் இருக்கிறதா?'' என்றாள் ரேவதி ஏளனமாக.

சிவந்த இதழ்கள் இகழ்ச்சியாய் சுழிப்பதைப் பார்த்தவன் ''வில்லன் என்ன செய்வான்னு தெரியணுமா உனக்கு?'' என்றபடி அவள் தோள்களை அழுந்தப் பற்றினான். ''ச்சீ'' என உதறியவளின் கைகளை சேர்த்து ஒரு கையால் இறுக்கினான். மறுகையால் அவள் முகவாயை நிமிர்த்தியவன் அவள் திமிறத் திமிற முகமெங்கும் முத்தமிட்டான். முதன் முறையாக பெற்ற ஆவேசமான முத்தங்களில் ரேவதியின் கை கால்கள் வெடவெடத்தன. கண்கள்



தானாய் மூடின. அவன் கைகளிலிருந்து நழுவி தரையில் சரிந்தாள்.

உலுக்கப்பட்டவன் போல விழித்த சூர்யா, அவளைத் தரையிலிருந்து எழுப்பவோ பேசவோ முற்படாமல் பால்கனிக்குச் சென்றவன் அதன் கிரில்லை அழுந்தப் பற்றியபடி வெளியே வெறித்தான்.

அவன் ரேவதியின் மீது மிகவும் கோபமாக இருந்தான். அவளை நன்றாகத் திட்ட வேண்டும் என்றுதான் தன் அறைக்கு வரச் சொன்னான். இடையில் இப்படி ஒரு நிகழ்வு எப்படி நடந்தது? அவனைப் பிடிக்கவில்லை என்று தெளிவாகச் சொல்லிவிட்டு முத்தமிட்டால் என்னைப் பற்றி என்ன நினைப்பாள்? முதலிரவன்று முழு வெறுப்புடன் அவளைப் பார்த்தபோதே அவளுக்கு தண்டனையாக முத்தமிடத்தான் தோன்றியது. இதன் மூலமாய் என் இயற்கை உணர்வுகளுக்கு வடிகால் தேட நினைக்கிறேனா? அல்லது பெண்ணை வீழ்த்துவதற்கு இதை ஆயுதமாகப் பிரயோகிக்க என் ஆண் புத்தி முயற்சிக்கிறதா? தன்னையே தனக்குப் புரியாத குழப்பத்தில் ஆழ்ந்து போனான் சூர்யா.

என்ன யோசித்தாலும் தவறு ரேவதியுடையதும்தான் என்று நினைத்தான். அலுவலகத்தில் எத்தனையோ அழகான பெண்களுடன் தனிமையில் அமர்ந்து பணி புரியும் போது கூட தப்பான ஒரு பார்வை பார்க்காதவன் நான். இன்றைக்கு அவளிடம் நடந்து கொண்ட விதத்திற்கு அவளும் ஒரு காரணம்தான். பேசலாம் என்று உட்காரச் சொன்னதற்கு வில்லன் என்றெல்லாம் சொல்லித் தூண்டிவிட்டது அவள்தான். முடிவு செய்தபடி உள்ளே சென்றபோது ரேவதி போய் விட்டிருந்தாள்.

கீழே ஓடிப்போய் அறைக் கதவை தாளிட்டுக் கொண்ட ரேவதிக்கு சூர்யாவின் மீது கோபமாக வந்தது. தன் மீது வெறுப்பைக் காட்டியவன் இன்று அணைத்தது அவமானப் படுத்துவதற்காகவே என்று உறுதியாக நம்பினாள்.

கோபம், வருத்தம், தூக்கமின்மை எல்லாவற்றையும் மீறி அந்த முதல் முத்தம் ஒரு விநோத உணர்வை ஏற்படுத்தத்தான் செய்தது.

காலையில் குளித்துத் தயாராகி கதவைத் திறந்தபோது ஹாலில் சூர்யா நியூஸ் பேப்பர் படித்துக் கொண்டிருந்தான். அவனைப் பார்ப்பதை தவிர்த்து ஒரு டீயுடன் திரும்பவும் அறைக்குள் சென்று அங்கேயே அமர்ந்து குடிக்கத் தொடங்கினாள். அவள் குடித்து முடிக்கும்போது கதவு தட்டப்படவே 'இந்த சோமு அண்ணாவோடு பெரிய தொல்லை. எப்பவும் என்ன செய்வது என்று கேட்டுக் கொண்டு' என சலித்தபடியே கதவைத் திறந்தவள் அங்கே சூர்யாவைப் பார்த்ததும் என்ன செய்வதென்று புரியாமல் திகைத்தாள். அவள் அனுமதிக்கு காத்திராமல் உள்ளே வந்து ஒரு சேரை இழுத்துப் போட்டு அமர்ந்தான். "நேற்று எங்கப்பா என் செல்லில் பேசினார். உனக்கு இங்கு படிப்பைத் தொடர ஆசையாக இருப்பதாகவும், உன் விருப்பத்திற்கு மதிப்பு கொடுத்து கல்லூரியில் சேர்த்து விட வேண்டும் என்றும் சொன்னார். அவர் பேசி முடித்ததும், அம்மாவும் அதே விஷயத்தை மறுபடி போன் செய்து வற்புறுத்தினார்கள். உனக்கு போரடிக்கிறது என் றும் என்னிடம் சொல்ல தயங்குவதாகவும் சொன்னார்கள். பிறகு மாலையில் உங்கப்பா போன் பண்ணி 'தன் பெண் படிக்க என்னிடம் அனுமதி கேட்டார். அதைப் பற்றி பேசத்தான் நேற்று உன்னைக் கூப்பிட்டேன். சிறிது



இடைவெளி விட்டவன் அவள் பேசாமல் இருக்கவே தொடர்ந்தாள். "எத்தனை நாட்கள் தள்ளிப் போட்டாலும் ஒரு நாள் நாம் இந்த விஷயத்தைப் பேசித்தான் தீர வேண்டும் ரேவதி. லிஸன், நாம் இருவரும் ஒருவரை ஒருவர் விரும்பி திருமணம் செய்து கொள்ளவில்லை என்பதை இத்தனை நாட்களில நன்றாகப் புரிந்து கொண் டோம். நம் வளர்ப்பு முறையின் விளைவால் திருமண மான சில நாட்களிலேயே ஒருவரை ஒருவர் பிடிக்க வில்லை என்று நம் பெற்றோர்களிடம் போய் நிற்கவும் முடியாது. நம் பிரிவு இயற்கையாய் சந்தர்ப்ப வசத்தால் நிகழ்வது போல இருக்க வேண்டும். இல்லை எனில் அவர்களை வருத்தப்பட வைத்து விட்டு குற்ற உணர் வோடு நம்மாலும் மகிழ்ச்சியாக இருக்க முடியாது. யாருக்கும் கஷ்டம் வராமல் விலகுவதென்றால் சில காலம் நாம் பொறுத்திருக்கத்தான் வேண்டும். அதாவது என் இந்திய ப்ராஜெக்ட் முடியும் வரை. சுமார் பதினெட்டு மாதங்கள் அல்லது சில நாள்கள் கூடவோ குறையவோ செய்யலாம். ப்ராஜெக்ட் முடிந்ததும் வெளி நாட்டில் அடுத்த ப்ராஜெக்ட்டுக்கு நான் போக வேண்டியதிருக்கும். அப்போது நான் முதலில் போய் விட்டுப் பிறகு வந்து உன்னை அழைத்துப் போவதாகச் சொல்லிவிட்டுப் போய் விடுவேன். அதற்குள் நீயும் உன் படிப்பை முடித்து தன் காலில் நிற்கும் பலம் பெற்றிருப்பாய். இருவரும் வேறு வேறு துறைகளில் இருப்பதால் சேர்ந்து வாழ்வது சாத்தியம் இல்லை என்று அப்போது சொல்லி விடலாம்."

"அப்போது அவர்களுக்கு கஷ்டம் இருக்காதா என்ன?"

"நிச்சயம் இருக்கும். ஆனால் அதற்குள் நம்மைப் பற்றி புரிந்து கொள்வார்கள். பெற்றோர்களுக்காகத்தான் நாம்

இவ்வளவு நாள் இந்த வாழ்வை வாழ நேர்ந்தது என்பது தெரிந்தால் தமக்காக பிள்ளைகள் நடந்து கொண்ட விதத்தில் யோசித்து பார்த்து நம்முடைய விருப்பப்படி வாழ்வு அமைய அவர்களே ஆவன செய்யக் கூடும்.'' யோசிக்கையில் ரேவதிக்கும் அது உண்மை என்றுதான் தோன்றியது. எனவே சரியென்று தலையை அசைத்தாள்.

''ஓ.கே. இனி உன் விருப்பப்படி கல்லூரிக்குச் செல்லலாம். முன்பு உன் வீட்டிலிருந்து சென்றாய். இப்போது இங்கிருந்து செல்லப் போகிறாய் அது ஒன்றுதான் வித்தியாசம். இன்னொன்று, நாம் இருவரும் ஒருவரை ஒருவர் காயப்படுத்த முயற்சிக்கும் போது அது நாமே எதிர்பாராத வேறு சிக்கலில் கொண்டு விடும்.''

நேற்றைய விஷயத்தை அவன் நினைவு படுத்த, நிமிர்ந்து பார்க்க துணிவின்றி வெளியே பார்வையை ஓட்டினாள் ரேவதி. அவன் தொடர்ந்து பேசினான். ''நான் இதுவரை யாரிடமும் விரோதம் பாராட்டியதில்லை ரேவதி. அதனால் உன்னுடனான இந்த உறவு முறை என் இயல்புக்கு மாறாய் சிரமமாய் இருக்கிறது. இப்போது நாம் இருவரும் நம்மைப் பற்றிய தெளிவான முடிவுக்கு வந்து விட்டதால் ஒருவரை ஒருவர் ஒதுக்குவதில் நாட்களை நரகமாக்கிக் கொள்ள வேண்டாம். நட்புடன் பழகி நண்பர்களாகவே பிரிந்து செல்வோம் சரியா?''

தணிவான குரலில் அவன் பேசியது பிடித்துப் போக ரேவதி உடனே சரி என்றாள். அதைக் கேட்டதும் அவன் முகமும் மலர்ந்து போனது.

''இன்னொரு விஷயம் ரேவதி, நீ கீழே தனியாக தங்குவது வேலையாட்கள் பார்வையில் தவறாகப் படக் கூடும். சோமு அண்ணா இரவு வராந்தாவில் தான் படுத்துக்



கொள்வார். அவர் மூலமாய் அம்மாவிற்கும் தெரிய வரலாம். மேலே என் அறைக்கு அடுதத அறை தாரிணியுடையது. நீ அங்கே இருந்து கொள். மேலே சாதாரணமாய் விருந்தினர் கூட வரமாட்டார்கள். வேலையாட்கள் கூப்பிட்டால்தான் வருவார்கள். அதனால் யாருக்கும் சந்தேகம் வராது. அப்புறம் நாளைக் காலை தயாராக இரு. உனக்கு காலேஜுக்குப் போக வேண்டும்.

''நாளையா? அப்ப என் சர்டிபிகேட், புக்ஸ் எல்லாம்?'' ஆச்சரியமாய் கேட்டாள் ரேவதி.

''உன் புக்ஸ் எல்லாம் இன்று இரவு பார்சலில் வந்து கொண்டே இருக்கிறது. அந்தக் கல்லூரியிலிருந்து டி.சி. வாங்கி உன் அப்பா நாளன்று அனுப்பி விடுவார். இங்கு யுனிவர்சிட்டியில்தான் நானும் அப்பாவும் உனக்கு சொல்லி வைத்திருக்கிறோம்.''

அப்பாவிடம் சொன்னதும் அவர் மாமாவிடம் பேசி, அவர் சூர்யாவிடம் சொல்லி, இருவரும் கல்லூரியில் பேசியாகி விட்டது என்றால் வேலை எத்தனை வேகமாக நடந்திருக்க வேண்டும்? இத்தனையும் முடித்து விட்டுச் சொல்லக் கூப்பிட்டால் நான் உட்கார்ந்து கேட்காமல் அலட்சியமாய் இருந்ததால்தான் நேற்று அந்தக் கோபம் போலும். அவன் மீதிருந்த வருத்தமெல்லாம் போய் ''தேங்க்ஸ்'' என்றாள் புன்சிரிப்புடன். முதன் முறையாக அவனைப் பார்த்துச் சிரித்த அந்த சிரிப்பு அவன் முகத்திலும் தானாய் புன்னகையை வரவழைத்தது.

சிரித்தபடி இருவரும் வெளியே வந்து சாப்பிடச் சென்றனர். ''இதுவரை நடந்ததை மறந்து விடுவோம் ரேவதி. நாம் இருவரும் இன்று அறிமுகமாகி இன்னும் கொஞ்ச நாள் சேர்ந்திருக்கப் போகும் நண்பர்கள் சரியா?''

"சரி" என்று சிரித்தபடியே தலையசைத்தாள் ரேவதி.

டைனிங் டேபிள் நிறைய பீங்கான் தட்டுகளில் உணவு வகைகள் இருந்தன. இட்லி, சட்னி, சாம்பார், ப்ரெட், புட்டிங்ஸ், வேக வைத்த முட்டை, பழத் துண்டுகள், சூப் எல்லாவற்றையும் பார்த்த ரேவதி எதைச் சாப்பிடுவதென திணறினாள். ப்ரெட்டுக்கு ஜாம் தடவிக் கொண்டிருந்த சூர்யா, "சாப்பிடு ரேவதி, உனக்கு என்ன பிடிக்கிறதோ எடுத்துக் கொள்" என்றான் இயல்பாக.

இரண்டு இட்லியையும் கொஞ்சம் சாம்பாரையும் எடுத்து தன் தட்டில் வைத்த ரேவதி, "நான் ஒரு விஷயம் கேட்டா தப்பா நினைக்க மாட்டீங்களே" என்றாள் தயக்கத்துடன்.

"கேளேன்."

"இல்ல டேபிள்ள இத்தனை ஐட்டம்ஸ் இருக்கிறதே. இன்று நமக்கு விருந்து சாப்பாடா? அல்லது நீங்க எப்பவுமே இவ்வளவு சாப்பிடுவீங்களா?"

சூர்யாவுக்கு சிரித்த சிரிப்பில் வாயிலிருந்த உணவு புரையேறியது. டம்ளரிலிருந்த நீரை ஒரே மூச்சாய் குடித்து முடித்தவன், "உங்க வீட்டில் தினமும் காலையில் என்ன சாப்பிடுவீர்கள் ரேவதி?" என்றான்.

"ம்... நீராகாரம் குடித்துவிட்டு அப்பா வயலுக்குப் போய் விடுவார். அம்மா காலையிலேயே சாதம், சாம்பார் எல்லாம் செய்து விடுவார்கள். நான் சாதம் சாப்பிட்டு விட்டு மதியம் காலேஜுக்கும் எடுத்துப் போய் விடுவேன். விடுமுறை நாளில் பூரி, இடியாப்பம் என்று ஏதாவது வெரைட்டியாய் செய்வார்கள். இரவில் எனக்கு இட்லி. அப்பாவிற்கும் அப்பத்தாவிற்கும் ராகி களிதான்."



"ராகி தெரியும். களின்னா என்ன?"

"ராகி மாவில் செய்வதுதான். நீங்க சாப்பிட்டதில்லையா?" ஆச்சரியமாய் கேட்டாள் ரேவதி.

சிரித்தபடி இல்லை என்று தலையசைத்தான் சூர்யா.

"உப்பு போட்ட அல்வா மாதிரி இருக்கும். உடம்புக்கு ரொம்ப நல்லது. இன்னும் சீடை, தினை உருண்டை, கம்பு அடை, சோளப்பணியாரம், பருத்திப் பாயாசம் என்று அப்பத்தா எனக்கு விதம் விதமாய் சத்தாய் நிறைய செய்து தருவார்கள். எண்ணெய், கொழுப்பு வகைகள் எதுவும் சேர்க்காமல் செய்வதால் வெயிட் போடவும் போடாது. இப்போது பாவம் நடக்கவும் முடியாமல் நானும் இல்லாமல் எப்படி இருக்கிறார்களோ?" வீட்டு நினைவில் முகம் வாடினாள் ரேவதி.

அவளைப் பார்த்த சூர்யா, "அதெல்லாம் சரி. உனக்கு இந்த ஐட்டத்தில் ஏதாவது சமைக்கத் தெரியுமா? அல்லது சாப்பிட மட்டும்தானா?" என்றான் கிண்டலாய்.

"எனக்கா?" என்று கொஞ்சம் வழிந்த ரேவதி, "எப்படி சமைக்கறதுன்னு தெரியும். அப்பத்தாவுக்கு கூட ஹெல்ப் பண்ணியிருக்கிறேன். ஆனா சமைச்சதில்லை. இனிமே தான் சமைக்கப் போகிறேன்."

"ஐயகோ...!" அதிர்ந்தான் சூர்யா. "உன்னுடைய எக்ஸ்பிரிமெண்டுக்கு நானா கிடைச்சேன்? வேண்டாம் ரேவதி ப்ளீஸ்... ப்ளீஸ்... என்னை மட்டும் விட்டு விடு. சோமு அண்ணா, முருகன், சரோஜா எல்லோருக்கும் சமைத்துப் போடு சரியா?"

"ஓவராய் வாராதீங்க. நீங்க சாப்பிடற புட்டிங்ஸ், பிரட்டை விட என் சமையல் நன்றாகத்தான் இருக்கும் நிச்சயமாய்."

''எதற்கு ரேவதி ரிஸ்க் எடுக்கணும்?''

''ரிஸ்க் எடுக்காட்டி வாழ்க்கையே இல்லையே!''

''வாழறதுக்காக ரிஸ்க் எடுக்கலாம். வயிற்று வலிக்காக யாராவது ரிஸ்க் எடுப்பாங்களா?'' சூர்யா சோகமாய் சொல்லவும் சிரிப்பு அலையாய் எழுந்தது அங்கே.

பேச்சினூடே கடிகாரத்தைப் பார்த்தவன் திடுக்கிட்டான். ''எனக்கு நேரமாச்சு ரேவதி. இன்று நேரம் போனதே தெரியவில்லை. பை'' என்றபடி கையசைத்துவிட்டு கிளம்பினான் சூர்யா. அவனுடன் சேர்ந்து வீட்டின் மொத்த கலகலப்பும் போய் விட்ட மாதிரி இருந்தது ரேவதிக்கு. தாரிணியின் அறை சாவியை அவன் கொடுத்திருந்ததால் அங்கு தன் பொருட்களை அடுக்குவதும் அழகு படுத்துவதுமாய் அன்றைய பொழுது கழிந்தது. முதல் நாள் சரியாக தூங்காததாலும், மனம் அமைதியடைந்திருந்ததாலும் இரவு வெகு சீக்கிரமே தூங்கிவிட்டாள்.

## 8

காலையில் ரேவதி எழுந்து வெளியே வரும்போது சோமு டிரேயில் கப்புகளுடன் மேலே வந்து விட்டார்.

''நானே வந்திருப்பேனே!'' என்றவளிடம் ''தம்பி காபி வேணும்னு போனில் கூப்பிட்டுச் சொன்னது. நீங்களும் கீழே வரக காணோம். உங்களுக்கு டீயும் தம்பிக்கு காபியும் இருக்கு'' என்றபடி ட்ரேயை கொடுத்தார். அவர் கீழே இறங்கி போனதும் தயங்கியபடியே சூர்யாவின் அறைக் கதவைத் தட்டினாள் ரேவதி.

''யெஸ்'' என்ற அவன் குரலில் உள்ளே போனாள்.



சூர்யா இன்னும் படுக்கையில்தான் இருந்தான். ''குட்மார்னிங்'' என்ற ரேவதியின் குரலைக் கேட்டதும் கண்களைத் திறந்தவன் வேகமாக எழுந்து அமர்ந்தான்.

''சோமு அண்ணா வரலியா?'' என்றான் வியப்புடன்.

''அவர்தான் கொண்டு வந்தார். என்னைப் பார்த்ததும் என்னிடம் கொடுத்து விட்டுப் போய் விட்டார். நீங்க ப்ரஷ் பண்ணிட்டு வர்றீங்களா?''

''நான் காபி குடித்த பிறகுதான் ப்ரஷ் பண்ணுவேன்.''

''சே! இது என்ன பழக்கம்? நாகரீகம் என்ற பெயரில் சுகாதாரத்தை புறக்கணிக்கலாமா? இன்னிக்கு பல் துலக்கிட்டு காபி குடியுங்களேன் ப்ளீஸ்'' தலையை சரித்து ரேவதி கெஞ்சிய விதத்தில் சிரிப்பு வந்தது அவனுக்கு.

''ஒரு நிமிடம்'' என்றபடி எழுந்து போய் பல் தேய்த்து விட்டு வந்தான். அவளுக்கு டீயையும், அவனுக்கு காபியையும் கப்பில் ஊற்றி சர்க்கரை கலந்து கொடுத்தவளைப் பார்த்தவன், ''நீ காலையிலேயே குளித்து விட்டாய் போலிருக்கே'' என்றான்.

''இன்னிக்கு காலேஜுக்கு சீக்கிரம் ரெடியாகணும்னு நீங்க தானே சொன்னீங்க?''

''ஓ'' என்றவன் எழுந்து போய் கபோர்டை திறந்து ஒரு பார்சலை எடுத்து வந்து தந்தான். ''உன் புத்தகங்கள்.''

பார்சலை வாங்கிப் பிரித்த ரேவதி புத்தகங்களை விரல்களால் தடவினாள்.

''உனக்குப் படிக்கணும்னு ரொம்ப ஆசையா ரேவதி?''

''ம்... எவ்வளவு ஆசைன்னு சொன்னா நீங்க சிரிக்கக் கூட செய்வீங்க.''

''இல்லை. சிரிக்க மாட்டேன். சொல்.''

''நிஜமாய்?''

''நிஜம்.''

''எனக்கு படிச்சி இஞ்சினியராகணும். எங்க ஊருக்கு ஹைஸ்கூல் கட்டணும். பாலம் கட்டணும். ரோடு போடணும். நான் பிறந்த ஊருக்கு என் படிப்பு பயன்படணும். ஒரு மருத்துவமனைக்குப் போக வேண்டுமென்றால் கூட ஆற்றை தாண்டியோ, அடுத்த ஊரையோ சுற்றிச் செல்லும் என் ஜனங்களின் கஷ்டத்தை என்னால் முடிந்த அளவு குறைக்கணும்.''

''வாவ்'' கை தட்டினான் சூர்யா. ''எவ்வளவு உயர்ந்த லட்சியம். இதை சொல்லவா தயங்கினாய்.''

''ஆனால்...'' என்ற ரேவதிக்கு முகம் வாடியது. ''அப்பாவிற்கு இதில் விருப்பம் இல்லை. என்னென்னவோ சொல்லி அவசரமாய் திருமணத்திற்கு ஏற்பாடு செய்து விட்டார்.''

''இப்பவும் இந்த திருமணம் உன் விருப்பத்தை எந்த விதத்திலும் தடை செய்யப் போவதில்லை. இதன் மூலமாய் உன் லட்சியத்திற்கு கை கொடுக்கும் ஒரு நண்பனைத்தான் தந்திருக்கிறது.''

சூர்யாவின் வார்த்தைகளில் ரேவதியின் முகம் மலர்ந்தது.

பார்சல் வந்த கவரையும், புத்தகங்களுக்கிடையேயும் அவள் தேடுவதை பார்த்த சூர்யா ''என்ன ரேவதி, இன்னும் ஏதாவது வேண்டுமா என்ன?'' என்று விசாரித்தான்.

''இல்லை.. அப்பா இத்துடன் பணம் ஏதாவது அனுப்பியிருக்கிறாரா என்று பார்த்தேன்.''



''உனக்கு இப்போது எதற்கு பணம்?''

அவளை முறைத்த ரேவதி, ''காலேஜுக்கு பீஸ் கட்ட பணம் வேண்டாமா? அப்பாவுக்கு இந்த அளவு கூடவா யோசனையில்லாமல் போனது? ஏன் அனுப்பவில்லை?''

''நீதான் இப்போது யோசிக்காமல் பேசுகிறாய். திருமணமானவுடன் மனைவி சம்பந்தப்பட்ட எதுவுமே கணவனின் பொறுப்புதான். அப்படி பொறுப்பேற்கவில்லை என்றால் தான் அது தவறாகப் படும்.''

''அதற்காக ஒரு சம்பந்தமுமில்லாமல் நீங்கள் ஏன் எனக்கு செலவு செய்ய வேண்டும்?''

''சரி நம் இருவருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று உங்கப்பாவிடம் சொல்லி பணம் வாங்கிக் கொள் போ'' என்றான் சூர்யா சுள்ளென.

பதில் சொல்ல முடியாமல் மௌனமானாள் ரேவதி.

சில நொடி அமைதிக்குப் பிறகு பேசிய சூர்யாவின் குரல் தணிந்திருந்தது.

''நம்முடைய வித்தியாசமான உறவில் நடக்கும் விஷயங்களும் வித்தியாசமாகத்தான் இருக்கும். திருமணத்திற்கு தலையாட்டி உற்றார் உறவினர் மத்தியில் மாலை மாற்றி தாலி கட்டி திருமணமும் செய்து கொண்டோம். அதன் பிறகு நீ என் வீட்டில் சாப்பிடுவதற்கும் உறங்குவதற்கும், படிப்பதற்கும், நான் நீ செய்யும் வீட்டை அழகாக்குதல், உணவு பரிமாறுவது இதற்கெல்லாம் நானும் கணக்கிடத் தொடங்கினால் அது எதில் போய் முடியும் சொல்? ரொம்பவும் தயங்காதே ரேவதி. நாளை நீ பெரிய ஆளாகும் போது நானே உன்னிடம் உதவி கேட்டு

வரக்கூடும். இப்போதே உன்னை சரிகட்டி வைத்துக் கொண்டால்தானே நல்லது.'' சூர்யாவின் கேலிக் குரலில் ரேவதியின் இதழோரம் புன்னகை ஒன்று எட்டிப் பார்த்தது.

''தம்பி சாப்பிட வர்றீங்களா?'' என்ற சோமுவின் குரல் போனில் கேட்டதும் திடுக்கிட்டு மணியைப் பார்த்த இருவரும் அதற்கு மேல் ஒரு வார்த்தை பேசாமல் சென்று தயாராகத் தொடங்கினர்.

தான் வழக்கமாய் கல்லூரிக்கு எடுத்துப் போகும் ஒன்சைட் பேக்கில் முக்கியமான புக்ஸ், நோட்பேட், பேனா எல்லாவற்றையும் எடுத்து வைத்தாள். கபோர்டை திறந்து உடைகளை ஆராய்ந்தவள், பெரிய நகரத்து கல்லூரிக்கு எந்த மாதிரி உடையணிவது என்று யோசித்தாள். மிக சாதாரணமாகவும் தெரியாமல் பளபளப்பாகவும் இல்லாமல் இருக்க வேண்டும். அம்மா திருமணத்திற்காக நிறைய பட்டுப் புடவைகளும், பேன்ஸி புடவைகளும் தான் வாங்கியிருந்தாள். ரேவதி அம்மாவுடன் கடைக்குச் செல்ல மறுத்ததால் சுடிதார் வகைகள் அவளிடம் குறைவாகவே இருந்தன. அதில் தேடியவள் வெள்ளை நிறத்தில் ரோஜா நிற காஷ்மீரி ஒர்க் செய்யப்பட்ட சுடிதாரை அணிந்து, பொருத்தமாக முத்து தோடும், ஒரு கையில் பிரேஸ்லெட்டும் மறுகையில் வாட்ச்சுமாக தயாராகி கீழே வந்தாள்.

முருகனிடம் ஒரு கவரைக் கொடுத்து ஏதோ சொல்லியவாறு திரும்பிய சூர்யாவால் பார்வையை விலக்க முடியவில்லை. எந்தவித க்ரீமும் பவுடர் பூச்சும் இல்லாத பளிச்சென்ற முகமும், காற்றில் கலைந்து முகத்தில் சுருண்ட முடியும், தோள்களைச் சுற்றிப் பறந்த துப்பட்டாவும் உண்மையாலுமே தேவதை ஒருத்தி இறங்கி வருவது



போன்ற பிரேமையை ஏற்படுத்தியது. பார்க்கிறோம் என்ற உணர்வேயின்றி அவளைப் பார்த்துக் கொண்டிருந்தவன் அருகில் வந்து 'ஹலோ' என்ற அவளின் குரலில் கலைந்தான். ''நீங்க ரெடியா? போகலாமா?'' என்றபோது பற்களின் வெண்மை உடையின் வெள்ளை நிறத்துடன் போட்டியிட்டது.

''வா போகலாம்'' என்று சொல்லி காரில் அமர்ந்து ஸ்டார்ட் செய்தபோது சூர்யாவுக்கு மனம் காரணம் புரியாத உற்சாகத்தில் இருந்தது.

யுனிவர்சிட்டியின் கார் பார்க்கிங்கில் காரை நிறுத்தி விட்டு இருவரும் அலுவலக கட்டிடத்திற்குள் சென்றனர். பிரின்ஸிபாலிடம் அறிமுகப்படுத்தி விட்டு ரொட்டீன் அட்மிஷன் வேலைகளை முடித்து விட்டு சூர்யா அவளிடம் வந்தான்.

''ரேவதி இப்ப ப்யூன் வந்து உன் க்ளாசுக்கு வழிகாட்டுவான். இன்று மாலை நான் வந்து அழைத்துப் போகிறேன். தினமும் என்னால் வர முடியாது. நீ போய் வர ஏதாவது ஏற்பாடு செய்ய வேண்டும். இப்போது நான் கிளம்புகிறேன்'' என்றதும் தன்னையறியாமல் அவன் கைகளைப் பற்றினாள் ரேவதி.

''நான் இதுவரை கோ-எஜுகேஷனில் படித்ததில்லை. புது இடம். புது சூழ்நிலை எனக்கு பயமா இருக்கு'' என்றாள் மிரண்டு போனவளாய். முதன் முதலாய் பள்ளிக்குப் போகும்போது அம்மா கையைப் பிடித்துக் கொண்டு அழும் குழந்தை போலிருந்தாள் ரேவதி.

''இதுக்கு போய் யாராவது பயப்படுவாங்களா ரேவதி? இரண்டு நாளில் பழகி விட்டால் எல்லாம் சரியாகி விடும். முதல் வருடமாய் இருந்தால் கூட பயப்படுவதில் அர்த்தம்

இருக்கு. இது மூன்றாவது வருடமில்லையா? எதுவும் பிரச்சனை இருக்காது. இப்போ நிகிலா பார்க்க வேணாடும். உன்னை கேலி செய்தே ஒரு வழி பண்ணிடுவா" தன் கைகளைப் பற்றியிருந்த அவள் கையை தட்டிக் கொடுத்தான் சூர்யா.

"க்ளாசுக்கு போகலாமா?" என்றபடி ப்யூன் வந்ததும் அவனிடம் விடைபெற்று சென்றாள் ரேவதி. அவள் கண் மறையும் வரை நின்று பார்த்து விட்டு கிளம்பினான் சூர்யா.

லெக்சரிடம் ரேவதியை அறிமுகப்படுத்தி விட்டு ப்யூன் சென்றுவிட, லெக்சரர் ரேவதியை க்ளாசுக்கு அறிமுகம் செய்தார். ஒரு கைதட்டலுடன் அனைவரும் வரவேற்க முன் வரிசையிலிருந்த பெண் நகர்ந்து இடம் கொடுத்தாள்.

அந்த வகுப்பு முடிந்து லெக்சரர் போனதும் எல்லோரும் ரேவதியை சூழ்ந்து கொண்டனர். 'எந்த ஊர்? எங்கே படித்தாள்? எங்கே தங்கியிருக்கிறாள்? ஏன் இடையில் வந்து ஜாயின்ட் பண்ணுகிறாள்?' என்று கேள்வி மேல் கேள்வி கேட்டனர். தங்களையும் ஒவ்வொருவராய் அறிமுகப்படுத்திக் கொண்டனர். ஆண்களும் பெண்களும் சிறிதும் வேறுபாடின்றி அருகே அமர்ந்து பேசுவதும் அடித்துக் கொள்வதும் ஆச்சரியமாக இருந்தது ரேவதிக்கு. சினிமாக்களில் பார்த்திருக்கிறாள். நேரில் பார்ப்பது இது தான் முதல் முறை.

லஞ்ச் இடைவேளையில் க்ளாஸ் ரூம் காலியானது. ரேவதியின் அருகில் அமர்ந்திருந்த அனு அகர்வால் "ரேவதி நீ லஞ்ச் கொண்டு வந்திருக்கிறாயா?" என்றாள்.



ரேவதி உண்மையில் சாப்பாட்டு விஷயத்தையே மறந்து போயிருந்தாள். இப்போது என்ன செய்வது என்று யோசித்தபடி நோட் பேடை மடக்கி மேஜை மேல் வைத்த போது ஒரு கவர் கீழே விழுந்தது. டூ டியர் ரேவதி என கவரின் மேல் எழுதப்பட்டிருக்க உள்ளே நூறு ரூபாய் தாள்கள் கண் சிமிட்டின. நான் கேட்க சங்கடப்படுவேன் என்று சூர்யாவே பணத்தை வைத்திருக்கிறான். மனசறிந்து இதமாய் நடந்து கொண்ட அவனது செய்கை அவள் மனதை நெகிழ்த்தியது.

"ஏய் வா, கேண்டீன் போகலாம்" என அனு அகர்வால் உலுக்கவே அவளுடன் நடந்தாள் ரேவதி. டைனிங் டேபிளில் நண்பர்கள் புடைசூழ அமர்ந்த அனு எல்லோரையும் அவளுக்கு அறிமுகப்படுத்தினாள்.

சுஷ்மிதா, கரோலினா, முகேஷ், சந்தீப், வினீத் எல்லோரும் அவளிடம் கை குலுக்கி ஹலோ சொன்னார்கள். நுனி நாக்கு ஆங்கிலமும், சீராக வெட்டப்பட்ட கூந்தலும், ஜீன்சும் டாப்சுமாய் அங்கிருந்த பெண்கள் ரேவதிக்கு சுவாரஸ்யத்தை ஏற்படுத்தினார்கள். சுற்றிலும் வேடிக்கை பார்த்தபடி உணவை கொறித்துக் கொண்டிருந்தாள். "ஹாய் எவ்ரிபடி" என ஆர்ப்பாட்டமாய் ஒரு குரல் கேட்க, அமர்ந்திருந்த அனைவரும் 'ஹாய்' என்றார்கள் உரத்த குரலில் கோரஸாக. அனுவின் அருகே சேரை இழுத்துப் போட்டு அமர்ந்தவனை திரும்பிப் பார்த்தாள் ரேவதி. அப்போது அவளை பார்த்த அவன், "ஹேய் இதற்கு முன் நான் இங்கு உன்னை பார்த்ததே இல்லையே! திடுமென எப்படி இங்கு வந்தாய்? பறந்து வந்தாயா?" என்றான் விளையாட்டாக.

"இந்த யுனிவர்சிட்டியில் எத்தனையோ ப்ளாக்குகள், அதில் எத்தனையோ வகுப்பறைகள், அதில் எத்தனை

எத்தனையோ பெண்கள். நீ எப்படி எல்லோரையும் பார்த்திருக்க முடியும்?'' கரோலினா அவனை சீண்டினாள்.

''எத்தனையோ பெண்கள் இருந்தாலும் இந்த மாதிரி அழகான பெண்கள் அபூர்வமாய்த்தான் இருப்பார்கள். அவர்களை யாரும் மிஸ் பண்ணவே முடியாது.''

அவனது புகழ்ச்சியில் ஆர்வம் காட்டாத ரேவதி அனுவிடம் குனிந்து ''போகலாமா?'' என்றாள் மெதுவான குரலில்.

''ஏய் அனு உன் ப்ரண்டை எனக்கு இன்ரடியூஸ் பண்ண மாட்டியா?'' என்றான் அவன்.

''ஏண்டா அலையற?'' என்ற அனு ''ரேவதி இவன் தான் சரண். ஐ.டி. டிபார்ட்மென்ட். ஒரு வேலையும் இல்லா விட்டாலும் பெண்களிடம் வழிவதற்காகவே இங்கு வருவான். சொந்தமாக பெரிய ஜொள்ளு பேக்டரி, அல்வா கடை, சோப்பு கம்பெனி எல்லாம் வைத்திருக்கிறான்.'' அனுவின் தலையில் தட்டினான் சரண். ''அடிப்பாவி உன்னை நல்ல விதமா அறிமுகப்படுத்த சொன்னா என் இமேஜையே டேமேஜ் பண்ணிட்டயே! இரு உன்னை கவனிச்சிக்கிறேன்'' என்றவன் ''பை தி பை ரேவதி. நான் சரண். நைஸ் டு மீட் யு'' என ரேவதியிடம் கையை நீட்டினான். மரியாதைக்கு அவன் கைகளை குலுக்கியவள் பெல் சத்தம் கேட்டதும் தப்பித்த உணர்வில் வகுப்பறைக்கு விரைந்தாள்.

மாலையில் அவளை அழைத்துப் போக வந்த சூர்யாவிடம் பகிர்ந்து கொள்ள அவளுக்கு நிறைய விஷயங்கள் இருந்தன. அவள் பேசுவதை சின்னச் சிரிப்புடன் கேட்டிருந்தவன், அவன் படிக்கும்போது நடந்த கலாட்டாக்களையும் சொல்ல சிரித்தபடியே வீடு வந்து சேர்ந்தனர்.



இரவு சாப்பாட்டு வேளையில் அவளிடம் செல்போன் ஒன்றைக் கொடுத்தான் சூர்யா. ''வெளியே போகிறவர்களுக்கு கண்டிப்பாய் செல்போன் கையில் இருக்க வேண்டும். அப்புறம் நாளையிலிருந்து நம் பழைய டிரைவர் உனக்கு வரப் போகிறார். தாரிணி நிகிலாவெல்லாம் சென்னையிலிருந்து படித்தபோது அவர்தான் டிரைவர். அதனால் ரொம்ப நம்பிக்கையானவர். என் வேலையைப் பொறுத்து நீ போவதற்கு முன் நான் அலுவலகத்துக்குப் போய்விட்டு உனக்கு கார் அனுப்புகிறேன். அல்லது நீ காலேஜுக்கு போய் இறங்கிக் கொண்டு எனக்கு திருப்பி அனுப்பு. எது வசதியோ அப்படி செய்து கொள்ளலாம். கீழே ஆபீஸ் ரூமிலிருந்து ஒரு டேபிள் சேரை உன் ரூமில் போடச் சொல்லியிருக்கிறேன். உனக்கு உட்கார்ந்து எழுத படிக்க வசதியாய் இருக்கும்.'' சாப்பிட்டபடியே அவன் சொல்வதற்கெல்லாம் தலையாட்டினாள் ரேவதி. கார், வேலையாட்கள், செல்போன், பாக்கெட் மணி என அத்தனை சுகங்களையும் மனைவி என்ற பெயரைப் பயன்படுத்தி ஓ.சி.யில் அனுபவிக்க உறுத்தலாக இருந்தது ரேவதிக்கு.

''என்ன ரேவதி ரொம்ப யோசிக்கிறாய்?''

''ம்... இன்னிக்கு நடந்த சப்ஜெக்ட் பற்றி யோசித்துக் கொண்டிருந்தேன்.''

''கல்லூரிக்கு போன முதல் நாளே பாடத்தைப் பற்றி யோசிக்கிற ஒரே மாணவி நீயாகத்தான் இருக்க வேண்டும். முதல் நாளே இவ்வளவு வேகமா?'' சூர்யா கேலி செய்தான்.

''ஆமாம். நீங்க எவ்வளவு செலவு பண்ணி என்னை படிக்க வெக்கறீங்க. வேகம் வேண்டாமா?'' என்றாள் ரேவதி.

''செலவைப் பற்றி பேசக்கூடாதுன்னு முன்பே உனக்கு சொல்லியிருக்கேன்'' என்றான் எரிச்சலுடன்.

''சரி. இனிமே பேசலை'' என்றபடி எழுந்து கை கழுவப் போனாள் ரேவதி.

கிராமத்து வழக்கப்படி தினமும் காலையில் நேரத்திலேயே விழித்து விடுவாள் ரேவதி. எழுந்ததும் குளித்து விட்டு கீழேயுள்ள பூஜை அறையைச் சுத்தம் செய்து விளக்கை ஏற்றி வைப்பாள். பிறகு சமையலறைக்கு வந்து பாலை காய்ச்சி டீ போடும்போது சோமு எழுந்து குளித்து விட்டு வந்து விடுவார். சூர்யாவுக்கு காபி போட்டு முருகனிடம் கொடுத்தனுப்பி விட்டு சோமுவை செய்முறை கேட்டுக் கொண்டு ஏதாவது ஒரு சமையல் செய்வாள். சில சமயம் பெமினாவை பிரித்து வைத்துக் கொண்டு அதிலுள்ள குறிப்பைப் பார்த்து, புத்தகம் ஒரு கையிலும் கரண்டி ஒரு கையிலுமாய் செய்வதைப் பார்த்து சோமு சிரிப்பார்.

''இந்த புள்ளைங்க மூன்று பேரும் சின்னதுல இருந்து என் சமையலை சாப்பிட்டுத்தான் வளர்ந்தாங்க. என் கைப்பக்குவம் எல்லோரும் எப்படி வளர்ந்திருக்காங்க பாரேன். நீயும் பேசாம உட்கார்ந்து என் சமையலை மூன்று வேளையும் சாப்பிடு. அப்புறம் உனக்குப் பிறக்கிற குழந்தை எப்படி ஆரோக்கியமா இருக்கும் தெரியுமா?''

தன் சமையலை விட்டுக் கொடுக்காது பெருமையடித்தாலும் அவளுக்கு எல்லா வகை சமையலையும் கற்றுக் கொடுத்தார். கணவன் மனைவி இருவரும் பேசியபடியே சாப்பிடுகையில் சூர்யா வழக்கத்தைவிட அதிகமாகவே சாப்பிடுவதைப் பார்த்தவர் 'என்னதான் நாம் ருசியாய் சமைத்தாலும் மனைவியின் கைப்பக்குவம் என்பதே தனி சுவை போலும்' என்று சொல்லிக் கொண்டார்.



சூர்யா அலுவலகத்திற்குக் கிளம்பியதும் ரேவதி தானும் ரெடியாகி சோமு எடுத்து வைத்திருக்கும் லஞ்ச் பாக்சுடன் கல்லூரிக்குக் கிளம்பி விடுவாள். மாலையில் திரும்பி வந்ததும் சாமி படத்துக்கு பூ பறிப்பதும், புதிதாய் ஏதாவது செடி போடுவதுமாய் தோட்டத்திலேயே இருப்பாள்.

வீட்டின் பின்புறமிருந்த காலியிடத்தில் கத்திரி, அவரை, வெண்டை என பயிரிட்டாள். இயற்கை உரங்களை தோட்டக்காரனை தயாரிக்க சொல்லி செடிகளுக்கு இட்டதில் அவை செழிப்பாய் வளர்ந்தன. தினமும் போனில் பேசும் அப்பாவிடம் எந்த மாதத்தில் எந்த காய்க்கு விதை போட வேண்டும்? பூச்சி மருந்து எப்போது தெளிக்க வேண்டும் என்று விசாரிப்பாள். அம்மாவிடம் முறுக்கு மாவு தயார் செய்வதையும், அதிரசம் செய்யும் பக்குவத்தையும் கேட்டு குறித்துக் கொண்டு செய்து பார்த்ததில் நன்றாக வந்தது. முடிந்தபோதெல்லாம் மகளை வந்து பார்த்து விட்டுப் போகும் ராஜமும் ராமசாமியும், 'ஒரு காபி கலக்கத் தெரியாத ரேவதியா இது?' என்று அசந்து போனார்கள்.

அன்று கொழுக்கட்டையும் புட்டும் செய்த ரேவதி, சூர்யாவுக்கு ஒரு தட்டில் வைத்துக் கொடுத்து விட்டு சோமுவிற்கும் கொடுத்தாள். கொழுக்கட்டையை பிய்த்து வாயில் போட்டுக் கொண்ட சோமு ''தம்பி உங்க மனைவி வர வர குருவை மிஞ்சிய சிஷ்யை ஆயிடிச்சி போங்க. இனி உனக்கு வேலை இல்லைன்னு என்னையே வீட்டுக்கு அனுப்பினாலும் அனுப்பிடுவாங்க'' என்று விளையாட்டாய் குறைபட்டுக் கொண்டார்.

''இல்லை சோமு அண்ணா. எப்படியும் நீங்கதான் இங்கே நிரந்தரமான நபர்'' என்ற ரேவதியின் குரல் அவளையும் அறியாது கரகரத்தது.

வார இறுதி விடுமுறைகளில் இரண்டு முறை நிகிலா வந்து போனாள். முதல் முறை வந்தபோது மூன்று பேரும் சினிமாவுக்கும் போனார்கள். இரவு வீட்டிலிருந்து சமைத்துக் கொண்டு போய் கடற்கரையில் சாப்பிட்டார்கள். அன்று ஒரு பௌர்ணமி நாள். முழு நிலவின் ஒளி கடற்கரையை ரம்மியமாய் மாற்றியிருந்தது. முகத்தை மோதும் காற்றை அனுபவித்தபடி அந்த பின்னிரவில் அலை ஓசையை கேட்டபடியே சும்மா அமர்ந்திருப்பதே சுகமாக இருந்தது. சூர்யாவும் அதே மனநிலையில் இருந்தான் போலும். எதுவுமே பேச முற்படவில்லை. நிகிலாவால் அமைதியாக இருக்க முடியவில்லை. சிறிது நேரம் வளவளத்தவள், இருவரும் சரியாய் பதில் சொல்லாமல் போகவே ''அலைகளில் நிற்கிறேன்'' என்று எழுந்து போனாள்.

"நிகி பத்திரம், இன்னிக்கு வேவ்ஸ் அதிகமாக இருக்கும். உள்ளே போகாதே" சூர்யா உரக்கக் குரல் கொடுத்தான்.

"இதோ இங்கேயே நிற்கிறேன் போதுமா?" என்றபடி நிகிலா ஜாக்கிரதையாக நின்று கொண்டதும், அவளிடமிருந்து கவனத்தை திருப்பிய சூர்யா "நீ நிற்கவில்லையா ரேவதி?" என்றான்.

"இல்லை. எனக்கு நிற்கப் பிடிக்காது. ஆனால் பார்க்கப் பிடித்திருக்கிறது" என்றாள் ரேவதி.

முழு நிலவின் ஒளியில் தந்த சிற்பமாய் அமர்ந்திருந்தவளை முழுதாய் பார்த்த சூர்யா, "எனக்கும் அப்படித்தான்" என்றான்.

இரண்டாம் முறை விடுமுறைக்கு நிகிலா வரும்போது சூர்யா டெல்லி சென்றிருந்தான். ரேவதிதான் டிரை



வருடன் சென்று அவளை விடுதியிலிருந்து அழைத்து வந்தாள்.

வீட்டிற்கு வந்து சோபாவில் சரிந்த நிகிலா "அண்ணி இன்னிக்கு என்ன ப்ரோகிராம்?" என்றாள்.

''உன் அண்ணாவும் இல்லை நிகி. ரொம்ப போர். நாம் வீட்டிலேயே சி.டி.யில் அல்லது டி.வி.யில் படம் பார்க்கலாம். ஏதாவது புதுசாய் சமைத்துப் பார்க்கலாம். மாலையில் தோட்டத்தில் விளையாடலாம்.''

''ஓ.கே. டன்'' என்றபடி நிகிலா உடை மாற்றிக் கொண்டு வர, இருவரும் வார இதழில் படித்த புதுவித ஸ்வீட்டை தயாரிப்பதில் ஈடுபட்டனர். இருவரும் அரைப்பதும், கிளறுவதும் இடைஇடையே பேச்சும் சிரிப்புமாய் சமையலறை அதிர்ந்தது. தயாரித்த ஸ்வீட்டை தட்டில் வைத்து ''சோமு அண்ணா சாப்பிட்டு பார்த்துச் சொல்லுங்க'' என்றாள் நிகிதா.

''உங்க அண்ணா ஊர்ல இல்லாத சமயமா பாத்து என்னை இப்படிக் கொடுமைப் படுத்துறீங்களே பாப்பா'' என்றபடியே சாப்பிட்டார் அவர். கலகலவென வளைய வந்த இருவரையும் கண்டதும் சந்தோஷமாக இருந்தது அவருக்கு. தாரிணி திருமணமாகும் முன் இரு பெண்களும் இப்படித்தான் இருப்பார்கள். இப்போது அந்த இடத்தை நிறைவு செய்யும்படியாய் நாத்தனாருக்கு நல்ல சகோதரியாய் விளங்கிய ரேவதி அவருக்கு மிகவும் அருமையானவளாகத் தோன்றினாள்.

மாலையில் தோட்டத்தில் விளையாடி விட்டு வியர்த்துப் போய் உள்ளே வந்த இருவரும் அவரவர் அறைகளுக்கு குளிக்கப் போனார்கள். குளித்ததும் ஷார்ட்ஸ் டீ ஷர்ட் போல பேண்டும் பனியனும் அணிந்த நிகிலா "நீங்க நீண்ட

போட்டு நான் பார்த்ததே இல்லை அண்ணி. இன்னிக்கு எனக்குப் போட்டுக் காட்டுங்க'' என்றாள்.

''எனக்குப் போட்டு பழக்கம் இல்லை நிகிலா. என்னிடம் இல்லவும் இல்லை.''

''தாரிணி அக்கா உங்களை விட சற்று குண்டுதான் அவளே போடுவா. அவள் முன்பு இங்கிருந்த போது போட்ட ஜீன்ஸ் எல்லாம் அவள் அறையில் தான் இருக்கிறது. என்னுடையது உங்க ஹைட்டுக்கு சரி வராது. அக்காவுடையதுதான் சரியா இருக்கும்.''

''எனக்கு சல்வார் மாதிரி லூசான உடைகள்தான் வசதி நிகிலா.''

''எனக்காக ஒரு முறை போட்டுக் காட்டுங்களேன். என் ப்ரண்ட்ஸ் ஒரு சிலரோட அம்மா கூட ஜீன்ஸ் போட்டுட்டு வருவாங்க. அழகுக்காகன்னு இல்ல. அவங்க வசதிக்காக. நீங்க போட்டுப் பழகினால் உங்களுக்கும் பிடித்து விடும்.''

ரேவதி மேலும் தயங்கவே, ''எனக்காக இன்னிக்கு மட்டும் அண்ணி ப்ளீஸ்'' என்றாள் கெஞ்சலாக.

ரேவதி பல குடும்பங்களில் பார்த்திருக்கிறாள். அண்ணன் மனைவி நல்லதாக ஒரு புடவை எடுத்துக் கொண்டால் கூட அம்மாவிடம் சொல்லி அண்ணனை உசுப்பி குடும்பத்தில் கலகமூட்டும் நாத்தனார்களை அவளுக்குத் தெரியும். எனவே நிகிலாவின் வெள்ளை உள்ளம் அவள் மனதைத் தொட்டது. எனவே பதில் பேசாமல் திரும்பிச் சென்று தாரிணியின் உடைகளை எடுத்தாள். இரண்டு ஜீன்சும், பார்மல் பேண்ட்களும், லாஸ் டாப்சுமாய் இருந்தவற்றுள் அவளுக்கு சரியாய் இருந்த நீலநிற ஜீன்சை



அணிந்தாள். கறுப்பு டாப்சை அணிந்து முடியை போனிடெய்லாய் தூக்கிக் கட்டினாள். முகத்தை கழுவி புருவத்திற்கு நடுவே கடுகாய் கறுப்பு பொட்டை ஒட்டினாள். நிகிலாவை அழைத்தபடி கதவைத் திறந்து வெளியே வந்தவள் படிகளில் ஏறி மேலே வந்து கொண்டிருந்த சூர்யாவை எதிர்பாராமல் திகைத்தாள். கழுத்துடையை தளர்த்திவிட்ட படி மேலே வந்த சூர்யாவுக்கு ரேவதியை அடையாளம் காணவே சில நொடிகள் தேவைப்பட்டது.

இறுக்கிப் பிடித்த ஜீன்ஸ் கால்களின் அமைப்பை எடுப்பாகக் காட்டியது. கறுப்பு கிரிஸ்டல்கள் மின்னிய டாப்ஸ் அவள் சந்தன நிறத்தை மேலும் கவர்ச்சியாகக் காட்டியது. சுடிதாரில் மறைந்திருந்த நளினமான உடல் வெளிப்படுத்திய அழகில் திகைத்துப் போனான்.

வெளிநாடுகளில் நீச்சல் உடைகளில் எத்தனை பெண்களைப் பார்த்திருக்கிறான்? இந்தியாவிலும் நடுத்தர குடும்பத்துப் பெண்களும், டவுனில் வசிக்கும் பெண்களும் கூட பேண்ட், ஜீன்ஸ் என்று அணியத் தொடங்கி விட்டனர்தான். தினமும் வெளியே போகையில் லோ ஹிப் ஜீன்சும் குட்டை டாப்சுமாய் எத்தனை பெண்களைப் பார்க்கிறான்? மிக சாதாரணமான இந்த உடை இவளுக்கு மட்டும் ஏன் அலாதி கவர்ச்சியை தருகிறது? கிராமத்திலேயே பிறந்து வளர்ந்த பெண்ணிடம் இந்த நளினமும் நாசுக்கும் எப்படி வந்தது?

''வாவ்...'' என்ற நிகிலாவின் ஆர்ப்பாட்டமான குரலில் திரும்பிப் பார்த்தான் சூர்யா. ''எனக்கு எப்படி ரியாக்ட் பண்றதுன்னே தெரியலையே! சினிமா ஸ்டார் மாதிரி ஜொலிக்கிற அண்ணியை பார்த்து பொறாமைப் படறதா? அவங்களை ரசிக்கறதுக்குள்ளே எதிர்பாராம வந்து நிற்கிற உன்னை பார்த்து அதிசயப்படறதா?''

நிகிலாவின் அருகே போய் அவள் காதைத் திருப்பினான் சூர்யா.

"ஏய் வாலு, நீ எப்ப வந்த?"

"நான் எப்பவும் போல விடுமுறையில் வந்தேன். நீ என்ன அண்ணா திடுமென வந்து நிற்கிறாய்? வர ஒரு வாரம் ஆகும்னு அண்ணி சொன்னாங்க."

"போன வேலை முடிஞ்சி போச்சு. வந்துவிட்டேன்."

"வேலை முடிஞ்சி போசசா. இல்ல அண்ணியைப் பார்க்காம இருக்க முடியலையா?" என்ற நிகிலா தொடர்ந்து கிண்டலில் இறங்கவும் பேச்சை மாற்ற வேண்டி "நிகிலா" என்று அவளை அழைத்தாள் ரேவதி.

"என்ன அண்ணி?" என்று அவள் அருகில் வரவும், என்ன சொல்வதென்று தெரியாமல் விழித்தவளிடம் "எனக்கு ஒரு ஜூஸ் வேண்டுமே ரேவதி" என்றான் சூர்யா.

"இதோ" என்றபடி இறங்கிச் சென்றவளையே பின் தொடர்ந்தன அவன் விழிகள். அவனைப் பார்த்த நிகிலா "அண்ணிக்கு இந்த டிரஸ் ரொம்ப நல்லா இருக்கு இல்லண்ணா? நான் தான் கம்ப்பெல் பண்ணி போட வைத்தேன். கிராமத்துல சுகாதாரமான சூழ்நிலை. மாசுபடாத காத்து. கலப்படமற்ற ப்ரெஷ்ஷான உணவு என்று வளர்ந்ததில் அண்ணி எப்படி நேச்சுரல் ப்யூட்டியாக இருக்கிறார்கள் பாரேன்! ஆனா நீ இல்லாம ரொம்ப போரடிச்சிப் போயிட்டாங்க. நான் ஷாப்பிங் போகலாம்னு கேட்டதுக்கு உங்க அண்ணா இல்லாம வேண்டாம்னு சொல்லிட்டாங்க."

"உனக்கு ரேவதியை ரொம்பப் புடிச்சி போச்சு இல்ல!" என்ற சூர்யா புன்னகையுடன் தங்கையின் தலையை



வருடினான். "உன் படிப்பெல்லாம் எப்படியிருக்கு நிகி? இந்த வருடம் போர்டு எக்ஸாம் இல்லையா? அண்ணி பின்னாடி சுத்துகிற ஜோரில் படிப்பை மறந்து விடக் கூடாது. புக்ஸ் எல்லாம் எடுத்து வந்திருக்கிறாயா?"

"நான் சூப்பரா படிக்கிறேன்னா. எப்பவும் ஸ்பெஷல் கிளாஸ் படிப்புன்னு மூளையே சூடேறிப் போச்சு. உங்களுடன் கொஞ்சம் ரிலாக்ஸ் பண்ணிட்டு போனதும் ப்ரஷ்ஷாக மறுபடி படிக்கத் தொடங்கி விடுவேன். இந்த வருடத்தில் இனி எக்ஸாம் முடிந்துதான் நான் வீட்டிற்கு வர முடியும். எக்ஸாம் நெருங்குவதால் இனி இந்த மாதிரி வீக் எண்ட்களுக்கு அனுமதி இல்லை. பரிட்சை முடிந்ததும் நாம் எல்லோரும் அப்பா, அம்மாவிடம் அசாமுக்கு போகலாம் சரியா?"

"எனக்கு வர முடியுமான்னு தெரியல. பார்க்கலாம்."

ஜீன்சுடன் மேலே வந்த ரேவதிக்கு தங்கையிடம் சூர்யா பேசிக் கொண்டிருந்தது பார்க்க நன்றாக இருந்தது. தனியாக வளர்ந்தவளுக்கு இந்த அண்ணன் தங்கை பாசம் மனதை தொட இருவரையும் கலைக்க மனமின்றி அப்படியே நின்று விட்டாள். தங்கையிடம் பேசியபடியே ரேவதியைப் பார்த்த சூர்யா, "ஜூஸ் டம்ளரை கையில் வைத்துக் கொண்டு என்ன ரேவதி யோசனை? இவனுக்கு கொடுக்கலாமா? இல்ல நாமே குடிச்சிடலாமான்னு தானே யோசிக்கறே?" என்றான் சிரித்தபடி. ஜூஸ் டம்ளரை டேபிள் மீது வைத்துவிட்டு, அருகிலிருந்த சேரில் அமர்ந்தாள் ரேவதி.

"நான் நிகிலாவைப் பற்றித்தான் யோசித்துக் கொண்டிருந்தேன். இப்படிப்பட்ட அண்ணன் கிடைக்க அவள் எவ்வளவு லக்கி என்று."

''ஏன் நீங்களும்தான் லக்கி. எங்கண்ணனே உங்களுக்கு கிடைத்திருக்கிறாரே'' நிகிலா சொன்னதும் 'நான் அதிர்ஷ்டசாலி இல்லை நிகிலா. உன் அண்ணனின் அன்பை வாழ்நாள் பூராவும் அனுபவிக்கும் அதிர்ஷ்டம் எனக்கில்லை.' சத்தம் இல்லாமல் வாய்க்குள் முணுமுணுத்தாள் ரேவதி.

## 9

நிகிலாவிற்கு விடுதிக்கு தேவைப்பட்ட சில பொருட்களை வாங்க மாலையில் ஷாப்பிங் போனார்கள். தாரிணியின் நீள பாவாடையை அணிந்து நிகிலாவுடன் சேர்ந்து சிறுபெண்ணைப் போல் அந்த ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ் முழுக்கச் சுற்றினாள் ரேவதி. ஒரு காஸ்மெட்டிக் ஷாப்பில் நிகிலா அவளுக்குத் தேவையான பொருட்களையும், அவள் தோழிகள் வாங்கி வரச் சொல்லியிருந்த சிலவற்றையும் வாங்குவதில் முனைந்திருந்தாள். ''ரேவதி நாம் அங்கே பார்க்கலாம் வா'' என அவளை அருகிலிருந்த ரெடிமேட் கடைக்குள் அழைத்துச் சென்றான் சூர்யா. அங்கு ஹேங்கர்களில் இருந்தவற்றைத் தேடி ''இது நல்லா இருக்கல்ல? நைஸ் கலர், குட் காம்பினேஷன்'' என்றபடி நீள பாவாடைகளையும், வேலைப்பாடு செய்யப்பட்ட டாப்சையும் எடுத்து ''இது பார்ட்டிக்கு உடுத்திக் கொள்ளலாம்'' என்றபடி தனியாய் வைத்தான். ஜீன்ஸ், காட்டன் பேண்டுகள், லாங் காட்டன் குர்த்தாக்கள் என பொறுக்கியவன், ''இது தினசரி அணிந்து செல்ல வசதியாக இருக்கும்'' என்றபடி பில் போடச் சொன்னான்.

ஒரு டாப்சை எடுத்து அதன் வொர்க்கைப் பார்த்த ரேவதி, ''சைஸ் பாத்தீங்களா? இது நிகிலாவோட சைஸ் இல்லை போலிருக்கே'' என்றாள் தயக்கத்துடன்.



''நிகிலாவுக்குன்னு யார் சொன்னா?''

''பின்னே?''

திரும்பி நின்று அவளைப் பார்த்து சிரித்த சூர்யா, ''ஏன் ரேவதி நீ தினமும் கல்லூரிக்குப் போகிறாய். அதற்கு நிறைய டிரஸ் வேண்டாமா? உன்னிடம் சுடிதார் வகைகள் குறைவாகத்தான் இருக்கிறது என்று நினைக்கிறேன். அதையே திரும்பத் திரும்ப அணிவாயா? நானே உனக்கு புது டிரஸ் வாங்கித் தரணும்னு நினைச்சிட்டுதான் இருந்தேன். இப்ப பார்க்கும் போதுதான் சுடிதாரை விட வெஸ்டர்ன் டிரஸ் உன்னை இன்னும் அழகாக காட்டுகிறது. ஆனால் தாரிணியின் உடையில் உன்னைப் பார்க்க எனக்கு என்னவோ நெருடலாக இருக்கிறது. அதனால் தான்...'' என்றபடி துணி பார்சலை அவளிடம் கொடுத்து விட்டு பில்லுக்குப் பணம் கட்டப் போனான் சூர்யா.

வீட்டிற்கு வந்ததும் ரேவதியின் உடைகளைப் பார்த்த நிகிலா ''அண்ணனுடைய செலக்ஷன் எப்பவுமே ரொம்ப நல்லா இருக்கும் அண்ணி. டாப்சை பாத்தீங்களா, எவ்வளவு திக்கா, லூசா இருக்கு. இந்த மாதிரி அணிந்தால் கண்ணியமாகத் தோன்றுமே தவிர வித்தியாசமாக தோன்றாது.''

ரேவதியும் அதே போல்தான் உணர்ந்தாள். எனவே மனதிற்குள் ஒரு பெருமிதமும், அவனே இந்த உடைகள் அழகாக இருப்பதாகச் சொன்னதால் அணிவதற்கு ஆசையும் ஏற்பட்டது.

நிகிலா கிளம்பியதும் தனியே விடப்பட்ட ரேவதி, சூர்யாவிடம் குறைப்பட்டாள். ''இந்த நிகிலா சீக்கிரம் எக்ஸாம் முடிந்து இங்கேயே வந்து விட்டால் நன்றாக இருக்கும். அவள் போனதும் வீடு வீடாகவே இல்லை.''

வியப்புடன் அவளைப் பார்த்த சூர்யா, ''படிப்பு முடிந்தால் கூட அவள் இங்கிருக்க மாட்டாள். மேற்படிப்பு, வேலை, திருமணம் என்று அவள் வழி தனி தான். அவள் எப்படி உன்னுடன் வந்து இருக்க முடியும்?'' என்றான்.

''ஏன் இருந்தால் என்ன? இங்கிருந்தே காலேஜ் போகலாமே!''

''எத்தனை நாளைக்கு? இன்னும் கொஞ்ச நாட்களில் உன் படிப்பு முடிந்து நீயும் என் ப்ராஜெக்ட் முடிந்து நானும் கிளம்பி விடுவோம். அப்போது அவளை எங்கே விட முடியும்? அவள் வழியில் அவள் போனால்தான் நம் வழியில் நாம் போக முடியும்.''

பளீரென்று அறை வாங்கினாற் போல் அதிர்ந்தாள் ரேவதி. தான் கிளம்ப வேண்டியதையே மறந்து அந்தளவு இக் குடும்பத்துடன் ஒன்றி விட்டோமா? சூர்யாவின் சகஜமான பேச்சிலும் நிகிலாவின் அன்பிலும் நடைமுறையை மறந்து விட்டாள். கூட அமர்ந்து பேசினாலும் துணி வகைகள் வாங்கிக் கொடுத்தாலும் ரேவதிக்கு அந்த வீட்டில் எந்த உரிமையும் இல்லை. அப்பா கூட பண்ணையாட்களுக்கு துணி எடுத்து தருகிறார். பொன்னாத்தா கூட வீட்டில் உட்கார்ந்து மணிக்கணக்கில் பேசிக் கொண்டிருப்பாள். அவர்களைப் போலத் தானா நானும்?

படுக்கையில் விழுந்த ரேவதிக்கு கண்களில் நீர் வழிந்தது.

காலையில் எழும்போது தோன்றியது. நம் நினைப்பே முட்டாள்தனம் என்று. எப்படியோ பிரிவது என்று முடிவெடுத்த பின் மனதில் எந்த சலனங்களுக்கும் இடம் கொடுக்கக் கூடாது. அது பிற்காலத்தில் அவளது வாழ்வைத் தான் பாதிக்கும். எனவே என்னதான் பழகினாலும் வீட்டிலிருப்பவர்களிடம் மனதளவில் ஒதுங்கியே இருக்க வேண்டுமென முடிவு செய்தாள். அது அவளுக்குச் சிரமமாகவும் இல்லை. ஏனெனில் சூர்யாவின் வேலை பளு அதிகரித்திருந்தது. இரவில் வெகுநேரம் கழித்து தான் வீட்டிற்கு வந்தான். காத்திருக்க வேண்டாம்'' என்று முன்பே அவளிடம் சொல்லியிருந்தான். காலையில் அவள் கல்லூரிக்குப் போகும்போது அவன் தூங்கிக் கொண்டிருப்பான். நிகிலாவிற்கு பரிட்சை சமயமாதலால் அவளும் வரவில்லை. சனி ஞாயிறுகளில் கமலம் போன் செய்வார். மாதம் ஒருமுறை தாரிணி பேசுவாள். எல்லோரிடமும் அவர்களுக்கு தகுந்த மாதிரி பேசிவிட்டு வைத்து விடுவாள்.



கல்லூரியில் செமஸ்ட்டர் பரிட்சைகள் நெருங்கிக் கொண்டிருந்தன. அதற்கு தயாராவதில் நேரம் பறந்தது ரேவதிக்கு. வகுப்பில் அவளுக்கு எல்லோரும் பழகியிருந்தனர். அனு அகர்வால் மட்டும் கொஞ்சம் நெருக்கமாய் பழகினாள்.

சரண் அவளை எங்கு பார்த்தாலும் ஓடி வந்து பேசுவான். அவனிடம் தெரிந்த ஆர்வத்தைப் பார்த்தவள், நல்லவேளை இவன் நம்முடைய க்ளாஸ் இல்லை என்று நினைத்துக் கொள்வாள். பரிட்சை தொடங்கியதும் நாட்கள் வேகமாக சென்றன. இனி படிப்புதான் இறுதிவரை தனக்கு துணை என்று தோன்றியது. முன்பு ஆசைக்காக படித்தாள். இப்போது வாழ்க்கைக்காக படிக்கத் தொடங்கினாள். எவ்வளவு படித்தாலும் போதாது போலிருக்கவே எப்பவும் புத்தகமும் கையுமாகவே இருந்தாள். சோமு வற்புறுத்தி அறைக்கே உணவை எடுத்து வந்து தருவார். சில சமயம் படிக்கிற மும்முரத்தில் சாப்பிட மறந்து போவாள். அவர் மறுபடி கீழே போய் சூடாக எடுத்து வந்து அருகில் நின்று அவள் சாப்பிட்ட பிறகுதான் போவார். சரோஜாவும் கூட அடிக்கடி வந்து ஜூஸ் வேணுமா? சூடா ஹார்லிக்ஸ் கலந்து தரட்டுமா? என்ன வேண்டும் என்று விசாரித்துக்

கொண்டே இருப்பாள். இரவு வெகு நேரம் படித்து விட்டு அப்படியே அயர்ந்து உறங்கி விட்ட சமயங்களில் சூர்யா எட்டிப் பார்த்து லைட்டை அணைத்து விட்டு பெட்ஷீட்டை போர்த்திவிட்டுப் போனான் என்பதே அவளுக்குத் தெரியாது.

ஒரு வழியாய் இறுதி பரிட்சை முடிந்ததும் தான் அவளால் நிம்மதியாக மூச்சு விட முடிந்தது. வகுப்பறையிலிருந்து தேர்வு முடிந்த மகிழ்ச்சியில் எல்லோரும் கலகலத்தபடியே வெளியே வந்தார்கள். "ஒருவழியா இந்த வருடம் பரிட்சை முடிந்தது. இப்ப இதைக் கொண்டாட நாம எல்லோரும் மேட்னி ஷோ போகலாமா?" என்றாள் கரோலினா.

"ரேவதி நீயும் சினிமாவுக்கு வர்றியா?" என்றான் சந்தீப்.

"இல்லை சந்தீப். எனக்கு டயர்டா இருக்கு. வீட்டிற்குப் போய் நான் நன்றாகத் தூங்க வேண்டும்" என்றாள் ரேவதி.

"இன்னும் ஒரு மாதம் நன்றாகத் தூங்கலாம். இனி ஜூனிலயில்தான் மீட் பண்ணப் போகிறோம். இந்த வருடத்தில் இதுதான் கடைசி நாள். வாயேன் ரேவதி" என்றாள் அனு அகர்வால்.

"ஸாரி அனு. அடுத்த வாரம் போகலாம்" என்றாள் ரேவதி.

சூர்யாவிடம் ஒரு வார்த்தை சொல்லாமல் எங்கும் வெளியே செல்லப் பிடிக்கவில்லை அவளுக்கு.

"சரி நான் கிளம்பட்டுமா?" என்று ரேவதி விடை பெறும் சமயம் எல்லோருக்கும் பொதுவாய் ஒரு 'ஹாய்' சொல்லியபடி அவர்கள் அருகே வந்தான் சரண்.

"கூட்டமா எங்கியோ கிளம்பிட்டீங்க போலிருக்கே! நானும் கூட வரலாமா?" என்றான் ரேவதியைப் பார்த்தபடி.



"பாகிஸ்தானில் பாம் வைக்கப் போகிறோம். வருகிறாயா?" என்றாள் அனு.

"நீயே ஒரு பாம்தான். நீ நடந்து போனாலே பாம் வெடிச்ச மாதிரி தானே இருக்கும்." அனுவின் கொழு கொழு உடலை சரண் கிண்டலடிக்க ரேவதிக்கு தன்னையறியாமல் சிரிப்பு வந்தது.

"மைகாட்" என்றபடி முகத்தை பொத்திக் கொண்டான் சரண்.

"என்னடா?... என்னவாச்சு? ஆளுக்கு ஆள் விசாரிக்கவும், இங்கு ஒரு மின்னல் அடித்ததே அதில் என் கண் கூசியது." என்றான்.

"மத்தியான வெயில மண்டையை பிளக்கிறது. உனக்கு மின்னல் அடிக்குதா? உள்ளே நட்டு கழண்டு போச்சுடா மச்சான்" விஷால் சரணின் தலையை தடவினான்.

"தலையில இல்லடா. இவனுக்கு கண்ணுலதான் கோளாறு." ப்ரீத்தி கண்களை பரிசோதிக்க முயல, "ஏய் எதுக்கும் இப்படி உட்கார வைங்கப்பா ஆம்புலன்சுக்கு போன் பண்ணலாம்" என்றான் வினித்.

"போதுண்டா... போதும்... கொஞ்சம் அசந்தா ஆளை கவுத்துருவீங்களே! முழுசா கவுக்கறதுக்குள்ள நானே சொல்லிடறேன். கண்ணில் ஏன் தெரியுமா மின்னல் அடிச்சது. நம்ம ரேவதி சிரிச்சா இல்ல, அதனாலதான்"

"ஹோ..." என்ற சிரிப்பினிடையே "ஆனாலும் இது ரொம்ப ஓவரா தெரியல?" என ஆண்கள் கிண்டல் அடிக்க,

"ஏன் நாங்க சிரிச்சா மின்னல் அடிக்கலையா?"

"ரேவதி நீ உஜாலா போட்டு பல்லை விளக்குவாயா?" என பெண்கள் கலாய்க்க ரேவதி எதுவும் பதில் சொல்லாமல் "நேரமாச்சு" என்றபடி நடக்கத் தொடங்கினாள்.

"எங்களை தியேட்டரில் டிராப் பண்ணிடு" என்றபடி பெண்கள் காரில் ஏறிக் கொள்ள ஆண்கள் பைக்கில் பின் தொடர்ந்தனர். தியேட்டர் வாசலில் தோழிகளிடம் விடை பெற்றுக் கொண்டு காரில் அமரப் போனவளை வழி மறித்தான் சரண்.

"ப்ளீஸ்... எனக்காக வா ரேவதி."

"ஸாரி... என்னால் முடியாது" என்றவள் அவன் மேற் கொண்டு பேசும் முன் சென்று விட்டிருந்தாள். ஒரு பெரு மூச்சுடன் நண்பர்களுடன் சென்று சேர்ந்து கொண்டான் சரண்.

மதியம் வீட்டிற்கு சாப்பிட்ட ரேவதிக்கு தொடர்ந்து சில நாட்களாக இரவெல்லாம் தூங்காததில் கண்கள் எரிந்தன. தூக்கம் வருவதாக சோமுவிடம் சொல்லிவிட்டு பாதி சாப்பாட்டில் எழுந்து போய் படுத்தவள், படுத்த வுடன் அசந்து தூங்கிப் போனாள்.

சூர்யா மாலையில் வீட்டிற்கு வந்து முகம் கழுவி உடை மாற்றி கீழே வந்ததும் சோமு அண்ணா காபியுடன் வந்தார்.

"ரேவதி எங்கே சோமு அண்ணா?"

குறும்புடன் சிரித்த சோமு, "நான் ஒரு புத்தியில்லா தவன். நான் காபி கொடுத்தா பிடிக்குமா? பொண்டாட்டி கொடுத்தா சர்க்கரை இல்லாத காபி கூட இனிக்கும்" என்றார்.

சிரித்தபடி ஒருவாய் காபியை குடித்த சூர்யா "இன்னி யோட எக்ஸாம் முடிஞ்சி போச்சே! ப்ரீயா உட்கார்ந்திருப் பான்னு பாத்தேன்" என்றான்.

"மதியம் பரிட்சை முடிந்து வந்து சரியா சாப்பிடக் கூட இல்லை. தூக்கம் வருதுன்னு போய் படுத்தது. இன்னும் தூங்கிட்டுதான் இருக்கு."

"மணி ஏழாச்சே! இன்னுமா தூக்கம்?" என்றபடி எழுந்து சூர்யா மேலே போவதற்கும் ரேவதி கீழே வரவும் சரியாக இருந்தது.



"அப்பாடா! எழுந்து விட்டாயா ரேவதி? ரிப்வான் விங்கிள் கதையில் வருகிற மாதிரி இன்னும் எத்தனை வருடம் கழித்து கண் விழிப்பியோ அப்போ எனக்கு தலையெல்லாம் நரைத்து வயசாகிப் போயிருக்குமே. அடையாளம் தெரியுமோ, இல்லையோ" என்று கவலைப் பட்டுக் கொண்டிருந்தேன்."

"எக்ஸாமுக்கு படித்த அலுப்பில் ஒரு நாள் அசந்து தூங்கினால் அதை பிரமாதப்படுத்துகிறீர்களே!" என்று சிணுங்கியபடி சோபாவில் அமர்ந்து அன்றைய பேப்பரை பிரித்தாள் ரேவதி.

அவள் கையிலிருந்த பேப்பரை பிடுங்கிய சூர்யா, "இந்த பேப்பரை எல்லாம் நாளை சேர்த்து வைத்து படித்துக் கொள். நீ வெளியே போய் ரொம்ப நாள் ஆகிறது இல்லையா? கிளம்பு எங்காவது போகலாமா?"

உற்சாகத்துடன் எழுந்த ரேவதி, "எங்கே போவது?" என்றாள்.

"எங்கே வேண்டுமானாலும் போகலாம். ஈ.சி.ஆர் ரோடில் ஒரு டிரைவ், பீச்சில் ஒரு வாக், திறந்தவெளி உணவு விடுதியில் ஒரு டின்னர் சரியா?" சந்தோஷமாய் தலையசைத்து விட்டு உடைமாற்ற சென்றவளை கூப் பிட்ட சூர்யா, "ரேவதி இப்போது மணி ஏழு பதினைந்து. நான் காரை ஷெட்டிலிருந்து எடுக்கப் போகிறேன். இன் னும் ஐந்து நிமிடத்தில் நீ காருக்கு வந்துவிட வேண்டும். அதிகமாய் மேக்கப் போட டைம் இல்லை உனக்கு."

"நான் எப்போது மேக்கப் போட்டு பார்த்தீங்களாம்!" என்று முணுமுணுத்தபடி ரேவதி த்ரீ போர்த் ஸ்கர்ட்டும் டாப்சும் அணிந்து முடியை கைகளால் ஒதுக்கியபடி மூன்றே நிமிடத்தில் அவன் அருகில் வந்து அமர்ந்தாள்.

"குட்" என்றபடி காரை எடுத்த சூர்யா "யு லுக் வெரி யெங் அண்ட் க்யூட்" என்றான்.

"உண்மையாகவா? எனக்கு வயதாகிப் போனதை கண்டு பிடிக்கவே முடியவில்லையா உங்களால்?"

பதிலுக்கு சிரித்த சூர்யா, "இளம் வயதில் இளமையாகத்தான் தெரிவோம் என்பது உண்மைதான். ஆனால் ஸ்கர்ட் அணியும்போது நீ உன் வயதை விட இளமையாக தெரிகிறாய் என்று தான் சொன்னேன்."

ஈ.சி.ஆர். ரோட்டிலிருந்த அந்த புகழ்பெற்ற கடற்கரை ஓர உணவகத்திற்குள் காரை நிறுத்தினான் சூர்யா. ஓடி வந்த சீருடை பணியாளர்களிடம் சாவியை கொடுத்து விட்டு ரேவதியுடன் நடந்தான். கடல் மணலில் குடிசைகளின் அமைப்பில் சின்னச் சின்ன கான்கிரீட் அறைகள் சகல வசதிகளுடன் இருந்தன. ஒருபுறம் நீலக்கடலும் வெள்ளை மணலும் விரிந்து கிடக்க, மறுபுறம் செயற்கை குன்றும், உருவாக்கப்பட்ட பச்சை தோட்டமும் மலர்களும் மனதைக் குளிர்வித்தன. சிவப்பு டைல்கள் பதிக்கப்பட்ட நடைபாதையின் இருபுறம் பூக்கள் தலையசைத்தன. அதை சூர்யாவிற்கு காட்டிய ரேவதி, "நம் வீட்டிலும் இது போல் லானிலிருந்து வீட்டிற்குள் வரும் வழியில் செய்தால் நன்றாக இருக்கும்" என்றாள்.

"கண்டிப்பாகச் செய்யலாம்" என்ற சூர்யா, "வருகிறாயா அலைகளில் சிறிது நிற்கலாம். உப்பு நீரில் நிற்பது காலுக்கு மசாஜ் கொடுத்த மாதிரி இருக்கும்" என்றான்.

கடற்காற்றில் பறந்த ஸ்கர்ட்டை சுருட்டி பிடித்தபடி தண்ணீரில் நின்றாள் ரேவதி. அருகே ஒரு வெளிநாட்டு கும்பல் அலைகளில் விளையாடிக் கொண்டிருந்தது. அங்கே தங்கியிருப்பவர்கள் போலும். அவர்களுடன் விளையாண்டு அலுத்துப்போன ஒரு நான்கு வயது சிறுவன் அலைகளைத் துரத்துவதும், அது வரும்போது கரைக்கு ஓடுவதுமாய் இருந்தான். பிறகு அதுவும் போரடித்து போய் சூர்யாவின் அருகே வந்து பேண்டை



பற்றி இழுத்தான். அவன் குனிந்து பார்க்கவும் "கேட்ச் மீ" என்றபடி மணலில் ஓடினான். அவன் உற்சாகம் அவர்களையும் தொற்றிக் கொள்ள சூர்யா அவனை துரத்தவும் அவன் ரேவதியின் பின்னால் ஒளிந்து கொண்டு சிரித்தான்.

"ஆர் யு சீட்டிங்?" என்றபடி சூர்யா அவனை தூக்க முயலவும் அவன் ரேவதியை விடாமல் பற்றிக் கொண்டான். சூர்யா பலமாக இழுக்கவும் ரேவதியும் சிறுவனும் மணலில் விழுந்தனர். "என்னை ஏன் தள்ளினீர்கள்?" என ரேவதி சூர்யாவை கீழே தள்ள, பதிலுக்கு அவன் தூக்க, சூழ்நிலை சிரிப்பும் விளையாட்டுமாக மாறிப் போனது. அந்த சிறுவன் பெற்றோருடன் போன பிறகும் கூட தாங்களே சிறுவர்களாய் மாறி வெகுநேரம் விளையாடினர் இருவரும். இறுதியில் ரேவதி களைத்துப் போய் மூச்சு வாங்க ஓரிடத்தில் அமர்ந்தாள். அவள் அருகில் மணலில் படுத்த சூர்யா கைகளைப் பின்னால் கோர்த்து வானத்தைப் பார்த்தான். நட்சத்திரங்களின் கண் சிமிட்டலில் வெட்கப்பட்டு நிலா தேய்ந்து பாதியாய் தெரிந்தது. தினம் பார்க்கும் நிலவுதான். கடல் தான். ஆனாலும் கூட இன்று புதிதாய் தெரிந்தது. உடலை உறுத்திய மணல் கூட சுகமாய் இருந்தது. வாய் பேசாத அந்த மௌனத்தில் காற்றும் அலைகளும் உரத்துப் பேசின.

"எக்ஸ்யூஸ் மீ ஸார்."

சீருடை அணிந்த பணியாள் ஒருவன் அந்த அமைதியை கலைத்து "உங்க டின்னர் ரெடி ஸார்" என்று பணிவுடன் தகவல் தந்தான். "வருகிறோம்" என்று அவனை அனுப்பிய சூர்யா எழுந்திருக்காமல் அப்படியே கிடக்கவும், "உங்களுக்குப் பசிக்கலையா?" என்றாள் ரேவதி.

"இல்லை ரேவதி. எனக்குப் பசி, தூக்கம், மயக்கம் போன்ற எந்த உணர்வுமே இல்லை. எனக்கு எல்லாமே புதுசா தெரியுது. இன்னிக்கு தான் இந்த உலகம் உருவான

மாதிரி இருக்கு. அதில் வானமும் கடலும், மணலும் இப்பதான் ஏற்பட்டுச்சோன்னு பார்க்கிறேன். இந்த காற்றும் அமைதியும் கூட. புதுசா இத்தனை நாளில் நான் பார்க்காததாய் தெரியுது. ஏன் இப்படின்னு யோசிக்கிறேன்."

"ஐய்யோ இந்த ஆளில்லாத இடத்தில் இரவில் தனியாய் வந்து உட்காரப்பவே நான் நினைச்சேன். காத்து கருப்பு எதாவது இருக்கும்னு. அதே மாதிரி ஆயிடிச்சே!" ரேவதி விளையாட்டாய் கைகளை விரித்துப் புலம்பவும், சிரித்தபடியே அந்த கைகளைப் பற்றி எழுந்தான் சூர்யா. ஹரிக்கேன் விளக்கின் ஒளியில் வெட்டவெளியில் சாப்பிடுவது புது அனுபவமாக இருந்தது ரேவதிக்கு. சைனீஸ், தந்தூரி என உணவு வகைகளும் அவளுக்குப் புதுசு. எனவே விருப்பத்துடன் சூழ்நிலையை ரசித்தபடி சாப்பிடத் தொடங்கினாள்.

"ஹலோ சூர்யா" என்ற குரலை கேட்டு இருவரும் திரும்பினர். சின்ன ஸ்கர்ட்டும் சிக்கனமான டாப்சுமாக, காற்றில் முடி அழகாய் அலைய, அதை விட அழகாய் நடந்து வந்து சூர்யாவின் அருகில் அமர்ந்தாள் அவள்.

இவள் சோனாலி. என் கொலிக் என்று ரேவதிக்கு அறிமுகம் செய்தான். சூர்யா, பரஸ்பரம் 'ஹலோ' சொன்னார்கள் இருவரும். சூர்யாவின் அருகில் வந்தமர்ந்த சோனாலி, "சூர்யா என் ப்ரண்ட் பபிஷ் என்னை இங்கே சாப்பிட வரச் சொல்லியிருந்தான். நான் வந்து காத்திருக்கிறேன். வர முடியவில்லை என போன் செய்கிறான் பூல். ரொம்ப போரடித்துப் போய் விட்டேன். உன்னை பார்த்த பிறகு தான் கொஞ்சம் நிம்மதியாச்சு. நானும் உங்களுடன் டின்னருக்கு சேர்ந்து கொள்ளலாமா?"

தயக்கத்துடன் ஒரு நிமிடம் ரேவதியைப் பார்த்த சூர்யா "ஒய் நாட்?" என தோள்களை குலுக்கினான்.



"ஓ.. தேங்க்யூ" என்ற சோனாலி பேரரை அழைத்து வரிசையாக ஆர்டர் செய்தாள.

"ப்ரான்ஸ் சாப்பிடுகிறாயா ரேவதி? நன்றாக இருக்கும்" என்றபடி தட்டை அவளிடம் நகர்த்தினான் சூர்யா.

"வேண்டாம். எனக்கு பழக்கம் இல்லை" என்றாள் ரேவதி.

அமெரிக்கன் சாப்சியை ஸ்போர்க்கினால் நாசுக்காய் சாப்பிட்டபடியே "உங்க நேட்டிவ் ப்ளேஸ் அது ரேவதி?" என்றாள் சோனாலி.

"திருச்சிக்கு அருகில் காவி பூந்துறை எனும் அழகிய கிராமம்."

"கிராமமா?" அங்கே ரெஸ்ட்டாரெண்டுகள், ஸ்டார் ஹோட்டல்கள் என்று எதுவும் இருக்காதில்லையா? அதனால் தான் உங்களுக்கு வெரைட்டியாய் சாப்பிட்டுப் பழக்கம் இல்லை."

"சோ, வாட்? இந்த மாதிரி ரெஸ்ட்டாரெண்டுகளுக்கும் ஹோட்டல்களுக்கும் சமைக்கத் தேவையான உணவு பொருட்கள் எங்கள் கிராமத்திலிருந்துதான் வருகின்றன. அங்கே கிடைக்கிற ஆரோக்கியமான வெரைட்டி புட்ஸ் எந்த நகரத்திலும் கிடைக்காது."

பதில் பேச வழியின்றி சூர்யாவின் பக்கம் திரும்பிய சோனாலி "நம்ம ஆபீசில் கவிதா என்று ஒரு பெண டி.டி.பி. ஓர்க் செய்வாளே நினைவிருக்கிறதா? கிராமத்து பெண் தான் அவளும். அவளை எல்லோரும் பார்க்கிற பார்வைக்கும் அடிக்கிற கிண்டலுக்கும் பயந்து தான் டெல்லியிலிருந்து வந்திருப்பதாக கதை விடுவாள். அடிக்கடி டெல்லி, மும்பை என்று பேசுவாள். ஒரு முறை அவளைப் பார்க்க அவள் அப்பாவும் அம்மாவும் நேராய் அலுவலகத்திற்கே வந்து விட பாவம் கூசிப் போய் விட்டாள்."

இது தனக்கு சொல்லப்பட்ட விஷயம் என்றறிந்த ரேவதி. "மிஸ் சோனாலி அந்த கவிதாவிற்கு மனோ ரீதியாக பிரச்சனை எதுவும் இருந்ததா?" என்று விசாரித்தாள்.

"இல்லையே, ஏன் கேட்கிறாய்?"

"பிச்சை எடுப்பதற்கும், தப்பு செய்வதற்கும் தான் வெட்கப்பட வேண்டும். பிறந்த ஊர் பெற்ற தாய்க்கு சமம். அதற்காக அந்த பெண் கூச்சப்படுகிறாள் என்றால் நிச்சயம் மனநோய் பிடித்தவளாகத்தான் இருக்க வேண்டும்."

"வெரி நைஸ். ரேவதி சொல்வது ஹன்ட்ரட் பர்ஸென்ட் நிஜம்" என்ற சூர்யாவின் குரலில் முகம் சிவந்தது சோனாலிக்கு. தன் எரிச்சலை மிதமிஞ்சிய சிரிப்பால் சரி செய்தவள், அந்தப் பேச்சையே மறந்து "புது ப்ராஜெக்ட் எவ்வளவு தூரம் வந்திருக்கறது சூர்யா?" என அலுவலக விஷயம் பேசத் தொடங்கினாள்.

சற்று நேரத்திற்கு முன்பு வரைக் கூட எவ்வளவு சந்தோஷமாய் இருந்தோம். அதை குலைக்க, இவள் எங்கிருந்து வந்தாள்? ரேவதிக்கு உணவு கீழே இறங்க மறுத்தது. பேச்சினூடே ரேவதியை பார்த்த சூர்யாவுக்கு அவள் சோனாலியை முறைப்பதைப் பார்த்ததும் சிரிப்பு வந்தது. சற்றே சீண்டிப் பார்க்க ஆசை வந்தது.

"எங்கே, சிக்கன் ப்ரை நன்றாக இருக்கிறதா பார்க்கலாம்" என்றபடி சோனாலியின் தட்டிலிருந்து எடுத்து சாப்பிடவும் ரேவதி எழுந்தாள்.

"என்ன வேண்டும் ரேவதி?" அக்கறையாக கேட்ட சூர்யாவின் கண்கள் சிரித்தன.

"கை கழுவிவிட்டு வருகிறேன்" என்றபடி வாஷ் பேசினுக்குச் சென்றாள் ரேவதி.

"ரேவதி யார் சூர்யா? உனக்கு உறவா?" என்ற சோனாலியின் கேள்விக்கு பதில் கூறாமல் விடுபட்ட அலுவலக விஷயத்தை தொடர்ந்தான் சூர்யா.



கைகழுவிய ரேவதிக்கு மறுபடி சாப்பாட்டு மேஜைக்குச் செல்லப் பிடிக்காததால் நீச்சல் குளத்தருகே கிடந்த சாய்வான சேரில் அமர்ந்தாள். பத்து நிமிடங்களில் சூர்யா அவள் அருகே வந்து "போகலாமா?" என்றான்.

கூடவே நின்றிருந்த சோனாலியிடம் "உன்னை டிராப் பண்ணட்டுமா?" என்றான்.

"நான் என் காரில்தான் வந்திருக்கிறேன்" என்று அவள் சொன்னதும், அப்போ நாளை அலுவலகத்தில் பார்க்கலாம்" என கை குலுக்கினான் சூர்யா.

"குட் நைட்" என்றபடி கட்டி அணைத்து அவன் கன்னத்துடன் கன்னம் இழைத்து விடை பெற்றாள் சோனாலி. இதையெல்லாம் அங்கேயே வைத்துக் கொள்ளக் கூடாதா? என்றிருந்தது ரேவதிக்கு.

திரும்பி வரும்போது காரில் அமைதி நிலவவே அதை கலைத்த சூர்யா "என்ன ரேவதி அமைதியாகி விட்டாய். தூக்கம் வந்து விட்டதா?" என்றான்.

அவள் "இல்லை" என்று தலையசைக்கவும் "இந்த சோனுவை பாத்தியா?" என்றான்.

"சோனுவா?"

"அதுதான் சோனாலி. நான் அவளை அப்படித்தான் கூப்பிடுவேன். அமெரிக்காவில் நான் படித்த கல்லூரியில் தான் படித்தாள். அவளுடைய அப்பா அங்கே டாக்டராக இருக்கிறார். இப்போது எதிர்பாராமல் இந்தியாவில் அதுவும் என் ஆபீசிலேயே அவளைப் பார்த்ததும் ரொம்ப ஆச்சரியமாகி விட்டது. என்னைப் பார்த்ததும் சோனு சந்தோஷத்தில் அப்படியே கட்டிக் கொண்டாள்.

"ஷி இஸ் வெரி ஸ்மார்ட்."

"என்ன ரேவதி பதிலையே காணோம்?"

"எனக்கு... எனக்கு தலையை வலிக்கிறது."

''அடடா... கண்களை மூடி அப்படியே தூங்கு'' ஒரு பரிதாப சிரிப்புடன் காரை விரைவாக ஓட்டினான் சூர்யா.

வீட்டிற்கு வந்து உடையை மாற்றி படுக்கையில் விழும்போது சூர்யா கதவைத் தட்டினான். திறந்தவளிடம் பால் டம்ளரை கொடுத்தவன்,

"இதை குடித்து விட்டுத் தூங்கு" என்றபடி வெளியேறினான்.

கோபத்துடன் பாலை வாஷ் பேசினில் ஊற்றினாள் ரேவதி. சோனாலியுடன் பேசும்போது ரேவதி சாப்பிட்டாளா இல்லையா என்பதை கூட கண்டு கொள்ளாதவனுக்கு வீட்டிற்கு வந்ததும் என்ன அக்கறை?''

இன்று பரிட்சை முடிந்ததும், அவன் வெளியே அழைத்துப் போனதும், அங்கு ஓடிப் பிடித்து விளையாடியதும் கடைசியில் இப்படியா முடிய வேண்டும்? ரேவதிக்கு கண்களில் வழிந்த நீர் தலையணையை நனைத்தது.

இல்லை அழக்கூடாது. ரேவதியின் இலட்சியம் வேறு. அவள் படிக்க வேண்டும். தன் லட்சியத்தை அடைய வேண்டும். சராசரி பெண்களைப் போல மனதில் எந்த சலனங்களுக்கும் இடம் கொடுக்கக் கூடாது. அது அவளது லட்சியததை மட்டுமல்லாது சூர்யாவின் வாழ்வையும் பாதிக்கும். மணமாகி ஆறுமாதங்கள் முடிந்து விட்டது. இன்னும் பனிரெண்டு மாதத்தில் அவன் வெளிநாடு செல்லப் போகிறான். இதுவரை ரேவதியை அவளது பெற்றோரைப் போலவே பொறுப்புடன் கவனித்துக் கொண்டிருக்கிறான். கேளாமலேயே தேவைப்பட்டதெல்லாம் வாங்கி தந்திருக்கிறான். எல்லாவற்றிற்கும் மேலாக நல்ல தோழமையை தந்திருக்கும் அவனுக்கு எந்த இக்கட்டையும் ஏற்படுத்தக் கூடாது. அவரும் விரும்பியபடி அவ



னுக்கு ஏற்ற பெண் அமைவதுதான் சரியாக இருக்கும். ஒரு உணவு விடுதியில் சாப்பிடும் உணவை தேர்ந்தெடுத்து உண்ணத் தெரியாத எனக்கு அவனது மேல் மட்டத்து நண்பர்களுடன் கலந்து பழக முடியுமா? அவனது உயரத திற்கும, கம்பீரத்திற்கும், அந்த வசீகரிக்கும் சிரிப்பிற்கும ஒரு மாடலைப் போன்ற, நடிகையைப் போன்ற பெண்கள் தான் பொருந்துவார்கள். அழகாய் சிரித்து, அழகாய் நடந்து, அழகாய் பேசி பார்ப்போரை வசீகரிக்கும் பெண்கள்.

புரண்டு நேராய் படுத்து கண்களை இறுக மூடினாள் ரேவதி. மனதை ஒருமுகப் படுத்த முயன்றாள். மூடிய கண்களுக்குள் வந்து நின்ற சூர்யா அழகிய பல் வரிசை தெரிய சிரித்தான். திடுமென எழுந்து அமர்ந்த ரேவதி, கல்லூரி லைப்ரரியிலிருந்து எடுத்த வந்த புத்தகத்தை 'பிரித்து படிக்கத் தொடங்கினாள். சிறிது நேரத்தில் அவளையும் அறியாமல் தூங்கிப் போனாள்.

## 10

தனக்குள் ஒரு முடிவுக்கு வந்திருந்த ரேவதி எப்போதும் போல் சூர்யாவிடம் பேசியபடி, விதவிதமாய் சமைத்தபடி வீட்டை வளைய வந்தாள். கமலமும் அருணாச்சலமும் ரேவதியை நிகிலாவுடன் அசாமுக்கு வரும்படி அழைத்தனர். ராஜமும் ராமசாமியும் கிராமத்திற்கு ஒருமுறை வந்து போகும்படி சொன்னார்கள். இதையெல்லாம் சூர்யாவிடம் சொன்ன போது வழக்கம்போல் 'உன் விருப்பப்படி செய்' என்று சொல்லாமல் 'நாம இங்கேயே எங்காவது போகலாமே ரேவதி' என்றான். ஆனால் அவனது வேலை பளுவினால் அவளை எங்கேயும் அழைத்துப் போகவும் முடியாமல் ரேவதியின் விடுமுறைகள் நகர்ந்து கொண்டிருந்தன. இப்போது மாலை நேரங்களில் சீக்கிரமாக வீட்டிற்கு வந்து

கொண்டிருந்தான். இருவரும் பக்கத்துப் பார்க்கில் வாக்கிங் போனார்கள். அல்லது டி.வி.டி.யில் ஏதாவது படம் பார்த்தார்கள். டீயை குடித்தபடி லானில் அமர்ந்து அரட்டை அடித்தார்கள்.

ரேவதி தான் கொடைக்கானல் போன அனுபவத்தை சொல்ல, அதே போல் மலேசியாவில் ஜென்டிங் என்னும் மலைவாசஸ்தலத்தைப் பற்றி சூர்யா சொன்னான். ஒவ்வொரு ஊரின் பழக்கங்கள் நடைமுறைகள் பற்றி பேசும் போது தங்கள் ஊர்களில் வீட்டிற்கு யார் வந்தாலும் முதலில் ஒரு சொம்பு தண்ணீரைக் கொடுத்து விட்டு தான் என்ன விஷயமாக வந்தீர்கள் என்று விசாரிப்பார்கள் என்று ரேவதி சொன்னதும், ''எவ்வளவு சிறப்பான வரவேற்பு'' என்றான் சூர்யா. ''வருகிறவர் எங்காவது அலைந்து களைத்துப் போய் வந்திருக்கலாம். அதுவுமில்லாமல் வெளியே போய் விட்டு வீட்டிற்குள் வரும் யாருக்கும் முதலில் தேவைப்படுவது தண்ணீர்தான். எனவே தாகம் தணிப்பதுதான் சிறந்த விருந்தோம்பல், அதுவும் தண்ணீரை விலைக்கு வாங்கி அவுன்ஸ் கணக்கில் செலவழிக்கும் நகரங்களில் எதிர்பார்க்க முடியாததும் கூட.''

பெருமையுடன் முறுவலித்த ரேவதி இன்னும் பல விஷயங்களையும் சொன்னாள். வீட்டில் பெண்கள் மட்டும் இருக்கும்போது அங்கு வரும் பிற ஆண்கள் வெளித் திண்ணையிலேயே அமர்ந்து பேசி விட்டு உள்ளே வராமல் போய் விடுவது, எந்த வீட்டில் நல்லது கெட்டது எது நடந்தாலும் ஊரே பங்கெடுத்துக் கொள்வது. உப்பு பெறாத விஷயங்கள் கூட ஊதி ஊதி பெரிதாக்கப் படுவது. பாசத்தை வெளிப்படையாய் கொட்டும் எளிய மக்கள், தன் மானத்திற்கு சிறு பங்கம் நேர்ந்தாலும் கொதித்தெழுவது, என ரேவதி விவரித்துக் கூற அவளையே பார்த்தபடி அசையாமல் உட்கார்ந்திருந்தான் சூர்யா: பதில்



எதுவும் வராமல் போகவே பேச்சை நிறுத்தி அவனைப் பார்த்த ரேவதிக்கு அவன் பார்வையில் முகம் சிவந்தது.

சூர்யாவுடன் பேசும் நேரங்கள் சுவாரஸ்யமாக இருக்க ரேவதி அவன் வரும் நேரங்களை மிகவும் எதிர்பார்க்கத் தொடங்கினாள். இரவில் அவன் தாமதமாக வரும் சமயங்களில் மனம் தவிக்க தொடங்கவே, ரேவதிக்கு இதெல்லாம் நல்லதற்கில்லை என்று தோன்றியது. முன்பு செய்திருந்த முடிவை மறந்து தான் இப்படி அலைபாய்வது சரியல்ல. முன்பாவது கல்லூரிக்கு செல்வதிலும் படிப்பதிலும் பெரும் பகுதி நேரம் போய் விடும். இப்போது வீட்டிலேயே இருப்பதால் புத்தி கெட்டுப் போய் விட்டோம். தன்னைத் தானே நொந்து கொண்டாள். அவளுக்கு உதவி செய்கிறாற்போல் அந்த வாரத்திலேயே ராமசாமியும் ராஜமும் மகளைப் பார்க்க வந்திருந்தனர். ஊரில் நடக்கும் சித்திரை திருவிழாவுக்கு பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் அழைப்புடன்.

திருமணமானதிலிருந்து சேர்ந்தாற் போல் ஒருவாரம் கூட நீங்கள் வந்து தங்கவேயில்லை. இந்த முறை கண்டிப்பாய் ஒரு வாரமாவது தங்கி விட்டுத்தான் போக வேண்டும்'' என்று ராமசாமி சூர்யாவிடம் வற்புறுத்தினார்.

''எனக்கு ஒரு வாரம் விடுமுறை கிடைப்பது கடினம். நிச்சயமாக முடியாது'' என்றான் சூர்யா.

சென்னையின் கசக்கிப் பிழியும் கூட்டத்திலும் இந்தியர்களின் பூலோக சொர்க்கமாக கருதும் அமெரிக்க ஐரோப்பிய நாடுகளிலும் வசித்தவருக்கு தமிழ்நாட்டின் ஒரு மூலையிலுள்ள கிராமத்தில் ஒரு வாரம் வசிப்பது எப்படி சாத்தியம்? அப்பாவின் அறியாமைக்கு இரங்கிய ரேவதி ''நான் உங்களுடன் இப்போது வருகிறேன். அவருக்கு விடுமுறை கிடைக்கும்போது அவர் வரட்டும்'' என்றாள்.

''இருவரும் சேர்ந்தே போகலாமே! சூர்யாவின் குரலில் இப்போது போக வேண்டாம் என்ற குறிப்பு தெரிந்தது.

சதா வீட்டிலேயே அமர்ந்து கொண்டு, சூர்யாவையே நினைத்துக் கொண்டு, அவன் வரவையே எதிர்பார்த்துக் கொண்டு இருப்பதிலிருந்து விடுபட வேண்டும். தன் மனதை திசை திருப்ப வேண்டும் என்று நினைத்த ரேவதி அவன் குறிப்பை கண்டு கொள்வதாக இல்லை. பெற்றோருடன் கிளம்பத் தயாரானாள்.

சூர்யா மாதாமாதம் அவள் செலவுக்கென கொடுக்கும் தொகை இதுவரை செலவழிக்கப்படாமல் இருந்தது. சூர்யா வேலைக்கு கிளம்பிச் சென்றதும், ராமசாமியும் ராஜமும் உடல்நிலை சரியில்லாத தங்கள் தூரத்து உறவினர் ஒருவரைப் பார்க்கச் சென்றனர். அவர்களை மருத்துவமனையில் இறக்கி விட்ட ரேவதி டிரைவரை தி.நகர் போகச் சொன்னாள். அப்பத்தாவிற்கு புடவை, வெற்றிலை உலக்கை, பொன்னாத்தாவுக்கு, அவள் பேரனுக்கு, சரசா, குப்பன், எதிர்வீட்டு அக்கா, பக்கத்து வீட்டு பாட்டி, தன் தோழிகள் என ஒவ்வொருவருக்காய் பார்த்து வாங்கிக் கொண்டு வீடு திரும்பினாள். இரவு ஏழு மணிக்கு பஸ் என்று அப்பா சொல்லியிருந்தார். ரேவதி எதிர்பாராமல் உடனே அவர்களுடன் கிளம்பியதால் இரயிலில் டிக்கெட் கிடைக்கவில்லை. ரேவதி தான் வாங்கிய பொருட்களை பெட்டிகளில் அடுக்கி எல்லாவற்றையும் பேக் பண்ணி முடித்தபோது அறைக் கதவு மெதுவாய் தட்டப்பட்டது. திறந்தபோது சூர்யா நின்றிருந்தான். நகர்ந்து வழிவிட்டாள் ரேவதி. உள்ளே வராமல் அறை வாயிலில் நின்றபடியே தயாராய் வைக்கப்பட்டிருந்த லக்கேஜைப் பார்த்தவன் ''புறப்படத் தயார் போலிருக்கே!'' என்றான்.

''ஆமாம். எங்க வீட்டிற்கு நான் போய் ரொம்ப நாள் ஆகிவிட்டது. காலேஜ் பரிட்சை, ப்ராக்டிகல்ஸ் என்று போகவே முடியவில்லை இவ்வளவு நாளாய்.''

''கண்டிப்பாய் போய்த்தான் ஆக வேண்டுமா?'' போகாதே யேன் என்ற கெஞ்சல் குரலில் ஒலிக்க அதை கண்டு



கொள்ளாத ரேவதி அருகில் கிடந்த டவலை எடுத்து மடிக்கத் தொடங்கினாள்.

''உனக்கு மற்ற எல்லாவற்றையும் விட உங்க ஊர் தான் முக்கியம். இல்லையா ரேவதி?''

''என்ன ரேவதி, ஏதாவது பேசு.''

''ம்... இரவு ஏழு மணிக்கு பஸ்'' என்றாள் ரேவதி.

''இல்லை. பத்து மணிக்கு ப்ளைட்'' என்றான் சூர்யா.

''ப்ளைட்டா? அப்பா டிரைன்ல டிக்கெட் கிடைக்கலை. பஸ்சுல போகலாம்னு சொன்னாரே!''

மூன்று ப்ளைட் டிக்கெட்களை அவளிடம் கொடுத்தான் சூர்யா.

''பத்து மணிக்கு ப்ளைட். இங்கிருந்து எட்டு மணிக்கு கிளம்ப வேண்டும். முடிந்தால் நான் வருவேன். ஒரு வேளை வரத் தாமதமானால் டிரைவர் வருவார். திருச்சி ஏர்போர்ட்டில் என் நண்பனின் கார் வந்து உங்களை ஊரில் கொண்டு விட்டுவிடும். பேங்கில் உன் சேவிங்ஸ் அக்கௌண்டில் பணம் தேவையான அளவு போட்டிருக்கிறேன். டெபிட் கார்டு நீ வைத்திருக்கிறாயல்லவா? அருகிலுள்ள டவுனில் போய் ஏ.டி.எம்.மில் பணம் எடுத்துக் கொள். வேறு எது வேண்டுமானாலும் எனக்கு போன் செய்.''

ரேவதி எதுவும் பேசத் தோன்றாமல் நின்றிருந்தாள். தான் பிறந்த ஊரில் பெற்றோர்களிடம் தற்காலிக விடுமுறைக்கு செல்வதற்கு இத்தனை முக்கியத்துவம் கொடுத்து, அக்கறை எடுத்துக் கொள்வானாயின் இவன் எவ்வளவு உயர்ந்தவன் என்று நினைத்தாள். இவனை வாழ்க்கையில் சந்தித்தபோதும், திருமணமே செய்து கொண்டபோதும் கூட சேர்ந்து வாழ முடியாத தான் எவ்வளவு துரதிர்ஷ்டசாலி என்ற நினைவில் கண்கள் கலங்கின.

''வேறு ஏதாவது...'' என்ற சூர்யாவுக்கு பதிலாக போய் வருகிறேன்'' என்றாள் ரேவதி.

அங்கு கிராமமே விழாக் கோலம் பூண்டிருந்தது. வீடுகள் வெள்ளையடிக்கப்பட்டு, சாணத்தினால் மெழுகி பெரிய கோலங்களுடன் பொலிவு பெற்றிருந்தன. தெரு வெங்கும் தோரணங்கள் கட்டப்பட்டு கோவிலில் கட்டப் பட்ட ஸ்பீக்கர்களிலிருந்து பாட்டு சத்தம் ஊரையே நிறைத்தது. இத்தனை நாளில் சென்னையின் வாழ்க்கை முறைக்கு பழகிப் போன ரேவதிக்கு தன்னுடைய ஊரே புதிதாய் தெரிந்தது. தினமும் அவளைப் பார்க்க யாராவது வீட்டிற்கு வந்து கொண்டே இருந்தார்கள்.

"நம்ம ரேவதி கல்யாணமானதும் தேய்ச்சு வெச்ச பித் தளை விளக்காட்டம் பளபளன்னு இருக்குதே" என்றார் எதிர் வீட்டுபாட்டி.

"மாப்பிள்ளை பொண்டாட்டி பஸ்ல வந்தா உடம்பு நோகுமுன்னு ஏரோப்ளேன்ல அனுப்பிச்சாராமே?" வியப் புடன் விசாரித்தாள் பக்கத்து வீட்டு அக்கா.

"மாளிகை மாதிரி வீடாம். கப்பல் மாதிரி காராம். கைத் தட்டினா ஓடிவரும் வேலைக்காரர்களாம். ரேவதி தான் வீட்டுக்கு மகாராணி போல இருக்குதாமே?" மூக்கில் விரல் வைத்தாள் உறவு பெண் ஒருத்தி.

"அதைவிட ஆச்சரியம். மாமியார், நாத்தனார், காய்ச்சலே இல்லையாம்" என்றாள். அவள் கூட நின்ற இன்னொருத்தி.

ஆளுக்கு ஆள் விசாரிப்பதில் பூரித்துப் போன அப்பத்தா அவர்கள் போனதும் காலடி மண்ணை எடுத்து பேத்திக்கு சுற்றிப் போடுவார். சில வருத்தங்களும் வரத்தான் செய்தது. "கல்யாணமாகி ஆறு மாசமாச்சே! இன்னுமா குளிக்கற?" டாக்டர் கிட்ட போனீங்களா?"

"சீக்கிரமா ஒரு குழந்தையை பெத்துக்கற வழியைப் பார்."

"நாள் தள்ளி போனா குழந்தை பிறக்கறது கஷ்டமாயிடும். உன் கணவருக்கு நீதான் எடுத்துச் சொல்லணும்" என்பது போன்ற அறிவுரைகளுக்கு பதில் சொல்ல முடியாமல் ரேவதி திணறினாள்.



வந்தவர்களை உள்ளே அழைத்துப் போய் சாப்பிடக் கொடுத்து நாசுக்காக ராஜம் விலக்கினாலும் தனிமையில் மகளிடம் சொல்லவே செய்தார்.

"நீங்க இந்த காலத்து பசங்க. ஜாலியா இருக்கிறதுக்காக குழந்தையை தள்ளிப் போடுவீங்க. நியாயம்தான். ஆனா எங்களுக்கு ஒரு பேரனோ பேத்தியோ பார்க்கணும்னு ஆசையா இருக்கு ரேவதி. நீ ஒரு குழந்தையை பெற்று எங்களிடம் கொடுத்துவிட்டு படி. அல்லது அவருடன் வெளிநாடு போ. என்ன வேண்டுமானாலும் செய். குழந் தையை நாங்க வளர்த்துக்கிறோம்." மகளின் முகவாயைப் பற்றி கொஞ்சினார்.

அப்பத்தா வேறு விதமாய் ஆரம்பித்தார். "உன் புருஷன் சின்ன வயசிலிருந்து பல ஊர் சுற்றியவன். பல தினுசு மனுஷங்களை பார்த்தவன். இப்போ உன் மேலுள்ள பிரியத்தில் உன்னைச் சுற்றி வருகிறான். ஆம்பளை புத்தி ஒரே மாதிரி இருக்காது கண்ணு. விரைவில் குழந்தை குட்டி என்று ஏற்பட்டால்தான் அவனுக்கு குடும்பத்தில் பிடிப்பு ஏற்படும்."

எல்லாவற்றிற்கும் பொதுவாக சிரித்து வைத்தாள்.

சூர்யா தினமும் இரவில் அவளுக்குப் போன் செய்வான். நலம் விசாரிப்புகள், சாதாரணமான உரையாடல் களுடன் ரேவதி பேச்சை முடித்துக் கொள்வாள்.

அன்று ரேவதியின் பெரியப்பா பெண் மரகதம் அவளைப் பார்க்க வந்திருந்தாள். பள்ளி இறுதி வரை படித் திருந்த அவளை பக்கத்து ஊரில் தான் கட்டிக் கொடுத் திருந்தனர். ரேவதியின் வயதுதான் அவளுக்கும். கையில் ஒன்றும் இடுப்பில் ஒன்றுமாக இரண்டு குழந்தைகள். திரு வாழ்வின் அலுப்பு அவள் முகத்தில் தெரிந்தது. திரு விழாவில் கோவிலுக்கு போவதற்கென அணிந்து வந் திருந்த பட்டுச்சேலை பல இடங்களில் கசங்கியிருந்தது.

கைக்குழந்தை ஈரமாக்கியதில் புடவையில் திட்டு திட்டாய் ஈரம் வேறு. தோட்டத்தில் வேலையாட்களை மேற்பார்வை செய்தபடி அலைவதில் முகம் கறுத்து முடியெல்லாம் வறண்டு வெடித்திருந்தது.

இந்த மரகதம்தான் முதன் முதலில் ரேவதிக்கு புடவை கட்ட கற்றுக் கொடுத்தது. முட்டியை தொடும் முடியும், நல்ல நிறமுமாய் இருப்பாள். தன் அழகின் கர்வம் ஒவ்வொரு அசைவிலும் வெளிப்பட அவள் நடப்பதே நடனம் போலிருக்கும். அப்போதுதான் ரிலீசான படங்களில் வரும் கதாநாயகிகளைப் போல் விதவிதமாக தலை வாருவதும், பிரிப்பதும் அலங்காரம் செய்வதுமாய் இருப்பாள். அவளை எங்காவது அழைத்துப் போவதென்றால் வீட்டை விட்டு அவள் வெளி வருவதற்குள் காத்திருப்பவர்களின் பொறுமையே போய்விடும்.

பக்கத்து ஊரில் கண்ணுக்கெட்டியவரை நஞ்சையும் புஞ்சையுமாய் இருக்கும். ஒரு பெரிய இடத்து பையனுக்குத்தான் அவளை திருமணம் செய்து வைத்தார்கள். மாப்பிள்ளை நல்லவர் என அடிக்கடி பெரியம்மா சொல்ல கேட்டிருக்கிறாள் ரேவதி.

"எப்படியிருக்கே ரேவதி?" என்றபடி அவள் கைகளைப் பற்றிக் கொண்டாள் மரகதம்.

"நீ எப்படியிருக்கிறாய் மரகதம்? உன் கணவர் நலமா? நேற்று பெரியப்பா வீட்டிற்குப் போயிருந்தேன். உன்னைப் பார்க்க வேண்டும் என்று சொன்னபோது திருவிழாவுக்கு நீயே வருவாய் என்று சொன்னார்கள். வா உட்காரலாம். குழந்தைகள் என்ன சாப்பிடுவார்கள்?" என்று பேசியபடியே அவர்கள் முன்பு உட்கார்ந்து பேசும் தாழ்வாரத்துக்கு அழைத்துச் சென்றாள் ரேவதி.

பொன்னாத்தா முறுக்கும் காபியும் கொண்டு வந்து கொடுத்து விட்டு போகத் தூணில் சாய்ந்து அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.



உறவினர், பார்த்த சினிமா, பழகிய இடங்கள், கோவில் மண்டபம், குளத்தங்கரை பிள்ளையார் என்று பேச்சு சுற்றிச் சுற்றி வந்தது. இரவு மரகதம் அங்கேயே தங்கி விட குழந்தைகள் தூங்கிய பின்னரும் இருவரும் பேசிக் கொண்டிருந்தனர்.

"நீ ஏன் மரகதம் இப்படியாகி விட்டாய்? உன்னைப் பார்த்தால் பழைய மரகதம் போலவே இல்லை. உன் அழகும் நளினமும் எங்கே போயிற்று?"

"போ ரேவதி, நம்ம அப்பத்தா ஒரு பழமொழி சொல்லுமே" கோடி சேலை ஒரு வெள்ளைக்கு. குமரிப் பெண் ஒரு பிள்ளைக்கு என்று. இரண்டு பிள்ளை பெத்தாச்சு. பின் நான் எப்படியிருப்பேன்."

"இரண்டு பெற்றால் நீ கிழவியாகி விடுவாயா? உனக்கும் என் வயது தான் மரகதம். அதுகூட நினைவில்லையா? என் நாத்தனார் தாரிணி நம்மை விட பெரியவர். இரண்டு குழந்தைகள் தான் அவர்களுக்கும். திருமணத்தின் போது நீயே பார்த்தாயில்லையா, அவர்கள் எப்படியிருந்தார்கள் என்று. உன்னை நன்றாக உடுக்க வேண்டாம். உற்சாகமாக இருக்க வேண்டாம். உண்ண வேண்டாம் என்று யார் தடுத்தார்கள் சொல்?"

"திருமணத்திற்கு முந்திய என் வாழ்க்கையை நினைத்தால் போன ஜென்மத்து நினைவு போலிருக்கிறது ரேவதி. பிறந்ததும், வளர்ந்ததும் வாழ்க்கைப் பட்டதும் இங்கேயே தான். சிறுவயதிலிருந்து பார்த்து பழகிய அதே முகங்கள். அதே இடங்கள். ஒரே மாதிரி திருவிழா, திருமணம் சடங்கு எல்லாம். என்னிக்காவது ஒரு சினிமாவுக்கு போகணும்னா திருச்சிதான் போகணும். அங்கே போய் அடிச்சி பிடிச்சி டிக்கெட் வாங்கி படம் பார்த்துட்டு மறுபடி வீடு வந்து சேருவதற்குள் அலுத்துப் போய் இனி படமே போக வேண்டாம்னு ஆயிடும். என்ன இருக்கிறது?

ரேவதி இங்கே? சதா குண்டு சட்டிக்குள் குதிரை ஓட்டற மாதிரி இருக்கு. வயலில் விதையிட்ட பயிரை பிடுங்கி வேறு இடத்தில் நட்டால்தானே பயிர் ஆரோக்கியமாய் வளரும்? பெண்களும் அதுபோலத்தான். பயிர்களைப் பற்றி தெரிந்த அளவுக்கு எங்கப்பாவுக்கு பெண்களைப் பற்றி தெரியவில்லை. நல்லவேளை சித்தப்பாவாவது புத்திசாலித்தனமாய் நல்ல இடமாய் பார்த்து வெளியூரில் உனக்கு வாழ்க்கை அமைத்துக் கொடுத்தார். நகர வாழ்வின் சொகுசும் நாகரீகமும் உன்னிடம் தெரிகிறது ரேவதி. பேச்சில் நளினம் கூடியிருக்கிறது. முகத்தின் பளபளப்பு மனதின் மகிழ்ச்சியை சொல்கிறது. எனக்கு சந்தோஷமாக இருக்கிறது ரேவதி" என்றாள் உள்ளார்ந்த மகிழ்ச்சியுடன்.

''என்ன இருந்தாலும் பிறந்த மண்ணிலேயே இறுதி வரை வாழ்வது தனிதான். இல்லையா மரகதம்?''

''உனக்குத் தெரியவில்லை ரேவதி. இங்கே வசிப்பவர்களில் வயதானவர்களை தவிர பெரும்பான்மையானோர் வாய்ப்பு கிடைக்காததால் இங்கேயே இருப்பவர்கள்தான். பிறந்த மண், சொந்த ஊர் என்கிற நம் நினைவுகள் எல்லாமே இறந்த காலத்தை தேடுகிற நம்முடைய முயற்சி தானே தவிர எல்லா இடத்திலும் நீரும், நிலமும் ஒண்ணுதான். இடமாற்றங்கள்தான் ஒரு மனிதனின் வாழ்வை சுவாரஸ்யமாக்குகின்றன. மேலும் சிறிது நேரம் பேசியபடியே மரகதம் தூங்கிப் போக அவள் சொன்னவற்றை அசைபோட்டபடியே ரேவதி இரவு முழுவதும் விழித்திருந்தாள்.

மரகதம் போன அடுத்த நாள் ரேவதியின் தோழிகள் வாணி, வித்யா, கலா எல்லோரும் அவளைப் பார்க்க வந்திருந்தனர். கல்லூரி படிப்பு, தன் சென்னை கல்லூரி நண்பர்கள் என உற்சாகமாய் எல்லோரும் பேசிக் கொண்டிருந்தனர்.

"ரேவதியை பார்த்தா கல்யாணமான பொண்ணு மாதிரியே தெரியல. முன்பு இருந்த மாதிரியேதான் இருக்கா'' என்றாள் வாணி.



''ஏன் கல்யாணமானா எக்ஸ்ட்ராவா ஏதாவது வந்து ஒட்டிக்குமா என்ன?'' என்றாள் ரேவதி கிண்டலாய்.

''ஆமாம். பொறுப்பு வந்து ஒட்டிக்கும். கல்யாணமான பெண்கள் தாய் வீட்டுக்கு வரும்போது பண்ணுகிற அட்டகாசம் இருக்கே, எங்க வீட்டுக்காரர் சாப்பாட்டுக்கு என்ன பண்ணுவாரோ தெரியல, வீட்டை அப்படியே போட்டுட்டு கிளம்பி வந்துட்டேன். வேலைக்காரி வந்திருப்பாளோ என்னவோ, என்று ஒரே புலம்பல்தான். என்னவோ இவங்க கல்யாணத்துக்கு முன்னாடி வீட்டுக்காரர் சாப்பாடே சாப்பிடாத மாதிரியும், வீட்லயே இருந்திருக்காத மாதிரியும் பேசுவார்கள்'' வாணி சொல்ல வித்யா அவள் தலையை தட்டினாள்.

''போடி லூசு. அவங்க புலம்பல் வீட்டைப் பத்தி இல்ல. புருஷனைப் பத்திதான். என் கணவரைப் பார்க்காமல் என்னால் இருக்க முடியவில்லை. என்று நம்ம பெரிசுகளிடம் நேரடியாகச் சொல்ல முடியுமா? அதனால் இப்படி ஏதாவது சொல்லிவிட்டு இரண்டு நாளில் ஓடி விடுகிறார்கள்."

''ஓஹோ, விஷயம் இதுதானா? அப்ப நீகூட...'' என்று கலா இழுக்கவும், ''அது எங்க பர்சனல். ரொம்பத் துருவாதே கலா'' என்றபடி பேச்சை மாற்றினாள் ரேவதி.

விடியற்காலையில் எல்லோரும் ஆற்றங்கரைக்கு போனார்கள். வெய்யில் உச்சிக்கு வரும் வரை ஆற்று நீரை கலக்கினார்கள். ரேவதிக்கு ரொம்ப நாட்களுக்கு ஆற்று நீரில் நீந்திக் குளிப்பது உற்சாகமாக இருந்தது. குளித்து முடித்ததும் வழியில் பறித்த மாங்காயைக் கடித்தபடி ஆலமர நிழலில் அமர்ந்தனர். சற்று நேரம் ஓய்வெடுத்த பிறகு ஒத்தையடிப் பாதையில் அரட்டை அடித்தபடி வீட்டிற்கு நடந்தனர்.

''ஏய் ரேவதி நம்ம மேக்ஸ் லெக்சரர் சிடுமூஞ்சி சுப்பு லட்சுமிக்கு கல்யாணம் ஆயிடிச்சி தெரியுமா?''

"நிஜமாவா? நாப்பது வயசு வரை கல்யாணமே வேண்டாம்னு இருந்தாங்களே!"

"எந்த வயசிலும் காதல் வரும்மா. பக்கத்துள்ள பாய்ஸ் காலேஜ் லெக்சரர் சபாபதியை காதலிச்சி கல்யாணம் பண்ணிக்கிட்டாங்க. இப்ப நீ மேடத்தைப் பார்க்கணும். எப்பவும் ஒரே சிரிப்புதான். நம்ம காலேஜ் புன்னகை அரசி இப்ப அவங்கதான்."

எல்லோரும் பெரிதாய் சிரித்தனர்.

"உங்க அருக்காணி அக்கா வீட்ல பணம் நகையெல்லாம் திருட்டு போயிடிச்சாமே!" வாணியை விசாரித்தாள் வித்யா.

"அந்த அக்கா ரொம்ப கஞ்சம். பஸ்ஸில போக இரண்டு ரூபா செலவாகும்னு நாலு கிலோ மீட்டர் நடந்தே போறவங்க; யாரையும் உள்ளே விடமாட்டாங்க. எப்படி கேர்லஸ்ஸா இருந்தாங்க?"

"கேர்லஸ் இல்லடி. நைட் என்னவோ உருட்டற சத்தம் கேட்டு அந்தக்கா எழுந்திருக்காங்க. அவங்க வீட்டுக்காரர் பூனைதான் உருட்டுது என்றதும் பேசாமல் படுத்துக் கொண்டார். திருடன் சாவகாசமாய் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு போகிற வேகத்தில் அருக்காணி அக்காவின் காலை வேறு மிதித்து விட்டு ஓடியிருக்கிறான். வீட்டுக்காரர் மிதிப்பதாக நினைத்து தூங்கிக் கொண்டிருந்தவரை ஓங்கி ஒரு மிதி மிதித்து..." அவள் முடிக்கும் முன் எல்லோரும் சிரிக்கத் தொடங்கினார்கள்.

"கோவில் பக்கத்து வீட்டு ஐயர் பாட்டி செத்து போச்சாமே பாவம்?"

"மேலத்தெரு துரைசாமி மாமாகூட இரண்டாங் கல்யாணம் பண்ணிக்கிட்டாராம். பொண்டாட்டி செத்தப்ப மண்ணெண்ணெயை ஊத்தி நானும் சாகிறேன்னு உடம்புல தீ வைச்சிக்கப் போனவர் அவர். இப்ப இரண்



டாம் மனைவியுடன் விசேஷம் தவறாமல் வளைய வருகிறார். ஆண் புத்தி. சே!"

"ரேவதி சத்தியமூர்த்திக்கு கல்யாணம் ஆயிடிச்சே தெரியுமா?" என்றாள் வித்யா.

"தெரியும். எங்க ஒன்றுவிட்ட அத்தை மகன் சத்ய மூர்த்தி தானே! எனக்கு பத்திரிகை வந்தது. அப்போ செமஸ்டர் சமயமாதலால் வர முடியவில்லை" என்றாள் ரேவதி.

"அவருக்கு எங்க சொந்தத்தில்தான் பெண் எடுத்திருக்கிறார்கள். உங்க அத்தைக்கு உன்னைத்தான் மகனுக்கு கட்டணும்னு வெகுநாள் ஆசை. உங்கப்பாதான் கண்டிப்பா முடியாதுன்னு சொல்லிட்டாராம். பெண்ணைக் கொடுத்தால் ரேவதி கண் முன்னே உள்ளூரிலேயே இருப்பாள் என உன் சொந்தக்காரர்கள் எல்லாம் கூட சொல்லிப் பார்த்தார்களாம். உங்கப்பா மசியலையாம். அதனால் நீ தப்பிச்சே ரேவதி. அவனுக்கு குடி சீட்டுன்னு இல்லாத கெட்ட பழக்கம் இல்லையாம். வீட்டினருக்கே இது இப்ப தான் தெரியுமாம். அவன் பாதி நாள் வீட்டிற்கே வருவதில்லையாம். கட்டியவளும் பாவம் பாதி நாள் பிறந்த வீட்டில்தான் கிடக்கிறாள்." வித்யா விவரிப்பதை கேட்ட ரேவதி, "இதுவரை இந்த விஷயம் எதுவுமே எனக்குத் தெரியாது. அப்பாவோ அம்மாவோ இதுவரை மறைமுகமாய் கூட சத்யமூர்த்தியை பற்றி வீட்டில் பேசியதே இல்லை" என்றாள்.

"உன் மனசில் குழப்பத்தை ஏற்படுத்த வேண்டாம்னு இருந்திருப்பாங்க. எனக்கே இப்பதான் தெரியும்."

பேசியபடியே வீடு வந்து சேர்ந்தவர்கள், வடை பாயசத்துடன் ராஜத்தின் சமையலை ஒரு பிடி பிடித்தனர். சுவற்றைப் பிடித்தபடி அவர்கள் அருகே வந்தார் அப்பத்தா. தினமும் ஆயுர்வேத எண்ணெய் மசாஜ் செய்வதிலும், டவுனிலிருந்து வரும் பிஸியோ தெரப்பிஸ்ட் அளிக்கும்

பயிற்சிகளிலும் அப்பத்தா மெதுவாக எதையாவது பிடித்த படி வீட்டிற்குள் நடக்க தொடங்கியிருந்தார்.

"ஏண்டி பொண்ணுங்களா, நீங்கெல்லாம் எப்ப கல்யாணம் பண்ணிக்கப் போறீங்க?" என்றார் ரேவதியின் தோழிகளிடம்.

"என்ன கிண்டலா அப்பத்தா? பேத்திக்கு புளியங் கொம்பை பிடிச்சிட்டோம்னு எங்களை கேலி பேசறீங்களா? நாங்க எல்லாம் படிச்சி முடிக்க வேண்டாமா? வேலை பார்க்க வேண்டாமா?"

"போடி இவளே, வயசாகிலியா உனக்கு? காலா காலத் துல கல்யாணம் பண்ணினாதானே, உடம்புல தெம்பு இருக்கிறபோதே புள்ளை குட்டின்னு பெத்துக்க முடியும்?"

"அது உனக்குத் தெரியுது எங்கப்பனுக்கு தெரி யலையே?" என்றாள் கலா.

"ஏண்டி வித்யா. படிப்பு முடிஞ்சதும் உனக்குக் கல்யாணம் பண்ணிறனும் மாப்பிள்ளை ரெடியா இருக்குன்னு உங்கப் பன் சொன்னதா செய்தி வந்ததே!" என்றாள் அப்பத்தா.

"அடிப்பாவி. எங்கிட்ட சொல்லவேயில்ல?" என தோழிகள் கிண்டலில் இறங்கும் முன் "அடப்போ போ அப்பத்தா" என்றாள் வித்யா சலிப்புடன். எங்க பக்கத்து தோட்டத்துக்காரருக்கு ஒரே பையன். நிலம் நீச்சுன்னு நிறைய இருக்கு. பையன் டவுனில் மருந்துக்கடை வைத்திருக்கிறான். தினமும் டவனுக்கு போய் விட்டு எங்க வீட்டு வழியாகத்தான் போவான். சொத்து எங்கேயும் போய்டக் கூடாதுங்கறதுக்காக எங்க ரெண்டு பெரிசுகளும் சேர்ந்து இப்படி ஒரு ஏற்பாட்டை செய்திருக்கின்றன."

"ஏன் வித்யா, பையன் நல்லவன்தானே?" என்றாள் ரேவதி.

"நல்லவன்தான். ஆனால் அதற்கு மேல் சொல்ல என்ன இருக்கிறது. ஒரு வரப்பு தாண்டி வாழப் போகிறேன். தின மும் எங்க வீட்டு வாயிலில் நின்றபடி அவங்க வீட்டைப் பார்ப்பேன. இனி அவங்க வீட்டு வாயிலில் நின்றபடி எங்க வீட்டைப் பார்க்கப் போகிறேன்."



"அப்பத்தா, நீங்க பேசாம ரேவதியை நாலு பசங்க இருக்கிற வீடா குடுத்திருந்தா நாங்க ஆளுக்கு ஒருத்தரை கட்டிக்கோமில்ல?" என்றாள் வாணி.

"இப்ப மட்டும் என்ன, அப்பத்தா நம்ம கல்யாணத்தைப் பத்தி இவ்வளவு சொல்றாரே. மூணு பேர் இல்லாட்டி என்ன, இருக்கிற ஒருத்தரை மூணு பேரும் கட்டிக்கிட்டா போச்சு" என்றாள் வாயாடி கலா.

அவள் காதைத் திருகிய அப்பத்தா, "எங்க மாப்பிள்ளை சொக்கத் தங்கம்டி. உன் வால் தனத்தை வேறு எங்காவது வெச்சுக்க" என்றார்.

ஊர் திருவிழா பொங்கல், கரகாட்டம், தீ மிதித்தல், பூக் கரகம் என எல்லா விசேஷங்களோடும் நடந்து முடிந்தது. கோவில், உறவினர் வீடு, விருந்து, தோழிகள் என சுற்றிய பின் ரேவதி சென்னைக்கு கிளம்பும் நாளும் வந்தது. மறுநாள் காலையில் ப்ளைட்டுக்கு மாப்பிள்ளை டிக்கெட் அனுப்பியிருக்கிறார்" என்றார் ராமசாமி.

இரவு சாப்பாடு முடிந்து கயிற்றுக் கட்டிலில் அமர்ந்து காற்று வாங்கியபடி அவர்கள் பேசிக் கொண்டிருந்தனர். ராஜம் வேக வைத்த நிலக் கடலையை ஒவ்வொன்றாய் உரித்து தட்டில் வைக்க அதை ரேவதி எடுத்துக் கொறித் துக் கொண்டிருந்தாள்.

"ரேவதி நீ வந்து பதினைந்து நாள் போனதே தெரிய வில்லை.

நீ போன பிறகு வீடே வெறிச்சோடிப் போயிடும்" என்றார் ராஜம்.

"கவலைப்படாதேம்மா. நான் படிச்சி முடிச்சதும் நம்ம ஊருக்கே வருகிற மாதிரி ஏதாவது வேலையை ஏற்பாடு செய்து கொள்கிறேன்" என்றாள் ரேவதி.

"இதெல்லாம் என்னம்மா பேச்சு?" என்றார் ராமசாமி. "மாப்பிள்ளையின் படிப்புக்கும் பதவிக்கும் இங்கே என்ன

வேலை பார்க்க முடியும்? இப்பவே நீ வந்ததிலிருந்து தினமும் இரண்டு முறை என்னிடம் போன் செய்து ரேவதி என்ன செய்கிறாள்? எப்படியிருக்கிறாள்? என்று துளைக்கிற மாப்பிள்ளை உன்னை இங்கே தங்கியிருக்க அனுமதிப்பாரா?"

என்னிடம் தினமும் பேசுபவன் அப்பாவிடம் வேறு என்னைப் பற்றி எதற்கு விசாரிக்க வேண்டும்? மனைவியை கை விட்டுப் போய் விட்டான் என்று தன் மேல் பழி வராமலிருக்க கரிசனமாய் காட்டிக் கொள்கிறான் போலும்.

ராமசாமியும் ராஜமும் ஒரு உறவினர் வீட்டு பிரச்சினை பற்றி பேசிக் கொண்டிருக்க, ரேவதிக்கு வித்யா சொன்ன விஷயம் நினைவு வந்தது. "நம்ம அத்தையோட பையன் சத்யமூர்த்திக்கு என்னைக் கேட்டார்களா அப்பா? அவர்கள் வீட்டில் கூட இப்போ ஏதோ பிரச்சனை என்று சொல்கிறார்களே!" என்று அப்பாவிடம் கேட்டாள் ரேவதி.

"ஆமாம்மா. அந்த பெண் பாவம். அவங்கம்மா வீட்டிலேயேதான் இருக்கிறது. உன்னை அவளுக்கு கொடுத்துதான் ஆக வேண்டும் என்று அத்தை என்னிடம் வந்து அழுதார்கள். பெண்ணை பக்கத்திலேயே வைத்துப் பார்த்துக் கொள்ளலாம் என்று உன் பெரியப்பா சித்தப்பா, மாமா எல்லோரும் எனக்கு அறிவுரை சொன்னார்கள். ஆனால் சத்தியமூர்த்தி குணம் சரியில்லை என்று முன்பே நான் லேசுபாசாகக் கேள்விப்பட்டேன் பணக்கார பையன் என்றால் அப்படித்தான் இருப்பார்கள். திருமணமானால் பொறுப்பு வந்து சரியாகி விடுவான் என்று அதை யாரும் பொருட்படுத்தவில்லை. என்னதான் தங்கத்தில் செய்தாலும் ஊசியை கண்ணில் குத்திக் கொள்ள முடியுமா? கண் முன்னாடியே இருந்து பெண் கஷ்டப்படுவதை விட தூரத்திலிருந்தாலும் நன்றாக வாழ்வதைத்தான் எந்த தகப்பனும் விரும்புவான். நானும் அப்படித்தான்."

"அப்படியானால் நான் இங்கே திரும்பி வந்தால் நீங்க சந்தோஷப்பட மாட்டீங்களா அப்பா?"



"ச்சீ என்ன இது. முட்டாள் தனமாக உளறிக் கொண்டு, போய் வாயை கழுவு" என்றார் ராமசாமி அதட்டலுடன்.

அப்பாவின் அதட்டலுக்கு கண்கலங்கிய மகளை அணைத்துக் கொண்டார் ராஜம்.

"ரேவதி ஏதோ பேச்சுக்கு கேட்டதுக்கு இப்படியா அதட்டுவாங்க? பாருங்க முகம் எப்படி வாடிப் போச்சு?" என்றார் கணவரிடம். மகளைப் பார்த்த ராமசாமி வாஞ்சையுடன் அவள் தலையை வருடினார். "ரேவதி உனக்கு எப்பேர்ப்பட்ட மாப்பிள்ளை கிடைத்திருக்கிறார் என்று நாங்க தினமும் நினைச்சி பூரிச்சி போயிருக்கோம். நீ அபசகுனம் மாதிரி சட்டுன்னு இப்படி சொன்னால் எங்களுக்கு எப்படியிருக்கும் பார்? திருமணமான பெண், நலுங்கு, சம்பிரதாயம்னு வீட்டுக்கு வந்தா சந்தோஷமா இருக்கும். பிள்ளை பேறுக்குன்னு வந்தா வசதியில்லாதவன் கூட கடன் வாங்கி சந்தோஷமா செலவு செய்வான். அதே பெண் புருஷனில்லாமல் வந்தால் அவளுக்கு மட்டுமல்ல, வளர்ப்பு முறை சரியில்லையோன்னு பெத்தவங்களுக்கே கெட்ட பெயர்தான் வரும். மகளைப் பார்க்கிற ஒவ்வொரு நிமிடமும் மறுகி சாகிற நிலைதான் வரும். இது எதையும் யோசிக்காமல் இந்த மாதிரி விளையாட்டாய் இனி பேசக்கூடாது" என்றார் ராமசாமி.

அவருக்கு தலையாட்டிய ரேவதி எதுவும் பேசாமல் அம்மாவின் மடியில் படுத்துக் கொண்டாள்.

## 11

ரேவதி அப்பாவுடன் சென்னைப் போய் சேர்ந்தபோது சூர்யா ஏர்போர்ட்டுக்கே வந்திருந்தான். அவளைப் பார்த்ததும் அவன் முகம் மலர்ந்து போய் வரிசைப் பற்கள் மின்னின.

"பிரயாணம் எப்படியிருந்தது?" என ராமசாமியிடம் சம்பிரதாயமாக விசாரித்தவன்,

''என்ன ரேவதி, இப்படி ஒரேயடியாக போய் இருந்து விட்டாயே?'' என்றான் ரேவதியிடம்.

''ஆம், நான் போனதே தெரியவில்லை'' என்றபடி அப்பாவுடன் இணைந்து நடந்தாள் ரேவதி.

அன்றுமாலையே ராமசாமி விடைபெற்று கிளம்ப, வேலைக்கு வந்த சரோஜா ரேவதியிடம் குறைபட்டுக் கொண்டாள். ''ஐயா முகத்துல களத்தே இல்லம்மா. நீங்க இல்லாம ரொம்ப வாடிப் போய்ட்டாரு'' என்று.

''தம்பி நல்லா சாப்பிட்டு பதினைந்து நாளாகுதும்மா. எப்பவும் எதையோ தொலைச்ச மாதிரி மூஞ்சியை தூக்கி வெச்சிகிட்டே திரிஞ்சுது. இனிமே இப்படி தனியா விட்டுட்டு போகாதீங்கம்மா'' என்று சோமு உரிமையுடன் சொன்னார்.

இப்படியெல்லாம் பேசினால்தான் வீட்டிலிருப்பவர்கள் சந்தோஷப்படுவார்கள் என்று இவர்களுக்கு நினைப்பு போலும். சூர்யாவிடம் கூட நம்மைப் பற்றி இப்படி ஏதாவது பேசியிருப்பார்கள் என்ற நினைவில் ரேவதியின் இதழ்கள் புன்னகை மலர்ந்தது.

''என்ன அவ்வளவு சிரிப்பு? சொன்னால் நானும் சிரிக்கிறேன்'' என்றபடி அவள் அருகே வந்து அமர்ந்தான் சூர்யா.

என்ன சொல்வதென யோசித்த ரேவதி, ''ஊருக்கு போனபோது நடந்ததைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தேன்'' என்றாள்.

ஒரு நிமிடம் அமைதியான சூர்யா, ''இந்த உலகத்திலேயே உனக்கு பிடித்தது உங்க ஊரும், வீடும்தான் இல்ல?'' என்றான்.

''இல்லை'' என்றாள் ரேவதி.

அவன் வியப்புடன் பார்க்கவும், ''இத்தனை நாள் பார்த்த ஊர், அப்பா, அம்மா வேறு. இப்ப பார்க்கிறவங்க வேற. என் பெரியப்பா பெண் மரகதம் சொன்னாள், பிறந்த



ஊர்னு நாம தேடி வர்றது பழைய நினைவுகளைத்தான்; ஊரை அல்ல என்று. அது உண்மைபோலனு தோணுது. இத்தனை நாளாய் இருந்த தெளிவு போய் இப்போது குழப்பமாக இருக்கிறது'' என்றாள்.

''உனக்கு இன்னும் ஒரு வருட படிப்பு பாக்கியிருக்கிறது. இப்போதே குழம்பினால் எப்படி? முதலில் படிப்பை முடிக்கப் பார்'' என்றான் சூர்யா சமாதானமாக.

கல்லூரி தொடங்கியதும் ரேவதிக்கு நாட்கள் விரைந்தன. நடந்து முடிந்த செமஸ்டரில் தொண்ணூறு சதவீதம் மதிப்பெண் பெற்றிருந்தாள். வகுப்பில் எல்லோருடைய வாழ்த்துக்களையும் பெற்றுக் கொண்டு மகிழ்ச்சியுடன் வீடு திரும்பினாள். இத்தனை வருட வழக்கப்படி முதன் முதலில் பெற்றோருடன் விஷயத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டி அவர்களுக்கு போன் செய்தாள். ராஜம்தான் போனை எடுத்தார். ரேவதி உற்சாகத்துடன் சொன்னதை கேட்டவர், ''நீ எவ்வளவு மார்க் வாங்கினாலும், எத்தனை பேரில் முதலாவதாக வென்றாலும் எங்களுக்கு அதனால் பெருமை இல்லை. நீ கர்ப்பமாய் இருப்பதாக ஒரு வார்த்தை சொல். பூரித்துபோய் விடுவோம்'' என்ற ராஜம், ''வெளியே யாரோ கூப்பிடுகிறார்கள். அப்புறம் பேசுகிறேன்'' என்றபடி போனை வைத்தார்.

சின்னவயதிலிருந்தே ரேவதிதான் ஸ்கூல் பர்ஸ்ட் வருவாள். அம்மாவுக்கு மகள் பரிசு வாங்குவதைப் பார்க்க தலைகால் புரியாது. அந்த கிராமத்து பள்ளியில் பரிசாகத் தரும் பென்சில் டப்பாவை எல்லோரிடமும் காண்பித்துக் கொண்டிருப்பாள். அப்பா தெரு திண்ணையில் அமர்ந்தபடி மணியக்காரர், கணக்குப் பிள்ளை, பெருமாள் கோவில் ஐயர் எல்லோரும் போகும்போது கூப்பிட்டு ''இந்த ரேங்க் கார்டை பாத்து சொல்லுங்க'' என அடக்கமாக பெருமை யடிப்பார். அப்பத்தா திருஷ்டி சுற்றிப் போடுவார். ஒவ்

வொரு பரிட்சைக்கும் உனக்கு சுத்திப்போட்டே வருஷம் அரைமூட்டை மிளகாய் காலியாகுது என போலியாய் அலுத்துக் கொள்வார். ஒவ்வொரு வெற்றியையும் விட்டினர் கொண்டாடியே பழகியிருந்ததால் ரேவதிக்கு அம்மாவின் பதில் ஏமாற்றத்தையும் துக்கத்தையும் ஏற்படுத்தியது. காலையிலிருந்த மகிழ்ச்சியெல்லாம் வடிந்துபோய் அமர்ந்திருந்தபோது சூர்யா ஸ்வீட்டுடன் உற்சாகமாய் வீட்டிற்குள் நுழைந்தான்.

"கங்கிராட்ஸ் ரேவதி. உன் பிரின்ஸிபால் அப்பாவுக்கு தெரிந்தவர் இல்லையா? எதேச்சையாக போன் செய்த போது சொன்னார். மணமான பிறகும் கூட பெண்கள் படிப்பில் இத்தனை ஆர்வம் காட்டுவது பாராட்டப்படவேண்டிய ஒன்று என்று ஏகத்துக்கும் உன்னை புகழ்ந்தார்."

ரேவதியின் இதழ்கள் இகழ்ச்சியாய் சுழித்தன. "பாவம் அவர் கல்யாணமான எல்லா பெண்களையும் போல என்னையும் நினைத்துக் கொண்டு பாராட்டை வேஸ்ட் பண்ணிவிட்டார். நம்மை பற்றி அவருக்கு என்ன தெரியும்?"

"ரேவதி. ஒரு நல்ல விஷயத்துக்கு வாழ்த்தும்போது அதை நல்லவிதமாய் ஏற்பதுதான் முறை. அதை விட்டுவிட்டு நீ என்ன பேசுகிறாய்?" என்றான் சூர்யா லேசான அதட்டலுடன்.

பதிலே பேசாமல் எழுந்து சென்றாள் ரேவதி. கோபத்துடன் கையில் இருந்த ஸ்வீட் பாக்சை வீசி எறிந்தான் சூர்யா. இனிப்புகள் சிதறி அறை எங்கும் தெறித்தன.

தனியே சென்று அமர்ந்த ரேவதிக்கும் மனம் உறுத்தியது. வாழ்த்த வந்தவனிடம் முகத்திலடித்தாற் போல் நடந்து கொண்டோமே என்றிருந்தது.

மறுநாளும் அதற்கடுத்த நாளும் எப்போதும் போல் சென்றாலும் சூர்யா அவளிடமிருந்து விலகியே இருந்



தான். தேவை ஏற்பட்டால் மட்டும் பேசிக் கொண்டு, தன் வேலைகளை கவனித்துக் கொண்டு இருக்கத் தொடங்கினான். ரேவதிக்கு ஒருபுறம் வேதனையாகவும் மறுபுறம் எரிச்சலாகவும் இருந்தது. ஆரம்பத்திலிருந்தே சிறுவிஷயங்களை பெரிதுபடுத்துவது இவன் பழக்கமாகிவிட்டது. வழக்கம் போல பழகியிருந்தால், "நேற்று எனக்கு மனசு சரியில்லை. அதனால்தான் அப்படி நடந்து கொண்டேன். ஸாரி." என நடந்த விஷயங்களை அவனிடம் சொல்லியிருப்பாள். அவனது ஒதுக்கம் அவள் வாயைக் கட்டிப்போட்டது.

அன்று மதியம் ரேவதிக்கு க்ளாஸ் இல்லை. எதிர்பாராமல் கிடைத்த விடுதலையில் காபி ஷாப், ஹாப்பிங் மால், ஐஸ்க்ரீம் பார்லர் என எல்லோரும் அதை கொண்டாட பறந்தனர். ரேவதிக்கு டிரைவர் வழக்கம் போல் கல்லூரி விடும் நேரத்திற்குதான் வருவார். தாமதமாகவோ, முன்னாலேயோ வருவதாக இருந்தால் அவரிடம் முன்பே சொல்லி வைக்க வேண்டும். சூர்யாவிடம் டிரைவரின் போன் நம்பரை கேட்டு அவருக்கு தகவல் தரலாமா என்று நினைத்த ரேவதி. அவனிடம் சகஜமான உறவில்லாத சூழ்நிலையில் கேட்கவும் துணிவின்றி யோசித்தவள் கல்லூரி லைப்ரரிக்கு போனாள்.

தன் பாடத்திற்கு வேண்டிய சில ரெபரன்ஸ் புத்தகங்களை எடுத்து குறிப்பு எழுதிக் கொண்டவள், தான் ரொம்ப நாட்களாய் படிக்க நினைத்த ஒரு புத்தகம் கிடைக்கவே அதில் ஆழ்ந்து போனாள். நேரம் போனதே தெரியவில்லை அவளுக்கு. லைப்ரேரியன் வந்து கதவைப் பூட்ட வேண்டும் என்றதும்தான் எழுந்து வெளியே வந்தாள். சே! வெகுநேரமாகி விட்டது. டிரைவர் வந்து காத்திருப்பார். பேசாமல் புக்கை வீட்டிற்கே எடுத்து போய் படித்திருக்கலாம். வேகமாய் நடந்தவள், "ஹாய் ரேவதி" என்ற குரல் கேட்டு திரும்பினாள்.

சிரித்தபடி சரண் வந்து கொண்டிருந்தான்.

பதிலுக்கு "ஹலோ" சொன்னபடி நடக்கத் தொடங்கினாள் ரேவதி.

இரண்டே எட்டில் அவளுடன் வந்து சேர்ந்து கொண்டவன், "ஏன் ரேவதி தனியாகப் போகிறாய்? உன் க்ளாஸ் மேட்ஸ் யாரும் காணோம்? இவ்வளவு நேரம் என்ன செய்து கொண்டிருந்தாய்?" என்று விசாரித்தான்.

"இன்னிக்கு மதியம் ப்ரீ. அதனால் லைப்ரரிக்கு வந்தேன். நேரம் போனதே தெரியவில்லை." நிற்காமல் நடந்தபடியே பேசினாள் ரேவதி. அந்த பிரம்மாண்ட பல்கலைக் கழக வளாகம் ஆளின்றி வெறிச்சோடி கிடந்தது. அந்த தனிமையில் அவனுடனிருப்பது மெல்லிய நடுக்கத்தை ஏற்படுத்தியது. தன் பதட்டத்தை குறைக்க பேச ஆரம்பித்தாள்.

"நீ இங்கே, இந்த நேரத்தில் என்ன செய்கிறாய் சரண்?"

"நாளை முதல் ப்ரீயட் ரெக்கார்ட் சப்மிட் பண்ண வேண்டும். இன்கம்ளீட் எல்லாம் உட்கார்ந்து முடித்தேன். ஆமாம், உன் பெற்றோர்கள் எங்கேயிருக்கிறார்கள் ரேவதி?" என்றான் ஆர்வத்துடன்.

"திருச்சி அருகே ஒரு கிராமம்."

"உன்னுடன் பிறந்தவர்கள் எத்தனைப் பேர்?"

"யாருமில்லை. நான் மட்டும்தான்."

"ரொம்ப லக்கி இல்லையா? அம்மா அப்பா ரொம்ப செல்லம் கொஞ்சுவார்களே!"

"ம்."

"இங்கே எங்கே தங்கியிருக்கிறாய் ரேவதி?"

லைப்ரரி கட்டிடத்திலிருந்து நுழைவாயில் தூரத்தில் இருந்தது சரணுக்கு பேச சாதகமாய் அமைந்தது.

சரண் அவனது குடும்பத்தைப் பற்றி சொன்னான்.



"எனக்கு நேட்டிவ் சென்னைதான் ரேவதி. அப்பா கலிபோர்னியாவில் இருக்கிறார். ஒரு அண்ணன். திருமணமாகி பெஹ்ரைனில் வசிக்கிறான். அம்மாவும் நானும் என் படிப்பிற்காக இங்கேயே இருக்கிறோம். அப்பா படிப்பு முடிந்ததும் என்னை அங்கு வந்துவிட சொல்கிறார். ஆனால் எனக்கு இந்தியாவை விட்டு எங்கும் போக பிடிக்கவில்லை. அம்மாவுக்கு தர்மசங்கடம். அப்பாவையும் அங்கே விடமுடியாமல். என்னையும் இங்கே தனியாக விடமுடியாமல். உன் படிப்பு முடிந்தவுடனே உனக்கொரு திருமணத்தை செய்து வருகிறவளிடம் உன்னை ஒப்படைத்து விட்டால் நான் அப்பாவிடம் போய்விடுவேன் என்று தினமும் புலம்பல்தான். இந்த காலத்தில் ஆண்கள் இந்த வயதில் திருமணம் செய்து கொள்வதில்லை. இன்னும் சில வருடங்கள் போகட்டும் என்றால் கேட்மாட்டேன்கிறார்கள்."

பதில் எதுவும் சொல்லாத ரேவதி, அவன் சொல்வதை தலையசைத்து கேட்டபடியே பார்க்கிங் ஏரியாவை அடைந்தபோது அவளது கார் அங்கே நின்றிருந்தது.

டிரைவரிடம் "ரொம்ப நேரமாக காத்திருக்கிறீர்களா?" என்றபடியே கதவைத் திறந்த ரேவதி, டிரைவர் சீட்டில் அவருக்கு பதிலாக அமர்ந்திருந்த சூர்யாவை பார்த்ததும் திடுக்கிட்டாள். இவனையா, இத்தனை நேரம் காக்க வைத்தோம்? மனம் குறுகுறுத்தது.

ரேவதியைப் பார்த்த சூர்யாவின் முகம் கோபத்தில் சிவந்தது.

ஏதோ பேச வாயை திறந்தவன், பற்களை கடித்து வார்த்தைகளை அடக்கினான். ரேவதியின் பின்னால் நின்றிருந்த சரண் சூர்யாவை கவனிக்காமலேயே ரேவதியிடம் விடைபெற்று போக, ரேவதி சுற்றி வந்து முன்சீட்டில் அமர்ந்தாள்.

அவள் அமர்ந்த பின்னும் கார் நகராமல் இருக்கவே கேள்விக் குறியுடன் நிமிர்ந்து பார்த்தாள்.

''யார் அவன்?'' என்றான் சூர்யா கடுமையான குரலில்.

''யார்?'' என்று விழித்த ரேவதி, ''ஓ இப்போது என்னுடன் பேசியப்படி வந்தவனா? அவன் பெயர் சரண். இன்பர்மேஷன் டெக்னாலஜி படிக்கிறான்.''

''உன்னுடைய க்ளாஸ் கூட இல்லை. அவனுடன் என்ன அரட்டை?''

''நான் கல்லூரி லைப்ரரிக்கு போயிருந்தேன். படித்துக் கொண்டிருந்ததில் நேரம் போனதே தெரியவில்லை. லேட்டாயிடிச்சின்னு நான் வரும்போது அவன் க்ளாசிலிருந்து வந்தவன் பார்த்துவிட்டு கூட வந்தான்.''

''எவ்வளவு நாளாய் இந்த பழக்கம்?''

''எந்த பழக்கம்?''

''இப்படி கல்லூரியில் எல்லோரும் போனபிறகு தனியாய் அமர்ந்து பேசுவது?''

''சும்மா வாய்க்கு வந்தபடி பேசாதீர்கள். இத்தனை நாளில் நான் தாமதமாக வருவது இதுதான் முதல்முறை.'' ரேவதிக்கு கோபம் வந்தது.

''ஓ. இத்தனை நாளாய் க்ளாஸ்டைமிங்ஸ்லேயே பேசி முடித்து விடுவீர்களா? கல்லூரியில் பேசுவதோடு நிற்கிறதா அல்லது செல்போனிலும் காதல் பேச்சுகள் தொடர்கிறதா?''

''ச்சே! உங்கள் பேச்சு ரொம்ப கேவலமாக இருக்கிறது.''

''ஆமாம். அவனுடன் கொஞ்சி பேசியவளுக்கு என் பேச்சைக் கேட்டால் அப்படித்தான் இருக்கும். வெறும் பேச்சுடன் நிறுத்திக் கொள்வானா அல்லது.....''

அவன் முடிப்பதற்கு முன் காரைவிட்டு இறங்க முயற்சித்தாள் ரேவதி. ஒரு கையினால் அவள் கைகளை இறுக்கியவன், அவள் திமிறவும் முகவாயைப் பற்றி



தன்புறம் திருப்பினான். ரேவதிக்கு கழுத்து ஒடிந்து விடும்போல் வலித்தது.

''இன்று நான் சொல்வதைக் கேட்காமல் நீ இங்கிருந்து நகர முடியாது. நினைவில் வைத்துக் கொள்.'' என்றான் கண்டிப்புடன்.

முதன்முதலாய் அவன் கண்டிப்பதை பார்த்த ரேவதி அமைதியாய் இருக்கவே அவன் சொல்லத் தொடங்கினான்.

''கல்லூரி முடிந்து நாலரைமணிக்கு வழக்கமாய் வெளியே வருபவள் ஆறுமணிவரை வராமலிருக்கே டிரைவர் பயந்துபோய் எனக்கு போன் செய்தார். உன் செல்லுக்கு டிரை பண்ணினேன். ஸ்விட்ச் ஆப் ஆக இருந்தது.''

'லைப்ரரிக்குள் செல்லும்போது செல்போன் கண்டிப்பாக ஆப் செய்ய வேண்டும்' என்பதால் போனை ஆப் செய்திருந்தது நினைவு வந்தது ரேவதிக்கு. எதுவும் பேசாமல் அவன் சொல்வதைக் கேட்டாள்.

''டிரைவரிடம் உன் வகுப்பறையில் போய் பார்த்துவிட்டு வரச் சொன்னேன். அவர் பார்த்துவிட்டு வந்து அங்கு யாருமே இல்லை என்றார். ஆபீசில் இன்று ஒரு முக்கியமான மீட்டிங்கில் இருந்தேன் நான். எல்லோரிடமும் காலில் விழாத குறையாய் மன்னிப்பு கேட்டுக் கொண்டு ஓடி வந்தேன். அலுவலகத்திலும் யாருக்கும் விஷயம் தெரியவில்லை. உன் டீச்சர்ஸ் எல்லோரும் போய்விட்டிருந்தனர். பிறகு ப்யூனை பிடித்து அவன் மூலமாய் ஹாஸ்டலில் தங்கியிருக்கும் உன் வகுப்பு பெண் ஒருத்தியை விசாரித்தோம். இன்று மதியம் க்ளாஸ் இல்லை என்றும் நீயும் மதியமே வகுப்பறையை விட்டு வெளியே போனதை பார்த்ததாகவும் சொன்னாள். அவள் மூலமாய் உன்னுடன் நெருக்கமாய் பழகும் சிலருக்கு போன்பண்ணி கேட்டுவிட்டு அவர்களுடனும் நீ இல்லை என்று சொல்லிவிட்டாள். டிரைவருக்கு விஷயம் தெரிந்தால் முதலில் உன்னிடமுள்ள மரியாதை போய்விடும்.

எனவே ஸ்பெஷல்க்ளாசில் இருக்கிறதாய் முடிந்ததும் நாங்கள் இருவரும் வேறு இடத்துக்கு போக வேண்டி இருப்பதால் நானே அழைத்து வருகிறேன் என்று சொல்லி அவரை அனுப்பி வைத்துவிட்டேன். மேற் கொண்டு என்ன செய்வதென்று புரியாமல் தலையைப் பிடித்தபடி நான் உட்கார்ந்திருக்கிறேன். எவனோ ஒருவனிடம் கொஞ்சி பேசியதில் உலகையே மறந்து நீ இருந்திருக்கிறாய்."

அவள் பதில் பேச முற்பட, அதற்கு இடம் தராமல் மறுபடி பேசினான். "நன்றாக நினைவில் வைத்துக் கொள். நீ கல்லூரிக்கு வந்திருப்பது படிப்பதற்காகத்தான். காதலிக்க அல்ல. என் வீட்டில் என்னுடன் இருக்கும்வரை நான் அதை அனுமதிக்கமாட்டேன்." அத்துடன் அவளை விட்டுவிட்டு காரைக் கிளப்பினான். ஆக்ஸிலேட்டரை அழுத்திய விதத்தில் கார் பறந்தது. அவள் மேலுள்ள ஆத்திரத்தை அதில் காட்டினான் போலும். பயந்து போய் கண்களை இறுக மூடிய ரேவதி வீடு வந்ததும்தான் கண்களை திறந்தாள். இறங்கி கதவை சாத்திவிட்டு போர்டிக்கோ படியேறும்போதே சூர்யா ரிவர்ஸ் எடுத்தான். டயர்கள் தரையில் உரசும் ஓசை கேட்டு அப்படியே நின்றாள் ரேவதி. அவளை திரும்பியும் பாராமல் வேகமாய் வெளியே சென்று மறைந்தான் சூர்யா.

உள்ளே செல்லத் தோன்றாமல் தோட்டத்து படிகளில் ஓய்ந்து அமர்ந்தாள் ரேவதி. அவனது வேலையை கெடுத்து விட்டதாக என் மேல் கோபம் போலும். ஏற்கனவே கொஞ்சம் கோபத்தில்தான் இருந்தான். இன்று அது அதிகமாகிவிட்டது. ஒரு கல்லூரி லைப்ரரியில் அமர்ந்து படித்தது இத்தனை பெரிய பிரச்சனையாகுமா? சக மாணவனுடன் சாதாரணமாக பேசியதற்கு காதல் வர்ணம் பூசுமளவிற்கு கேவலமானவனா சூர்யா? ரேவதிக்கு வேதனையாக இருந்தது. சூர்யாவை சந்தித்த நாளாய் இது



நடப்பதுதான். இருவரும் கோபத்தில் சண்மன்ன தெரி யாமல் பேசிக் கொள்வது. இடையில் கொஞ்சநாள் நல்ல நண்பர்களாக இருந்தார்களே. மறுபடி ஏன் இப்படி சண்டையிடவேண்டும்?

எவ்வளவு நேரம் அப்படியே உட்கார்ந்திருந்தாளோ தெரியாது. மெத்தென்று ஏதோ மேலே பட்ட உணர்வில் திரும்பினாள். மூன்று வயதிருக்கும். ஒரு பெண் குழந்தை சிரிப்புடன் நின்றிருந்தது. கூட நிற்பது அதன் அம்மா போலும். வியப்புடன் எழுந்து நின்ற ரேவதியிடம் ஒரு அறிமுகப் புன்னகையுடன் பேசினாள் அந்த பெண்.

"உங்க எதிர்வீட்டிற்கு நாங்க புதுசா குடிவந்திருக்கோம். சொந்த ஊர் நாகர்கோவில் பக்கம். இங்கே என் கண வருக்கு டிரான்ஸ்பர் ஆகியிருக்கிறது. எங்களுக்கு வீட்டு வேலைக்கு ஒரு ஆள் வேண்டும். மளிகை சாமான், பால் எல்லாம் எங்கே கிடைக்கும் என்று யாரையாவது கேட்க லாம் என்று பார்த்தபோது நீங்க உட்கார்ந்திருந்ததை பார்த் தோம். அதனால் உங்களிடம் கேட்கலாம் என்று வந் தோம். உங்களுக்கு ஒண்ணும் தொந்தரவில்லையே!"

"நோ. ப்ராப்ளம். உள்ளே வாருங்கள்" என்று அவர் களை உள்ளே அழைத்து சென்ற ரேவதி சோமுவை கூப் பிட்டு அவள் கேட்ட விபரங்களை சொல்ல சொன்னாள். சரோஜாவிடம் வீட்டு வேலையாள் கிடைத்தால் ஏற்பாடு செய்யும்படி சொல்லிவிட்டு அந்த குழந்தையைத் தூக்கி மடியில் வைத்துக் கொண்டு "உன் பெயர் என்ன?" என்றாள் ரேவதி.

"காருண்யா" என்று சொன்ன அந்த குழந்தை நிமிடத் தில் வீட்டையே சுற்றி வந்தது. கையில் ஒரு டார்பி பொம்மையுடன் தானும் ஒரு பொம்மை போல் அழகாக இருந்தது. முருகன் கொண்டு வந்த காபி பலகாரத் தட்டை அவர்களிடம் கொடுத்தபடி "காருண்யா உனக்கு என்ன ஸ்வீட் பிடிக்கும்?" என்றாள் ரேவதி.

''அல்வாதான் பிடிக்கும்'' என்றபடி தட்டிலிருந்த அல்வாவை வாய்நிறைய திணித்துக் கொண்டாள் காருண்யா. ''இந்த டிரஸ் பாப்பாவுக்கு நல்லா இருக்கே யார் வாங்கி தந்தா சொல்லு?''

''அம்மா'' என்று அம்மாவை கைக்காட்டிய குழந்தை, ''ஆன்ட்டி நீங்க'' என்றபடி ஒரு கை அல்வாவை எடுத்து ரேவதியின் வாயிலும் திணித்தாள்.

''சோ ஸ்வீட்'' என்றபடி அவளை அணைத்துக் கொண்டாள் ரேவதி.

''அல்வாதான் ஆன்ட்டி, ஸ்வீட்டா இருக்கு'' என்று தலையாட்டிய குழந்தையிடம் ''நீயும்தான்'' என்று கொஞ்சினாள்.

''இந்த டார்பி அழகாயிருக்கே. இது யார் வாங்கி தந்தா'' என்று பேசியபடியே ரேவதி பொம்மையை தொட்டதும், வெடுக்கென்று அதை இழுத்துக் கொண்ட காருண்யா ரேவதியை பிடித்து தள்ளிவிட்டு எழுந்து தன் அம்மா விடம் ஓடினாள். எதிர்பாராமல் குழந்தை தள்ளியதால் சோபாவின் பின்னால் சாய்ந்த ரேவதி திகைத்துப் போனாள்.

எழுந்து அவள் அருகே வந்த காருண்யாவின் அம்மா. ''ஸாரி, தப்பா நெனைச்சுக்காதீங்க. அந்த பொம்மைன்னா அவளுக்கு உயிர். யாரையும் தொட விடமாட்டாள். நாங்க எடுத்தா கூட பிடிக்காது. சின்னகுழந்தைதானே, தவறா நினைக்காதீங்க'' என கெஞ்சலாக கேட்டவள், திரும்பி மகளை அதட்டினாள். ''பெரியவங்க கிட்ட இப்படித்தான் மரியாதை இல்லாம நடந்துக்குவாங்களா? ஆன்ட்டியிடம் ஸாரி கேள்'' என்றதும் குழந்தை கண்ணை கசக்கத் தொடங்கினாள்.

கடைசியில் ரேவதியே சமாதானம் செய்தாள். ''அவளுக்கு விபரம் புரியுமா என்ன? ஏன் மிரட்டுகிறீர்கள்?'' என்று.



மேலும் சிறிது நேரம் பேசியபிறகு, ''எங்க வீட்டுக்கு வரவேண்டும்'' என்ற அழைப்புடன் இருவரும் கிளம்பிச் சென்றனர்.

''ஸ்வீட், காரம் நிறைய சாப்பிட்டுவிட்டதால் இரவு உணவு வேண்டாம். தூங்கப் போகிறேன்'' என சோமுவிடம் கூறிவிட்டு ரேவதி தன் அறைக்கு சென்றாள். ஆனால் தூங்க முடியாமல் அவளுக்கு எழுதவும் படிக்கவும் நிறைய இருந்தன. சூர்யா இன்னும் வீட்டிற்கு வர வில்லை. அலுவலகத்தில் வேலை இருக்குமா? அல்லது அவள் மேலுள்ள கோபத்தில் வராமல் இருக்கிறானா? ரேவதிக்கு இப்போது படிக்க முடியாது போல் தோன்றவும் ரெக்கார்டுகளை பிரித்து வைத்து வரையத் தொடங்கி னாள். கைகள் வரைந்து கொண்டிருந்தாலும் சூர்யாவின் கார் சத்தத்துக்கு காதுகள் காத்திருந்தன. இரவு பத்து மணிக்கு அவன் கார் வந்து போர்டிகோவில் நிற்கும் சத்தமும், சிறிது நேரம் கழித்து அவன் படிகளில் வரும் ஓசையும் கேட்கவே அதற்கு பின் கவலையகன்றவளாய் பாடத்தில் கவனத்தை செலுத்தினாள்.

சிறிது நேரத்தில் கதவு தட்டப்பட்டு கையில் டிரேயுடன் சோமு உள்ளே வந்தார். ''ப்ரெட், பால் இருக்குமா. பசிக் கிறப்ப சாப்பிடுங்க'' என்று அவர் டேபிள் மீது வைத்து விட்டு போனதும் அவர் பால் ஒரு நன்றியுணர்வு ஏற்படவே செய்தது. பாலை குடித்துவிட்டு மேலும் சிறிது நேரம் படித்துவிட்டு படுத்தாள் ரேவதி.

அன்றைய சூர்யாவின் பேச்சு நினைவுக்கு வந்து வருத்தத்தை ஏற்படுத்தியது. எப்படி சொன்னான் அவளைப் பற்றி? இத்தனை மார்க் வாங்கி காட்டியபிறகு காதலிக்க கல்லூரிக்கு போவதாகவா நினைக்கிறான்? புரண்டுபடுத்தவளின் நினைவு மாலையில் சந்தித்த

குழந்தையிடம் சென்றது. நன்றாக விளையாடிக் கொண் டிருந்த குழந்தை திடீரென எப்படி பிடித்து தள்ளினாள்? தன் பொருள் என்றதும் அந்த கோபம் வந்ததா? சட்டென்று எழுந்து அமர்ந்தாள் ரேவதி. சூர்யாவின் இந்த கோபத்திற்கும் அடிப்படை அன்புதானா? அதனால் விளைந்த உரிமை உணர்ச்சியில் வந்த கோபமா இது? பொம்மையை தொட்டால் கோபப்படும் காருண்யாவும், சக மாணவனிடம் பேசினால் கோபப்படும் சூர்யாவும் ஒரே மனநிலையில் இருப்பதாக தோன்ற ரேவதியால் அன்று லேசில் உறங்கமுடியவில்லை.

நிகிலா பெற்றோரிடம் விடுமுறைக்கு சென்றவள், அங்கேயே கல்லூரியில் சேர்ந்துவிட்டாள். மாதவிக்கு அது மிகவும் ஏமாற்றமாக இருந்தது. கமலத்திடம் போனில் குறைப்பட்டுக் கொண்டாள். ''நிகிலா கல்லூரியில் இங்கே சேர்ந்தால் அவளுடன் இருக்கலாம் என்று ஆசை யாக இருந்தேன். ஏன் இப்படி செய்தீர்கள் அத்தை?'' என்று.

பதிலுக்கு சிரித்த கமலம் அவள் பள்ளிப் படிப்புக்காக நாலுவருடமாய் ஹாஸ்டலில்தான் இருக்கிறாள். கல்யாண மான பிறகு புருஷன் கூட போயிடுவா. அதுவரை எங்களுடன் இருக்கட்டும் என்றுதான் இங்கேயே சேர்த்துவிட்டோம். அதுவுமில்லாமல் ஒரு குழந்தை பிறக்கிறவரை நாங்க உங்களை தொந்தரவு செய்வதாக இல்லை. மாசமாகிவிட்டதாக ஒரு பேச்சு நீ சொன்னால் போதும். நாங்க எல்லோரும் உன்னை பார்க்க வந்து விடுவோம்'' பதில் சொல்லமுடியாத ரேவதி மௌன மானாள்.

''ஹலோ.. ஹலோ.. ரேவதி'' என கமலம் மறுபடி குரல் கொடுக்கவே,

''சொல்லுங்க அத்தை'' என்றாள் ரேவதி.



''என்ன ரேவதி அத்தை தொல்லை கொடுக்கிறாள் என்று தோன்றுகிறதா? எந்த விஷயத்திற்கும் உன்னையோ சூர்யாவையோ நாங்க வற்புறுத்த மாட்டோம். உங்க இஷ்டப்படி வாழ்வை அனுபவிக்கலாம். உங்களிடமிருந்து நாங்க எதிர்பார்ப்பது எங்க வாரிசை மட்டும்தான்?''

''என் படிப்பு முடியவேண்டும் என்றிருக்கிறோம் அத்தை'' ரேவதி மென்று விழுங்கியபடியே சொன்னாள்.

''இன்னும் ஆறுமாதத்தில் உன் படிப்பு முடிந்துவிடு மில்லையா? சரியாய் ஆறாவது மாதம் நல்ல செய்தி சொல்ல வேண்டும்.''

அவர் மனசுக்கு இதமாய் பேசிவிட்டு போனை வைத்த ரேவதிக்கு இன்னும் ஆறுமாசம்தான் நமக்கு இந்த வாழ்வு என்கையில் மனதை பிசைந்தது. ஆறுமாதத்தில் குழந் தையை எதிர்பார்க்கும் மாமியார் தங்கள் பிரிவை எப்படி எடுத்துக் கொள்வார்? யோசித்தபடி நின்ற போது மறுபடி போன் ஒலிக்கவும் ரேவதி போனை கையில் எடுத்தாள். கமலம்தான் பேசினார்.

''நான் முன்பே சொல்ல மறந்துவிட்டேன ரேவதி. உன் மாமாவுடைய சித்தப்பா பேரனுக்கு அடுத்த வாரம் சென்னையில் திருமணம். இங்கே போன் பண்ணி சொல்லி, பத்திரிகையும் அனுப்பியிருக்கிறார்கள்.''

''ஆமாம் அத்தை. இங்கே கூட பத்திரிகை வந்திருக் கிறது. நாங்க வீட்டிலில்லாத சமயம் வந்திருக்கிறார்கள். சோமு அண்ணாவிடம் சொல்லிவிட்டு போயிருக்கிறார்கள்.''

''அந்த கல்யாணத்துக்கு மாமா அடுத்த வாரம் சென்னை வருகிறார். அவருடன் நீயும் சூர்யாவும் திருமணத்துக்கு போய்விட்டு வாருங்கள். மாப்பிள்ளையின் அம்மா மிகவும் நல்ல மாதிரி. நம்ம வீட்டு விசேஷத்திற்கு எப்பவும் முதல் ஆளாய் வந்து நிற்பாள். சூர்யாவுக்கு பெரும்பாலும் சொந்த பந்தங்களின் விசேஷத்திற்கு வருவதென்றாலே பிடிக்காது.

"நீதான் அவனை வற்புறுத்தி அழைத்துப் போக வேண்டும்."

"நான் எப்படி அத்தை சொல்வது?"

"ஏன், நீதானே மனைவி? நீ சொல்லாமல் வேறு யார் சொல்லுவார்கள்?"

கமலத்தின் கேள்விக்கு பதில் கூற முடியாமல், "எனக்கு படிக்க நிறைய இருக்கிறது அத்தை" என்றாள் ரேவதி.

"படிக்கிற பிள்ளைகள் பங்ஷனுக்கு போகக்கூடாதா என்ன? நீயும் சூர்யாவுடன் சேர்ந்து அவன் வார்த்தைகளை திருப்பிப் படிக்க பழகிவிட்டாய் போலும்" என்றார் கமலம். ஆற்றாமையுடன், அவர் பேசியதை பொறுக்காத ரேவதி. "அப்படியெல்லாம் இல்லை அத்தை. நாங்கள் போகிறோம்" என்றாள் அவசரகுரலில்.

"சரிம்மா. இது நீங்க கல்யாணமான பிறகு போகிற முதல் விசேஷம். நல்லா டிரஸ் பண்ணிட்டு போ. இதற்காக நானும் நிகிலாவும் உனக்கு ஒரு டிசைனர் ஸாரி எடுத்து தைத்து வைத்திருக்கிறோம். உனக்கு பர்ப்யூம்கள், நெய்ல்பாலீஷ், மேக்கப் செட் என தாரிணி நிறைய அனுப்பி வைத்திருக்கிறாள். மாமா வரும்போது எல்லாவற்றையும் கொடுத்தனுப்புகிறேன். நீ நன்றாகத்தான் உடுத்துவாய் என்றாலும் நம் உறவினர் முன் சிறிதும் குறைவாக தெரிந்துவிடக் கூடாது என்ன?" அவர் சொன்னதற்கெல்லாம் 'சரி' என்றபடியே ரிசீவரை வைத்த ரேவதிக்கு, முகம் கொடுத்தே பேசாதவனை என் கூடவா என்று எப்படி கூப்பிடுவது என்று தயக்கமாக இருந்தது.

தன் அலுவலக அறையின் கண்ணாடி தடுப்பின் வழியே பார்த்த சூர்யா ரேவதி வெகுநேரம் போனில் பேசுவதைப் பார்த்ததும் கடுப்பானான். வேலை முடிந்து எழுந்து வந்தவன், "இத்தனை நேரம் பேசுமளவிற்கு எந்த வி.ஐ.பி. போனில் வந்தார்?" என்றான் எரிச்சலுடன்.



"உங்க அம்மாதான்" என்றாள் ரேவதி வெளியே பார்த்தபடி.

"என்னவாம்?"

.............. அவன் அதிகாரக்குரல் எரிச்சலை ஏற்படுத்த பதில் சொல்லாமல் நின்றாள்.

"கேட்கிறேன் இல்லையா? அம்மா என்ன சொன்னார்கள்?"

"ம்... அவர்களுக்கு ஒரு பேரனோ பேத்தியோ வேண்டுமாம்" என்றாள் ரேவதி கடுகடுவென.

"என்னது?"

"மகனுக்கு ஒரு குழந்தை வேண்டுமாம். அதற்கு என்னை பிடித்து தொல்லை செய்தால் நான் என்ன செய்வது?"

"ம்... என்ன செய்வது?" தீவிரமாக யோசித்தான் சூர்யா. "இப்படி செய்தால் என்ன? பாவம் பெரியவர்கள் ஆசையை நிறைவேற்றி வைப்பது?"

"என்ன?" தூக்கிவாரிப் போட திரும்பிய ரேவதி, அவன் கண்களின் சிரிப்பை பார்த்ததும் தோட்டத்தை பார்க்கும் பாவனையில் சிவந்த முகத்தை திருப்பிக் கொண்டாள்.

பேச்சை மாற்றும் பொருட்டு "எனக்கு ஒரு டீ கொண்டு வரும்படி சோமு அண்ணாவிடம் சொல்கிறாயா ரேவதி? நான் ஆபீஸ் அறையில் இருப்பதாக சொல்" என்று சொல்லிவிட்டு திரும்பி நடந்தான்.

சில நிமிடங்களில் டீயுடன் ரேவதி சென்றபோது அலுவலக வேலையை தொடங்கியிருந்தான். அவளைப் பார்த்ததும் "நீயே டீ போட்டு கொண்டு வந்தாயா?" என்றபடி எழுந்து வந்து இரண்டு கப்பில் சரித்து ஒன்றை அவளிடம் கொடுத்தான்.

"நான் இப்போதுதான் குடித்தேன்" என்றாள் ரேவதி.

"நான் நம்ப மாட்டேன்."

"இல்லை. நிஜம்தான்."

''உண்மையைச் சொல் ரேவதி. நீ போட்ட டீயை உன்னாலேயே குடிக்க முடியவில்லைதானே! அதற்கு பயந்துதானே குடிக்க மாட்டேன் என்கிறாய்?''

அவனை முறைத்தபடி டீயை குடித்த ரேவதிக்கு வெகுநாட்களுக்கு பிறகு கிடைத்த இந்த சுமூகமான சூழ்நிலையை விட மனமில்லை. எனவே மெதுவாய் கமலம் சொன்ன விஷயத்தை அவனிடம் சொன்னாள்.

''மேரேஜ்க்கா? நானா?'' அலட்சியமாய் தோள்களை குலுக்கினான் சூர்யா.

''மேரேஜ் திருநீர் மலையில். அங்கு போகாவிட்டாலும் பரவாயில்லை. மாலையில் ஹோட்டலில் நடைபெறும் ரிஷப்சனுக்கு போகவேண்டும்.''

''வீட்டிலிருந்து கிளம்பி பங்ஷனுக்கு போய்விட்டு திரும்பி வர நாலுமணி நேரமாகும். எனக்கு எவ்வளவு வேலை இருக்கிறது தெரியுமா? என்னுடைய இந்த ப்ராஜெக்டை வைத்துதான் வேலையில் எனது அடுத்த உயர்வு இருக்கிறது.''

''மாமா வேறு இந்த விசேஷத்திற்காக அசாமிலிருந்து வருகிறார். உள்ளூரிலேயே இருந்து கொண்டு நாம் போகாவிட்டால் நன்றாக இருக்குமா?''

''அப்ப, அப்பாவோட நீ போய்ட்டு வா.''

''அத்தை உங்களையும் கூட வரச்சொன்னாங்க. வாங் களேன்.''

''அப்படியா? அத்தை இன்னும் ஏதோ கூட சொன் னார்கள் போலிருக்கே!'' கண்களில் குறும்புடன் அவன் கேட்க, பதில் சொல்ல முடியாமல் திணறினாள் ரேவதி.

சிறிது நேரம் அவளையே பார்த்தவன், ''அப்பா வரட் டும், பிறகு பார்க்கலாம்'' என்றான்.

''பார்க்கலாமா, போகலாமா?''



''உனக்கு போக வேண்டும் என்றிருக்கிறதா ரேவதி?''

''அப்படியெல்லாம் இல்லை. எங்க ஊரில் எல்லா வீட்டு விசேஷங்களிலும் எல்லோரும் கலந்து கொள் வோம். இங்கு வந்ததிலிருந்து எங்குமே போகவில்லை. அத்தை வேறு ரொம்ப சொன்னார்கள் அதனால்தான்...''

''விசேஷம் என்னைக்கு?''

''வருகிற ஞாயிறுதான்.''

''இரவில்தானே, போகலாம். ஆனால்...''

''ஆனால்?''

''உனக்காக வருகிறேனே, எனக்கு என்ன பரிசு தரு வாய்?''

''என்ன வேண்டும்?''

''என்ன கேட்டாலும் தருவாயா?''

அவனை நிமிர்ந்து பார்த்தாள் ரேவதி. அவன் பார்வை யில் புதிதாய் ஏதோ தெரிந்தது. கண்களின் பளபளப்பு இதயத்திற்கு ஏதோ செய்தி சொல்ல பதில் பேசாமல் திரும்பி உள்ளே ஓடினாள் ரேவதி. கொலுசுகள் சன்னமாய் சப்தமிட அவள் ஓடும்போது அது இனிய சங்கீதமாய் தோன்றியது சூர்யாவுக்கு.

ஒரு தமிழ் வார இதழை புரட்டியபோது கண்ணில்பட்ட ஒரு புகழ் பெற்ற கவிஞரின் வரிகள் நினைவுக்கு வந்தன.

**'எதை கேட்டாலும்**
**வெட்கத்தையே பதிலாக**
**தருகிறாயே!**
**வெட்கத்தை கேட்டால்**
**எதை தருவாய்?'** என கவிஞரைப் போலவே தானும் கேட்கத் தோன்றியது.

இரவின் தனிமையில் கண்களை மூடி படுக்கையில் சாய்ந்தபோது ரேவதியின் கொலுசின் ஒலி மனசில் மத்

தளம் கொட்டியது. நம் அறையை தாண்டிச் செல்கிறாள் போலும். வெளிநாட்டினர் தங்கள் கால்களை கவர்ச்சியான உறுப்பாக கருதி பராமரிப்பார்கள். சூர்யாவும் அவர்களைப் போலவே மினிஸ்கார்டின் கீழே தெரியும் வழவழப்பான நீண்டகால்கள்தான் அழகானவை என்று இத்தனை நாளாய் நினைத்திருந்தான். ஆனால் கணுக்கால்வரை மூடிய உடைக்கு கீழே வெளிப்படும் மென்மையான பாதங்களும், அதில் உறவாடும் கொலுசும் கூட மனசை சலனப்படுத்தும் என்பதை சமீபத்தில்தான் உணர்ந்து கொண்டான்.

'படிப்பு முடிந்ததும் நீ உன் விருப்பப்படி வாழ்வை அமைத்துக் கொள். அதுவரை நண்பர்களாக பழகுவோம்' என்றெல்லாம் பேசிவிட்டு இன்று மனம் சஞ்சலப்படுவது எந்தவகையில் நியாயம்? கல்லூரியில் சக மாணவனே என்ற போதும் இன்னொரு ஆணுடன் அவளை பார்த்ததும் அப்படியொரு கோபம் வருவானேன்? இன்னும் ஆறு மாதங்களில் அவன் நாட்டை விட்டே போகும் பட்சத்தில் அவள் யாருடன் பழகினால் என்ன என்று ஏன் இருக்க முடியவில்லை? சிறுவயதிலிருந்து அவன் பார்க்காத அழகிகளா? இவள் முகத்தை பார்த்ததும் ஏன் தடுமாறிப் போகிறேன்? யாருடன் போன் என்று அவன் கேட்டதற்கு அவள் முகம் வாடியதை பார்த்ததும், பங்ஷனுக்கு போக லாம் என தலையாட்டியது எதனால்?

ரேவதியை நான் விரும்பத் தொடங்கியிருக்கிறேனா? லாரன்ஸ் சரியாக கணித்தது போல் எனக்குள் இருப்பது ஒரு இந்தியனின் உணர்வுகள் தான் போல. மணந்து கொண்டவனை காதலிப்பதுதான் தர்மம் என அவை என்னுள் படிந்துபோய்விட்டது போலும். ஆனால் இது சரி வருமா? சென்னையின் சூழலுக்கே பழக்கப்படாத அவள், வெளிநாட்டு வாழ்க்கைக்கு ஒத்துவருவாளா? பாதுகாப்பான



சூழ்நிலையில் வளர்ந்து பழகியவளுக்கு தனியாய் பிரச் சனைகளை எதிர்கொள்ளும் துணிவு இருக்குமா? அழகில் மயங்கி குடும்பம் நடத்த தொடங்கிவிட்டு, ஆபீசுக்கு போய் உட்கார்ந்து கொண்டு கதவை தாளிட்டாளா? மார்க்கெட் போய்விட்டு வீட்டிற்கு வர அவளுக்கு வழி தெரி யுமா என்று கவலைப்பட்டுக் கொண்டு இருக்க முடியுமா? போகிற பக்கமெல்லாம் நான் கூடவே போக வேண்டு மானால் அல்லது போய் திரும்ப ஏற்பாடு செய்ய வேண்டு மானால் இதிலேயே என் நேரம் கழிந்துவிடும். அன்று கல்லூரியிலிருந்து டிரைவர் போன் பண்ணியதும் உடனே ஓட நேர்ந்ததைப் போல் அடிக்கடி நேர்ந்தால் அவனது வேலை எப்படி நடக்கும்? யோசித்து குழம்பிப் போனான் சூர்யா.



## 12

**வ**ழக்கம் போல் ரேவதி கல்லூரிக்கு சென்று கொண்டிருந்தாள். சரணை சந்திக்க நேரும் சந்தர்ப்பங்களை ஜாக்கிரதையாக தவிர்த்து வந்தாள். அன்று மாலை கல்லூரி முடிந்து வரும்போது அனு அகர்வால் அவள் கூடவே நடந்தாள். "ரேவதி, நேற்று நீ எடுத்த நோட்சை கொடேன். ஜெராக்ஸ் எடுத்துக் கொண்டு தருகிறேன்."

"வீட்டிலிருக்கிறது அனு. இன்று நான் எடுத்து வர வில்லை."

"உங்க வீடு நுங்கம்பாக்கம்தானே! வந்து வாங்கிக்கொண்டு நான் அப்படியே எங்க வீட்டுக்கு போய் விடுகிறேன்."

ரேவதி அவளது வகுப்பில் யாரையும் வீட்டிற்கு கூட்டி வந்ததில்லை. அவளும் யார் வீட்டிற்கும் போனதில்லை. இன்று அனுவாக வருகிறேன் என்றதும் தவிர்க்க முடி யாமல் அவளுடன் நடந்தாள் ரேவதி.

காரில் அமர்ந்ததும் "உன் அப்பா என்ன செய்கிறார் ரேவதி?" என்றாள் அனு.

''ஊரில் விவசாயம் பார்க்கிறார்.''

''அப்போ நீ இங்கே உன் கார்டியன் வீட்டில் இருக்கிறாயா?''

பொதுவாய் தலையை ஆட்டிவைத்தாள் ரேவதி. அனுவுடன் பேசுவதில் இது ஒரு வசதி. தலையை மட்டும் அசைத்தால் போதும். பேசுவதை அவளே பார்த்துக் கொள்வாள்.

காரிலிருந்து இறங்கி வீட்டைப் பார்த்த அனு பிரமித்துப் போய் விட்டாள். ''உன் கார்டியன் இவ்வளவு பணக்காரரா?'' என்றாள் வியப்புடன்.

ரேவதி சமையலறைக்கு சென்று, ''சோமு அண்ணா, என் ப்ரண்ட் வந்திருக்கா. டிபனும் காபியும் முருகனிடம் கொடுத்தனுப்புங்க'' என்று சொல்லிவிட்டு அனுவுடன் தன் அறைக்கு சென்றாள்.

ரேவதியின் அறையை சுற்றிலும் பார்த்த அனு ''ரொம்ப அழகாய் இருக்கு ரேவதி உன் அறை'' என்றாள்.

ஏசி செய்யப்பட்ட அறையில் முழுவதும் விரிந்த அரேபியன் கார்பெட், கார்பெட் நிறத்தில் சுவர்கள், ப்ரெஞ்ச் விண்டோ வழியாய் தெரிந்த தோட்டத்து பசுமை, தலையசைக்கும் பூக்கள், வலது ஓரமாய் ஸ்டடிடேபிள், அதன் மீது அடுக்கப்பட்ட புத்தகங்கள், பென்ஸ்டாண்ட் முழுக்க, பேனா பென்சில்கள், வார்டுரோப்பில் சீராக தொங்க விடப்பட்ட உடைகள், சுவரிலிருந்து சரிந்த வெளிநாட்டு விளக்குகள் என ஒவ்வொன்றாய் ரசித்தாள். முருகன் டிபன் காபியுடன் வரவே அதை சாப்பிட்ட படியே ரேவதியை பாராட்டினாள் அனு.

''நீ ரொம்ப லக்கி ரேவதி. பெற்றோர் கூட இந்த அளவு பார்த்து செய்வார்களா என்று தெரியாது. இப்படியொரு கார்டியன் கிடைத்தது உன் அதிர்ஷ்டம் தான். ஆமாம் அவர் எங்கே?'' அனுவின் கேள்விக்கு விடையே போல் சூர்யாவின் கார் வாயிலில் வந்து நின்றது.



''அங்கே பார் அனு'' ப்ரெஞ்ச்விண்டாவை சுட்டிக் காட்டினாள் ரேவதி. அங்கிருந்து வாயில் தெளிவாக இருந்தது. சூர்யா காரிலிருந்து இறங்கினான். அன்று அவனுக்கு ஏதோ பிஸினஸ் மீட் போலும். முழு டிரஸ்சில் இருந்தான். கறுப்பு கோட்டும், நீலநிற ஷர்ட்டும், முகம் பார்க்கிறாற் போல பளபளத்த ஷூவும், கண்களிலிருந்த கூலிங் கிளாசை கழற்றியபடி அவன் இறங்கிய வேகத்தில் ஆண்மையின் கர்வம் தெறித்தது. உள்ளே நடந்தபடியே செல்போனின் அழைப்புக்கு பதில் சொன்ன ஆங்கிலத்தில் வெளிநாட்டு சாயல் தெரிந்தது. திகைத்து போய் அப்படியே நின்றிருந்த அனு. ரேவதி தோளைப் பற்றியதும் சுய உணர்வு வந்தவளாய் ''வாவ்'' என்றாள்.

''என்ன அனு?''

''யார் ரேவதி இந்த ஹீரோ? இவர்தான் உன் கார்டியனா? வீட்டைப் பார்த்த போதே நினைத்தேன். ஆள் அசத்தலாகத்தான் இருக்க வேண்டும் என்று. என்ன ஒரு லுக்? என்ன ஹேண்ட்சம்?''

அனு அகர்வால் புகழ்ந்து பேசவும், ரேவதிக்கு எரிச்சலாக இருந்தது.

''ஆமாம் பெரிய ஆண் அழகன்'' என்றாள் முணுமுணுப்பாக.

''ரியலி. இல்லையா பின்னே?''

அனு சூர்யாவைப் பற்றியே விசாரிக்கவும், ''நாம கீழே போகலாம் வா'' என்றபடி அவளுடன் இறங்கி வந்தபோது சூர்யா டி.வி.யில் கிரிக்கெட் பார்த்தபடி பீங்கான் கோப்பையில் டீயை மெதுவாய் குடித்துக் கொண்டிருந்தான். டிவியை பார்த்து திரும்பியிருந்ததில் அவன் முகம் பக்கவாட்டில் தெரிந்தது. நேரான மூக்கும், அடர்ந்த முடியும், எடுப்பான கன்னத்து எலும்புகளும், இறுகிய உடலும் ஒரு சிலையை நினைவுபடுத்த, ''ஒரு டீயை

குடிப்பதில் கூட எத்தனை ஹேண்ட்சம்? எத்தனை நாசுக்கு பாரேன்?" என்றாள் அனு.

இத்தனை நாளாய் கூடவே இருந்தும் தான் சரியாய் அவனை கவனிக்கவில்லை என்று தோன்றியது. அறிமுக படலத்துக்கு காத்திராமல் அனு நேராய் அவனிடம் சென்று, "நான் அனு அகர்வால். ரேவதியின் க்ளாஸ்மேட். ப்ரண்ட்" என கையை நீட்டினாள்.

"நைஸ் டு மீட் யு" என்றபடி சூர்யா அவள் கையை குலுக்கியதும்,

"நீங்க சூர்யா. ரேவதியோட கஸின். சரியா?" என்றாள்.

கஸின் என்ற வார்த்தையில் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்ட ரேவதியும் சூர்யாவும் அதை மறுக்கவோ, ஆமோதிக்கவோ இல்லை. அருகிலிருந்த சோபாவில் அனுவை உட்காரச் சொன்ன சூர்யா, "ஒரு டீ சாப்பிடுகிறீர்களா?" என்றான்.

"இப்போதுதான் ரேவதியும் நானும் காபி டிபன் சாப்பிட்டோம்."

ரேவதியின் முகத்தைப் பார்த்த சூர்யா, "அதனாலென்ன, என்னுடன் ஒரு கப் குடிக்கலாமே?" என்றான் அனுவிடம்.

"ஒய் நாட்? குடிக்கலாமே!" என்றபடி தோள்களை குலுக்கினாள் அனு.

"சோமு அண்ணா ஒரு டீ" என்று டெலிபோனில் சொன்ன சூர்யா திரும்பி அனுவிடம் பேசத் தொடங்கினான்.

"படிப்பு எப்படிப் போகிறது? அனுவின் ஹாபி என்ன? பிடித்த இடம் எது? எந்தெந்த உணவு வகைகள் அவளுக்கு சாப்பிடப் பிடிக்கும்" என அவளைப் பற்றிய ஆராய்ச்சியில் இறங்கினான் சூர்யா.

"இதையெல்லாம் தெரிந்து வைத்திருப்பது அனுவின் வருங்கால கணவனுக்கு வேண்டுமானால் பயன்படக் கூடும்" என்றாள் ரேவதி குத்தலாக.



"ஏன் நண்பர்கள் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ள முயற்சிக்கக் கூடாதா என்ன?" என்ற சூர்யா பதிலுக்கு,

"நண்பர்களா?" என வியந்தாள் ரேவதி.

"ஆமாம். இன்றிலிருந்து நானும் அனுவும் நண்பர்கள். அப்படித்தானே அனு?" என அவளைக் கேட்டதும்,

"நிச்சயமாய்" என சூர்யாவின் தோள்மீது கையை வைத்து உறுதிப்படுத்தினாள் அனு அகர்வால்.

சோமு டீயுடன் வரவே, அனுவிடம் ஒரு கப் கொடுத்த சூர்யா "ரேவதி நீயும் வேண்டுமானால் எடுத்துக் கொள்" என்றான் ரேவதியிடம்.

"எனக்கு வேண்டாம்."

"ஒரு கப் ரேவதி. எங்க கம்பெனிக்காக" என்ற அனுவிடம்,

"நான் டீ குடிப்பதையே நிறுத்தப் போகிறேன். ஸாரி அனு" என்றாள் ரேவதி.

"குட். நல்ல முடிவு. கீப் இட் அப்" என்றபடி எழுந்த சூர்யா, "சோமு அண்ணா இங்கே ஏதோ புகைகிற வாசம் வரவில்லை?" என சுற்றிலும் பார்வையை ஓட்டினான்.

"இல்லையே, தம்பி அடுப்பைக் கூட அணைத்து விட்டேனே!" என்றார் சோமு குழப்பத்துடன்.

"அனு உனக்கு தெரிகிறதா?"

"ம்ஹூம். எனக்கும் எந்த ஸ்மல்லும் வரவில்லை."

"ஒரு வேளை யாருடைய மனசாவது புகைகிறதோ என்னவோ, ரேவதி நீ என்ன நினைக்கிறாய்?" முகம் சீரியசாய் இருக்க அவன் கண்கள் ரேவதியைப் பார்த்து சிரித்தன.

சத்தமின்றி பல்லைக் கடித்தாள் ரேவதி.

அனு விடைபெற்று கிளம்பவும் வழியனுப்ப வாயில் வரை சென்றான் சூர்யா. அவர்கள் இருவருடனும் செல்ல மனமற்று உள்ளே செல்ல திரும்பிய ரேவதி டீபாயின் மீதிருந்த நோட்சை பார்த்தாள். இதை வாங்க வந்துவிட்டு

சூர்யாவை பார்த்ததும் வந்த வேலையையே மறந்துவிட்டு போகிறாள். என்ன பெண் இவள்? இந்நேரம் தெருமுனை கூட திரும்பியிருக்க மாட்டாள். வாட்ச்மேனிடம் கொடுத் தனுப்பலாம் என நோட்சுடன் வேகமாக வெளியே வந்தாள் ரேவதி. அனுவை தன் காரிலேயே டிராப் பண்ணி விடும்படி டிரைவரிடம் சொல்லிவிட்டு உள்ள வந்து கொண்டிருந்த சூர்யாவின் மீது ரேவதி வேகமாய் மோதிக் கொண்டாள். அவள் மேலே விழுந்த வேகத்தில் பின்னாலிருந்த சுவரில் சாய்ந்த சூர்யா, ரேவதியும் சுவரில் மோதிக் கொள்ளாதிருக்கும் பொருட்டு அவளை ஒரு கையால் பிடிக்கவும், அந்த வேகத்தில் ரேவதி அவன் நெஞ் சில் சரிந்தாள். சுற்றுபுறத்தின் அமைதியில் இருவரின் இதய துடிப்பும், மூச்சுகாற்றின் வெப்பமும் தணலாய் பரவியது. குனிந்து ''ரேவதி'' என்றழைத்த சூர்யாவின் கன்னம் ரேவதியின் கன்னத்தோடு இழைந்தது. மீசையின் முடிகள் அவள் மென்மையான சருமத்தை சிவப்பாக்கியது.

அவனது ஆப்டர் ஷேவின் ஆண்மை கலந்த வாசனை யில் கிறங்கி துவண்டவளை விழுந்துவிடாமல் இறுக்கிப் பிடித்தான் சூர்யா. ரேவதி தன் நினைவிழந்த சில நிமி டங்களில் அவளது செல்போன் ஒலி தட்டி எழுப்பியது. நெருப்பிலிருந்து விடுபட்டது போல் விரைந்து ஓடினாள் ரேவதி. வெள்ளி சலங்கைகள் சிணுங்கும் சப்தத்தை கேட்டபடி புன்சிரிப்புடன் அவளை பின்தொடர்ந்து உள்ளே வந்தான் சூர்யா. ரேவதி தன் அறைக்கு போய் விட்டிருக்க, டீபாய் மீதிருந்த அவள் செல்போன் மறுபடி ஒலிக்கவே சரோஜாவை அழைத்து போனை ரேவதியிடம் கொடுக்கச் சொன்னான்.

சரோஜா போனை கொண்டு வந்து ரேவதியிடம் கொடுப்பதற்குள் அனு இரண்டுமுறை அழைத்துவிட்டாள்.

''தூங்கிக் கொண்டிருந்தாயா ரேவதி? ஏன் இவ்வளவு நேரம் எடுக்கவில்லை?'' என்றாள் போனை எடுத்ததும்.



அதற்கு பதில் சொல்லாத ரேவதி, ''என்ன விஷயம அனு?'' என்றாள்.

''நோட்சை நான் அங்கேயே விட்டுவிட்டு வந்துவிட டேன் ரேவதி. நாளை கல்லூரிக்குப் போகும்போது வந்து எடுத்துக் கொள்கிறேன்.'' மறுபடி அனுவா? அவள் ஒருமுறை வந்து போவதற்குள் எத்தனை நிகழ்ச்சிகள் என்று எண்ணிய ரேவதி, ''நாளை நானே க்ளாசுக்கு கொண்டு வருகிறேன் அனு'' என்றபடி போனை கட் பண்ணினாள்.

மனதில் என்னன்னவோ எண்ணங்கள் அலைமோதின. சூர்யாவின் முகத்துடன் உராய்ந்த கன்னங்கள் இரண்டும் தீயாய் எரிந்தன. எங்கோ பறக்க முற்பட்ட மனதை அடக்கி ஒருமுகப்படுத்தினாள். 'சூர்யா அந்நிய சூழலில் வளர்ந் தவன். தன் முன்னே சோனாலியை கூட அணைத்தான். அனுவிடம் கையைப் பிடித்தபடி பேசியிருக்கிறான். அவன் வளர்ந்த சூழலில் கட்டி அணைப்பதும் முத்தமிடுவதும் சகஜமான விஷயம். அதே போல்தான் மேலே விழுந்த நான் கீழே விழுந்துவிடாமலிருக்க இறுக்கி பிடித்திருக்கிறான். இதற்கு பிரத்தியேக அர்த்தம் எதுவுமில்லை. அப்படி ஏதாவது கற்பித்துக் கொண்டால் நான்தான் முட்டாள்.'

தனக்குள் மறுபடி ஒருமுறை சொல்லிக் கொண்டு எழுந்துபோய் முகம் கழுவி விட்டு வந்தாள். அன்றைய பாடத்தை எடுத்து வைத்தவள் அதை படிப்பதில் ஆழ்ந்து போனாள். இரவு சாப்பிட கீழே வந்தபோது சூர்யா ஒரு பிஸினெஸ் டின்னருக்கு போய்விட்டிருந்தான்.

மறுநாள் காலையில் ரேவதி கல்லூரிக்கு கிளம்பி வெளியே வரும் சமயம்தான், தாமதமாக எழுந்த சூர்யா தன் ஜாகிங்கை முடித்து விட்டு உள்ளே வந்து கொண டிருந்தான். எதிர்எதிராய் சந்தித்துக் கொண்ட இருவர் முகத்திலும் தங்களையறியாமல் புன்னகை மலர்ந்தது.

"ரேவதி நேற்றுதான் எனக்கு ஒரு உண்மை தெரிந்தது. பெண்களை பூக்களோடு ஒப்பிடுவதெல்லாம் சுத்த பொய். நேற்று நீ மேலே விழுந்ததில் என் நெஞ்சில் ஒரு விலா எலும்பு முறிந்துபோனது. டாக்டருக்கே ஆச் சரியம்தான். வெளிப்புறம் அடிபட்ட மாதிரியே தெரிய வில்லை. உள்ளே எப்படி எலும்பு முறிந்தது என்று." சூர்யா கிண்டலாய் சிரித்தான்.

"அடேயப்பா, என்னால் எலும்பு ஒடிந்தது என்றால் நீங்க மோதினா ஆளே காலி போல."

"வேண்டுமானால் இன்னொரு முறை மோதிப் பார்க்க லாமா யார் இடித்து யார் காலி என்று?"

உடலும் உடலும் மோதினாலும் காலியாவது மனசுதான் என்று நினைத்த ரேவதி, "வேண்டாப்பா. நான் வரலை, இந்த விளையாட்டுக்கு" என்றபடி விரைந்து சென்றாள்.

கல்லூரியில் இது இறுதியாண்டு என்பதால் எல் லோரும் சீரியசாக படிப்பதில் மும்முரமாய் இருந்தார்கள். சரண் ரேவதியிடம் பேச வரும் போதெல்லாம் ஒரு புன்னகையுடனோ, விஷ் பண்ணுவதோடோ நழுவி விடு வாள் ரேவதி. அவனுடைய ஆர்வம் சாதாரண இனக் கவர்ச்சி என்றால் அது தானாகவே போய்விடும். அதைத் தாண்டி அவன் வருவானேயானால் தெளிவாக சொல்லி விட வேண்டும். "ரேவதி ஆல்ரெடி எங்கேஜ்ட் தம்பி. நீ வேற ஆள் பாரு என்று" தனக்குள் சிரித்துக் கொண்டாள் ரேவதி.

அந்த ஞாயிறன்று அசாமிலிருந்து அருணாச்சலம் வந்துவிட்டார்.

சூர்யா எப்போதும் போல் மரியாதை நிமித்தம் அவரிடம் விலகியே நிற்க, ரேவதி உரிமையுடன் கோபித்துக் கொண்டாள்.

"இவ்வளவு நாள் கழித்து இப்போதுதான் என்னை பார்க்கணும்னு தோணுச்சா? இப்ப கூட இந்த பங்ஷன்



இல்லேன்னா வந்திருக்க மாட்டீங்க இல்ல?" இயல்பாய் அவர் அருகே உணவு பரிமாறியபடி அவள் படபடக்க, அவர் சிரித்தபடியே அவளுக்கு சமாதானம் சொல்வதை சூர்யா ஆச்சர்யமாய்ப் பார்த்தான்.

அவர்கள் வீட்டில் பிள்ளைகள் மூவருக்குமே அப்பாமேல் பாசம் இருந்த அளவு மரியாதையும் இருந்ததால் அவ ரிடம் எப்பவும் பணிவாகவே பேசுவார்கள். இந்த மாதிரி அதட்டி பேசுவதும் அவர் அதை இயல்பாய் ஏற்பதும் புதிதாக இருந்தது அவனுக்கு. ரேவதியின் சமையலை ருசித்த அருணாச்சலம், "சூர்யா ஒரு நாலு கிலோ வெயிட் கூடினாற் போல இருக்கேன்னு நினைச்சேன். அது ஏன்னு இப்பதான் தெரியுது" என்றார் சிரிப்புடன். "உன் அத்தை கூட ரொம்ப நல்லா வெரைட்டியா சமைப்பா. ஆனா ரேவதி உன் சமையல் என் கிராமத்து வீட்டில் எங்கம்மா கையால் சாப்பிட்டதை நினைவுபடுத்துகிறது. ரொம்ப எளிமையும் சத்தும் நிறைஞ்ச உணவு அது. மசாலா அதிகமாய் எங் கம்மா சேர்க்க மாட்டார்கள். அதனால் வழக்கத்தை விட அதிகமாய் சாப்பிடுவேன்" என்றார் அருணாச்சலம் நெகிழ்சியுடன்.

"மாமா நீங்க எத்தனையோ ஊரையும், மனிதர் களையும் பார்த்தவர். இன்னும் கிராமத்தையும் கேழ்வரகு அடையையும், கீரை மசியலையும் நினைவு வெச்சிருக் கீங்கன்னா ஆச்சரியமா இருக்கு." என்றாள் ரேவதி உண்மையான ஆச்சரியத்துடன்.

"என்ன ரேவதி இப்படி கேட்டுட்ட? என் வேலை நிமித்தமாய்தான் நான் ஊரைவிட்டு வந்தேனே தவிர மனசுக்குள் இன்னும் அதே கிராமத்தான் தான் இருக் கிறான். நிகிலாவுக்கு திருமணம் முடித்ததும் நானும் அத்தையும் நம்ம ஊருக்குத்தான் செல்லலாம் என்றிருக் கிறோம். உன்னை பார்த்ததும் எங்களுக்கு பிடித்துப் போனது கூட இந்த பெண் நம்மை சேர்ந்தவள் என்பதால்

தான். கிராமத்துக்கே உரிய சில நல்ல பண்புகளுடன். தற்கால நாகரீகமும் தெரிந்த பெண் எங்களுக்கு மிகவும் சந்தோஷம். பெரு நகரங்களில் படித்து வளர்ந்த பெண்கள் பின்னாளில் எங்களை கிராமத்து வீட்டில் வந்து பார்க்கவும் தங்கவும் பிரியப்பட மாட்டார்கள். மாமனாருக்கு உடல் நிலை சரியில்லை என்றாலும் கூட நர்சை ஏற்பாடு செய் யுங்கள் என்பார்களே தவிர வந்து விசாரித்துவிட்டு போக இஷ்டப்படமாட்டார்கள். எனவே சூர்யா மனைவிக்கும் எங்களுக்கும் நடுவே திண்டாட வேண்டியிராமல் நகரத்துக்கு ஏற்றாற்போல் படித்து உடையணிகிற அதே சமயம்கிராமத்தை நேசிக்கிற பெண்தான் வேண்டும் என தேடினோம். நகரத்து சாக்கடைகளையும், குப்பைகளை யும் விட கிராமத்து புழுதி மண் மேன்மையானது என அங்கே வசிப்பவர்களால் தான் புரிந்து கொள்ள முடியும். எனவேதான் உன்னை தேர்ந்தெடுத்தோம். அதில் இன்றளவும் எங்களுக்கு பெருமைதான்.''

சூர்யா அங்கிருப்பதே மறந்துபோய் இருவரும் உரை யாடலில் ஈடுபட்டிருந்தனர். பெற்றோரை மயக்கி நம்மை பிடித்துவிட்டாள் என ரேவதியின் மீது ஆரம்பத்தில் கோபப்பட்டது நினைவு வந்தது. அப்பா தன் திருமண விஷயத்தை மிகவும் யோசித்துதான் முடிவெடுத்திருக் கிறார். அப்பா இதுவரை மனதிலுள்ளதை வெளிப்படை யாக பேசி அவன் கேட்டதில்லை. ரேவதியை பார்த்ததும் தன் மண்ணிலிருந்து கிளம்பிய இன்னொரு விருட்சம் என்ற நெகிழ்வில் தடையற்று பேசினார்.

அப்பா ரிட்டையர்டு ஆனதும் தன்னுடன் அம்மாவும் அப்பாவும் வசிப்பார்கள் என்றுதான் சூர்யா இத்தனை நாளாய் நினைத்திருந்தான். ஆனால் அப்பா தன் ஓய்வு நாட்களை எங்கே எப்படி கழிப்பதென முன்பே தீர்மானம் செய்துவிட்டார் என்பதே அவனுக்கு புதுசெய்தியாக இருந்தது.



அருணாச்சலம் சிறுவயதில் ஆற்றில் நீந்தும்போது சுழலில் அகப்பட்டு யாரோ இழுத்துப் போய் கரை சேர்த் ததையும், பள்ளிக் கூட வாத்தியாருக்கு மளிகை சாமான் சுமந்ததையும், டென்ட் கொட்டகையில் எம்.ஜி.ஆர். படம் பார்க்க வண்டி மாடு பூட்டி போனதையும் சுவாரஸ்யமாக ரேவதியிடம் விவரித்துக் கொண்டிருந்தார். அவருடன் சேர்ந்து சிரித்த ரேவதி, ''கிராமம் இப்ப ரொம்ப மாறிடிச்சி மாமா. வீட்டுக்கு வீடு சேட்டிலைட் டிவி. இங்கிலீஷ் மீடியம் பள்ளிகள் கூட வந்தாச்சு'' என்றாள். மேலும் பேச முற்பட்டவர்களை சூர்யாவின் குரல் கலைத்தது. ''ரேவதி அப்பாவை கொஞ்சம் ரெஸ்ட் எடுக்க விடு. காலையில் தானே வந்தார்? இப்போ தூங்கி எழுந்தால்தான் மாலை யில் பங்ஷனுக்கு போக சரியாய் இருக்கும்.''

''அதுவும் சரிதான்'' என்றபடி எழுந்தார் அருணாச்சலம்.

கீழேயுள்ள அறையிலேயே அவர் தூங்குவதாக சொன் னதும், அவருக்கு வேண்டியவற்றை கவனித்து விட்டு அவர் தந்த பையுடன் மேலே சென்றாள் ரேவதி.

''அப்பாவுடைய பைதானே ரேவதி? அவருடைய அறையில் வைக்கச் சொல்லி முருகனிடம் கொடுத் தனுப்பு'' என்றான் சூர்யா.

''அப்பாவுடைய பைதான். ஆனால் உள்ளே இருப் பவை எனக்கு.''

''அப்படியா என்ன கொண்டு வந்தார் காட்டேன்.''

''எங்களுக்குள் கொடுக்கல், வாங்கல் எவ்வளவோ இருக்கும். அதைப் பற்றி உங்களுக்கென்ன?'' என்றபடி நடந்தவளின் எதிரே வந்து நின்றான் சூர்யா.

''எனக்கு சொல்லமாட்டியா ரேவதி?''

அந்த குரலின் உரிமை நெஞ்சத்தைத் தொட ''எனக்கு புடவை, சில அலங்காரப் பொருட்கள். பார்க்கிறீர்களா?'' என பேக்கை திறந்தாள் ரேவதி. அவளை தடுத்த சூர்யா.

''நான் என்ன பெண்ணா உன் புடவையைப் பார்த்து பொறாமைப்பட. நீயே வைத்துக் கொள்'' என்று சிரித்தவன், ''ஒரு ஆச்சரியம் பாரேன் ரேவதி'' என்றான்.

அவனுக்கு முன்னும் பின்னுமாய் பார்த்த ரேவதி ''பார்த்தேன். எதையும் காணோமே!'' என்றாள்.

செல்லமாய் அவள் தலையில் தட்டிய சூர்யா, ''எனக்கு யாரும் எதுவும் வாங்கிட்டு வரலை. உனக்கு மட்டும் கொடுத்தனுப்பியிருக்கிறார்கள்.''

''பெண்களுக்குத்தான் ஹேர்பின் முதல் கால் கொலுசு வரை வாங்க எவ்வளவோ இருக்கிறது. ஆண்களுக்கு என்ன வாங்குவார்களாம்? வேண்டுமானால் ஒரு கிளுகிளுப்பை வாங்கித் தரச் சொல்லவா?''

''அதை வாங்க வேறு வேண்டுமா? நீ போதாது?'' சூர்யா சொன்னதும் இருவரும் சிரித்தனர்.

''அம்மா மாலை டிபனுக்கு என்னன்னு சோமு அண்ணாச்சி கேட்க சொன்னாரு'' என்றபடி சரோஜா வந்ததும், அவளுடன் பேசியபடியே கீழே சென்றாள் ரேவதி. பாதி விரிந்த தோட்டத்து மல்லிகையை நெருக்கமாய் தொடுத்து தரும்படி சரோஜாவிடம் சொல்லியனுப்பி விட்டு, அறைக்கு வந்த ரேவதி கமலம் அனுப்பியிருந்த பேக்கை திறந்தாள். ரோஜா நிறப்புடவை பிரிக்கும் போதே கைகளில் வழுக்கியது. அதே நிறத்தில் த்ரெட் ஒர்க் செய்யப்பட்டு குந்தன் கற்கள் பதிக்கப்பட்டிருந்தது. டிரஸ்சிங் டேபிளின் மஞ்சள் ஒளியில் அடக்கமாய் ஜொலித்தது. அழகான புடவையைப் பார்த்த ரேவதிக்கு பெண்களுக்கே உரித்தான இயல்பாய் அதை அணிந்து கொள்ளும் ஆர்வம் வந்தது. கிளம்புவதற்கான நேரமும் ஆகிவிட்டிருக்கவே ரேவதி ஷாம்பு தேய்த்து குளித்துவிட்டு வந்தாள். டிரையரில் முடியை காய வைத்தவள். அவளிடமிருந்த க்ளிப்புகளில் தேடி புடவைக்கேற்ற நிறத்தில் க்ளிப்பை எடுத்து தலை



வாரி நடுவே க்ளிப்பை மாட்டினாள். இரண்டு பின்னல் போட்டு ரப்பர் பேண்டை மாட்டினாள். மேக்கப் கிட்டைத் திறந்து புருவம் திருத்தி, கண்களுக்கு மேலே வரைந்து, க்ரீமை தடவி பவுடர் பூசினாள். கடைசியாய் இளம் ரோஜா நிற லிப்ஸ்டிக்கை இதழ்களில் லேசாக தடவினாள். பின் புடவையை பிரித்து ப்ளவ்சை பார்த்தவள் திகைத்துப் போனாள். ப்ளவுஸ் வடநாட்டு பெண்கள் அணியும் விதத்தில் சின்ன கையும் பின்புறம் மிக இறக்கமாகவும் தைக்கப்பட்டிருந்தது. ஒருவேளை நிகிலாவுடையது மாறி வந்துவிட்டதா? நிகிலாவை போனில் கூப்பிட்டு கேட்டாள் ரேவதி.

''அது உங்க புடவைதான் அண்ணி. ப்ளவுஸ் போட்டு பாருங்க சரியாய் இருக்கும். உங்க ப்ளுகலர் ப்ளவுஸ் எங்க ஸ்கூல் ஆண்டுவிழாவுக்கு எடுத்து போயிருந்தேனே. அதை அளவு கொடுத்துதான் தைத்தோம்.''

''ஆனா ரொம்ப டீப்நெக்கா இருக்கு நிகி. இது மாதிரி நான் போட்டதே இல்லை.''

''இப்ப அதுதான் பேஷன் அண்ணி. போட்டுப் பாருங்கள். உங்களுக்கு நன்றாக இருக்கும்'' என்றபடி போனை வைத்தாள் நிகிலா.

மாமியாரே தைத்து அனுப்பியிருக்கும் போது, அணிந்தால் என்ன என்ற ஆர்வமும், இதுவரை இப்படி தனி கவனம் எடுத்து அணியாததில் கூச்சமாகவும் இருந்தது ரேவதிக்கு. எப்பவும் கண்ணியமாய் உடுத்தி பழகியவள், இன்று கூத்தாடியைப் போல் ஆகிவிடக்கூடாதே என்று யோசித்தாள். பிறகு அணிந்து பார்ப்பது பிடிக்கவில்லை என்றால் கழற்றிவிடுவோம் என்ற முடிவுடன் அணிந்தாள். புடவையை உடுத்தி தலைப்பை ஒற்றையாய் தோளில் வழியவிட்டபடி கண்ணாடியில் பார்த்தவளுக்கு தன் உருவமே புதிதாய் தெரிந்தது. முதுகின் செழுமையும், இடுப்பின் வளைவும் பளபளக்க, சின்னதாக்கப்பட்ட ரவிக்

கையில் கைகள் வாழைத்தண்டாய் தெரிந்தன. திருமணத்தின் போது அம்மா வாங்கிய மெலிதான வைரநெக்லசையும் அதற்கான தோட்டையும் அணிந்து ஒரு கையில் வைர ப்ரேஸ்லெட்டும் மறுகையில் வாட்சும் அணிந்தாள். திருமணத்திற்கு பிறகு முதன்முறையாக இப்போதுதான் இவற்றை அணிகிறாள். அடக்கமாய் மின்னிய வைரங்கள் அந்தஸ்தை எடுத்துக் காட்ட, அம்மாவின் செலக்ஷன் மிகவும் நன்றாக இருக்கிறது என்று சொல்லிக் கொண்டாள். கையில் பூவுடன் வந்த சரோஜா ரேவதியைப் பார்த்ததும்,

"அம்மா நீங்களாம்மா இது? ரம்பை, ஊர்வசி கணக்கா இருக்கீங்கம்மா. என் கண்ணே பட்டுவிடும் போலிருக்கு" என்றபடி நெற்றியைத் தொட்டு விரல்களை முறித்து விட்டு போனாள்.

பூவை மடித்து பின்குத்தி தோள்வரை வழியவிட்டு திருப்தியுடன் கண்ணாடியை பார்த்து விட்டு நகர்ந்து மணியை பார்த்த ரேவதி திடுக்கிட்டாள். நேரமாகி விட்டது. அலங்காரத்தில் நேரம் போனதே தெரியவில்லை. சூர்யா கண்டபடி கத்தப் போகிறான்.

ஏற்கனவே வரமாட்டேன் என்று சொல்லிக் கொண்டிருந்தவன். வேகமாக செருப்பை தேடி எடுத்த ரேவதி, கதவு தட்டும் சத்தம் மெலிதாக கேட்கவும் பயந்து போனாள். சூர்யாதான் தட்டுகிறான். வேகமாக ஓடி கதவை திறந்த ரேவதி, அவன் பேச முற்படுமுன் "இதோ போகலாம்" என சாவியுடன் வந்தாள். அவன் நகராமல் நிற்கவும் கேள்வியுடன் பார்த்தாள். அவனோ எதையும் கவனிக்காதவனாய் அவளையே வெறித்து பார்த்தபடி நின்றிருந்தான். புதிதாக பார்ப்பதைப் போல் அவன் பார்வை தலை முதல் கால் வரை அவளை அலசியது. கூச்சத்தில் முகம் சிவந்த ரேவதி "நேரமாகவில்லையா?" என்றாள் கதவைப் பார்த்தபடி.

"எங்கே?" சூர்யாவின் வாய் மட்டும் கேள்வி கேட்டது.



"எங்கேயா? திருமண வரவேற்புக்கு போகவேண்டும்."

"ஓ. போகலாமே!"

"கதவைத் தாளிட்டால்தான் போகமுடியும்."

"தாளிட வேண்டியதுதானே."

"நீங்க வாயிலேயே நின்றால் எப்படி தாளிடுவதாம்?"

சூர்யா அப்போதுதான் சுற்றுப்புறம் நினைவு வந்தவனாக சடாரென நகர்ந்து கீழே போனான்.

வரவேற்பு நடைபெற்ற அந்த ஐந்து நட்சத்திர ஹோட்டலின் புல்வெளி பிரமாண்டமாய் அலங்கரிக்கப்பட்டிருந்தது. திரும்பிய பக்கமெல்லாம் பணத்தின் செழுமை பளிரிட்டது. குளிர்பானங்களும் மதுவும் திரும்பிய பக்கமெல்லாம் வழிந்தோடியது. முதுகில் இரண்டு கயிறுகளை அணிந்து, மேலே புடவை உடுத்தி தோள்களையும், பின்புறமும் காண்பிக்கும் பெண்களைப் பார்க்கையில் கிராமத்து கிழவிகளின் நினைவு வந்தது. பழங்காலத்தில் ரவிக்கை அணிவது வழக்கத்தில் இல்லாததால் வெற்று தோளும், கெட்டிப்புடவையுமாக அணிந்து பழகி இன்னும் அதையே அணிந்து கொண்டிருக்கும் அவர்களிடம் இத்தனை ஆபாசம் கிடையாது. நூறு வருடங்களுக்கு முந்தையை அவர்களது உடைதான் இன்றைய நாகரீகம் போலும். முட்டிவரை உடையணிந்து அதையும் கிழித்து விட்டது போல் அலையும் பெண்கள். உடலா தோலா என்று பிரித்தறிய முடியாதபடி உடையணிந்த பெண்கள் என்று பார்க்கையில் தான் இந்த ப்ளவுசை அணிய தயங்கியதே தவறு என்றுபட்டது.

அத்தையும் நிகிலாவும் பொருத்தமாகத்தான் உடை வாங்கி இருக்கிறார்கள். இப்போது பட்டுபுடவை அணிந்து வந்திருந்தேனானால் பழம் பஞ்சாங்கமாய் தோன்றக் கூடும். ரேவதி இதுபோன்ற விழாக்களை பார்ப்பது இதுதான் முதல் முறை. எனவே சுவாரஸ்யமாய் வேடிக்கைப் பார்த்

அருணாச்சலம் அவர்கள் இருவரையும் அழைத்துப்
தாள். அருணாச்சலம் அவர்கள் இருவரையும் அழைத்துப்
போய் மணமக்களிடம் அறிமுகப்படுத்தி தங்களது பரிசை
கொடுத்தார். பின் தமது உறவினர்களிடம் ரேவதியை
அறிமுகப்படுத்தினார்.

"அருணாச்சலம், இவ்வளவு அழகா ஒரு பெண்ணை
எங்க கண்டுபிடிச்சீங்க."

"மகாலட்சுமி மாதிரி இருக்கா." என ஆளுக்கு ஆள்
புகழவும் ரேவதிக்கு கூச்சமாக இருந்தது.

லைட் மியூசிக் ஒருபுறமும், ஃபப்பே டின்னர் மறு
புறமும் நடந்து கொண்டிருக்கவே, எல்லோரும் மியூசிக்
கேட்டபடி சாப்பிட்டு கொண்டிருந்தனர். தன்னுடனேயே
சுற்றிக் கொண்டிருந்த ரேவதியிடம், "நீ சூர்யாவோட
போம்மா. இந்த கிழவர்கள் அரட்டையில் உனக்கு
சுவாரஸ்யம் இருக்காது" என்றவர், "சூர்யா" என்று மகனை
அழைத்தார். அருகில் வந்தவனிடம் "உன் பொண்டாட்
டிக்கு பசிக்குதாம். சாப்பிட கூட்டிப் போ" என்றார்.

"சரிப்பா" என ரேவதியுடன் நடந்த சூர்யா. "பசித்தால் என்னிடம் சொல்லியிருக்கலாமே ரேவதி?" என்றான்.

"எனக்கு பசிக்கலை. மாமாதான் உங்களுடன் போகச் சொன்னார்."

"அதுவும் சரிதான். இவ்வளவு அழகான மனைவியை தனியா விட்டுட்டு போனா பார்க்கிறவங்களுக்கு வித்தியாசமா தோணும்னு அப்பா நினைச்சிருப்பார்."

டின்னர் ப்ளேட்டை எடுத்து அவளிடம் கொடுத்த சூர்யா ஒவ்வொரு டிஷ்ஷாய் அவளை டேஸ்ட் பார்க்க சொன்னான். எது பிடித்தது என்று கேட்டான். உணவு பற்றிய ஆராய்ச்சியில் அவர்கள் இருந்த போது "ஹாய் சூர்யா" என்ற குரல் கேட்டு திரும்பிப் பார்த்தான் சூர்யா.

உடனே முகம் மலர்ந்து "ஹாய் சில்வியா" என்றவன், "என் கஸின்" என ரேவதிக்கு அறிமுகம் செய்துவைத்தான்.



"இவள் யார், உன் இரண்டாவது மனைவியா?" என்றாள் சில்வியா சூர்யாவிடம்.

கையிலிருந்த ப்ளேட்டை நழுவவிட்டாள் ரேவதி. ஒரு சிரிப்புடன் அதை பிடித்த சில்வியா "இதில் அதிர்ச்சியடைய என்ன இருக்கிறது?" என்றாள் ரேவதியிடம்.

"நீ என்ன சொல்கிறாய் சில்வியா?" என்றான் சூர்யா எதுவும் புரியாமல்.

"உனக்கு கிராமத்திலிருந்து ஒரு பட்டிக்காட்டு பெண்ணை பிடித்து திருமணம் செய்து வைத்துவிட்டதாக கேள்விப்பட்டேன். ரேவதியைப் பார்த்தால் ஏதோ ஸ்டார் மாதிரி இருந்தது. அதனால்தான் கேட்டேன்."

"யு..." என அவளை முதுகில் தட்டிய சூர்யா, "அவள்தான் இவள்" என்றான் சிரிப்புடன்.

"நிஜமாகவா? நான் நம்பமாட்டேன்."

"ஏன் நம்ப மாட்டீர்கள் சில்வியா? கிராமத்துப் பெண்கள் அழகாய் இருக்கமாட்டார்களா என்ன?" ரேவதி கேட்டாள்.

"நிச்சயம் அழகாக இருப்பார்கள். ஆனால் அதை எடுத்துக் காட்டும் விதம் தெரியாது அவர்களுக்கு. அன்றாட பிரச்சனைகளில் ஆழ்ந்து போய் தன் அழகையே உணராத பெண்கள்தான் அங்கே அதிகமாக இருக்கிறார்கள்."

மரகதத்தின் நினைவு வர, சில்வியா சொல்வதும் சரிதான் என்று தோன்றியது ரேவதிக்கு. பிறகு இருவரும் சகஜமாக பேசிக் கொள்ள சாப்பிட்டு முடித்த சூர்யா தனக்கு தெரிந்தவர்களிடம் பேசப் போனான்.

சில்வியா பேஷன் டிசைனிஸ் முடித்துவிட்டு, பேஷன் குவாடினேட்டராக இருப்பதாக கூறினாள். "நான் மாடல்
களுக்கு அவர்களின் உடலமைப்புக்கு தகுந்தபடி உடை
களை வடிவமைப்பேன். இன்று உன் ரவிக்கையும்,
புடவையும் தைத்திருக்கும் முறையும் உனக்கு அழகாக
அவை பொருந்திப் போகிற விதமும் எந்த மாடலிடமும்

நான் பார்த்ததில்லை. அதனால்தான் சூர்யாவிடம் விளையாட்டாக உன்னை இரண்டாவது மனைவியா என்று கேட்டேன். என்னை தவறாக நினைக்காதே'' என்றாள் சில்வியா.

''நீங்க அவருக்கு மாமா பெண். விளையாட உங்களுக்கில்லாத உரிமையா?'' என்ற ரேவதி, ''இந்த புடவையும் ப்ளசும் அசாமிலிருந்து அத்தை அனுப்பியிருந்தார்கள்'' என்றாள்.

''அத்தையின் செலக்ஷன் எப்பவும் நன்றாக இருக்கும். உன்னை செலக்ட் பண்ணியதைப் போல.'' மேலும் சிறிது நேரம் இருவரும் பொதுவான விஷயங்கள் பேசிக் கொண்டிருந்த போது ''போகலாமா?'' என்றபடி சூர்யா வந்தான்.

ரேவதியைப் பார்த்ததும் ''நீ நன்றாகத்தானே இருக்கிறாய்? உடம்புக்கு ஒன்றுமில்லையே!'' என்றான் கவலையுடன்.

''ஏன் நான் நன்றாகத்தான் இருக்கிறேன்'' என்றாள் ரேவதி திகைப்புடன்.

''நல்லவேளை, சில்வியாவிடம் மாட்டிய யாரும் முழுசாக திரும்பியதில்லை. நீயாவது தப்பிப் பிழைத்தாய்.''

''இவன் சொல்வதை நம்பாதே ரேவதி.''

''உன் கணவரைக் கேட்கலாமா?''

''கேளேன்!''

அவர்கள் சண்டையில் குறுக்கிட்ட ரேவதி, ''சில்வியா உங்களுக்கு திருமணமாகி விட்டதா?'' என்றாள் வியப்புடன்.

''இவ்வளவு நேரம் பேசினீர்கள், இவளிடம் சிக்கிக் கொண்ட அந்த பாவப்பட்ட மனிதரைப் பற்றி இவள் சொல்லவே இல்லையா?''

''பேச்சு சுவாரஸ்யத்தில் மறந்து போனோம்'' என்றாள் சில்வியா.

''ஆமாம். எனக்கும் கேட்கத் தோன்றவில்லை'' என்றாள் ரேவதி.

''அப்படி என்ன பேசினீர்கள்?''



''உன் மனைவியைப் பற்றிதான் பேசினோம். அபாரமான உடலமைப்பு அவளுக்கு. இதுபோல் சேலையில் நளினமாய் அழகை சிந்தும் பெண்கள் மாடலிங்கில் கூட இல்லை. எந்த உடையும் ரேவதிக்கு பொருத்தமாக இருக்கும் என்றுதான் சொல்லிக் கொண்டிருந்தேன்.''

அழகிகளை மேலும் அழகாக்குவதையே தன் வேலையாக கொண்டுள்ள சில்வியா ரேவதியைப் பற்றி கூறியதை கேட்டதும் சூர்யாவுக்கு ஆச்சரியமாக இருந்தது. அதை வெளிக்காட்டாமல், ''உன் தொழிலே அழகு சம்பந்தப்பட்டதுதான். அதனால் யாரைப் பார்த்தாலும் உனக்கு இதேதான் பேச்சு'' என்றான்.

''இல்லையே. எல்லோரிடமும் பேசவில்லையே? அதுவும் முக்கியமாக உன்னிடம் உன் அழகைப் பற்றி பேசினேனா சொல்? இப்போதாவது தெரிந்து கொள். நான் என்றும் உண்மையைத்தான் பேசுவேன்.'' சில்வியா சொல்ல மூவரும் வாய்விட்டு சிரித்தனர். அதே சிரிப்புடன் சில்வியா விடைபெற்று கிளம்ப, தன் பழைய நண்பர் ஒருவரை சந்தித்த அருணாச்சலம், ''சூர்யா இதே ஹோட்டலில்தான் இவனும் தங்கியிருக்கிறான். நாங்க ரொம்ப நாள் கழித்து சந்திக்கிறோம். இரவு இங்கே தங்கியிருந்து விட்டு காலையில் இவனையும் நம் வீட்டிற்கு சாப்பிட அழைத்து வருகிறேன். நீங்க கிளம்புங்க'' என்றபடி நண்பருடன் தங்கிவிட்டார்.

சூர்யாவும் ரேவதியும் மட்டும் வீடு திரும்பினர். கடற்கரை சாலை வழியாக கார் சென்றது. மிளகாய் பஜ்ஜி, ஐஸ் வண்டி, சுண்டல் டின்கள், மக்கள் கூட்டம், பூக்காரியின் கெஞ்சல்கள் ஏதுமின்றி இரவு நேர மெரினா அற்புத அழகுடன் இருந்தது. காரை கடற்கரையின் உள்ளே சென்று நடைபாதையில் நிறுத்திய சூர்யா, ''சிறிது நேரம் இப்படியே உட்காந்து விட்டு போவோம் ரேவதி. நாம நிகிலாவுடன் பீச்சுக்கு வந்ததுதான். அப்புறம் வரவேயில்லை'' என்றான்.

இரவு பணி போலீசார் சுற்றி வருவதை கண்ட ரேவதி பயமின்றி கடலை, காற்றை ரசிக்கத் தொடங்கினாள்.

அவள் புறம் திரும்பி அமர்ந்து "இன்னிக்கு ரிஷப்சன் எப்படியிருந்தது ரேவதி?" என்றான் சூர்யா.

"உண்மையை சொல்லட்டுமா?"

"நிச்சயமாய்."

"இந்த மாதிரி ஒரு சிட்டியில் பைவ்ஸ்டார் ஹோட்டலில் நடக்கும் ஆடம்பரமான பங்ஷனுக்கு நான் வருவது இதுதான் முதல்முறை. எல்லாமே ரொம்ப பிரமிப்பாய் இருந்தது. பணம் தண்ணீராய் ஓடியது. வந்தவர்கள் கை குலுக்கி, சிரித்து சாப்பிட்டுவிட்டு கிளம்பிவிட்டார்கள். மற்றபடி வேறு எதுவும் எனக்கு மனதில் நிற்கவில்லை."

"எல்லா பங்ஷனிலும் இதுதானே நடக்கும்? கைகுலுக்கி.. சிரித்து.. சாப்பிட்டு..." சூர்யா சொல்ல, "இல்லை. எங்க ஊரில் பங்ஷன் இப்படி நடக்காது" என்றாள் ரேவதி. "திருமணம் நிச்சயிக்கப்பட்டதுமே வீடு களை கட்டிவிடும். தோட்டத்து நெல்லை அரைப்பதும், வீடு வெள்ளையடிப்பதுமாய் இருப்பார்கள். திருமணத்திற்கு அழைப்பு முறை செய்வதற்காக உறவினர் வீடுகளுக்கு குடும்ப சகிதம் சென்று பத்திரிகை கொடுப்பார்கள். திருமணத்திற்கு புடவை எடுக்க, அண்ணன், தம்பி, மாமன், மச்சான் என உறவு குடும்பங்கள் அத்தனையும் கிளம்பி போய் எல்லோரும் தங்களுக்கு பிடித்த விதத்தில் எடுத்துக் கொண்டு பெரிய பெரிய துணி மூட்டைகளுடன் திரும்பி வருவார்கள். திருமணத்தன்று அந்த உடைகளை உடுத்திக் கொண்டு உரிமையுடன் அவர்கள் வேலை செய்வதைப் பார்க்கவே நிறைவாக இருக்கும். விருந்து சமையல் செய்வதற்காக பக்கத்து வீட்டிலிருந்து அண்டாவை வாங்கி வருவார்கள். குழம்பு வைக்க எதிர்வீட்டு வெண்கல உருளி, பொரித்தெடுக்க அடுத்த தெருவிலிருந்து வாணலி, வரும் விருந்தினருக்கு பாய் தலையணைகள் என எல்லார் வீட்டிலிருந்தும் விசேஷ வீட்டிற்கு பொருள்கள் போகும். திருமணத்தன்று சமையல் ஆள் சமையல் வேலையை செய்ய, மேற்பார்வையிட மேலத்தெரு நாயுடு மாமா, பந்தியிட அப்துல் அண்ணன், இலை எடுக்க பண்ணையாட்கள், மணவறை பூ அலங்காரம் ஏற்பாடு மேற்கு தோட்டத்து கவுண்டர் அண்ணன் என ஊரே திரண்டு வந்து வேலை செய்யும். சில திருமணங்களில் சொன்னபடி நகை போடவில்லை, சீர் செய்யவில்லை என்ற பிரச்சனை வருவதும் உண்டு. அப்போது பெண்கள் தங்கள் கழுத்தில் கையில் கிடக்கும் நகைகளையோ, ஆண்கள் மடியில் கட்டி வைத்திருக்கும் பணத்தையோ கொடுத்து திருமணத்தை முடிப்பார்கள். மணமுடித்து மகள் போனபிறகு பெண் வீட்டார் அதை மெதுவாக திருப்பிக் கொடுப்பார்கள். இன்னும் சில திருமணங்களில் உபசரணை சரியில்லை என சின்ன விஷயங்களுக்கு பெரிதாய் முறுக்கிக் கொள்வார்கள். அதையும் எல்லோரும் கூடி பேசி சமாதானம் செய்வார்கள்.



அதேபோல் ஒரு வீட்டில் துக்க காரியம் நடந்துவிட்டால் அங்கு ஒரு மாதத்திற்கு சமையலே கிடையாது. தினம் ஒரு வீட்டிலிருந்து உணவு வரும். அங்குள்ள மக்கள் பெரும்பாலும், வசதியற்றவர்கள். கைகளில் கண்ணாடி வளையலும், கண்டாங்கி புடவையும் அணிந்திருந்தாலும் அவர்கள் மனதில் இன்னும் அன்பு மாசு படாமல் இருக்கிறது.

எனவே எனக்கு இங்கு பார்த்த திருமணம் ஒரு சினிமா காட்சியைப் போல் சுவாரஸ்யமாக இருந்ததே தவிர, ரொம்ப அந்நியமாய் தோன்றியது." மனதில் பட்டதை எல்லாம் ரேவதி சொல்லவும் சூர்யா எதுவும் பேசாமல் அமர்ந்திருந்தான்.

அவனை பார்த்த ரேவதி "ஸாரி நான் வளர்ந்த சூழல் எனக்குள் பதிந்திருக்கிற மாதிரி, நீங்க பார்த்துபழகிய இந்த சூழ்நிலை உங்களுக்கு பிடித்திருக்கும். அதைப் பற்றி யோசிக்காமல் பேசிவிட்டேன்" என்றாள்.

"இல்லை ரேவதி. இந்த பார்ட்டிகளும், பங்ஷன்களும் எனக்கும் பழகிப் போனவையே தவிர, பதிந்து போனவை அல்ல. நீ சொல்வதை கேட்டபிறகுதான் எனக்கு யோசிக்கத் தோன்றுகிறது. இங்கு நடக்கும் பிஸினெஸ் பார்ட்டிகளுக்கும், திருமண விழாக்களுக்கும் எந்த வித்தியாசமும் இல்லை. அழைப்பின் பேரில் வரும் மேல் மட்டத்தினர் தங்கள் தொழில் அக்ரிமென்ட்களையும், விரிவுபடுத்துதலையும் நிறைவேற்றிக் கொள்ளத்தான் இது போன்ற விழாக்களை பயன்படுத்திக் கொள்வார்கள். இதுவரை இது எனக்கு தவறாக தோன்றியதே இல்லை. நீ செல்லும் போதுதான் இப்படியும் விழாக்கள் நடக்குமா என்று ஆச்சரியமாக இருக்கிறது. அதுமட்டுமல்ல என் அப்பாவின் இன்னொரு புறத்தையும் அவர் உன்னிடம் பேசும் போதுதான் அறிந்து கொண்டேன்" என்று யோசனையினூடே கூறினான் சூர்யா.

சிறிது அமைதிக்கு பின் நினைவு வந்தவளாக சில்வியாவைப் பற்றி கேட்டாள் ரேவதி. "அவள் கணவர் கல்லூரியில் எனக்கு சீனியர்தான். நல்ல கறுப்பாக இருப்பார். ஆனால் வெள்ளை மனம். ஒரு விழாவிற்கு என்னுடன் வந்த அவரை சில்வியாவுக்கு ரொம்ப பிடித்துப் போய்விட்டது. வீட்டில் அடம் பிடிக்கத் தொடங்கி விட்டாள். விருப்பமேயில்லாத இருவரின் பெற்றோர்களுக்கும், இருவரின் காதலுக்கும் இடையே நான் பட்டபாடு! அப்பப்பா! எல்லோரையும் கஷ்டபடுத்திக் கொண்டு என்ன காதல் இது? என்று கூட நினைத்தேன். ஆனால் மணமாகி ஒரு குழந்தையும் பிறந்தாகிவிட்டது. நாளுக்கு நாள் இறுகிவரும் அவர்களது அன்பையும்,



அந்நியோன்னியத்தையும் பார்த்த பிறகு நாமும் இப்படி காதலித்தால் என்ன என்று கூட தோன்றும்." சூர்யா சட்டென்று பேச்சை நிறுத்த "ம்.. சொல்லுங்க" என்றாள் ரேவதி ஆர்வத்துடன்.

"நீங்க எப்படிப்பட்ட பெண்ணை காதலிக்க வேண்டும் என்று நினைத்தீர்கள்?"

உடனே பதில் சொல்லாது ஒரு முழு நிமிடம் அவளை உற்றுப் பார்த்தான் சூர்யா.

"சொல்லுங்க ப்ளீஸ்?"

"உன்னைப் போல் நல்ல உயரமாய், இதே போல் பளபளக்கும் சுருண்ட முடி, இந்த அகலமான கண்கள், வடித்தெடுத்தது போன்ற உடல்." கனவில் பேசுவதைப் போல் அவன் வாய் பேச கைகள் தன் போக்கில் அவள் தலையையும், கண்களையும் வருடின. இந்த நேரான மூக்கு, செர்ரிப்பழ உதடுகள் என இதழ்களை வருடிய விரல்களின் மின்சாரம் பாய சட்டென குனிந்து முத்தமிட்டான். ரேவதியின் கை தன்னையறியாமல் அவன் தோள்களைப் பற்றியது. நெற்றியிலும், கன்னங்களிலும் பதிந்த அவன் உதடுகள் உயிர்வரை ஊடுருவ. கனவா, மயக்கமா என்று புரியாத உணர்வில் ரேவதி மயங்கி சரிந்தாள். அவள் முகத்தை நிமிர்த்திய சூர்யா பயந்து போய் காரில் எப்போதும் இருக்கும் வாட்டர்பாட்டிலை எடுத்தான். கைகளால் நீரை அவள் முகத்தில் வேகமாக தெளிக்கவே, ரேவதி கண்களை திறந்தாள். சூர்யா நிம்மதியாய் மூச்சு விடவும், ஒரு நிமிடம் விழித்த ரேவதி மறு நிமிடம் கண்களில் நீர்வழிய அழத் தொடங்கினாள். புறங்கையில் கண்களை துடைத்தபடி அவள் அழுவது சிரிப்பையும் கோபத்தையும் ஒருங்கே வரவழைத்தது.

"ஸ்டாப் இட் ரேவதி! இப்ப எதுக்கு அழுகிறாய்?" - அதட்டினான் சூர்யா.

''உங்களுக்கே இது நல்லா இருக்கா? பேசலாம்னு பீச்சுக்கு கூட்டிட்டு வந்து இந்த மாதிரி நடந்து..'' மேலே சொல்ல முடியாமல் கூச்சம் தடுக்க திணறினாள் ரேவதி.

கடகடவென சிரித்தான் சூர்யா. ''உங்க ஊர்ல இதெல்லாம் தப்பா ரேவதி?'' என்றான் அப்பாவியாய். ''ஒரு இளம் பெண். அதுவும் அழகான பெண். தனிமையில், இரவில் கடற்கரையில் அப்சரசைப் போல் அருகே அமர்ந்திருக்கும் போது எதுவுமே நடக்கலைன்னாதான் இந்த ஊர்ல என்னை பத்தி தப்பா நினைப்பாங்க.''

''எனக்கு வீட்டுக்கு போகணும்'' என்றாள் ரேவதி அடம்பிடிக்கும் குரலில். அந்த குரலிலும் சூர்யாவுக்கு சிரிப்பு வர ''போகலாம்'' என்றபடி காரை ஸ்டார்ட் செய்தான். வீடு வந்ததும் தன் அறைக்கு சென்றவளை கைபற்றி நிறுத்தியவன், ''ரேவதி இன்னிக்கு பங்ஷனுக்கு கூட்டிப் போனால் நான் கேட்கிற பரிசை தர வேண்டும் என்றேன் நினைவிருக்கிறதா?''

இவன் என்ன கேட்கப் போகிறான் என்ற பயத்தில் ரேவதிக்கு வியர்த்தது. நெஞ்சம் படபடக்க அவன் முகத்தையே பார்த்தாள். அவளை பார்த்த சூர்யாவுக்கு மறுபடி சிரிப்பு வந்தது. மெதுவாய் அவள் அருகே வந்தான். கொஞ்ச கொஞ்சமாய் பின்னால் நகர்ந்த ரேவதி முதுகில் சுவர் மோதவும் போக வழியின்றி நின்றாள். ''ரேவதி, எனக்கு இப்போதே பதில் வேண்டும். நான் கேட்பதை தருவாயா இல்லையா?'' மூச்சுக்காற்று மேலே படும் நெருக்கத்தில் சூர்யா நிற்க, ''என்ன வேண்டும் உங்களுக்கு?'' என்றாள் ரேவதி இதழ்கள் துடிக்க.

''நீ ஒரு வெல்ல பணியாரம் செய்வாயே! அதை நாளை செய்து தருகிறாயா ப்ளீஸ்?''

குறும்பில் கண்கள்பளபளக்க சூர்யா கேட்டதும், திகைத்துப் போனாள் ரேவதி.



எச்சிலை விழுங்கியவள், ''இதையா இத்தனை நேரம் கேட்டீர்கள்?'' என்றாள்.

''ஆமாம். நீ வேறு எதாவது நினைத்துக் கொண்டாயா என்ன?''

''இல்லை. உங்களுக்கு அரிசிப்பணியாரம்தானே பிடிக்கும். அதைத்தான் கேட்பீர்கள் என்று நினைத்தேன்.''

ரகசிய சிரிப்பில் இருவர் முகங்களும் ஒளி வீச 'குட் நைட்' என்று தன் அறைக்கு சென்றான் சூர்யா. பதில் 'குட் நைட்' கூறி அறைக்கு வந்து படுக்கையில் விழுந்த ரேவதியை தூங்கவிடாமல் கடற்கரை நிகழ்ச்சிகள் புரட்டிப் போட்டன.

## 13

ரேவதிக்கு இறுதி பரிட்சை நடந்து கொண்டிருந்தது. கல்லூரியில் நடந்த இன்டர்வியூவில் செலக்ட் ஆகி மும்பையில் ஒரு பெரிய நிறுவனத்தில் பணி புரியும் வாய்ப்பு அவளுக்காக காத்திருந்தது. அதை யாரிடமும் பகிர்ந்து கொள்ள விருப்பமின்றி இருந்தாள் ரேவதி. இந்த படிப்பு முடிந்ததும் சூர்யாவுடனான அவளது உறவும் முடிந்துவிடும். அவள் சில காலம் வேலை பார்த்துவிட்டு திரும்பி போய் அவளது லட்சியப்படி ஊர் விஷயங்களை கவனிக்கத் தொடங்கிவிடுவாள். அவன் உலகம் பூராவும் பறந்து வேலைபார்ப்பான். எங்காவது என்றாவது சந்திக்க நேர்ந்தால் சோனாலி போன்ற அல்ட்ராமாடர்ன் அழகியின் இடுப்பை அணைத்தபடி ''உன்னை எங்கோ பார்த்த மாதிரி இருக்கிறதே!'' என்று யோசிப்பான். பலவாறாக யோசித்து மனம் வேதனைப்பட்ட ரேவதி புத்தியை திருப்ப படிப்பில் கவனம் செலுத்தினாள். எந்த நேரமும் புத்தகமும் கையுமாகவே அமர்ந்திருந்தாள். சூர்யா அவள் கவனத்தை கலைக்க முற்படாமல் ஒதுங்கியே போனான். வீட்டில் இருப்பதே தெரியாமல் சத்தமின்றி நடமாடினார்கள்.

அன்று இரவு டைனிங்டேபிளில் உட்கார்ந்திருந்த
ரேவதி,தட்டிலிருந்த சப்பாத்தியை பிய்ப்பதும், பிறகு
அதை தட்டிலேயே போட்டுவிட்டு புத்தகத்தில் ஆழ்ந்து
போவதுமாய் அரைமணி நேரமாய் இரண்டு சப்பாத்தி
களுடன் போராடிக் கொண்டிருந்தாள். இன்டர்நெட்டில்
நண்பனின் மெயிலை பார்த்தபடி அமர்ந்திருந்த சூர்யா,
ரேவதியிடம் எழுந்து வந்தான். அவள் கையிலிருந்த
புத்தகத்தை பிடுங்கி மூடி வைத்தவன், ஒரு சேரை
இழுத்துப் போட்டு அவள் அருகே அமர்ந்தான். "இங்கே
பார் ரேவதி, எவ்வளவு நேரம் படிக்கிறாய் என்பதைவிட
எவ்வளவு கவனத்துடன் படிக்கிறாய் என்பதுதான் முக்
கியம். நீ புதிதாக பள்ளி செல்லும் மாணவி அல்ல.
இத்தனை நாளில் உனக்கே இது தெரிந்திருக்கும். நல்ல
ஹெல்த்தியான உணவு சாப்பிட்டு தேவையான அளவு
தூங்கினால்தான் உடம்புக்கும் மூளைக்கும் ஓய்வு
கிடைக்கும். ஓய்வெடுத்த பின் படிக்கிற பாடம்
நினைவில் நிற்கும். இப்ப நீ நிதானமா சாப்பிட்டுவிட்டு,
மேலோட்டமாய் டி.வி. பார்த்துவிட்டு உட்கார்ந்து ஒரு
இரண்டுமணி நேரம் படித்துவிட்டு தூங்கிவிடு. என்ன?"
என்றவன் சோமுவை அழைத்து சூடாக சப்பாத்தி
கொண்டுவர சொன்னான்.

ஒரு ஆப்பிளை கட் பண்ணி அவளிடம் கொடுத்தான்.

"நீங்க சாப்பிடலையா?" என்றாள் ரேவதி.

"தேங்க் காட். உனக்கு என்னை பற்றிய நினைவிருக்
கிறதா ரேவதி? படிப்பதில் மூழ்கி உன்னையே மறந்து
விட்ட உனக்கு, என்னை எப்படி நினைவுபடுத்துவது
என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன்" என்று சிரித்த
சூர்யா, "நான் சாப்பிட்டாகி விட்டது. நீ சாப்பிடு" என்றான்.

சாப்பிட்டு முடித்ததும் அவனுடன் அமர்ந்து சிரித்த
படியே ஒரு கார்டூன் சேனலை பார்த்துவிட்டு படிக்க
உட்கார்ந்த ரேவதிக்கு உற்சாகமாக இருந்தது. அது கார்டூன்



பார்த்ததாலா, அவனுடன் நேரத்தை செலவிட்டதாலா
என்றுதான் புரியவில்லை.

பரிட்சைகள் ஜுரவேகத்தில் நடந்து முடிந்தன. ரேவதி
எல்லாவற்றையும் நன்றாக செய்திருந்தாள். வழக்கம்
போல் முதல் மதிப்பெண் நிச்சயம் என்று நினைத்தபடி
வெளியே வந்தாள். அன்று இறுதிநாள் என்பதால்
ஆட்டோகிராபும் போட்டோகிராபும் பரிமாறிக் கொள்ளப்
பட்டது. நான்கு வருடமாய் பழகியவர்களை பிரியப்
போவதை நினைத்து எல்லோரும் துக்கத்துடன் இருந்
தனர். இவர்களாவது நண்பர்களைத்தான் பிரிகிறார்கள்.
நாளடைவில் புதிய வேலை, திருமணம், குழந்தைகள்
என்ற பரபரப்பில் இந்த விஷயம் முக்கியத்துவம் இழந்து
விடும். ஆனால் நான் என் வாழ்வையே விட்டுவிட்டு
போகப்போகிறேன். எதிர்கால பிரச்சனை பூதாகரமாய்
நின்று மருட்டியது. ரிசல்ட் வந்ததும் வேலையில் சேர
வேண்டும். அப்பாவும் அம்மாவும் அவ்வளவு தூரத்தில்
போய் வேலைபார்க்க விடமாட்டார்கள். எனவே வேலை
யில் சேர்ந்த பிறகுதான் அவர்களுக்கு தகவல் தெரிவிக்க
வேண்டும். சூர்யா அதற்குள் வெளிநாடு கிளம்பி விடு
வான். எனக்கு இன்னும் வெளிநாட்டு விசா கிடைக்க
வில்லை என்றபடி சில மாதங்களை உருட்ட வேண்டும்.
பிறகு குடும்பத்துடன் அங்கு செட்டில் ஆக முடியாத
சூழ்நிலை. அதனால் நான் இங்கேயே இருக்கிறேன்.
சூர்யா மட்டும் வரப்போக இருக்கட்டும் என்று சொல்ல
வேண்டும். சில வருடங்களில் மெதுவாக அவர்களே
சூழ்நிலையை புரிந்து கொண்டு "நீ இங்கேயே வந்து
விடு" என்று கூப்பிடும்போது போய் ஊருடன் செட்டி
லாகி விட வேண்டும். மாமியார், மாமனார் எதும் தன்
னிடம் கேட்காதவண்ணம் அவர்களை சமாளிப்பது
சூர்யாவின் பொறுப்பு. தனக்குள் தெளிவான முடிவிற்கு
வந்த பின் ரேவதி அமைதியானாள். இரவில் வேலை

முடிந்து வந்த சூர்யா "அப்பாடா, ஒரு வழியா கல்லூரி படிப்பு, பரிட்சை எல்லாம் முடிஞ்சிப் போச்சு போலி ருக்கே" என்றான்.

பதில் எதுவும் சொல்லாமல் அவள் அமர்ந்திருப்பதை பார்த்ததும், "என்ன இன்னும் நீ நார்மலுக்கு வரவில்லையா?" என்றான்.

"அதெல்லாம் இல்லை உங்கிட்ட ஒரு விஷயம் சொல்லணும். அதான் யோசித்துக் கொண்டிருந்தேன்."

"இதில் யோசிக்க என்ன இருக்கு. சொல்லேன்!" என்ற படி அவள் எதிரே ஒரு சேரை திருப்பிப் போட்டு அமர்ந் தான் சூர்யா. தலைகீழாய் திருப்பி போட்டு சேரின் முது கின் மேல் முகத்தை வைத்தபடி அவன் அமர்ந்திருந்த விதம் தன்னை ஈர்ப்பதை உணர்ந்து பார்வையை வெளியே திருப்பிய ரேவதி "எனக்கு மும்பையில் வேலை கிடைத் திருக்கிறது" என்றாள்.

"ஓ, வெரிகுட். கங்கிராட்ஸ்" என்ற சூர்யாவின் உற் சாகத்தில் துவண்டு போனாள்.

"எப்போது வேலையில் சேர வேண்டும்?"

"சிசல்ட் வந்ததும்."

"இன்னும் இரண்டுமாதத்தில் ரேவதி சுதந்திரப்பறவை. வெரி நைஸ். உன் பெற்றோர்களிடம் சொல்லிவிட்டாயா?"

"இன்னும் இல்லை." என்ற ரேவதி தன் திட்டத்தை விவரித்தாள். "ரொம்ப யோசித்து ப்ளான் போட்டிருக்கிறாய் போலிருக்கிறதே" என்றான் சூர்யா வியப்புடன்.

"உங்க ப்ராஜெக்ட் எப்போது முடிகிறது?" என்றாள் ரேவதி.

"அது ஒரு மாதத்தில் முடிந்துவிடும் அநேகமாய் அடுத்தது ஜெர்மன் அனுப்புவார்கள் என நினைக்கிறேன். இனி அதற்கு தயாராக வேண்டும். எனி வே ரேவதி உலகின் எந்த மூலையில் இருந்தாலும் ரேவதி எனும்



இனிய பெண்ணுடன் பழகிய இந்த நாட்களை நான் மறக்க மாட்டேன். நீயும் நினைவு வைத்திருப்பாய் அல்லவா?"

அவ்வளவுதானா? எல்லாமே அவ்வளவுதானா? மனம் தவித்தது ரேவதிக்கு.

ஒரு குட்பையுடன் முடிந்துவிடக்கூடிய உறவுதானா இது? அவன் கட்டிய தாலி கழுத்தில் உள்ளபோதும் பிரியமற்று செய்த திருமணம் என்பதால் இருவருமே அதை பெரிதாய் எண்ணியதில்லைதான். ஆனால் கட்டி அணைத்ததும், முத்தமிட்டதும், பார்த்தவுடன் மலர்ந்து போகும் முகமும், ரசனையுடன் பார்க்கும் பார்வைகளும் பிரியமின்றி வந்தவை என்று யாரால் சொல்ல முடியும்? கண் முன்னே காதலிப்பதும், கண்மறைந்த பின் மறந்துபோவ தும் கூட இவர்கள் கலாச்சாரத்தின் ஒரு பகுதியா?

"ஹலோ..." ரேவதியின் முன்னே கைகளை ஆட்டினான் சூர்யா. "என்ன ரேவதி, அடிக்கடி எதையோ யோசிக்கத் தொடங்கிவிடுகிறாய? வேலைகிடைத்த சந்தோஷம் உன் வாயை கட்டிப்போட்டு விட்டதா?" என்ற சூர்யா வழக்கம் போல் ஏதோ பேச, எதிலும் கவனமின்றி அரைகுறையாய் தலையசைத்தாள் ரேவதி. அவளை பார்த்த சூர்யாவுக்கு சிரிப்பும் பரிதாபமும் ஒருங்கே தோன்றியது.

"உன் சிசல்ட் வர இன்னும் ஒரு மாதத்திற்கு மேல் இருக்கிறது. அதுவரை விடுமுறையில் நீ உன் ஊருக்கு போகிறாயா ரேவதி?" என்றான் சூர்யா.

அவனுடன் இருக்கப்போகும் நேரங்களை இழக்க விரும்பாத ரேவதி "இல்லை" என தலையசைத்தாள்.

"உன் வீடு அப்பத்தா, எதிர்த்த வீட்டு அக்கா, பக்கத்துவீட்டு பாட்டி அப்புறம் உன் தோழிகள்.. யாரையும் பார்க்க வேண்டாமா?"

சூர்யாவின் அருகாமைக்கு முன் அவையாவும் மதிப் பிழந்து தோன்ற, "நான் இங்கே இருப்பது உங்களுக்கு பிடிக்கவில்லையா?" என்றாள் ரேவதி வருத்தத்துடன்.

''சேச்சே, என்ன ரேவதி இது? நீதானே உங்க ஊரை அடிக்கடி மிஸ் பண்ணுவாய், அதற்காக கேட்டேன்.''

இன்று என்னை விட நான் அதிகமாக மிஸ் பண்ணுவது உன்னைத்தான், என சொல்லத் தோன்றியது ரேவதிக்கு. வீட்டின் எங்கோ ஓரிடத்தில் யாரிடமோ அவன் பேசும் குரல், மாடிப்படிகளில் வேகமாய் தடதடக்கும் அவனது காலடி ஓசை, தாளிட்ட அறைகளில் தனித்தனியே உறங்கிய போதும் அவன் அருகாமையை உணர்த்தும், காற்றில் பரவியிருக்கும் அவனுக்கான வாசனை. இதெல்லாம் கிடைக்குமா அந்த ஊரில்?

டேபிள் மீதிருந்த நீரை டம்ளரில் சரித்து குடித்த ரேவதி, ''எதிர்காலத்தில் அங்கே தானே இருக்கப் போகிறேன். அதனால் அப்புறமாய் போகிறேன்'' என்றாள் சூர்யாவிடம்.

''சரி, உன் விருப்பம்'' என்றான் அவன் சிரிப்புடன்.

அனு அகர்வால் அடிக்கடி அவளை பார்க்கவென்று வந்துபோய்க் கொண்டிருந்தாள். ஒவ்வொரு முறையும் அவள் சூர்யாவுடன் உரிமையுடன் பேசுவதை ரேவதி மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள். சூர்யாவின் வாழ்வை விட்டு நாம் விலகிப் போகிற தருணத்தில் அவனுடன் பழகுவது யாராய் இருந்தால் என்ன? என மனதில் சொல்லிக் கொண்டாள்.

வீட்டை விட்டு எங்குமே ரேவதி வெளியே போக வில்லை. ஒரு ஞாயிறன்று ''உனக்கு வீட்டிலேயே இருந்து போரடித்து போயிருக்குமே ரேவதி, எங்காவது வெளியே போய் வரலாமா?'' என சூர்யா அழைத்த போது கூட ''எனக்கு எங்கும் போகத் தோன்றவில்லை'' என்று மறுத்துவிட்டாள். அவனுக்காக விதவிதமாய் சமைப்ப திலும் அவன் அறையை அலங்கரிப்பதுமே சுகமாக இருந்தது அவளுக்கு. சூர்யாவுடன் அரட்டை அடிப்பது கூட குறைந்துபோய், அவனை கண்நிறைய பார்ப்பதுவே திருப்தியாக உணர்ந்தாள்.



அன்று ரேவதியை பார்க்க வந்த அனு, ''நம்ம க்ளாஸ்மேட் எல்லோரும் சேர்ந்து சினிமா போக டிக்கெட் எடுத்திருக்கிறோம். கிளம்பு ரேவதி போகலாம்'' என்றாள்.

''நான் வரவில்லை அனு'' என ரேவதி மறுத்தபோது, சூர்யா வற்புறுத்தினான்.

''எவ்வளவு நேரம் வீட்டிலேயே அடைந்துகிடப்பாய்? எனக்கே உன்னை இப்படிப் பார்க்க பிடிக்கவில்லை. அனுவுடன் போய்விட்டு வா ரேவதி'' என்றான்.

''சரி போகலாம்'' என ரேவதி கிளம்பவும், ''இந்த டிரஸ்சா? வேறு எதையாவது போட்டுக் கொண்டு போ'' என்றான்.

உள்ளே சென்று கறுப்பு பேண்டும் க்ரீம் கலர் சட்டையு மாய் வந்தவளை பார்த்ததும் 'குட்' என்றான் அவனின் பிரத்யேக சிரிப்புடன்.

அந்த சிரிப்பில் தானும் மலர்ந்து சிரிப்புடன் கிளம்பிய வளை வியப்புடன் பார்த்தாள் அனு.

அவர்கள் தியேட்டருக்கு போய் சேர்ந்தபோது டைட் டில் போடத் தொடங்கிவிட்டதால், எல்லோருக்கும் பொது வாய் 'ஹாய்' சொல்லியபடி இருக்கைகளில் அமர்ந்தார்கள். அது ஒரு காதல் படம். படத்தின் சுவாரஸ்யத்தில் ஈடு பட்டு ரேவதி ஒன்றிப் போனாள். இடைவேளை விட்டதும் 'ஐஸ்கிரீம் சாப்பிடலாம்' என்றபடி எல்லோரும் வெளியே வந்தனர். ஆளுக்கொரு ஐஸ்கிரீமையும் பாப்கார்னையும் சாப்பிட்டபடி, சிரிப்பும் விளையாட்டுமாய் பேசிக் கொண்டிருந்தனர். கேம்பஸ் இன்டர்வியூவில் அங்கிருந்த அனைவருமே செலக்ட் ஆகியிருந்ததால் வேலை பார்க் கும் இடம், நேச்சர் ஆப் ஒர்க், அதன் மூலமாய் வரக்கூடிய வசதிகள் என அவர்களுக்கு பேச நிறைய விஷயம் இருந்தது. இடைவேளை முடிந்து படம் தொடங்கவே ''இரு ரேவதி. ஐஸ்கிரீமுக்கு கொடுத்த நூறு ரூபாய்க்கு சில்லறை வாங்கவில்லை. வாங்கி வருகிறேன்'' என்றபடி

அனு ஸ்டாலை நோக்கி சென்றாள். எல்லோரையும் "போய் உட்காருங்கள். சில்லரை வாங்கிக் கொண்டு வருகிறோம்" என்று அனுப்பி விட்டு அனுவுக்காக காத்திருந்தாள் ரேவதி.

"ஹலோ ரேவதி" என்று யாரோ கூப்பிடும் குரல் கேட்டு திரும்பிப் பார்க்கவும், முகமெல்லாம் சிரிப்புடன் சரண் நின்றிருந்தான். அவனுக்கு ஹைதராபாத்தில் வேலை கிடைத்திருப்பதாக ரேவதி கேள்விப்பட்டிருந்தாள். கல்லூரி முடிந்த பிறகு இப்போதுதான் பார்க்கிறாள். சூர்யா கோபப்பட்டதிலிருந்து அவனை சந்திக்கும் தருணங்களையே தவிர்த்து வந்திருந்தாள். நேரில் பார்த்ததும் மரியாதை நிமித்தம் "ஹலோ சரண். எப்படியிருக்கிறீர்கள்? சினிமாவிற்கு தனியாகத்தான் வந்தீர்களா?" என்றாள் ரேவதி.

"என் ப்ரண்டுடன் வந்திருக்கிறேன் ரேவதி. உன் க்ளாஸ்மேட்ஸ் எல்லோரையும் பார்த்தேன். நீயும் வந்திருப்பது தெரிந்ததும் ப்ரண்டை படம் பார்க்கச் சொல்லி விட்டு உன்னிடம் பேசலாம் என்று வந்தேன்."

"அப்படியா? உங்கள் அம்மா அப்பா எல்லோரும் நலமா? அண்ணன் எப்படியிருக்கிறார்?"

"எல்லாரும் எல்லாமும் நலம். நான் உன்னிடம் ஒரு விஷயம் பேச வேண்டும் என ரொம்ப நாளாய் முயற்சித்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் சந்தர்ப்பமே அமையவில்லை. இன்று பேசாவிட்டால் இனி சந்தர்ப்பமே கிடைக்காமல் கூட போகக்கூடும்."

இந்த அனு இன்னமுமா சில்லரை வாங்குகிறாள். சீக்கிரம் வந்தால் பரவாயில்லை என்றுநினைத்தபடியே "என்ன சரண் முன்னேற்பாடு பலமாய் இருக்கிறது?" என்றாள் கேஷுவலாய்.

"நீ யுனிவர்சிட்டியில் சேர்ந்த அன்று முதன்முதலாய் நம்ம கேண்டீனில் உன்னை பார்த்தபோதே முடிவு



செய்துவிட்டேன் வாழ்வில் திருமணம் என்றால் அது உன்னுடன்தான் என்று. என் குடும்பம் பற்றி உன்னிடம் சொல்லியிருக்கிறேன். எனக்கு எந்த கெட்டபழக்கமும் கிடையாது ரேவதி. நீ வாழ்வில் என்னுடன் இணைந்தால் உயிராய் உன்னை காப்பேன்." உணர்ச்சி வசப்பட்டு சரண் பேச இவனுக்கு எப்படி புரியவைப்பது என்று ரேவதி யோசித்தாள்.

"ஏன் ரேவதி பதிலே பேசமாட்டேன்கிறாய்?"

"இல்லை சரண். உன்னுடைய மனதில் இப்படியொரு சலனம் ஏற்பட நான் காரணமாயிட்டனேன்னு சங்கடமா இருக்கு."

"நீ ஏன் தேவையில்லாமல் சங்கடப்படுகிறாய்? நீ என்றும் சாதாரணமாகத்தான் பழகினாய் என்று எனக்கு தெரியும். நான்தான் உன்னை விரும்பத் தொடங்கினேன். அதனால் என்ன? திருமணத்திற்கு பிறகுதானே நிறைய பேர் காதலிக்கத் தொடங்குகிறார்கள். நமக்கு திருமணமான பிறகு நீயும் என்னை விரும்பத் தொடங்கி விடுவாய். அதனால் உன்னை பொறுத்தவரை இது அரேன்ஜ்ட் மேரேஜாகவும், என்னை பொறுத்தவரை லவ் மேரேஜாகவும் இருந்துவிட்டுப் போகட்டும்."

"நீ சொல்வது சராசரி பெண்களுக்கு பொருத்தமாக இருக்கலாம். ஆனால் இன்னொரு ஆணை விரும்பி, அவன் மேல் உயிரையே வைத்திருக்கும் பெண்ணுக்கு சாத்தியமில்லை."

திகைத்துப் போன சரண், "ரேவதி நீ என்ன சொல்கிறாய்? நீ வேறொருவரை விரும்புகிறாயா? என்னை தவிர்க்கவென்று சொல்கிறாயா? நீ எந்த ஆணுடனும் கலகலப்பாக பழகி நான் பார்த்ததே இல்லையே."

"கல்லூரியில் தவிர வீட்டில் யாருடனும் நான் பேசமாட்டேனா சரண்? என் வீட்டிற்கு ஒருநாள் வா சரண். சூர்யாவை உனக்கு அறிமுகப்படுத்தி வைக்கிறேன். "என்

உயிரினிலும் இனிய''வர் அவர். எனக்கு இறுதிவரை எல்லாமே அவர்தான். என்னை மன்னித்துவிடு சரண். உன் மனம் வருந்த நான் காரணமாய் இருந்தால்...''

''இல்லை ரேவதி. நான் இதை எதிர்பார்க்கவில்லை. இன்னொரு ஆணை நேசிக்கும் பெண்ணிடம் என் காதலை சொல்ல வந்தது என்னுடைய மிகப் பெரிய தவறு. நீதான் என்னை மன்னிக்க வேண்டும். இத்துடன் இந்த பேச்சை மறந்துவிடுவோம். நாம் என்றும் நண்பர்கள் சரியா?''

சரண் புரிந்துகொண்டு கண்ணியமாக பேசிய விதத்தில் பாரம் இறங்கியவளாய் ரேவதி முறுவலித்தாள். ''நன்றி சரண். நாம் என்னிக்கும் நல்ல ப்ரண்ட்ஸ்தான்'' என்றாள்.

அவன் விடைபெற்று தியேட்டருக்குள் மறைந்த சில நொடிகளில் அனு வந்து சேர்ந்தாள்.

''உனக்கு மீதி சில்லரையை வாங்கி வர இவ்வளவு நேரமா?'' என்றபடி அவளுடன் நடந்தாள் ரேவதி.

'இவ்வளவு நேரமானதால்தானே யார் யார் மனசுல என்ன இருக்குன்னு தெரிஞ்சிக்க முடிஞ்சது' என தனக்குள் முணுமுணுத்தபடி ரேவதியுடன் சென்று இருட்டில் தங்கள் சீட்டை தேடி அமர்ந்தாள் அனு அகர்வால்.

மீதி படத்தில் மனம் ஒன்றவில்லை ரேவதிக்கு. படம் முடிந்ததும் முண்டியடித்து வெளியே செல்பவர்களுக்கு வழி விட்டு கடைசியாய் எல்லோரும் வெளியே வந்தனர். ''எங்கிருந்தாலும் அனைவரும் அடிக்கடி தொடர்பு கொள்ள வேண்டும். முடிந்த போதெல்லாம் சந்தித்துக் கொள்ள வேண்டும்'' என்று ஒருவருக்கொருவர் பேசியபடி விடைபெற்று சென்றனர். ''நாம ஒரு ஆட்டோவில் போயிடலாமா ரேவதி?'' என்றபடி அனு ஆட்டோவை அழைக்க முற்பட்டபோது சூர்யாவின் கார் அவர்கள் அருகே வந்து நின்றது.

''டிரைவர் காருடன் வந்துவிட்டார். வா அனு போகலாம்'' என்றபடி ரேவதி காரைத் திறந்தபோது ''ஹாய்'' என்றான் சூர்யா தன் பளீர் சிரிப்புடன்.



காரில் ஏறி அமர்ந்த இருவருக்கும் பொதுவாய் ''படம் எப்படியிருந்தது?'' என்றான் சூர்யா.

ரேவதி அமைதியாகி விட ''நன்றாக இருந்தது'' என்றாள் அனு.

''பரிட்சை எப்படி எழுதியிருக்கிறாய்? எங்கே வேலை கிடைத்திருக்கிறது'' என சூர்யா அனுவின் வீடு வரும் வரை அவளிடமே பேசியபடி வர, மௌனமாய் வெளியே வெறித்த ரேவதியை குழப்பத்துடன் பார்த்தாள் அனு.

அனுவை அவள் வீட்டில் இறக்கிவிட்டு அவர்கள் தங்கள் வீடு வந்து சேர்ந்ததும், ''எனக்கு ஒரு தேங்க்ஸ் கூட கிடையாதா?'' என்றான் சூர்யா.

''எதுக்கு?''

''உன் படம் முடிகிற நேரம் தியேட்டருக்கு வந்து, உன் ப்ரண்ட்சுடன் பேசி முடிக்கிற வரையில் எதிர்புறமாய் காத்திருந்தது. அவர்கள் போனதும் உன் தோழியை அவள் வீட்டில் டிராப் பண்ணிவிட்டு, உன்னை பத்திரமாய் கொண்டு வந்து சேர்த்து... எத்தனை சிரமப்பட்டு செய்திருக்கிறேன். அதற்கு ஒரு தேங்கஸ் சொன்னால் என்ன?''

''ஒரு தேங்க்ஸ்.''

அவன் சொன்னதையே ரேவதி திருப்பிச் சொல்ல, வாய் விட்டு சிரித்தான் சூர்யா. அந்த சிரிப்பில் தான் கரைந்து போவதை உணர்ந்த ரேவதி உள்ளே விரைந்து சென்றாள்.

ஒரு மாதமும் ஒரு வாரமாக ஓடி மறைய ரேவதி யுனிவர்சிட்டியிலேயே முதலாவதாக தேறியிருப்பதாக ரிசல்ட் வந்தது. சூர்யா மகிழ்ச்சியுடன் அவள் கைகளைப் பற்றிக் குலுக்கினான்.

''நிச்சயம் நீ நல்ல மார்க் எடுப்பாய் என்று எதிர்பார்த்தேன். ஆனால் யுனிவர்சிட்டி ரேங்க் எதிர்பார்க்கவில்லை. ரொம்ப சந்தோஷமாக இருக்கிறது'' என்றவன் இருவருடைய பெற்றோர்களுக்கும் போன் செய்து விபரம் சொன்னான்.

வாழ்த்துக் கூறி அவளை ஆசிர்வதித்த அவர்கள், ''இனிமேலாவது எங்களுக்கு ஒரு பேரக் குழந்தையை கொடுக்க வேண்டும். அந்த செய்தியை விரைவில் எதிர்பார்க்கிறோம்'' என்றார்கள்.

பதில் சொல்லாமல் போனை வைத்தாள் ரேவதி.

அவளையே பார்த்துக் கொண்டிருந்த சூர்யா, ''ரேவதி உன் முகத்தில் வெற்றி பெற்ற சந்தோஷத்தையே காணோமே ஏன்?'' என்றான்.

''அப்படி ஒன்றுமில்லை. இது நானும் எதிர்பார்க்காத வெற்றி. அந்த திகைப்புதான்'' என்றாள் ரேவதி.

ஆசிரியர்கள், சக மாணவர்களின் வாழ்த்துக்களுடன், இன்னும் பத்து நாளில் வேலையில் சேர வேண்டுமாய் மும்பை அலுவலகத்திலிருந்து கடிதமும் வந்திருந்தது.

முன்பே முடிவு செய்திருந்தபடி அப்பா அம்மாவிடம் மும்பை போனபிறகு சொல்லிக் கொள்ளலாம். ஆனால் சூர்யாவிடம் சொல்ல வேண்டும். முகத்திற்கு நேராய் நின்று, 'இதுவரை நீ செய்த உதவிகளுக்கெல்லாம் நன்றி. போய் வருகிறேன்' என்று கலங்காமல் என்னால் சொல்ல முடியுமா? அல்லது ஒரு கடிதம் எழுதி வைத்தால்? நிச்சயம் நன்றி கெட்டவளாகத்தான் நினைப்பான். கிட்டத் தட்ட பதினெட்டு மாதங்கள். நமக்காக செலவழித்ததற் கும், நடத்திய விதத்திற்கும் சொல்லாமல் போவது முறை யல்ல. அல்லது போனில் சொல்லலாமா? நாம் போவது அவனை எந்த விதத்திலும் பாதிக்காத போது நாம் மட்டும் ஏன் கலங்கிப் போக வேண்டும்? குறைந்த பட்சம் கலக் கத்தை அவனிடம் மறைக்கவாவது தெரிய வேண்டாமா?

கிளம்புவதற்கு முந்தையநாள் இரவு சாப்பிட அமர்ந்த ரேவதிக்கு உணவு உள்ளே செல்லமறுத்தது. ஏதோ சுவாரஸ்யமாய் பேசியபடி சாப்பிட்டுக் கொண்டிருந்தான் சூர்யா. இப்போது சொல்லலாமா? சாப்பிட்டு முடித்த பின்



சொல்லலாமா என்று யோசித்தபடி அமர்ந்திருந்தவளை பார்த்து சிரித்த சூர்யா, ''என்ன தீவிரமான யோசனையாக இருக்கிறதே!'' என்றான்.

இனி தயங்குவதில் அர்த்தமில்லை என்றுணர்ந்து ''நான் நாளை மும்பை போய் வேலையில் சேர வேண் டும். மதியம் இரண்டு மணிக்கு ப்ளைட். டிக்கெட் ஆபீசி லிருந்து வந்திருக்கிறது'' என்றாள் ரேவதி.

''ஓ'' உணவை அள்ளிய சூர்யாவின் கை ஒரு நிமிடம் தயங்கியது. அடுத்த நிமிடம் டேபிளை தட்டியபடி சிரித்தான். ''புது ஊர், புது லைப் ஸ்டைல், புதிதாய் செய்யப் போகும் வேலை. கணிசமான சம்பளம். இனி நீ ஆளே மாறப் போகிறாய் பாரேன்! ஒரு வகையில் நீ லக்கிதான். நீ நினைத்தபடி செட்டில் ஆகிவிட்டாய். என்னைப் பாரேன். இந்த நேரம் ஜெர்மனி போயிருக்க வேண்டியவன். அடுத்த மாதம் ஆறாம் தேதி வாக்கில் கிளம்பலாம் என தள்ளிப் போய் விட்டது. நீ நாளையுடன் தமிழ்நாட்டுக்கு 'பை' சொல்லிவிடுவாய். நான் இன்னும் இருபது நாள் இந்தியாவில்தான் கிடக்க வேண்டும்.''

சத்தமாய் பேசிய போதும் சூர்யாவின் குரலில் வழக்க மான உற்சாகம் குறைந்திருந்தது. உடனே கிளம்ப முடிய வில்லை என்ற வருத்தம் போலும் என்று நினைத்தபடி ரேவதி கையை கழுவிவிட்டு எழுந்தாள்.

மறுநாள் காலையில் வழக்கம்போல் வேலைக்கு கிளம் பிய சூர்யாவை பார்த்தபோது இந்த வீட்டில் இருந்து கொண்டு இவனை பார்ப்பது இதுதான் கடைசிமுறை என்ற நினைவு பாரமாய் அழுத்தியது. வழக்கம் போல் தயாராகி காரில் அமர்ந்தவன் ஏதாவது சொல்வானா என்ற எதிர்பார்ப்புடன் போர்டிகோவில் ரேவதி நின்றிருந்தாள். அவளின் ஆவல் நிறைந்த கண்களை சந்தித்த சூர்யா ''ரேவதி இங்கே வாயேன்'' என்றான். வேகமாய் ஓடி

வந்தவளிடம் ''வாட்ச்மேன் பின்பக்கம் போயிருக்கிறான் போலிருக்கிறது. அவனை கூப்பிட்டு கேட்டைத் திறக்க சொல் ப்ளீஸ்.'' என்றான் தன் வழக்கமான சிரிப்புடன்.

ஏமாற்றத்தை விழுங்கியபடி வாட்ச்மேனிடம் சொல்லப் போனாள் ரேவதி.

வந்த நாளிலிருந்து சூர்யா அவள் மீது காண்பித்து வந்த அக்கறை எங்கேபோனது? இன்று உன்னை வழியனுப்ப நான் வருகிறேன். அங்கே எங்கு தங்குகிறாய்? ரிசீவ் பண்ண யார் வருவார்கள்? புது இடம். பார்த்து பத்திரமாய் நடந்துகொள் என்ற சராசரி வழியனுப்புதல் கூட இல்லாமல் ''எப்படியோ போய் தொலை'' என்று அவன் கிளம்பிப் போகுமளவிற்கு அவள் மீதுஅப்படி என்ன திடீர் வெறுப்பு? ரேவதிக்கு அதற்குமேல் அழுகையை அடக்க முடியவில்லை. மனம் லேசாகும் வரை அழுது தீர்த்தவள். பிறகு எழுந்து அமர்ந்து ரெடியாகத் தொடங்கினாள்.

சூர்யா அவள் உபயோகத்திற்கென கொடுத்திருந்த பயன்படுத்தப்படாத டெபிட் கார்டு, பாஸ்புக், செல்போன் ஆகியவற்றை அவன் அறை கபோர்டில் வைத்தாள். அவன் அவளுடைய செலவுக்காக மாதா மாதம் கொடுத்து வரும் தொகையில் கை செலவுக்கென ஒரு சிறிய தொகையை வைத்துக் கொண்டு மீதி பணத்தை, ரப்பர் பாண்டால் கட்டி பாஸ்புக்குடன் சேர்த்து வைத்துவிட்டு அலமாரியை பூட்டி அவன் வழக்கமாய் சாவி வைக்குமிடத்தில் வைத்தாள். தன் அறை அலமாரியை திறந்து அன்றாட உபயோகத்திற்கான துணிகள், மற்றும் டாய்லெட் செட்டையும் எடுத்து ஒரு பெட்டிக்குள் வைத்தாள். தனது சர்டிபிகேட்டுகள், புத்தகங்கள் என எடுத்து வைத்து பெட்டியை மூடினாள். வார்ட்ரோபில் அணிவகுத்த பட்டு மற்றும் பேன்ஸி புடவைகள், தங்க வைர நகைகளை பார்த்த ரேவதிக்கு விரக்தி புன்முறுவல் ஒன்று எட்டிப் பார்த்தது. சூர்யாவின் ரசிக்கும் பார்வையில் படாத



இவையெல்லாம் வெறும் குப்பைக்கு சமம், என்று நினைத்தவளாய் தன் அறைக் கதவை பூட்டி சாவியை சூர்யாவின் அறையிலேயே வைத்தாள். பெட்டியுடன் கீழே வந்தபோது, டிரைவர் ஓடிவந்து பெட்டியை வாங்கி காரில் வைத்தார். மேஜை மீது சாப்பாட்டை எடுத்து வைத்த சோமு ''சாப்பிட்டு விட்டு போங்கம்மா. ஊருக்கு போயிட்டு சீக்கிரம் வந்துடுங்க'' என்றார்.

மறுக்க நினைத்தவள், சோமுவின் சமையலை கடைசியாய் சாப்பிட விரும்பி அமர்ந்து சாப்பிட்டேன் என பெயர் பண்ணி விட்டு எழுந்தாள்.

ஏர்போர்ட்டில் டிரைவர் பெட்டியை எடுத்துக் கொடுத்து விட்டு ''பத்திரமாய் போய்ட்டு வாங்கம்மா'' என்றபடி விடைபெற்று சென்றார். கடைசிவரை சூர்யா வழியனுப்ப வருவான் என்ற எதிர்பார்ப்பில் காத்திருந்த ரேவதி அவள் பெயர் அழைக்கப்பட்டதும் செக்கிங்குக்கு சென்றாள். ப்ளைட்டில் ஏறி அமர்ந்ததும் தன் எதிர்கால லட்சியம் என வரையறுத்த விஷயங்கள் எல்லாம் மறந்துபோய் மனசில் ஒரு வெறுமை சூழ்ந்தது.



## 14

மும்பை விமானநிலையத்தில் ரேவதியின் பெயரை தாங்கிய அட்டையுடன் நின்று கொண்டிருந்தவரை அணுகி, தன்னை அறிமுகம் செய்து கொண்டாள் ரேவதி. பதிலுக்கு கை குலுக்கி வரவேற்ற அவருக்கு ஐம்பது வயதிருக்கும். ராம்சந்த் குப்தா என்று பெயர். சிரித்த முகத்துடன் அலுவலகத்தில் அவளுக்கு ஏற்பாடு செய்திருந்த அபார்ட்மெண்டுக்கு அழைத்து போனார். அதே அபார்ட்மெண்டில் தங்கியிருக்கும் அவளது ஆபீசில் பணிபுரியும் இரண்டு பெண்களையும் அறிமுகப்படுத்தினார். சுனிதா, கிறிஸ்டினாசட்டர்ஜி என்று அவர் பெயரை சொன்னதும் இருவரும் ஒரே குரலில் சிநேகமாய் ''ஹலோ'' சொன்னார்கள்.

சென்னை வாசத்திலேயே ரேவதி சரளமாக ஆங்கிலம் பேச பழகியிருந்ததால் அறையில் தங்கியிருந்த பெண்களுடனும், அலுவலகத்திலும் அனைவருடனும் பேசுவது சிரமமாக தெரியவில்லை. அலுவலக சூழ்நிலை அவளுக்கு வித்தியாசமாக இருந்தது. அங்கு பதவிக்கோ வயதுக்கோ யாரும் முக்கியத்துவம் தருவதில்லை. திறமைக்குதான் முதலிடம் என்றார்கள். எல்லோரும் இயல்பாக ஒருமையில் பழகினார்கள். எந்த நேரம் நீ அலுவலகம் வருகிறாய் என்பது முக்கியமல்ல. உன் வேலையை நீ முடிக்க வேண்டியதுதான் முக்கியம் என்றார்கள். ரேவதியின் நேரடியான மேல் அதிகாரியின் பெயர் பல்வீர் சிங். நடுத்தர வயதுடைய அவர் கண்ணியமானவராக தெரிந்தார். முற்றிலும் புதிய சூழ்நிலை ரேவதியிடம் எந்த தயக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. பகல் முழுக்க வேலையில் ஆழ்ந்து போவாள். வேலை முடிந்து எலக்ட்ரிக் டிரையினை பிடித்து கூட்டத்தில் நசுங்கியபடி அபார்ட்மெண்ட்டுக்கு வந்து சேரும்போது, காரில் தவிர வேறு எதிலும் சென்றறியாத ரேவதி களைத்துப்போவாள்.

குளித்துவிட்டு வந்து மெஸ்சிலிருந்து வரும் உணவை கூட மறந்து விட்டு தூங்கிப்போவாள். சனி, ஞாயிறு விடுமுறைகள் தான் ரேவதிக்கு தாங்க முடியாதவையாக இருந்தன. சூர்யாவின் விடுமுறை தினங்களை தான் ஆவலுடன் எதிர்பார்த்ததும், இருவரும் அரட்டை அடிப்பதும், வெளியே சென்றதும் நினைவு வர விடுமுறை தினங்களை வெறுக்கத் தொடங்கினாள். பார்ட்டி, டிஸ்கோத்தே, சினிமா என ரூம்மேட்ஸ் இருவரும் போகும்போது அவளை வற்புறுத்துவார்கள். ரேவதி கண்டிப்பாய் கூட போக மறுத்துவிடுவாள். அத்தியாவசிய பொருட்கள் தேவை என்றாலும் கூட அறையை கூட்டிப் பெருக்க வரும் பெண்மணியிடம் சொல்லி அனுப்பி வாங்கிக் கொள்வதோடு சரி. இங்கு வந்த முதல் ஞாயிறன்று அப்பாவுக்கு போன்



செய்து பேசினாள். மும்பைக்கு தற்காலிக வேலையாய் வந்திருப்பதாகவும், இன்னும் ஓரிரு மாதங்களில் சூர்யாவுடன் வெளிநாடு போகப் போவதாகவும் கூறினாள்.

''வெளிநாடு செல்வதானால் இப்போது எதற்கு மும்பை போகணும்? எங்களிடம் ஒரு வார்த்தை கூட சொல்லாமல் போயிருக்கிறாய். வேற்று மொழி பேசும் இடத்தில் புதிய சூழ்நிலையில் கணவனையும் பெற்றோரையும் பிரிந்து போய் வேலை பார்த்தாக வேண்டிய அவசியம் என்ன உனக்கு? அப்பா விடாது துளைத்தார்.

''வெளிநாட்டில் நான் சமாளிப்பதற்கான பயிற்சிதான் இந்த வேலை. இன்னும் சில மாதங்களில் வந்துவிடுவேன்'' என்றாள் ரேவதி.

''ரேவதி, அப்பாவிடம் உண்மையைச் சொல். உங்களுக்குள் ஏதாவது பிரச்சனையா?''

''என்னப்பா இது? அதெல்லாம் எதுவும் இல்லை.''

''எனக்கு என்னவோ எதுவுமே சரியா படலை ரேவதி. என்னதான் நீங்க ரெண்டு பேரும் படிச்சவங்க, விபரம் தெரிஞ்சவங்கன்னாலும் பெரியவங்களை கலந்து ஆலோசிக்காமல் இப்படி ஒரு முடிவெடுத்து நீ போனது தப்புதான். இப்போ நீ திரும்பி வந்தால் மாப்பிள்ளை பேச்சை மதிக்காத மாதிரி இருக்கும். நானும் அம்மாவும் நாளை கிளம்பி மும்பை வருகிறோம். அம்மாவை உன்னுடன் துணைக்கு விட்டுவிட்டு நான் வந்துவிடுகிறேன். உன் கணவருடன் நீ வெளிநாடு கிளம்பும்வரை அம்மா உன் கூட இருப்பா.''

பெற்றவரின் கரிசனத்தில் கண்கலங்கியது ரேவதிக்கு.

''நானும் இன்னும் இரண்டு பெண்களும் அலுவலக அபார்ட்மென்டில் இருக்கிறோம். இங்கு வெளி ஆட்கள் தங்க முடியாது. வெளியே வீடு பார்த்து அம்மாவும் நானும் தங்கினாலும் கூட, நான் காலையில் போய் விட்டு மாலை

வருவேன். அம்மா மொழி புரியாமல். கடைகளுக்கு கூட வழி கேட்க, பொருள் வாங்க தெரியாமல், பேச்சு துணைக்கு ஆள் இல்லாமல் அடைந்து கிடக்க வேண்டி வரும். நான் வேலைக்கு போவதா, அம்மாவைப் பார்ப்பதா என்று திணற வேண்டியிருக்கும். எதுக்குப்பா எல்லோரும் கஷ்டப்படணும்?'' என்றாள் ரேவதி.

''உன்னுடைய சௌகர்யத்தின் முன் எங்கள் கஷ்டம் பெரிதில்லை ரேவதி'' என்றார் ராமசாமி.

''நான் நல்ல சௌகர்யமாக இருக்கிறேன். அபார்ட் மெண்ட் ரொம்ப பாதுகாப்பாக இருக்கிறது. நீங்க வீணாய் கவலைப்படாதீர்கள்.'' அப்பாவுக்கு ஆறுதல் சொன்னாள் ரேவதி.

''உனக்கு இந்த துணிவு எப்படி வந்ததென்று எனக்கு தெரியவில்லை ரேவதி. இங்கே பக்கத்து டவுனுக்கு கூட உன்னை தனியாக அனுப்பியதில்லை. இப்போது அவ்வளவு தூரத்தில் தனியாக வசிக்கிறேன் என்கிறாய். எனக்கு இதெல்லாம் சுத்தமாய் பிடிக்கவில்லை. மாப்பிள்ளை யுடன் நான் பேசுகிறேன்.''

''வேண்டாம்பா. நாங்க இருவரும் பேசி எடுத்த முடிவு தான் இது. நீங்க தலையிட்டால் எங்க பர்சனல் விஷயத்தில் மூக்கை நுழைப்பதாக அவர் நினைக்கலாம். நான் இங்கே இருக்கப்போவது தற்காலிகமாகத்தான். நீங்க ஏன்ப்பா இவ்வளவு கவலைப்படறீங்க?''

''என்னதான் இருந்தாலும் பெண்ணுடைய அருமை அவளை பெற்றவர்களுக்குதான் தெரியும்.'' என்று ராமசாமி வருத்தத்துடன் போனை வைத்தார்.

ரேவதிக்கு உடனே ஓடிப்போய் அப்பாவை சமாதானப் படுத்த வேண்டும் போலிருந்தது. போனால் இங்கு திரும்பி வர விடமாட்டார்கள். சூர்யாவிடம் அவளை அனுப்பி வைப்பார்கள். விருப்பமில்லாதவனின் தோள்



மேல் சுமையாய் இவ்வளவு நாள் இருந்தாகிவிட்டது. இப்போதாவது அவன் நிம்மதிக்கு வழிவிடாமல் இருப்பது எப்படி சரியாகும்? இருபக்கத்து பெற்றோர்களின் வற்புறுத்த லால் அவன் அவளை சகித்துக் கொள்ள முற்பட்டாலும் கூட முன்பிருந்த பிரியமான பேச்சு கூட நின்றுபோய் வெறுப்பு மட்டும்தானே மிஞ்சும்? ஒருவரை ஒருவர் வெறுத்துக் கொண்டு தானும் வாழாமல் அவனையும் வாழ விடாமல் செய்வதை விட தள்ளி இருந்தபடி அவனது இனிமையான நினைவுகளுடன் வாழ்ந்துவிட் டுப் போவதே மேல். எனவே பலமுறை அப்பாவிடமும் அம்மாவிடமும் மாறிமாறிப் பேசி அவர்களை சமாதானம் செய்தாள்.

ரேவதி இங்கு செல்போன் எதுவும் வாங்கவில்லை. அப்பா, அம்மாவை தவிர பேச யார் இருக்கிறார் என்ற நினைவில் அவளுக்கு செல்போன் வைத்துக்கொள்ள பிரியமின்றி போயிற்று. அவளாக அவர்களுக்கு சமயம் கிடைக்கும் போதெல்லாம் போன் செய்து பேசுவாள். அவர்களின் அவசர தொடர்புக்கு தன் அலுவலக தொலை பேசி எண்ணை கொடுத்திருந்தாள். ஆனால் அவளே அடிக்கடி பேசிவிடுவதால் அவர்கள் அந்த எண்ணில் அவளை அழைத்ததே இல்லை.

பெற்றோரை சமாதானப்படுத்தி தனக்குத்தானே எத்தனை முறை சொல்லிக் கொண்டபோதும் ரேவதியால் கவலையற்று இருக்க முடியவில்லை. அலுவலகத்தில் விடாது ஒலிக்கும் டெலிபோன் மணிகளில் ஒன்றாவது சூர்யாவின் அழைப்பாக இருக்காதா? தினமும் ரயில் நிலையங்களிலும் நடைபாதையிலும் பார்க்கும் முகங் களில் சூர்யாவின் முகம் தெரியாதா என்று ஏங்கத் தொடங் கினாள். பெற்றோரையும், ஊரையும், உறவையும் விட்டு விட்டு விரும்பாத திருமணத்தில் மாட்டிக் கொண்டு சூர்யாவின் வீட்டிற்கு வந்த புதிதில் கூட இப்படி

ஏங்கியதில்லை. சூர்யா அவளிடம் கடுப்படித்த போது கூட புது இடம் என்ற ஒதுக்கமின்றி வீட்டை அலங்கரிப்பதும் சமைப்பதுமாய் அந்த வீட்டுடன் ஒன்றிப் போனவள் இப்போதோ என்ன, எப்படி என்ற நினைவின்றி உயிரை தொலைத்த உணர்வுடன் நடமாடிக் கொண்டிருந்தாள். இந்த வேலை மட்டும் இல்லை எனில் நிச்சயம் முழு பைத்தியம் ஆகி இருப்பாள்.

அன்று அலுவலகத்தில் ரேவதி வேலையில் ஆழ்ந்திருந்த போது, "ரேவதி உனக்கு போன்" என்றாள் கூட பணிபுரியும் பெண்.

வேகமாக பாய்ந்து சென்று ரிசீவரை எடுத்த ரேவதியை விநோதமாக பார்த்தபடி தன் வேலையை பார்க்கப் போனாள் அவள். கமலம்தான் போனில் பேசினார்.

"என்ன ரேவதி இது? இப்போதுதான் உங்கம்மாவிடம் போன் செய்த போது நீ மும்பையிலிருக்கும் விபரம் சொன்னார். எங்களிடம் ஒரு வார்த்தை சொல்லாமல் என்ன முடிவு இது? சூர்யா ஜெர்மனி போனாக் கூட நீ கிளம்பும் வரை எங்களுடன் கூட வந்து இரு. எனக்கு திருமணமானதிலிருந்து உன்னுடன் சேர்ந்து இருக்க முடியவில்லை என்பது குறையாகவே இருக்கிறது. சின்னஞ் சிறுசுகளை பிரிக்கக் கூடாது என்றுதான் உன்னை வற்புறுத்தி இத்தனை நாள் கூப்பிடாமல் இருந்தோம். நானும் மாமாவும் மும்பை வருகிறோம். நீ எங்களுடன் கிளம்பி வரத் தயாராக இரு. சூர்யா போகும்போது அவனுடன் போய் கொள்ளலாம். அதுவரை அசாமில் இரு."

"வேலைக்கு ஒத்துக்கொண்டு சேர்ந்த பின் நடுவே இப்படி வர முடியாது அத்தை. விடுமுறையில் நானே வருகிறேன்."

"அப்படி வேலை பார்க்க வேண்டிய அவசியம் என்ன ரேவதி." என்ற கமலத்தின் குரலில் முதல் முறையாக கோபம் தெரிந்தது.



"நீ வேலை பார்த்துதான் சாப்பிட வேண்டும் என்ற நிலையிலா நாம் இருக்கிறோம்? உனக்கு சுதந்திரமாய் செலவு செய்ய தனியாய் கைச்செலவுக்கு பணம் வேண்டுமானால் சூர்யாவை கூட கேட்க வேண்டாம். உன் அம்மாவிடம் கேட்கிற உரிமையோடு என்னிடமே நீ கேட்கலாமே! அல்லது வேலை பார்த்துதான் ஆகவேண்டும் என்று நீ பிரியப்பட்டால் இருவரும் ஒரே இடத்தில் இருந்து கொண்டு அதை செய்யுங்கள். இப்படி இருவரும் எங்கோ ஓரிடத்தில் தனித்தனியாய் இருப்பது நன்றாகவா இருக்கிறது?" கமலத்தின் அன்பான அதட்டலால் கலங்கிய மனதை திடப்படுத்திக் கொண்டு, "நான் இப்போது வேலை பார்ப்பது பிற்கால வாழ்க்கை அனுபவத்திற்கு முக்கியம் என்கையில் அதை எப்படி விடமுடியும் அத்தை?" என்றாள் இறுகிய குரலில்.

"உன் பெற்றோரும், நாங்களும் இவ்வளவு சொன்ன பிறகும் உனக்கு உன் பிடிவாதம்தான் பெரிதாகப்படுகிறது. பெரியவர்கள் வார்த்தைக்கு மதிப்பு கொடுக்கக் கூட தோணவில்லை. உன்னிடமிருந்து இதை நான் எதிர்பார்க்கவில்லை ரேவதி" என்றபடி போனை வைத்தார்.

இவ்வளவு நல்லவர்களை வருத்தப்பட வைத்தோமே என்று ரேவதிக்கு வேதனையாக இருந்தது. யோசித்துப் பார்க்கையில் சூர்யாவின் மகிழ்ச்சிக்காக எத்தனை பேர் வருத்தப்பட்டாலும் பரவாயில்லை என்று தோன்றியது.

இயந்திரத்தனமாய் சென்ற நாட்களில் தானும் ஒரு இயந்திரமாய் மாறியிருந்தாள் ரேவதி. கமலம் அதற்குபின் அவளிடம் தொடர்பு கொள்ளவேயில்லை. அன்று அவ்வளவு பேசியவர் பேச்சுக்கு நடுவே சூர்யா எப்படியிருக்கிறான் என்று ஒரு வார்த்தை சொல்லியிருக்கக் கூடாதா என்று நினைத்தாள். தலையை உலுக்கி அதிலிருந்து விடுபட முயன்றவள், தோளில் பேக்கை மாட்டியபடி அலுவலகத்திற்கு கிளம்பினாள்.

"ரேவதி வெளியே போகிறாயா?" என்றாள் சுனிதா.

"ஆமாம். ஆபீசுக்கு போகிறேன்."

"இப்படியேவா? போய் கண்ணாடியைப் பார்."

கண்ணாடியை பார்த்தாள் ரேவதி. தலையை பின்ன மறந்து குளிக்கும் போது தூக்கி போட்ட கொண்டையுடன் அப்படியே கிளம்பி விட்டிருந்தாள். நல்லவேளை சுனிதா சொல்லவில்லை என்றால் அலுவலகத்தில் எல்லோருடைய சிரிப்புக்கும் ஆளாகி இருப்பாள். சுனிதாவுக்கு நன்றி சொல்லிவிட்டு தலையை வாரத் தொடங்கினாள்.

அவள் அருகே வந்த சுனிதா "உன்னிடம் ஒரு விஷயம் கேட்கலாமா ரேவதி?" என்றாள்.

"கேளேன்."

"நீ ஏன் இப்படி இருக்கிறாய்? எப்பவும் எதையோ இழந்த மாதிரி? ஒரு துடிப்பு. மகிழ்ச்சி எதுவுமில்லாமல், சினிமா, ஷாப்பிங் எங்கும் செல்லாமல் எப்படி இருக்க முடிகிறது உன்னால்? ஆபீசின் சுவர்களை விட்டால் இந்த அறையின் சுவர்களுக்குள் எப்படி அடைந்து கிடக்க முடிகிறது? தன் அழகை பற்றிய அக்கறையே இல்லாத ஒரு பெண்ணை நான் பார்த்ததே இல்லை. பார்க்க சுமாரான பெண் கூட தன்னை மேலும் அழகாக்கிக் கொள்ளவே விரும்புவாள். அதுதான் இயற்கை. உன்னுடைய அழகுக்கு நீ அலுங்காமல் தலைவாரி, உடையணிந்து எப்பவும் புன்னகையுடன் இருந்தால் அதுவே போதும்."

விபரம் தெரிந்ததிலிருந்தே விதவிதமாய் பாவாடை தாவணியும் சுடிதாரும் அணிந்த ரேவதி, சூர்யா திருமணத்திற்கு பிறகு வாங்கி தந்த ஜீன்சையும், பாவாடைகளையும் அணிந்ததையும், அவன் பாராட்டியதும் நினைவுக்கு வந்தது. அதுவும் அந்த திருமண வரவேற்புக்காக கமலம் வாங்கி தந்திருந்த டிசைனர் ஸாரியை அணிந்து, பார்த்து பார்த்து அலங்காரம் செய்து



கொண்டதும், அன்று அவன் அவளை அணைத்ததும் முத்தமிட்டதும் நினைவு வர ரேவதி விசும்பி அழ முற்பட்டாள்.

சுனிதா பதறிப் போனாள். "ரேவதி ப்ளீஸ். நான் ஏதோ தெரியாமல் கேட்டுவிட்டேன். நீ வேறு ஏதோ வருத்தத்தில் இருக்கிறாய் போலும். அழாதே ரேவதி. ப்ளீஸ். ஸாரி ரேவதி. அழாதே" பலவிதமாய் பேசியும் கெஞ்சியும் ரேவதியை தேற்றினாள் சுனிதா.

ரேவதி அன்று முதல்மாத சம்பளத்தை பெற்றுக் கொண்டு அறைக்கு வந்தாள். நான்கு வருட படிப்பும், ஒரு மாத வேலையுமாக கடின உழைப்பால், அதன் பயனாய் அவள் கையில் கிடைத்த கணிசமான தொகை அவளுக்கு எந்த உற்சாகத்தையும் தரவில்லை. ரேவதியின் அப்பா சித்திரை மாதம் அந்த வருடத்து கணக்கை பார்த்துவிட்டு, "நாள் பூரா பாடுபட்டாலும் ஆள்கூலி, கொள்முதல், உரம் என்று எல்லாம்போய் இவ்வளவுதானா கையில்" என குறைப்பட்டுக் கொள்வார். அப்பாவின் வருட வருமானத்தை விட சில நூறுகள் அதிகமாகவே மாதம் சம்பாதிக்கிறோம் என்றெல்லாம் நினைத்தாலும் கூட அதில் எந்த சந்தோஷமும் ஏற்படவில்லை. முதன் முதலாய் சென்னையில் கல்லூரியில் சேர்ந்த போது, அவளது தேவையறிந்து கேட்காமலே பணத்தை கவரில் வைத்து அவள் புத்தகங்களுக்கிடையே வைத்திருந்த சூர்யா நினைவுக்கு வந்து கண்களில் நீரை வரவழைத்தான். இப்போது அவன் என்ன செய்து கொண்டிருப்பான்? வெளிநாடு செல்லும் உற்சாகத்தில் இருப்பான். விடுதலை பெற்ற உணர்வுடன் தன் தோழிகளிடம் சாட்டிங்கில் இருப்பான். மாடிப்படிகளில் ஜம்ப் பண்ணி குதித்து, உற்சாகத்துடன் டேபிளில் தாளம் போட்டு, சோமு அண்ணா தரும் டிபனை ரசித்து சாப்பிட்டு, விசிலடித்த

படியே தலையை கோதி விட்டு, வாய்விட்டு சிரித்தபடி போன் பேசிக்கொண்டு இருப்பான். ஒன்றரை வருடங்களாய் ஒரேவீட்டில் இருந்து பழகிய பழக்கத்திற்காக அவள் வரும்போது வழியனுப்பவாவது வந்திருக்கலாம். எப்படி இருக்கிறாய் என்று போன் பண்ணியாவது கேட்டிருக்கலாம் இரவு முழுவதும் தூங்காமல் புரண்டாள் ரேவதி.

காலையில் எழும்போது அவளுக்கு சோர்வாக இருந்தது. இன்று அலுவலகம் போக வேண்டாம் என்று நினைத்தவள், தனிமை அதைவிட சோர்வை தரும் என்று தோன்ற, பேசாமல் கிளம்பினாள். பாதி வேலையில் அவளுக்கு போன் வந்தது.

அருணாச்சலம் பேசினார். "ரேவதி சூர்யா அங்கே வந்தானா?" என்றார் பதட்டத்துடன்.

"இல்லையே, மாமா என்ன விஷயம்?" ரேவதி குழம்பினாள்.

"சூர்யா நான்குநாள் முன்பு சென்னையிலிருந்து அசாம் வருவதற்காக கிளம்பினான். இன்னும் வந்து சேரவில்லை. சென்னையிலிருந்து அவன் கிளம்பி விட்டதாக டிரைவரும் சோமுவும் சொல்கிறார்கள். வழியில் ஒருவரை முடிந்தால் பார்த்துவிட்டு வருவதாக சொல்லியிருந்தான். ஆனால் போன் பண்ணி கேட்டதில் அங்கும் அவன் போகவில்லை. அவனுடைய செல்போன் தொடர்பும் கட்டாகி விட்டது. அசாம் தீவிரவாதிகளின் தாக்குதலில் நேற்று இங்கு ஒரு பஸ் எரிந்தது. ஒருவேளை அதில் அவன்..."

முடிக்கும் முன் "ஐயோ" என கத்திவிட்டாள் ரேவதி. "பயப்படாதேம்மா. அவன் நல்லபடியாகவும் இருக்கலாம். வழியில் விபத்து. ஆள் கடத்தல். என்று எத்தனை கேள்விப்படுகிறோம். சூர்யா எங்கு இருந்தாலும் தகவல் தெரிவித்துவிடுவான். இப்படி வீட்டிலிருந்து கிளம்பி தகவல இல்லாமல் போனதுதான் கவலையாக இருக்கிறது. அவனுக்காக கடவுளிடம் வேண்டிக் கொள்வோம்" என்றபடி போனை வைத்தார் அருணாச்சலம்.



ரிசீவர் நழுவ அப்படியே சரிந்தவளை சுற்றி கூடிய அனைவரும் "ரேவதி! என்னாச்சு, என்ன விஷயம் சொல்" என்று ஆளுக்கு ஆள் உலுக்கினார்கள். எதற்கும் பதில் வராது போகவே அவள் ரூம்மேட்ஸ் இருவரையும் அழைத்து அவர்களுடன் வாடகைக் காரில் அனுப்பி வைத்தனர். பல்வீர்சிங் அப்போது ஊரில் இல்லை. அதனால் அவருடைய அஸிஸ்டென்டிடம் சொல்லிவிட்டு ரேவதியை, அறைக்கு அழைத்து வந்த சுனிதாவும் கிறிஸ்டினா சட்டர்ஜியும் அவளிடம் ஒரு கூல்ட்ரிங்கைக் கொடுத்து "இதை குடி ரேவதி" என்று வற்புறுத்தினர். அவர்கள் பேசும் மொழியே புரியாதவளைப் போல் விழித்த ரேவதி, திடீரென நினைவு வந்தவளாக கிறிஸ்டினா சட்டர்ஜியின் கையிலிருந்த செல்போனை பறித்து சூர்யாவின் செல் நெம்பரை டயல் செய்தாள். ஸ்விட்ச் ஆப் என்ற குரலே திரும்ப திரும்ப வரவும் போனை கட்டிலில் போட்டு விட்டு கைகளில் முகம் புதைத்து கதறத் தொடங்கினாள்.

சூர்யா எங்கே இருக்கிறாய்? யாரிடமும் சொல்லாமல் எங்கே சென்றிருக்கிறாய்? உன்னை பார்க்காமல் நான் எப்படி இருப்பேன்? எங்கிருந்தாலும் உடனே வா சூர்யா. வந்து சண்டை போடு. என்னுடன் வாழ பிடிக்கவில்லை என்று சொல். உன் அம்மாவை மயக்கி உன்னை மணந்ததாக குற்றம் சாட்டு.. சூர்யா.. சூர்யா.. ரேவதி இரவு வரை அழுகையிலேயே கரைய விஷயம் என்னவென்று புரியாமல் எப்படி தேற்றுவதென்றும் தெரியாமல் சுனிதாவும், கிறிஸ்டினாவும் கூடவே இருந்தார்கள்.

இரவு கதவு படபடவென வேகமாய் தட்டப்படவும் 'யாரது இந்த நேரத்தில்?' என்று யோசித்தபடி சுனிதாவின் முகத்தைப் பார்த்தாள் கிறிஸ்டினா சட்டர்ஜி. திறக்கலாமா,

வேண்டாமா என்று அவர்கள் முடிவுக்கு வரும்முன் கதவே உடைக்கிறாற்போல் அதிர்ந்தது. கோபமாய் சென்று கதவை திறந்த சுனிதா, வேகமாய் உள்ளே நுழைந்தவனை பார்த்து ''யார் நீ? என்ன வேண்டும் உனக்கு? முதலில் வெளியே போ'' என அதட்டினாள்.

''ரேவதி... என் ரேவதி...'' என்ற குரலை கேட்டதும் துள்ளி எழுந்தாள் ரேவதி. கண்களை தேய்த்தபடி கதவருகே நிற்பவனை பார்த்தவள் ''சூர்யா'' என்ற கத்தலுடன் பாய்ந்து சென்று அணைத்துக் கொ ண்டாள்.

''நீங்களா.. நிஜமாய் நீங்களேதானா..'' என அவனை தொட்டு தொட்டு உறுதிபடுத்திக் கொண்டவளை காற்றுப்புக இடமின்றி இறுக்கிக் கொண்டான் சூர்யா.

அறையிலிருந்த இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். அவர்களை ஆசுவாசப்படுத்தி உணர்ச்சி வேகத்தை தணிக்க முற்பட்ட கிறிஸ்டினாவின் கைகளை பற்றினாள் சுனிதா. அவர்களே பேசித் தீர்த்துக் கொள்ளட்டும் என்ற ம்டிவுடன் அவர்களை அப்படியே விட்டு விட்டு இருவரும் அறையை விட்டு வெளியேறினர்.

கதவு திறந்து மூடப்படும் சத்தம் கேட்டு திரும்பிய இருவரும் தங்கள் நிலை உணர்ந்து கூச்சத்துடன் விலகினர்.

இயல்பாய் கட்டிலில் அமர்ந்த சூர்யா, நின்று கொண்டிருந்த ரேவதியிடம் கையை நீட்டினான். தயக்கத்துடன் ரேவதி அவன் கையைப் பற்றியதும் சுண்டியிழுத்த வேகத்தில் அவன் அருகே வந்து விழுந்தாள். விழுந்தவளை வாரி அணைத்துக் கொண்ட சூர்யா, ''அப்புறம்.. என்ன விஷயம் ரேவதி? நீ நலமா?'' என்றான் சவாதனமாக.

''திமிரா?'' என்று அவனை முறைத்த ரேவதி, ''நீங்க நாலுநாளாய் எங்கே போயிருந்தீர்கள்? இங்கே எப்படி வந்தீர்கள்? இந்த இடம் உங்களுக்கு எப்படி தெரியும்?'' என்றாள் பரபரப்புடன்.



''நான் நாலுநாளாய் ஊருக்கு போயிருந்தேனாம். அங்கிருந்து இங்கே ப்ளைட்டில் வந்து, இந்த அபார்ட்மென்ட்டுக்கு டாக்ஸியில் வந்தேனாம். போதுமா விஷயம்?'' சூர்யா விளையாட்டாக அவள் கன்னத்தை கிள்ளவும், ரேவதிக்கு கோபம் வந்தது.

''உங்களுக்கு வேடிக்கையாக இருக்கிறது இல்லையா? காலையில் மாமா அசாமிலிருந்து போன் பண்ணி உங்களை காணவில்லை. செல்தொடர்பும் கிடைக்கவில்லை என்றதும் நான் எப்படி துடித்துப் போனேன் தெரியுமா?'' மீண்டும் கலங்கிய ரேவதியின் கண்களை துடைத்த சூர்யா ''தெரியும்'' என்றான். ''ஏனென்றால் நானும் இந்த அறைக்குள் வரும்வரை அதே போலத்தான் துடித்தேன்.''

ரேவதி வியப்புடன் அவனை நிமிர்ந்து பார்த்தாள். ''உனக்கு அப்பா என்றால் எனக்கு அம்மா. அம்மா எனக்கு காலையில் போன் செய்திருந்தார்கள்'' என்றான் சூர்யா புன்சிரிப்புடன்.

''உங்க செல் ஸ்விட்ச் ஆப்ல இருந்ததே. நான் கூட டிரை பண்ணினேனே.''

''செல் ஆப் ஆனால் வீட்டு லேண்ட்லைனில் அம்மாவால் பேச முடியாதா என்ன?''

''அப்ப, நீங்க இன்னிக்கு காலையில் சென்னையிலா இருந்தீங்க?''

ரேவதி திகைக்கவும், ''போதும் கேள்விகள். இப்ப நீ எனக்கு ஒரு டம்ளர் குடிக்கத் தண்ணீர் கொடுத்தால் தொண்டையை நனைத்துக் கொண்டு நானே விஷயம் பூரா சொல்லிவிடுவேன்.''

ரேவதி ஓடிப்போய் பாட்டிலிலிருந்த நீரை டம்ளரில் நிறைத்து கொண்டு வந்து கொடுத்தாள். குடித்து முடித்து டம்ளரை கீழே வைத்து விட்டு சூர்யா சொன்னான். ''அப்பா

உனக்கு பேசிய மாதிரியே. அம்மா எனக்கு ஒரு ஷாக் கொடுத்தார்கள் ரேவதி. உனக்குவிபத்து நடந்துவிட்டதாக வும், அலுவலகத்திற்கு தொடர்பு கொண்டபோது சரியான தகவல் கிடைக்கவில்லை என்றும் நீ எந்த நிலையில் இருக்கிறாயோ எங்கே இருக்கிறாயோ'' என்று என் மனதில் பயத்தை கிளப்பினார்கள். நான் அப்படியே ஆடிப் போய் விட்டேன். உன் பாஸ் பல்வீர்சிங் எனக்கு நன்கு தெரிந் தவர். அவர் மூலம்தான் உன்னைப் பற்றி வழக்கமாய் தகவல் அறிந்து கொள்வேன். அவரும் வெளிநாடு போயி ருக்கவே. உன் அலுவலகத்தை தொடர்பு கொண்டபோது ''உனக்கு உடல்நிலை சரியில்லை'' என்றும் விடுமுறை எடுத்துக் கொண்டதாகவும் சொன்னார்கள். எண்ணற்ற யூகங்கள் என் உயிர்நிலையை அசைத்துப் பார்க்க, உடனே அடுத்த ப்ளைட்டை பிடித்து ஓடிவந்தேன். அம்மாவும் அப்பாவும் நாம் தனியே இருப்பது பிடிக்காமல் நம்மை சந்திக்க வைத்து சிந்திக்க வைப்பதற்காக திட்டம் போட்டு செய்திருக்கிறார்கள் ரேவதி.''

''ஆனாலும் இது ரொம்பவும் பயங்கரமான திட்டமாக இருக்கிறதே.''

''ஆமாம். இல்லை என்றால் நீயாக ஓடிவந்துஎன்னைக் கட்டிக் கொள்வாயா சொல்?''

முகம் சிவக்க அவன் பார்வையை தவிர்த்தாள் ரேவதி.

சிரித்தபடியே பின்னால் சாய்ந்து படுக்கையில் வசதியாக அமர்ந்து கொண்ட சூர்யா, ''சொல்லு ரேவதி, எப்படியிருக்கிறது உன் தனிக்குடித்தனம்..?'' என்றான் வழக்கமான சிரிப்புடன். ''கை நிறைய சம்பளம்... தட்டிக் கேட்க யாருமற்ற தனிமை.. உல்லாசமான நகர வாழ்க்கை... அவன் சொல்லிக் கொண்டே போக,

''நரக வாழ்க்கை'' என்றாள் ரேவதி கசப்புடன்.



''நரகமா? என்ன இருந்தாலும் மும்பை உங்க ஊரை விட பெரிதாய் இல்லை அல்லவா? அப்படித்தான் இருக் கும்.''சூர்யா சிரிக்கவும், உரிமையுடன் அவன் முதுகில் தட்டிய ரேவதி, ''மும்பை பெரிய நகரம்தான். ஆனால் என்னால்...'' என மேலே சொல்ல முடியாமல் தயங்க,

''சொல்லு ரேவதி, உன்னால்...''

''........''

''சரி நானே சொல்லவா? உன்னால் என்னை பார்க் காமல் இங்கே இருக்க முடியவில்லை. சரியா?''

''இல்லை.''

''என்னது இல்லையா?''

''ஆமாம். எனக்கு உங்களைப் பார்க்காமல் இங்கே மட்டுமல்ல உயிரோடு இருக்கவே பிடிக்கவில்லை.''

''ச்சே என்ன ரேவதி இது, நீ எவ்வளவோ தைரியசாலி என்று நினைத்தேன். இப்படி பேசலாமா?'' வாடிய அவள் முகத்தை கைகளால் வருடினான் சூர்யா.

''நீ என் மேல் இத்தனை நாளாய் கோபமாய், இருந் திருப்பாய் இல்லையா ரேவதி? ஒருமுறை கூட உன் னிடம் பேசவில்லை என்று வருத்தமாகவும் இருந்திருக் கும். ஆனால் நான் மிகவும் யோசித்துதான் அப்படி ஒரு முடிவெடுத்தேன். நீ வளர்ந்த சூழலில் எல்லா வேலை களுக்கும் ஆட்கள், வீடு நிறைய வந்து போகும் உறவினர், வெளியே போக வேண்டுமெனில் டிரைவர் வண்டி ஓட்ட அப்பா அம்மாவுடன் போய்பழகியவள். சென்னையில் அத்தனை வேலையாட்கள் இருந்தும் கூட உறவுகளுக்கும், விருந்து விசேஷங்களுக்கும் போக முடியாமல் ஏங்கிப் போனாய். நான் பெரும்பாலும் வெளிநாடுகளில் சுற்று பவன் ரேவதி. அங்கு நம்முடைய வேலையை நாமேதான் செய்தாக வேண்டும். தனியாகத்தான் எங்கும் செல்ல

வேண்டும். நாளை குடும்பம் பெரிதாகும்போதும் நான் புதிதாக தொழில் தொடங்கினாலும் என்னை எதிர்பார்க்காமல் நீ தனியாக செயல்பட தெரிய வேண்டும். புது நாட்டில் தெரியாத மொழி பேசுபவர்களிடம், பழக்கமற்ற உணவு பழக்கங்களுக்கு பழக வேண்டும். ஒரு அலுவலகத்தின் வேலையை பற்றி நீ புரிந்து கொண்டால்தான், என்னுடைய வேலை சுமையையும் புரிந்து கொள்ள முடியும். வேலை முடிந்து அலுப்புடன் வீடு வரும் கணவனிடம், நாள் முழுவதும் வீட்டில் படுத்துகிடந்து போரடித்து போன மனைவி, சினிமாவுக்கும், ஷாப்பிங்கும் அழைத்துப் போக சொல்லி சண்டை போட்டால் அவன் மன நிலைமை எப்படியிருக்கும்? அதனால்தான் நீ உன் கிராமத்து தயக்கங்களையும் பயங்களையும் உதறிவிட்டு எந்த சூழ்நிலையிலும் சமாளிக்கத் தெரிந்த பெண்ணாய் மாற வேண்டும் என்று நினைத்தேன். உன்னுடைய வேலை விஷயம் எனக்கு முன்பே தெரியும். ஆனால் நீ என்ன முடிவெடுக்கிறாய்? அந்த முடிவை செயல்படுத்தும் துணிவு உனக்கிருக்கிறதா என்பதை அறிய அமைதியாய் காத்திருந்தேன். உன் விஷயம் எதிலும் தலையிடவில்லை. உன் கிராமத்திலேயேதான் இருப்பேன் என்று சொல்லிக் கொண்டிருந்த நீ நம் மாநிலத்தை விட்டுபோவதற்கே தயாராகி விட்டாய். நம் இருவரின் பெற்றோரையும் சமாளித்து வேலையில் சேர்ந்து அதை திறமையாக செய்வதாக பல்வீர்சிங் மூலம் கேளவிப்பட்டபோது உன்னை பற்றிய என் யூகம் தவறு என்று தோன்றியது. பிறக்கும் போதே யாரும் எதையும் கற்றுக் கொள்வதில்லை. சந்தர்ப்பமும் சூழ்நிலையும் வந்தால் அதை சமாளிக்கக் கூடிய தைரியம் தானாகவே வந்து விடுகிறது என்பதை புரிந்து கொண்டேன். உன்னை திடப்படுத்துவதாக எண்ணிக் கொண்டு அலைகழித்துவிட்டேன் என இப்போது வருத்த



மாக இருக்கிறது. நானே இன்னும் சில நாட்களில் வந்திருப்பேன். அதற்குள் அம்மாவும் அப்பாவும் இந்த வேலை பண்ணிவிட்டார்கள்."

சூர்யா பேசுவதை குறுக்கிடாமல் கேட்டிருந்த ரேவதி, "உங்கள் மனதில் இப்படியொரு திட்டம் இருக்கும் என்று நான் நினைத்துக் கூட பார்த்ததில்லை. ஆனால் இதையெல்லாம் நாம் நேரிடையாகவே உட்கார்ந்து பேசி திட்டமிட்டிருக்கலாம். யாரும் வருத்தபடாமல் இந்த வேலையில் சேர்ந்திருக்கலாம். எத்தனையோ கணவன் மனைவி வேறு ஊர்களில் வேலை பார்ப்பதில்லையா? அதுபோல் நாமும் இருந்திருக்கலாம்."

"இருந்திருக்கலாம். ஆனால் அப்போது காதலர்களாக இருந்திருக்க முடியாதே! திருமணத்திற்கு பிறகு நாம் காதலித்த நாட்கள் எனக்கு மிகவும் பிடித்தமானவை ரேவதி. நம்மை நாமே அறிந்து கொள்ளாதபோது போட்டுக் கொண்ட சண்டைகள், சமாதானங்கள், சிணுங்கல்கள், மற்றவர்களுடன் பழகும்போது ஒருவருக்கொருவர் பொறாமை கொள்வது, பொறாமையை தூண்ட, வேண்டுமென்ற சீண்டிப்பார்ப்பது. எதிர்பாராத உடல் உரசல்கள், இதழ் தீண்டல்கள்.." சூர்யா விவரிக்கவும் கண்முன் விரிந்த சம்பவங்களின் இனிமையில் மயங்கி கண்களை மூடினாள் ரேவதி.

சூர்யாவும் ஒரு நிமிடம் பேசாமல் அமர்ந்திருக்க, அவன் செல்போன் ஒலி அவர்களை கலைத்தது. கமலம்தான் போனில் பேசினார். மகனிடம் எதுவும் பேசாமல் ரேவதியிடம் கொடு என்றவர், ரேவதியிடம் நலம் விசாரிப்புகளுடன் "சரிம்மா பிறகு பேசுகிறேன்" என போனை வைத்துவிட்டார்.

"அத்தை என்ன எதுவுமே பேசாமல் வைத்துவிட்டார்கள்? உங்க போன் காலையில் கூட வேலை செய்யவில்லையே, இது யாருடையது?" என்றாள் ரேவதி.

''என் நண்பன் தருண் எனக்கொரு புதுபோன் ஆஸ்திரேலியாவிலிருந்து வரும்போது வாங்கி வந்ததாக சொல்லி கொடுத்தான். அந்த போனுக்கு புதுசிம்கார்டு போட்டு நான் உபயோகப்படுத்திக் கொண்டிருந்தேன். பழைய சிம்கார்டை நிகிலா உபயோகப்படுத்திக் கொள்ள கேட்டதால் முக்கியமான நெம்பர்களை குறித்துக் கொண்டு அவளுக்கு அனுப்பிவிட்டேன். எனவே பழைய நெம்பர் அங்கிருக்கும் தைரியத்தில் செல்போன் அணைத்துவிட்டு எடுக்கவில்லை என்று சும்மா கதைவிட்டிருக்கிறார்கள். இப்போது தங்களது ப்ளான் பலித்துவிட்டதா என்பதை அறிந்து கொள்ள, நாம் இருவரும் ஒன்றாய் இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ள நாசூக்காய் நலம் விசாரிக்கிறார்கள்.''

சிரிப்புடன் சூர்யா சொல்ல ரேவதிக்கு சிரிப்பு வந்தது.

''ரேவதி உன்னுடைய அட்ரஸ் போன் நெம்பர் வேண்டும் என அனு அகர்வால் ஒருநாள் நம் வீட்டிற்கு வந்தாள். பேச்சுவாக்கில் ''சூர்யா ரேவதியும் நீங்களும் எப்போது திருமணம் செய்து கொள்ளப் போகிறீர்கள்'' என்றாள்.

நீ அவளிடம் என்ன சொல்லியிருக்கிறாய் என்று தெரியாததால், ''ரேவதி திருமணத்தைப்பற்றி உன்னிடம் எதாவது சொன்னாளா?'' என்றேன்.

''திருமணத்தைப் பற்றி எதுவும் சொல்லவில்லை. ஆனால் சூர்யாதான் என் வாழ்க்கை. அவர் என் உயிரினும் இனியவர் என்று சொன்னாள்.''

''எப்போது, எங்கே சொன்னாள்?'' என்றேன் நான் பரபரப்புடன்.

''என்னிடம் சொல்லவில்லை. அன்று சினிமா போயிருந்த போது சரணிடம் சொன்னாள். அவள் உங்கள் மேல் உயிரையே வைத்திருக்கிறாள். நீங்கள் அவளை காதலிப்பது உங்கள் கணணிலேயே தெரிகிறது. இருந்தும்



ஏனோ இருவருக்குள்ளும் ஒரு ஒதுக்கம் இருக்கிறது. எதுவாயினும் மனம்விட்டு பேசுங்கள். அடுத்தமுறை உங்கள் இருவரையும் நான் மகிழ்ச்சியான தம்பதிகளாக சந்திக்க வேண்டும்'' என்று விடைபெற்று போனாள்.

ஆனால் ரேவதி உன் அருகாமையை விட பிரிவுதான் உன் அருமையை எனக்கு உணர்த்தியது. நீ நம்புவாயோ, என்னவோ, நீ இல்லாத வீட்டில் நுழைய பிடிக்காது. உன் கொலுசு சத்தம் கேட்காமல் உறக்கம் வராது.''

''உங்களை பார்த்தாலே தெரிகிறதே! எப்படி இளைத்திருக்கிறீர்கள்?'' என்றாள் ரேவதி வருத்தத்துடன்.

''உன் சமையலில் இத்தனை நாளாய் பழகிவிட்டேன் இல்லையா? தினமும் சாப்பாடே செல்லாது. சோமு அண்ணாவை கேட்டுப்பார். கதை கதையாய் சொல்லுவார். நீயும் மிகவும் இளைத்துதான் இருக்கிறாய். இனி நம் உடம்பு தானாய் சரியாகிவிடும்.''

வெளியே கதவுதட்டும் சத்தமும் சுனிதாவின் குரலும் கேட்டது. ''என் ரூம்மேட்ஸ்'' என்றாள் ரேவதி. அவசரமாய் இறுக்கி முத்தமிட்டு ஓடிபோய் கதவை திறந்தான் சூர்யா.

கையில் உணவு பார்சல்களுடன் சுனிதாவும், கிறிஸ்டினா சட்டர்ஜியும் நின்றிருந்தார்கள். ''ஸாரி டியர்ஸ். வெளியே குளிரடிக்கிறது. இதற்கு மேல் எங்களால் உட்கார்ந்திருக்க முடியவில்லை'' என்றாள் சுனிதா.

''உங்களுக்கு சாப்பாடு இதில் இருக்கிறது. சாப்பிடுங்கள்'' என்றபடி பிளாஸ்டிக் தட்டையும், டம்ளரில் நீரையும் எடுத்து வைத்தாள் கிறிஸ்டினா.

ரேவதி சூர்யாவை அவர்களுக்கு அறிமுகப்படுத்தியதும், ''ரேவதி இதுவரை தன் கணவரைப் பற்றி பேசியதே இல்லையே?'' என்றார்கள் வியப்புடன்.

''அது நாங்களாக ஏற்படுத்திக் கொண்ட ஒரு அக்ரிமென்ட். ரேவதிக்கு இதுவரை நீங்கள் செய்துவந்த

உதவிக்கும், இந்த உணவிற்கும் மிகவும் நன்றி. எனக்கு உண்மையிலேயே மிகவும் பசியாய் இருந்தது'' என்றான் சூர்யா மனப்பூர்வமாய்.

''எங்களுக்காக நீங்கள் வெளியே காத்திருந்ததுதான் வருத்தமாக இருக்கிறது'' என்றபடி சாப்பிட்டாள் ரேவதி.

இருவரும் சாப்பிட்டு முடித்ததும் மறுபடி அவர்களுக்கு நன்றி சொல்லிவிட்டு ரேவதியின் உடைகளை பேக் பண்ணத் தொடங்கினர்.

''அலுவலகத்தில் சொல்ல வேண்டாமா?'' என்றாள் சுனிதா.

''பல்பீரிடம் ஏற்கனவே சொல்லியிருக்கேன்'' என்றான் சூர்யா.

அவர்கள் இருவரிடமும் பிரியாவிடைபெற்று ஏர்போர்ட்டுக்கு போகும் வழியில் இன்னும் சில விபரங்களை சொன்னான் சூர்யா.

''நான் இந்த முறை ஜெர்மனி போகவில்லை ரேவதி. இன்னும் இரண்டு வருடங்களுக்கு இந்தியாவிலேயே கேட்டிருக்கிறேன்.அதனால் உங்க கிராமத்தில் நீ செய்ய வேண்டும் என்று நினைத்திருந்த நல்ல விஷயங்களை எல்லாம் சென்னையிலிருந்தபடி நாம் இருவரும் சேர்ந்தே செய்யலாம்.''

முகம் மலர தலையாட்டினாள் ரேவதி.

''ஆனால், ரேவதி பழைய கண்டிசன்படி நீ எனக்கு தருவதாக கூறியதை தரவே இல்லையே!'' குறும்புடன் சூர்யா கேட்க,

''வெல்லப் பணியாரம்தானே! வீட்டிற்குப்போனதும் செய்து தருகிறேன்.'' என்றாள் ரேவதி.

இருவரும் சிரித்த சத்தத்திற்கு அந்த டாக்ஸி டிரைவர் வண்டியை நிறுத்திவிட்டு திரும்பிப் பார்த்தான்.